வரு.72 இல. 36 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
2020 செப்டெம்பர் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
September 06 Sunday, 2020
32பக்கங்கள் 40/-





கண்டியை அதிரவைத்தவை நிலநடுக்கங்களா? 03


அரசியல் மாற்றத்தை சாதகமாக்க வேண்டும் 07


மலையக அபிவிருத்தி என்றால் அது வீடமைப்பல்ல 11


மும்பை அணிக்கு ஏமாற்றமளித்த வீரர்கள் 24

# தீப்பிடித்த கப்பலை 40 மைல் தூரம் இழுத்துச் சென்றது கடற்படை



## தீ கட்டுப்பாட்டில்; எண்ணெய்க் கசிவுக்கான வாய்ப்பில்லை




## 02 ஹெலிகள் உட்பட 10 இலங்கை, இந்திய கப்பல்கள் களத்தில்

நமது நிருபர்

கிழக்கு கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான பனாமா நாட்டுக்குச் சொந்தமான எம்.ரி நிவ் டயமன்ட் எண்ணெய்க் கப்பலில் பற்றி எரிந்த தீயானது இலங்கை, இந்திய கடற்படையினரின் கூட்டு முயற்சியால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் இக்கப்பலானது ஏ.ஏ.எல்.பி. விங்கர் இழுவை படகு மூலம் கிழக்கு கடற்பரப்பில் 40 கடல் மைல்கள் தொலைவிற்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. கப்பலிலுள்ள மசகு எண்ணெய்யை

04



# சம்பளம் பெறமுடியாத நிலையில் பட்டதாரிகள்

## ஒழுங்கில்லாத நியமனம் வழங்கிய ஐ.தே.க

மட்டக்களப்பு சுழற்சி நிருபர்



ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் பட்டதாரிகளுக்கும் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் தேர்தலை மாத்திரம் கருத்தில் கொண்டு சரியான ஒழுங்கமைப்பில் வேலைவாய்ப்பு வழங்காததால் தேர்தலின் பின்னர் சம்பளம் பெறமுடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளதென வெகுஜன ஊடகத்துறை தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் குறிப்பிட்டார். ஜனாதிபதித் தேர்தல் முன்பே ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவே சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது என்றார்.

அமைச்சர் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே

04



காதிர்காமத்துக்கு விஜயம் செய்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கதிர்காமம் பிள்ளையார் கோயிலில் நடந்த விசேட பூஜை நிகழ்வில் கலந்து கொண்ட போது பிடிக்கப்பட்ட படம்.

## உயிரை பணயம் வைத்து கப்பல் தீயை கட்டுப்படுத்திய

# இலங்கை, இந்திய வீரர்களுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு



நியூ டயமன்ட் எண்ணெய்க் கப்பலில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு உயிரைப் பணயம் வைத்து பாடுபட்ட அனைத்து தரப்புக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ள அவர்,

தீ பரவியுள்ள நிலையில் தங்களது உயிரையும் துச்சமாக மதித்து எரியும் எண்ணெய்க் கப்பலுக்கு அருகிலேயே சென்று தீயை அணைக்க எடுத்த அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ள இலங்கை கடற்படை, விமானப்படை, இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் இந்திய பாதுகாப்புப் பிரிவினருக்கும் தனது நன்றியை தெரிவிப்பதாகவும்

04

# கெசல்வத்த கசுன் ஹெரோயினுடன் நேற்று கைதானார்

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த சந்தேக நபரான கெசல்வத்த தினுகவின் உதவியாளர் ஒருவர் எண்டேரமுல்ல பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கெசல்வத்த கசுன் எனும் நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந் நபரிடமிருந்து 06 கிராம் ஹெரோயின் மற்றும் கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் லொறி ஒன்றையும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவரின் வங்கி

04

## பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு சமர்ப்பிக்கப்படும் போது

# 20க்கு ஆதரவாக வாக்களிக்க தயாராகும் எதிரணி எம்.பிக்கள்

20ஆவது திருத்தச்சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அதன்மீது வாக்கெடுப்பு நடத்தப்படும் போது எதிர்க்கட்சியின் சில உறுப்பினர்கள் ஆதரவளிக்கவுள்ளதாக அறிய முடிகிறது.

எதிர்க்கட்சியில் உள்ள 09 பேர் இரண்டு தரப்பாக 20ஆவது திருத்தச்சட்டத்திற்கு ஆதரவளிக்கவுள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்ட தலைவர் ஒருவருக்கு இவர்கள் அறிவித்துள்ளனர்.

20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதும் பாராளுமன்றில் தற்போது காணப்



படும் அரசியலமைப்பு பேரவை நீக்கப்பட்டது மீண்டும் பாராளுமன்ற சபை உருவாகும் என்பதுடன், 30 பேரைதான் அமைச்சர்களாக நியமிக்க முடியுமென்ற

04

# அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு முழுமையாக ஒத்துழைக்கத் தயார்

## பசீலுக்கு நாம் எதிர்ப்பில்லை என்கிறார் இராதாகிருஷ்ணன்

நுவரெலியா தினகரன், ஹற்றன் சுழற்சி நிருபர்கள்

இந்த நாட்டை அபிவிருத்தி செய்து அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய ஒரு நிலைமையை அரசாங்கம் உருவாக்குமானால் அதற்கு நாங்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கின்றோமென மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

04





## புதிய அரசியலமைப்பு வரைபு குழுவில் மலையக தமிழ் பிரதிநிதியை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் மனோ கோரிக்கை

04



சீ.வி ஜயாவுக்கு ஆதரவாக சி. வி. கே ஐயா குரல் கொடுத்து வருகிறார்... ஆச்சரியமாக் கிடக்கு....

இவர்தானே, அவர் முதலமைச்சராக இருந்தபோது முதலமைச்சரை மாத்த வேணுமெண்டு கையெழுத்து வாங்கி கவர்னர் ஆபீஸில தானே போய் கொடுத்தவர்....?

அவரேதான்... அவரேதான்....!

# விருப்பு வாக்குமுறை ஒழிக்கப்பட்டு தொகுதிவாரி விகிதாசார தேர்தல் முறை

## புதிய அரசியலமைப்பில் அரசு அதிக கரிசனை

சுப்பிரமணியம் நிஷாந்தன்

புதிய அரசியலமைப்பில் விருப்பு வாக்கு முறையை முற்றாக ஒழித்து தொகுதிவாரி மற்றும் விகிதாசார தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவது குறித்து அரசாங்கம் அதிகூடிய கரிசனையை செலுத்தியுள்ளது.

புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்காக கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் 09 பேர் கொண்ட நிபுணர் குழுவொன்றை அரசாங்கம் நியமித்திருந்தது. மேற்படி குழுவே தொகுதிவாரி மற்றும் விகிதாசாரத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவது குறித்து அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளது.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக இதற்கு முன்னர் அமைச்சர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்த அறிக்கை குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

“விருப்பு வாக்கு முறையால் கட்சிகளுக்கு பதிலாக ஒரு கட்சியின் உறுப்பினர்களுக்கிடையிலேயே மோதல்கள் உருவாகும் நிலை காணப்படுகிறது. இந்த தேர்தல் முறைக்கு பதிலாக ஒவ்வொரு தொகுதிக்கும்

04

# வைத்தியசாலையில் கேக் வெட்டி திருமண நாளை கொண்டாடிய பாடகர் SPB



பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் மயக்க நிலையிலிருந்து மீண்டதாக வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்திருந்த நிலையில் நேற்றுமுன்தினம் தனது திருமண நாளை மனைவியுடன் சேர்ந்து

04

# தமிழகத்திக்குள் சட்டவிரோதமாக ஊடுருவிய இலங்கை பண்டார

## கடத்தல்காரரா என இந்திய உளவுத்துறை ஆய்வு

மன்னார் குறூப் நிருபர்



இலங்கையிலிருந்து சட்ட விரோதமாக தமிழகத்துக்குள் நுழைந்துள்ளார் என்ற சந்தேகத்தில் மன்னாரைச் சேர்ந்த நபரொருவரை தமிழக கடலோர காவற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

படகு மூலம் தமிழகத்துக்குள் இலங்கையை சேர்ந்தவர்கள் ஊடுருவி உள்ளதாக ராமேஸ்வரம் கரையோர பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து தனுஸ்கோடி கடற்கரையில் பொலிசார் நேற்றுமுன்தினம் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது கம்பிபாடு கடற்கரையில் சந்தேகத்துக்கிடமான முறையில் நின்றுகொண்டிருந்த ஒருவரை கைது செய்தனர். விசாரணை செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இந்நபர் சிங்களம் பேசுவதால் இவர் தொடர்பில் மத்திய உளவுத்துறை அதிகாரிகள் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

# எண்ணெய் மாசிலிருந்து தப்பியது இலங்கை!

இளையகனி

குவைத்திலிருந்து இந்தியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த எண்ணெய்க் கப்பலில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விபத்திற்குள்ளாகியுள்ள எம். ரீ. நியூ டயமண்ட எண்ணெய்க் கப்பல் முழுவதுமாக கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.மேலும் கப்பலை ஆழ்கடல் நோக்கி இழுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

MT New Diamond கப்பலின் தீயை அணைக்க தங்கள் உயிரைப் பணயம் வைத்துள்ள இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கை துறைமுக ஆணையம் மற்றும் இந்திய பாதுகாப்புப் படைகளுக்கு தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டரில் பதிவு ஒன்றை பதிவிட்டு அவர் இவ்வாறு நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.அத்துடன் கடல் பல்லுயிரியலைப் பாதுகாப்பதில் அவர்கள் மேற்கொண்ட பணியை தான் பெரிதும் பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விபத்திற்குள்ளாகியுள்ள MT New Diamond எண்ணெய் கப்பலினால் கடல் சூழலுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பைத் தடுப்பதற்கு தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

24 மணி நேரமும் செயற்படக்கூடிய ஒரு கூட்டு நடவடிக்கையின் ஊடாக விபத்திற்குள்ளான கப்பலினால் கடல் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு குறித்த விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள கடற்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலையீட்டுடனும் சம்பவ முகாமைத்துவ குழு, கடல்வள பாதுகாப்பு மற்றும் கடல் வள முகாமைத்துவ திணைக்களம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கை துறைமுக அதிகார சபை, சுற்றாடல் அதிகாரசபை, கடற்றொழில் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ திணைக்களம், வளிமண்டலவியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் உள்ளிட்ட 15 நிறுவனங்கள் ஒன்றிணைந்து விபத்திற்குள்ளான கப்பலின் தீயை கட்டுப்படுத்துவதற்கும், கடல் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை குறைப்பதற்கான நடவடிக்கைகளிலும் மேற்பார்வை செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளன.

குவைத் மீனா அல் அஹமதியா துறைமுகத்திலிருந்து இந்தியாவின் ஒடிசா பிராந்தியத்தின் பெரடிப் துறைமுகம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பனாமா இராஜ்ஜியத்திற்குச் சொந்தமான MT New Diamond எண்ணெய் கப்பலில் இலங்கைக்கு 38 கடல் மைல் தொலைவிலுள்ள சங்கமன்கண்டியை அண்மித்த பகுதியில் வைத்து, 2020 செப்டம்பர் மாதம் 3 ஆம் திகதி முற்பகல் திடீரென தீப்பரவல் ஏற்பட்டது.

குறித்த கப்பலில் 270,000 மெட்ரிக் தொன் கச்சா எண்ணெய் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை சங்கமன்கண்டி இறங்குதுறைக்கு 38 கடல் மைல்களுக்கு அப்பால் உள்ள கடலில் தீபற்றிய நியூ டைமைன் கப்பல் நேற்று முன்தினம் (04) காலை 5 மணியாகும் போது 25 கடல் மைல்கள் கரை நோக்கி கொண்டுவரப்பட்டிருந்தது.

இதேவேளை, இந்த கப்பல் மூலம் வெளியேறும் எரிபொருள் வலய ரீதியாகவும், உலகிலும் பாரிய சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் என கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர், சட்டத்தரணி தர்சினி லஹந்தபுர கூறியுள்ளார்.

கிரிந்தையில் இருந்து கிழக்கே உள்ள கடற்பகுதிக்கு இதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மிகவும் ஆபத்தானதாக இருக்கும். அது உலகில் மிகப்பெரிய எண்ணய் கசிவை ஏற்படுத்தும் ஆபத்து உண்டு. குறித்த கப்பலின் எரிபொருள் களஞ்சியசாலையில் சிறிய துளையொன்று ஏற்பட்டாலும் அதனைத் தடுக்க தயாராவதற்கு காலம் போதாது எனவும் அவர் மேலும் கூறினார்.





இதேவேளை, எண்ணெய் கசிவு ஏற்பட்டவுடன், அது திடப்படுத்துகிறது. இது கிரீஸாக மாறி நீரில் மிதக்கிறது. அந்தளவு கிறீஸ் அருகம்பே, நிலாவெளி, வாகரை மற்றும் திருகோணமலை கடற்கரை பகுதிகளை அடையக்கூடும் அவ்வாறு வந்தால் அவற்றை அகற்ற சிறிது காலம் எடுக்கும், எனக் கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் பேராசிரியர் தர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அகற்றினாலும் எம்மால் சுமார் 60 சதவீதத்தையே அகற்ற முடியும் எனவும் அவர் கூறினார்.

எனினும், 40 சதவீதத்தை அகற்ற முடியாது. ஒவ்வொரு மணற்கல்லையும் சுத்தம் செய்ய முடியாது. எண்ணெய் அடுக்கு அதன் உண்மை நிலைக்குத் திரும்ப 25 அல்லது 30 வருடங்கள் எடுக்கும் என அவர் கூறினார்.

எண்ணெய் மென்மையாய் இருப்பதால் திமிங்கலங்கள், ஆமைகள் போன்ற விலங்குகள் தண்ணீரிலிருந்து மேல் எழும்ப முடியாத நிலை ஏற்படலாம் எனவும் அவர் கூறினார்.

கப்பலின் மேல்புறத்தில் நீர் மட்டத்திலிருந்து 20 மீட்டர் வரை எண்ணெய் சேமிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார், வெடிக்கும் நேரத்தில் கப்பலின் கொதிகலனுக்குள் மட்டுமே தீ பரவியது.

இருப்பினும், கப்பலின் கேப்டன் தீயை அணைக்க முயற்சிக்காமல் அந்த பகுதியை மூடியுள்ளார். அந்த நேரத்தில் தீயைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பு தனக்கு கிடைத்ததாகவும் அவர் கூறினார்.

பனாமா நாட்டு கொடியுடன் பயணித்த நியூ டயமண்ட் என்ற குறித்த எண்ணை தாங்கி கப்பல் ஒடிசாவில் உள்ள பாரதீப் துறைமுகத்திற்கு, குவைத்தில் உள்ள மினா அல் அஹ்மதி துறைமுகத்திலிருந்து புறப்பட்டுள்ளது.

இவ்வாறு இலங்கைக்கு 38 கடல் மைல்களுக்கு அப்பால் பயணித்து கொண்டிருந்த போது கப்பலின் சமயலறையில் உள்ள எரிவாயு சிலிண்டர் ஒன்று வெடித்து தீ பிடித்திருந்தது.



23 பேர் அடங்கிய கப்பல் பணியாளர்களில் 22 பேர் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

எனினும், கப்பலில் பயணித்த பிலிப்பினிய நாட்டவர் ஒருவர் உயிரழந்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கப்பலில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள 2,70,000 மெற்றிக்தொன் எரிபொருளுக்கு இதுவரை எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை என கடற்படை உறுதிப்பட தெரிவித்துள்ளது.

தீப்பற்றி உள்ள கப்பலின் தற்போதையநிலையின்அடிப்படையில் இலங்கைக்கு எவ்வித ஆபத்தும் இல்லை என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.





## வாகனங்கள் விற்பனைக்கு
(கம்பனி பராமரிப்பு வாகனங்கள்)

CAR

CAG-97XX MAZDA 6 2015
CAG-97XX MAZDA 6 2015
CAG-97XX MAZDA 6 2015
CAK-82XX HONDA DAA-CR 6 ACCORD 2015
CAK-93XX HONDA DAA-CR 6 ACCORD 2015
CAL-10XX HONDA DAA-CR 6 ACCORD 2015

வாகனபரி சோதனை Green Path - No.63, Ananda Kumaraswami Mw, Colombo 3.

மேற்படி வாகனங்கள் எதிர்வரும் 2020 செப்டம்பர் 07 ஆம் 08 ஆம் 09 ஆம் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் மு.ப 10.00 முதல் பி.ப 4.30 வரை பார்வையிடலாம். (கேள்வி 2020 செப்டம்பர் 11 ஆம் திகதி பி.ப 4.30 க்கு முடிவடையும்)

கிரீன் பாதை - எண் 63, ஆனந்த குமாரசாமி மாவதா, கொழும்பு 3. டெண்டர் படிவங்களைப் பெறலாம். திரும்பப்பெறாத ரூ .250.00

விண்ணப்பதாரிகள் வாகனங்களை அந்த நேரத்தில் காணப்படும் நிலையிலேயே ஏற்றுக் கொள்ள வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படுவார்கள். அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் வாகனத்தின் முழுக் கட்டணத்தையும் செலுத்திக் கொண்டு செல்ல வேண்டும். மேலும் வாகனங்களில் நிலுவையாக உள்ள அரசாங்க வரி மற்றும் வருமான வரி என்பவற்றை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

* முன் அறிவித்தலின்றி வாகனத்தை மீளபெறும் உரிமை நிறுவனத்துக்குண்டு.

CITIZENS DEVELOPMENT BUSINESS FINANCE PLC
No. 123, Orabipasha Mawatha, Colombo 10.
Tel: 0112 920 665 / 0112 925 044 / 034-22 66 244 / 025-205 26 32

தினகரன் BUDGET aDZ
It suits your budget

Global Network School Since 2003
COLOMBO OVERSEAS SCHOOL
Brand New, High Quality, Imported Comfast Fibre optic ETHERNET 4G Routers available for Multiple users
Model: CF - E7, No. of Users 90
Model: CF - EC - 200, 4 Fixed line in 1
Sujatha Herath
Executive Secretary
Tel: 011 2685649 | Mobile: 071 6128439
www.unitech.edu
email - colombooverseas@gmail.com
24/4, First Lane, Gothami Rd, Borella, Colombo 8

வேலை வாய்ப்பு
விடுமுறை பங்களாவிற்கு சமையற்காரர் (COOK) / காவற்பொறுப்பாளர் (CARETAKER) ஆண் ஒருவர் தேவை.
- சுத்தம் செய்தல்
- சமையல் செய்தல்
- பூந்தோட்டத்தை பராமரித்தல்
- முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

வயதெல்லை 35 - 55
எஸ்டேட் பங்களாவில் ஏற்கனவே வேலை செய்த அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
மேற்குறிப்பிட்ட அனைத்து வேலைகளையும் பொறுப்பாக செய்யக்கூடியவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.
சம்பளம் 30,000/- 0777 034 155

போட்டோ குறும் விளம்பரம்




சுசுகி Alto 2015 CAN – 7XXX - சிறந்த நிலையிலுள்ள கார் - கூடிய விலைக் கோரிக்கைக்கு.
077 7 783 750 / 071 4 160 900



# கண்டியை அதிரவைத்தவை நிலநடுக்கங்களா?

ஆர். மகேஸ்வரன்

அண்மையில் கண்டியில் ஏற்பட்ட இரண்டு நிலநடுக்கங்கள் அனைவரையும் பயப்பீதிக்குள்ளாக்கியது. ஆனால் ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி இரவு 7.00 மணியளவில் கண்டி பிரதேசத்தில் உணரப்பட்ட நில அதிர்வானது, பூமியின் அடியிலுள்ள நிலத்தட்டுகளின் அதிர்வினாலோ அல்லது இயற்கையான நில நடுக்கத்தாலோ ஏற்பட்டதல்ல என, புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்திருக்கின்றது. குறித்த நில அதிர்வு பள்ளேகலை மற்றும் மஹகனதராவ நில நடுக்க அவதான நிலையங்களில் சிறிய அளவில் பாதிவாகியுள்ளதாகவும், பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த 29.08.2020 ஆம் திகதி ஏற்பட்ட நில அதிர்வு குருதெனிய, மாரகம, அநுரகம, மைலபிட்டி பகுதி பிரதேசவாசிகளால் உணரப்பட்டதோடு, 02.09.2020 ஏற்பட்ட சிறியளவிலான அதிர்வு அம்பகோட்டை மற்றும் அலுத்வத்த ஆகிய பிரதேசங்களில் ஓரளவு உணரப்பட்டுள்ளது.

**ஒரு நிலநடுக்கத்தின் அளவுக்கு வரையறை ஏதுமில்லை என்றாலும் வரலாற்றில் பதிவான மிக பெரிய நிலநடுக்கங்கள், 9.0 ரிக்டருக்கும் கூடுதலானவையே பெரும் பாதிப்பை ஏற்படுத்துவன.**

இது தொடர்பாக புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தைச் சேர்ந்த 06 புவிச்சரிதவியலாளர்கள் மற்றும் நில அதிர்வு நிபுணர்களைக் கொண்ட இரண்டு குழுக்கள் ஆராய்ந்து வருகின்றன.

இந்த நில அதிர்வு நிலைமைகள் புவியின் நிலத்தட்டுகள் மூலம் உருவானவை அல்ல என்பதை உறுதிப்படுத்துவதாகவும், விடோரியா நீர்த்தேக்கத்திற்கு அருகே பலவீனமான பாறைகள் அல்லது பாரிய சுண்ணாம்புக் கற்பாறைகள் வீழ்ந்தததால் அதிர்வு ஏற்பட்டிருக்கலாம் எனும் கோணத்தில் தற்போது ஆய்வு செய்யப்படுவதாகவும், புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகம் தெரிவிக்கின்றது.

திகனையை சுற்றி தெல்தெனிய விதியில் சுண்ணாம்பு கற்பாறைகள் அதிகளவில் காணப்படுகின்றன. இவற்றிலிருந்தே அதிகளவு சுண்ணாம்பு எடுக்கப்படுகின்றது. பல டொலமைட் கம்பனிகள் இப்பகுதியிலேயே அமைந்துள்ளன. கம்பனிகள் அதிகமாக சுண்ணாம்பை எடுப்பதால் அங்கு ஏற்படும் குழிகள் ஊடாக நீர்கசிந்து சுண்ணாம்புப் பாறை நிலத்தில் அரிப்பு ஏற்படும். அவ்வாறு ஏற்படும் அரிப்புக் காரணமாக ஏற்படும் குழியில் நிலத்தாழ்வு ஏற்பட வாய்புண்டு. அதே போல் விக்டோரியா நீர்த்தேக்கத்திலும் இவ்வாறு சுண்ணாம்பு பாறையில் நீர் கசிவதாலும் நில நடுக்கங்கள் ஏற்படலாம். அதுமாத்திரமல்ல மகாவலி கங்கையின் மறுகரையில் விஹாரகம மாவத்தையின் பல இடங்களிலும் ரந்தெனிகல நீர்த்தேக்கம் வரைகருங்கல் உடைக்கும் பாரிய நிறுவனங்கள் பல காணப்படுகின்றன. கருங்கல்லை உடைக்கப் பயன்படும் டயனமைட் வெடி காரணமாகவும் அதிர்வுகள் ஏற்றபடலாம். இப்பகுதியில் இவ்வாறு கல்உடைப்பது தடை செய்யப்படவேண்டும். சிலர் களவாக இத் தொழிலை இன்னமும் மேற்கொண்டு வருகின்றனர்.

நிலநடுக்கம் மூன்று வகையான புவித்தட்டு அசைவுகளால் ஏற்படும். சாதாரண முறை, மேற்தள்ளல் முறை மற்றும் சமாந்தர அசைவாகும். சாதாரண மற்றும் மேற்தள்ளல் முறைகளில் ஒரு புவித்தட்டு மேல் நோக்கியும் மற்றையது கீழ்நோக்கியும் அசையும். சமாந்தர அசைவில் இரண்டு புவித்தட்டுக்கள் சமாந்தரமாக உராய்வுடன் செல்லும். இவ் அனைத்து புவித்தட்டு அசைவுகளும் புவியின் மேலோட்டுக்ளுக்குக் கீழுள்ள உருகிய பாறைக் குழம்பின் அசைவுகளாலே இடம்பெறும். புதிதாக புவி மேலோடு உருவாகும் இடங்களான புவித்தட்டு விலகற் பிரதேசங்களில் சாதாரண முறை அசைவு இடம்பெறும். இம் முறையில் ஏற்படும் நிலநடுக்கம் அளக்கப்படுவதோடு 7 ரிக்டருக்கும் கூடுதலான அதிர்வுகள் பலத்த சேதத்தை ஏற்படுத்தும். இவ்வாறான அதிர்வு பள்ளேகலையில் ஏற்படவில்லை என்றே புவிச்சரிதவியலாளர்கள் மற்றம் காலநிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு காணப்படும் ஐந்து காலநிலை அவதான நிலையங்களி




பொதுவாக 7 ரிக்டரைத் தாண்டாது. மேலெழும்பல் அசைவு முறையால் ஏற்படும் நிலநடுக்கங்களே அதிக ரிச்டர் அளவோடு அதிக அழிவை ஏற்படுத்துவனவாகும். புவித்தட்டு அசைவுகளைத் தவிர பாறைகளின் அசைவுகளால் சிற்சிறு நிலநடுக்கங்கள் ஏற்படும். நிலநடுக்கம் , பூகம்பம், அல்லது பூமி அதிர்ச்சி, என்பது அதிகமாகி அதனால் சக்தி வெளியேற்றப்பட்டு, தளத்தட்டுகள் நகர்வதனால் இடம்பெறும் அதிர்வாக இருக்கும்.

இந்த அதிர்வு அளவை மூலம் லும் இவ்வாறு நில அதிர்வு பதிவு செய்யப்படவில்லை

பூமியின் மேற்பரப்பு பெரும் பாளங்களாக அமைந்துள்ளது. இவை நகரும் தட்டுக்களாக உள்ளன. நிலப்பரப்பிலும், நீரின் அடியிலுமாக உள்ள இவற்றில் ஏழு தட்டுக்கள் மிகப் பெரியவையாகும், குறைந்தது ஒரு டசன் சிறிய தட்டுக்களும் உள்ளன. இந்த ஏழு பெரும் தட்டுக்களில் ஐந்து சமுத்திரப் பகுதிகளும் அடங்குகின்றது. சுமார் 80 கி.மீ. வரை தடிப்புக் கொண்டதாக இருக்கிறது. இதனடியில் பாறைகள் கொதிக்கும் குழம்பாக இருப்பதாலும், பூமியின் சுழற்சி வேகத்தில் இந்தப் பாறைக் குழம்பு நகர்வதாலும், மேலே இருக்கும் தட்டுக்கள் ஒன்றுடன் ஒன்று உராய்வதுடன் நகர்ந்தும் செல்கிறது. இந்த தட்டுகள் ஒரு வருடத்திற்கு ஒரு செ.மீ. முதல் சுமார் 13 செ.மீ. வரை நகர்கிறது. இது நமது உலக வேகத்திற்கு மிக நுண்ணியதாக இருந்தாலும் இந்த தட்டுக்களின் லேசான உராய்வும் கூட பெரும் பூகம்பம் ஏற்படுத்தக் கூடியவை. ஒரு நிலநடுக்கம் நிலச்சரிவுகளையும் சிலசமயம் எரிமலையையும் ஏற்படுத்தும்

ஒரு நிலநடுக்கத்தின் அளவுக்கு வரையறை ஏதுமில்லை என்றாலும் வரலாற்றில் பதிவான மிக பெரிய நிலநடுக்கங்கள், 9.0 ரிக்டருக்கும் கூடுதலானவையே பெரும் பாதிப்பை ஏற்படுத்துவன. 2011ஆம் ஆண்டு செண்டாய், ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கமானது இதுவரை பதிவான நிலநடுக்கங்களில் வலுவான நிலநடுக்கம் இதுவாகும். ஆழமற்ற நிலநடுக்கங்களே அதிக ஆபத்தை விளைவிக்கக்கூடியவை ஆகும்.

ஒவ்வொரு வருடமும் 5,00,000 நிலநடுக்கங்கள் புவியில் ஏற்படுகின்றன. இவற்றில் 1,00,000 நிலநடுக்கங்கள் மக்களால் உணரப்படுகின்றன. புவியின் அனைத்துப் பகுதிகளிலும் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.

எனினும் பேரழிவை ஏற்படுத்தும் நிலநடுக்கங்கள் அரிதாகவே ஏற்படுகின்றன. உலகின் 90%இற்கும் அதிகமான பூகம்பங்கள் பசுபிக் சமுத்திரத்தை அண்டிய பகுதிகளிலேயே உருவாகின்றன. நிலநடுக்கத்தின் வீரியத்தை பதிவு கருவி மூலம் அளவிடலாம். இதில் ரிக்டர் அளவீடு பயன்படும். கட்டடங்களும் ஏனைய பல செயற்கையான அமைப்புகளும் அழிவுக்குள்ளாகும். இதன் தாக்கமானது நிலநடுக்கத்தின் அளவு, மையத்திலிருந்துள்ள தூரம் மற்றும் பிரதேசத்தின் புவியியல் தோற்றப்பாடு போன்ற காரணிகளால் வேறுபடக்கூடியது.

நிலநடுக்கத்துடன் கூடிய கடும் புயல், எரிமலை வெடிப்பு, சுனாமி, காட்டுத்தீ போன்ற இயற்கை அனர்த்தங்களால் நிலத்தினதும் பனிப்பாறைகளினதும் உறுதித்தன்மை பாதிக்கப்படுவதால் மண்சரிவோ குளிர் காலநிலையுடைய இடங்களில் பனிச்சரிவோ ஏற்படுகின்றது.

விலங்குகள் மற்றும் பறவைகளின் நடத்தை எறும்பு, கறையான் நடத்தைகளை ஆராய்ந்து சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் ஆனால் அவ்வாறான எவ்வித மாற்றங்களும் இதுவரை உணரப்படவில்லை என இப்பகுதி ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# ஐந்தாவது பரம்பரையின் தொடர்பாடல் முன்னேற்றம்



## மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

ஐந்தாவது பரம்பரையின் தகவல் தொழில்நுட்ப இடைவெளியை முழு உலகமுமே கவனமாக பார்த்துக் கொண்டுள்ளது. இதுவரை தொலைபேசியில் பேசி, இணையதளத்துக்கு நுழையும் இடத்திலிருந்த தொழில்நுட்பம் இயந்திரங்களுக்கிடையான தொடர்பாடல் வரையான வரம்பிற்கு விரிவடைந்துள்ளது. அது பாரிய மாற்றமுமாகும்

ஐந்தாவது பரம்பரையில் கம்பியில்லாத தகவல் தொடர்பாடல் மூலம் தடையின்றி தகவல் பரிமாறலுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். தற்போது நடைபெறும் நாலாவது பரம்பரரையின் தொடர்பாடலில் கருத்து பரிமாறலுக்கு முதலிடம் கிடைக்கின்றது. தொடர்பாடல் பிழைகளை சில வேளைகளில் பொறுத்துக்கொள்ள முடியும். துண்டிப்புகள் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தாது. ஆனால் எதிர்காலத்தில் செயற்கை அறிவை பலப்படுத்தும் சூழலில் தடையின்றிய தொடர்பாடல் அவசியமாகும். உலகில் பல நாடுகளும் ஐந்தாவது பரம்பரையின் தொடர்பாடலுடன் இணைந்து வருகின்றன . இலங்கையும் அந்த யுகத்தில் விரைவாக நுழையும் தீர்மானத்துக்கு வர வேண்டியுள்ளது. அது பாரிய சவாலாக இருப்பதுடன் நிறைய முதலீடுகளையும் செய்ய வேண்டியுள்ளது.

இந்த தொடர்பாடல் அமைப்பின் மூலம் பெற்றுகொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் ஆச்சர்யமனைவை. சாரதிகள் இல்லாமல் வாகனங்ளை செலுத்தலாம். தொழிற்சலையில் உற்பத்திகள் தொழிலாளர்கள் இல்லாமல் நடைபெறலாம். ரோபோ இயந்திரங்களை கண்காணிக்க மாத்திரமே சிலர் தேவைப்படுவார்கள். உற்பத்திகள் இரண்டு மூன்று மடங்காக அதிகரிப்பதுடன் செயல்திறனும் அதிகரிக்கும். சுகாதார துறையிலும் மாற்றங்கள் ஏற்படும்.

ரோபோ இயந்திரங்களின் உதவியுடன் உலகில் ஒரு மூலையில் இருந்தபடி வேறொரு இடத்திலுள்ள நோயாளிக்கு சத்திரசிகிச்சை செய்யலாம். கல்வித் துறை திறந்ததாக்கப்படல் இன்னுமொரு விசேடமாகும். பல்கலைகழகங்களில் நடைபெறும் விரிவுரைகளை அவ் வேளையிலேயே பரிசீலனை செய்யலாம். அது கல்விக்கான செலவை குறைக்கலாம். சர்வதேச உயர் பல்கலைகழகங்களில் வறிய மாணவர்கள் கல்வி கற்க கதவுகள் திறக்கும்.இவ்வாறான சந்தர்ப்பங்களுக்காக ஐந்தாவது பரம்பரைக்காக கம்பிகள் அற்ற தொடர்பாடல் நாட்டுக்கு அவசியம். காலம் கடத்தாது முடிவு எடுப்பதன் மூலம் உலகில் ஏனைய நாடுகளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள வழிகிடைக்கும் என்பதை சுட்டிக்காட்டவேண்டும்.

தமிழில்: வீ.ஆர்.வயலட்

# மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளுக்குரிய 1,00,000 கிலோ மீற்றர் வீதிகளுக்கு கார்பட்

## தேசிய நிதி மட்டுமே பயன்பாடு

ஒரு இலட்சம் கிலோ மீட்டர் தூரம் வரையிலான வீதியை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்குரிய அனைத்து வீதிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய தெரிவு செய்யப்பட்ட பிரதான வீதிகளை மேம்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

வீதியை புனரமைப்பது தொடர்பில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பசில் ராஜபக்ச இதனை குறிப்பிட்டார்.

'சுபீட்சத்தின் நோக்கு' வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வேலைத் திட்டம் போக்குவரத்து அமைச்சு மற்றும் கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் வழிநடத்தலின் கீழ் மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும். இதன் கீழ் மாகாண சபைகளுக்குரிய வீதிகளில், பிரதான வீதிகள் இரண்டை இணைக்கும் வீதி, பிரதான நகரங்களுடன் தொடர்புபடும் வீதிகளான சிறப்பு வீதிகளும் இதன் கீழ் மேம்படுத்தப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்தும் போது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, மின்சார சபை ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதற்கான முக்கியத்துவம் குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

வீதி புனரமைப்பிற்கான முன்னுரிமை பட்டியலொன்றை நிறுவனங்களுக்கு பெற்றுக்கொடுப்பதன் ஊடாக அவ்வப்போது வீதிகளை உடைப்பதற்கு பதிலாக, வீதி புனரமைக்கப்படும் வேளையில் நீர் வழங்கலுக்கான வசதிகளை வழங்குவது தொடர்பான பணிகளை நிறைவு செய்வதற்கான வாய்ப்புள்ளதென அங்கு கூறப்பட்டது.

வீதி புனரமைப்பின் போது சுற்றாடல் பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்றும், அதன் போது வீதியின் இரு மருங்கிலும் நாட்டிற்கு ஏற்ற சுற்றாடலுக்கு பிரயோசனமான மரங்களை நடுவது தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்தப்பட வேண்டுமென்று பசில் ராஜபக்ச சுட்டிக்காட்டினார்.

இதற்கு விவசாய திணைக்களம், சுற்றாடல் அதிகாரசபை ஆகிய நிறுவனங்களின் ஆலோசனை, ஒத்துழைப்பு ஆகியவற்றை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புள்ளது. சுற்றாடல் அமைச்சின் கீழ் அனைத்து கிராமங்களிலும் சுற்றாடல் குழுக்கள் நியமிக்கப்படவுள்ள நிலையில் வீதியோரங்களில் நடப்படும் மரங்களின் பராமரிப்பு பணிகளை அந்த சுற்றாடல் குழுக்களுக்கும் பிரதேச வாசிகளுக்கும் வழங்குவது உகந்ததாக அமையுமென்றும் இதன்போது குறிப்பிடப்பட்டது.

'சுபீட்சத்தின் நோக்கு' வேலைத் திட்டத்தின் கீழ் வாக்குறுதியளிக்கப்பட்ட ஒரு இலட்சம் கிலோ மீட்டர் வீதியை மேம்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் நாட்டின் அனைத்து வீதிகளையும் சிறந்த நிலைக்கு கொண்டுவரல், நிர்மாணத்துறையை மேம்படுத்துதல், கிராம மற்றும் நகர வேலைவாய்ப்புகளை அதிகரித்தல், மொத்த தேசிய வருமானத்தை அதிகரிப்பதோடு, ஒவ்வொரு நபருக்கும் அவர்கள் வசிக்கும் இடத்திற்கு முறையான அணுகலை வழங்குதல் போன்ற நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.



'பேனா இலக்கியப் பேரவை' ஏற்பாடு செய்துள்ள கிண்ணியா கலாபூசணம் ஏ.சீ. எம்.இப்றாஹீம் எழுதிய நான்கு நூல்கள் வெளியீட்டு விழா நேற்று சனிக்கிழமை கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்,பொத்தானை வயல், பழுத்தோலை, Unique Techniques In Letter Writing, அரபு நாட்டில் கற்றறிந்த பாடங்கள் ஆகிய நூல்களே வெளியிடப்பட்டன.

(படங்கள்: திருமலை மாவட்ட விசேட நிருபர்)

## 10 வருடங்களுக்கு இந்த அரசை அசைக்க முடியாது

### ஜோன் அமரதுங்க

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தை இன்னும் பத்து ஆண்டுகளுக்கு அசைக்க முடியாதென தான் நம்புவதாக முன்னாள் ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஏராளமான மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க அரசாங்கம் நடவடிக்கை முன்னெடுத்துள்ளமையால் மக்கள் அரசாங்கத்தின் மீது ஈர்க்கப்படுகிறார்களென அவர் தெரிவித்தார். நாட்டை ஆட்சி செய்யும் போது நல்லாட்சி அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்காதென அவர் தெரிவித்தார்.



ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் கலாநிதி (Chen Chen) சென் சென் தலைமையிலான தூதுக்குழுவினர் (04) நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியபோது..

## புதிய அரசியலமைப்பு வரைபு குழுவில்

# மலையக தமிழ் பிரதிநிதியையும் நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் மனோ கோரிக்கை

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பிரதிநிதிகள் இடம்பெறுகின்றமை எமக்கு மகிழ்ச்சியை தருகின்றது.

எனினும், இந்திய வம்சாவளி மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய பிரதிநிதி இடம்பெறாமை எமக்கு கவலை தருகிறதென தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியலமைப்பை வரைவதற்கான ஒரு குழுவை ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் நியமிக்கப்பட்டமையை நாங்கள் சாதகமாகவே பார்க்கிறோம். இதன் மூலம் இந்நாட்டில் நிலவி வரும் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுகளுக்கான வழிகளை புதிய அரசியலமைப்பு ஏற்படுத்திட வேண்டுமென விரும்புகிறோம்.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள குழுவில், வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் மற்றும் முஸ்லிம் மக்களின் நலன்களை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகள் இடம்பெறுகின்றமை எமக்கு மகிழ்ச்சியை தருகின்றது. எனினும், இந்திய வம்சாவளி மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய பிரதிநிதி இடம்பெறாமை எமக்கு கவலை தருகிறது. இது தற்செயலாக ஏற்பட்ட இடைவெளியென நாம் கருதுகின்றோம். எனவே தங்களால் நியமிக்கப்பட்டுள்ள குழுவில், சமீபத்திய இந்திய வம்சாவளி மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்ய தகுதி வாய்ந்த ஒரு பிரதிநிதியை நியமிக்கும்படி வேண்டுகிறேன். நீங்கள் கேட்டுக்கொள்வீர்களாயின், தகுதி வாய்ந்த பிரதிநிதிகளின் பெயர்களை தங்கள் பரிசீலனைக்காக சிபாரிசு செய்யவும் நான் தயாராக இருகின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்குதமிழ் முற்போக்கு கூட்டணியின் எழுத்து மூல கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளதாகவும் கூட்டணியின் தலைவர், மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

# வர்த்தக அமைச்சர் பந்துலவுடன் இந்திய உயர் ஸ்தானிகர் சந்திப்பு

இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவை (03) மரியாதை நிமித்தம் சந்தித்தார். வர்த்தக அமைச்சராக பதவியேற்றமைக்காக உயர் ஸ்தானிகர் அமைச்சர் பந்துலவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது இரு தரப்பினரும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான முதலீடுகள் அடிப்படையிலான உறவுகள் மற்றும் பரஸ்பர நலன்களை அடிப்படையாக கொண்ட வர்த்தக நடவடிக்கைகள் ஆகியவற்றை மேலும் அபிவிருத்தி செய்வது தொடர்பாக கவனம் செலுத்தினர்.

முதலீடு மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் இலங்கையுடனான பொருளாதார பங்குடமையை மேலும் வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை உயர் ஸ்தானிகர் இங்கு தெளிவுபடுத்தினார்.

தற்போதைய சூழ்நிலையில் இரு தரப்பினருக்குமிடையிலான வர்த்தக மற்றும் அரச தரப்பினரின் தொடர்புகளை நிலைபேறானதாக மாற்றுவதற்கு டிஜிட்டல் கட்டமைப்பை பயன்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் உயர் ஸ்தானிகர் இங்கு கருத்துக்களை வெளியிட்டார்.

அந்த அடிப்படையில் இருநாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்த்தக சமூகங்கள் இடையில் குறிப்பிடத்தக்க கலந்துரையாடல்களை நடத்துவதற்குரிய சாத்தியங்களை ஆராய்வதற்கும் அவர்கள் இணங்கினர்.





தேசிய காங்கிரசின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லாவை பாராட்டி வரவேற்கும் நிகழ்வும் துஆ பிராத்தனையும் வெள்ளிக்கிழமை மாலை சாய்ந்தமருதில் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது...

## சம்பளம் பெறமுடியாத...

மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,... ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பே ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவே சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் இளைஞர்,யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு வசதிகளை வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது எனக் குறிப்பிட்டார்

## இலங்கை, இந்திய வீரர்களுக்கு...

ஜனாதிபதி டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கிழக்கே சங்கமன் கண்டி இறங்குதுறையில் 38 கடல் மைல்கள் தொலைவில் எம்.டி.நியூ டயமன் என்ற எண்ணெய் தாங்கிக் கப்பலில் கடந்த வியாழக்கிழமை காலை 08 மணியளவில் தீ விபத்துக்குள்ளாகியது.

கப்பலின் பிரதான இயந்திர அறையில் கொதிகலன் வெடித்ததைத் தொடர்ந்து தீப் பரவல் ஏற்பட்ட நிலையில் இரண்டு நாட்களாக தீயைக் கட்டுப்படுத்த தீவிர முயற்சி எடுக்கப்பட்டது.

இதன்பலனாக, இலங்கைக் கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கை துறைமுக அதிகாரசபை, இந்திய கடற்படை, இந்திய கடலோரப் பாதுகாப்புப்படை ஆகியன இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கெசல்வத்த கசுன்...

கணக்கின் ஊடாக 183 மில்லியன் ரூபாவிற்கு அதிகமான பணக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## விருப்பு வாக்குமுறை ஒழிக்கப்பட்டு...

ஒரு எம்.பி என்ற அடிப்படையிலும் விகிதாசார முறைப்படி சில எம்.பிக்களை தெரிவு செய்வதுமே பொருத்தமானதாக இருக்கும்.

நாட்டுக்குப் பொறுத்தமான அரசியலமைப்பை உருவாக்குவது குறித்து ஆழமான கருத்தாடல்கள் இடம்பெற வேண்டும். புதிய அரசியலமைப்பு தொடர்பிலான அறிக்கையை நீதி அமைச்சரிடம் நிபுணர் குழு சமர்ப்பிக்கும் போது தேர்தல்முறை மாற்றம் பிரதான இடத்தை வகிக்கும்.

## அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு...

இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு பசில் ராஜபக்ச அமைச்சராக வந்தாலும் அல்லது வேறு ஒரு இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர் அமைச்சராக இருந்தாலும் எங்களுக்கு ஆட்சேபனையில்லை.

ஹற்றனில் நேற்று நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசும் பொழுதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர்,

இன்று புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

அதற்காக அரசாங்கம் ஒன்பது பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளது. இந்த குழுவில் மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒருவரையும் நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

20 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் இரட்டை பிரஜா உரிமை தொடர்பாக பேசப்படுகின்றது. என்னை பொறுத்தளவில் இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக திறமையானவர்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.நாம் திறமையானவர்களை ஒதுக்கி வைத்துவிட்டு இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது.

பசில் ராஜபக்ச அமைச்சராக வருவாராக இருந்தால் அதற்கு எந்தவிதமான எதிர்ப்பும் இல்லை.காரணம் அவர் திறமையாக செயற்படக்கூடிய ஒரு நிர்வாகி. கடந்த காலத்தில் அதனை அவர் நிரூபித்திருக்கின்றார்.

எனவே இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமாக இருந்தால் திறமையானவர்களை ஒன்றிணைத்து நாட்டை முன்கொண்டு செல்ல வேண்டும். இன்று உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக எல்லா நாடுகளிலும் பொருளாதார பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

அதனை சீர் செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடமே இருக்கின்றது.அதற்காக அனைவரையும் இணைத்துக் கொண்டு செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 20க்கு ஆதரவாக வாக்களிக்க...

வரையறையும் நீக்கப்படும். 19ஆவது திருத்தச்சட்டமூலத்தில் நீக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரங்களும் மீண்டும் ஜனாதிபதிக்கு கிடைக்கும். அதேபோன்று சுயாதீன ஆணைக்குழுக்களின் எண்ணிக்கையும் 11இல் இருந்து 07ஆ குறைக்கப்படும். அத்துடன், 19ஆவது திருத்தச்சட்டமூலத்தில் வரையறுக்கப்பட்ட ஜனாதிபதியின் பதவிக் காலம் மற்றும் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் என்பவை அவ்வாறு தொடரும் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

## தீப்பிடித்த கப்பலை...

கொண்டுசெல்லும் விதத்தில் அது நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக கடற்படை அறிவித்துள்ளது.

தீயை அணைக்கும் முயற்சிகள் நாள் முழுவதும் (நேற்று) தளத்தில் நடந்து வருகின்றன. ஆழ்கடலில் கடும் காற்று காரணமாக அவ்வப்போது தீ பரவும் அபாயம் உள்ளது. இதுபோன்ற எதிர்பாராத தீ பரவலும் கட்டுப்படுத்தப்படுகிறது.

இந்திய கரையோர பாதுகாப்பு கப்பல்கள் அந்த இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதுடன், தீயணைப்புக்கு ஹெலிக்கொப்டர்களும் பயன்படுத்தப்படுகின்றன.

தற்போது 03 capital ships கெப்பிடல் கப்பல்கள், 03 இலங்கை கடற்படைக்குச் சொந்தமான போர்க் கப்பல்கள், இலங்கை கரையோர பாதுகாப்புச் செயலணியின் 02 கப்பல்கள், இந்திய கடலோர பாதுகாப்புச் செயலணியின் 02 கப்பல்கள், இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஒரு கப்பல் மற்றும் 02 இழுவைப்படகுகளும் (Tug Boats) நிறுத்தப்பட்டுள்ளன.

ஏ.எல்.பி விங்கர் (ALP Winger tug) இழுவைப்படகு, டி.டி.டி தீயணைப்பு உபகரணங்களுடனான கப்பல் TTT ONE (Fire Fighting Vessel) அங்கு உள்ளதுடன், தீயணைப்பு நிபுணர்களுடன் தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இதற்கிடையில், இங்கு கூட்டு நடவடிக்கைக்காக விமானப் படைக்குச் சொந்தமான ஏ.எம்.ஐ 17 ஹெலிக் கொப்டர் செயற்படுகிறது.

மேலும், இந்திய கரையோர பாதுகாப்பு படைக்குச் சொந்தமான இரண்டு டோனியர் விமானங்களும் அவசரகால பயன்பாட்டிற்காக மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளன.

பேரிடர் சலுகைகளை வழங்க விசேட ஐ.எஸ்.ஈ நிபுணத்துவம் கொண்ட சர்வதேச தனியார் நிறுவனத்தை கப்பலின் உரிமையாளர் நியமித்துள்ளார். இந் நிறுவனம் இலங்கை மற்றும் இந்திய செயலணிகளுடன் நெருக்கமாக பணியாற்றி வருகிறது. பேரிடர் நிவாரண நடவடிக்கையில் குளிரூட்டும் செயற்பாடு மூலம் மசகு எண்ணெய் இருக்கும் இடத்திற்கும் தீ பரவல் இடத்திற்கும் இடையில் தொடர்ந்தும் தீ பரவாமலிருப்பதற்கானம் செயற்பாடு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மசகு எண்ணெய்க் கசிவுக்கான வாய்ப்புகள் இல்லையென்றும் கடன்படை திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

## வைத்தியசாலையில்...

கேக் வெட்டி கொண்டாடியுள்ளார். இந்த நிகழ்வு, வைத்தியசாலையிலுள்ள நிர்வாகத்தினருக்கு பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எஸ்.பி.பாலசுப்ரமணியம், சாவித்திரிக்கு 04 ஆம் திகதி திருமண நாளாகும். இதனை முன்னிட்டு ஐ.சி.யூ.வில் கேக் வெட்டி கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பிரத்தியேகமாக கேக் வாங்கி வரப்பட்டு, ஐ.சி.யூ.வில் வைக்கப்பட்டது. பின்னர் வைத்தியர்களின் உதவியுடன் எஸ்.பி.பாலசுப்ரமணியம், சாவித்திரி ஆகிய இருவரும் கேக் வெட்டி மகிழ்ச்சியைக் பகிர்ந்துக் கொண்டுள்ளனர்.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம், கொரோனா தொற்று காரணமாக சென்னை சூளைமேட்டிலுள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், கடந்த 13ஆம் திகதி அவருடைய உடல்நிலை மோசம் அடைந்தது. அவர் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். அவருக்கு உயிர் காக்கும் கருவிகள் உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரது உடல் நிலையை தீவிர சிகிச்சை அளிக்கும் வைத்தியர்கள் 24 மணி நேரமும் கண்காணித்து வருகிறார்கள். அதாவது, அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளில் கொரோனா பாதிக்கப்பட்டவர்களை குணப்படுத்திய மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளுடன் எம்.ஜி.எம்.மருத்துவக் குழுவினர் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். எஸ்.பி.பாலசுப்ரமணியத்துக்கு 'பிசியோதெரபி' அளிக்கப்பட்டுவரும் நிலையில், நுரையீரல் செயற்பாடு இயல்புநிலைக்கு கொண்டுவருவதற்கான சிகிச்சைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.





டவர் மண்டபத்தில் நடைபெறவுள்ள நாடக விழாவில் ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் கதை, வசனம் இயக்கத்தில் மேடையேற்றப்படவுள்ள "அரச பணிக்காக மட்டும்" சமூக நாடகத்தின் ஆரம்ப பூஜை நேற்று முன்னாள் அமைச்சர் பிரபா கணேசன் தலைமையில் கொழும்பு, செட்டியார் தெரு அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. இதனை கலைஞர்களான தேவர் முனிவர், விஜயசுந்தரன் ஆகியோர் தயாரிக்கின்றனர். தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர், டவர் மண்டப உதவி பணிப்பாளர் ஜெயபிரகாஸ் சர்மா, கலைஞர்களான கலைச்செல்வன், சந்திரசேகரன், செல்வராஜ், நந்தகுமார், பத்மநாதன், சிறிபாலன் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

*ஏ.கே.விஜயபாலன்*





## சமாதான நீதவான்



கொழும்பு கிருலப்பனையைச் சேர்ந்த போதகர் யாதவராஜ் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் காலஞ்சென்ற கிருஷ்ணராஜ் – மகாலெஷ்மி தம்பதியின் சிரேஷ்ட புதல்வர். கெத்செமனே திருச்சபையின் போதகரும் மாவட்ட உப மேற்பார்வையாளரும், சமூக சேவையாளருமான இவர் கெத்செமனே சர்வதேச பாடசாலையின் முன்னாள் அதிபரும், கொழும்பு கிறிஸ்தவ போதகர் ஐக்கியத்தின் உபதலைவரும் மனித உரிமைகள் இயக்கத்தின் கொழும்பு மாவட்ட காப்பாளரும் கொழும்பு கெத்தாராம லயன்ஸ் கழக முன்னாள் உறுப்பினரும் ஆவார். இவர் கொழும்பு இந்துக் கல்லூரி பம்பலப்பிட்டி, இரத்மலானை பாடசாலைகளின் பழைய மாணவருமாவார்.









ஜனரஞ்சக பாடகர் கலைஞர் கலைக்கமலின் 'கானாராத்' விசேட இசை நிகழ்ச்சி 'கண்ணதாசன் பாடல் நிகழ்ச்சி புகழ்' பஸ்லி ரூமி நிலையத்தின் பிரதான அனுசரணையில் கொழும்பு07 ஜே.ஆர். ஜெயவர்த்தன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் தேசமான்ய ஏ.எல்.எம். உவைஸ், தலைமை வகிக்க பொன்மனச் செல்வி கௌசலாதேவி கௌரவிக்கப்பட்டார். இளம் பாடகி செல்வி அபிலாஷாவுடன் கலைக்கமல் இணைந்து பாடுவதையும், நிகழ்ச்சியைப் பாராட்டி பஸ்லி ரூமி பேசுதையும் அருகில் ருஸ்பி ரூமி, சிரேஷ்ட ஊடகவியலாளர் ரஷீதீன், பட்டயக்கணக்காளர்கள் நவாஸ் முஸ்தபா, றஹீம் லந்ரா, கவிஞர் கலைக்கமல், மொரீன் ஜெனற் ஆகியோரும் காணப்படுகின்றனர்.






தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329

சார்வரி வருடம் ஆவணி மாதம் 21ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 முஹர்ரம் பிறை 17

# தமிழ் அரசியல் தலைமைகள் மாயை அரசியலை மறக்கட்டும்

அரசியலமைப்பின் இருபதாவது நகல் வரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அடுத்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும்; நிறைவேற்றப்படும்!

பத்தொன்பதாவது திருத்தத்திற்குக் கையுயர்த்திய அனைவரும் இருபதாவது திருத்தத்திற்கும் தமது ஆதரவை வழங்கியுள்ளனர். பத்தொன்பதைக் கொண்டு வருவதற்கு முன்னின்று பாடுபட்டவர்களில் பெரும்பாலானோர், அந்தத் திருத்தத்தில் தவறுகள் உள்ளதை ஒப்புக்கொண்டுள்ளார்கள். இப்போது இருபதிலும் குறை இருக்கிறது என்று குரல் எழுப்புகிறார்கள். இதில் முக்கியமானவர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன். சிறுபான்மை மக்களைப் பாதிக்கின்ற; ஆபத்தை ஏற்படுத்துகின்ற சரத்துகள் அதிகம் இருபதில் காணப்படுவதாக அவர் சொல்கிறார். ஆனால், இருபதின் மூலம் ஏற்படும் நன்மையும் தீமையும் நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் சாரும். இதில் சிறுபான்மை பெரும்பான்மை என்று எதுவும் இல்லை என்கிறார் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அருளானந்தம் சர்வேஸ்வரன்.

உண்மையில் இருபதின் மூலம் ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரம் மீள உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் சிறுபான்மை மக்களுக்கு இந்த நிறைவேற்றதிகாரம்தான் பாதுகாப்பானது என்று சொல்லப்பட்டது. எனினும், 1990 ஆம் ஆண்டிலிருந்து அதனை நீக்குவதாகப் பலரும் வாக்குறுதி அளித்தார்கள். சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கதான் முதன் முதலில் நிறைவேற்றதிகாரத்தை நீக்குவதாகக் கூறினார். ஆனால், நிறைவேற்றதிகாரத்தை நீக்குவதால் ஏற்படும் பாதிப்பைப் புரிந்துகொண்டதால், அவர் அதைச் செய்யவில்லை. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் நிறைவேற்றதிகாரத்தை நீக்குவதாகச் சொல்லியிருந்தார். ஆனால், அதன் ஆபத்தைப் புரிந்துகொண்டதால், அவரும் செய்யவில்லை. இறுதியாக 2015 இல் போட்டியிட்ட தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன, எந்தவிதமான பகுப்பாய்வுகளையும் மேற்கொள்ளமல், நிறைவேற்றதிகாரத்தை நீக்கினார். அதன் விளைவால்தான் நாடு அதலபாதாளத்திற்குச் சென்றது. நாட்டின் தலைமைத்துவம் ஜனாதிபதிக்கும் இல்லாமல், பிரதமருக்கும் இல்லாமல் திரிசங்கு சொர்க்க நிலைக்குச் சென்றது. தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளானது. பயங்கரவாதிகள் தேசிய பாதுகாப்பு வலையமைப்பைப் பலவீனப்படுத்திக் குண்டுத் தாக்குதலை மேற்கொள்ளவும் வழி வகுத்தது. நாட்டு நிர்வாகத்தில் சிக்கலை மாத்திரமன்றிப் புதிய புதிய நெருக்கடிகளையும் இந்தப் பத்தொன்பதாவது திருத்தச் சட்டம் உருவாக்கியது. எனவே, பத்தொன்பதாவது திருத்தச் சட்டத்தில் சிறுபான்மையினருக்கென்று குறித்தொதுக்கப்பட்ட எந்தச் சட்டச் சலுகையும் கிடையாது. அதேபோல், இருபதாவது திருத்தச் சட்டத்தில் சிறுபான்மையினருக்குப் பாதிப்பான அம்சங்கள் இருப்பதாவும் சொல்ல முடியாது. அரசியல்வாதிகள் கருத்துகளைத் தெரிவிப்பதற்கான ஒரு கருத்தியல் களமாகச் சில விடயங்களைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிப்பதன் விளைவால்தான் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயங்கள் உருவாகின்றன.

உண்மையில் இருபதாவது திருத்தச் சட்டத்தில் உள்ளடங்கியிருக்கும் சில விடயங்கள் மாத்திரம் அர்த்தமில்லாமல் விமர்சிக்கப்படுகின்றன. அதில், இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவருக்குப் பாராளுமன்றம் வர அனுமதித்தது தவறு என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால், சிறுபான்மை தலைவர்கள் என்று சொல்லிக்கொள்கின்ற சிலரும் அதனை வரவேற்றிருக்கிறார்கள். அப்படி இரட்டைப் பிரஜாவுரிமை உள்ள ஒருவரை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமித்ததால்தான், பிணைமுறியைக் கொள்ளையடித்த குற்றத்திற்காக சிலரைக் கைதுசெய்ய முடியாமற் போனது என்றும் விமர்சிக்கிறார்கள். அவ்வாறான விடயத்தைப் பொறுத்தவரை, ஒரு நிறுவனம் சார்ந்த துறைக்கு நியமனம் செய்கின்றபோது ஆற தீர ஆராய்ந்து செய்திருக்க வேண்டும். ஆனால், பாராளுமன்ற உறுப்பினராக வருபவர் மக்களின் வாக்குகளினால் வருபவர். ஆகவே, அர்ஜுன் மகேந்திரனையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்து விமர்சிப்பது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுதற்குச் சமமாகும்.

இருபதாவது திருத்தத்தில் நாட்டு நிர்வாகத்தைச் சீராக முன்னெடுப்பதற்குப் பல சரத்துகள் மீள உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒரு சில வாரங்களுக்கு முன்பு தமிழ் அரசியல்வாதிகள் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்து வந்தார்கள். தமிழ் மக்களுக்குத் தீர்வு காண்பதற்கு அதில் எதுவும் இல்லை, என்று குறைகளை மட்டுமே கூறி வந்த தமிழ் அரசியல் தலைமைகள் இப்போது இருபதாவது திருத்தம் பற்றியும் புளுகத் தொடங்கியிருக்கிறார்கள். பதின் மூன்றில் ஒன்றும் இல்லை என்று காலத்தை வீணடித்துக்கொண்டிருக்க, மற்றைய தரப்போ உள்ளதையும் பிடுங்கும் முயற்சியில் இருக்கிறது என்கிறார்கள். ஆக, தமிழ் தலைமைகள் மேலெழுந்தவாரியாக விடயங்களை அணுகாமல், அறிவுபூர்வமாகவும் ஆழமாகவும் விடய பரப்புகளைப் பற்றிச் சிந்தித்து மக்களுக்கும் நாட்டுக்கும் பயனுள்ளவர்களாக இனியாவது செயற்பட வேண்டும் என்பதுதான் எல்லோரினதும் எதிர்பார்ப்பு. ஆகவே, மக்களை இனியும் மாயைக்குள் மறைத்து வைத்து அரசியல் செய்யும் நடவடிக்கைகளைக் கைவிட்டு உண்மையான அரசியல் செல்நெறியை முன்னெடுக்க வேண்டும்!

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

# தேசியம் என்ற பெயரில் தமிழ் மக்களை பலி கொடுக்கும் தலைமைகள்!!



**முள்ளிவாய்க்காலில் புலிகள் அழிக்கப்படுவதற்கு, பல வருடங்களுக்கு முன்னமே புலிகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்குலக நாடுகள் மேற்கொண்டிருந்தன. புலம்பெயர் தேசங்களில் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கப்பட்டு தடை செய்யப்பட்டதுடன் அதன் செயற்பாட்டாளர்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.**

இலங்கையில் பேச்சுவார்த்தை மூலம் புலிகள் குறைந்த பட்ச தீர்வுக்கு சம்மதிக்க வேண்டும் என்பதுடன் புலிகளின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்பதில் மேற்குலக வல்லாதிக்க நாடுகள் உறுதியாக இருந்தன.

இந்த சர்வதேசத்தின் உலக ஒழுங்கை இந்தியா உட்பட புலிகள் சரிவர புரிந்து கொண்டார்களா? அல்லது பிடிவாதத்துடன் போரிட்டு அழிந்தார்களா? என்பதை எவரும் சொல்லவில்லை, சொல்வதற்கு யாரும் உயிருடன் இல்லை. வன்னியில் புலிகள் அழிக்கப்பட்டதுடன் புலம்பெயர் தேசங்களில் செயற்பட்டு வந்த அமைப்புக்களும் காணாமல் போயின.

புலிகளை நம்பி செயற்பட்ட போராளிகள் மற்றும் பொதுமக்கள் நடுத் தெருவில் கைவிடப்பட்டனர். போர்ச் சூழலில் அனுபவித்த கொடுமைகளைவிட நாளாந்த வாழ்வியலில் கொடுமைகளையும், துன்பங்களையும் அனுபவித்ததுடன், யுத்தத்தின் கூர்மையின் வடுக்களையும் தாங்கி நிற்கின்றனர் தமிழ் மக்கள். இப்போது தமிழ் மக்களுக்கு அவலங்களும், தியாகமும், பயங்கரமும், கண்ணீரும், முள்ளிவாய்க்காலில் உறவுகளின் சாம்பலும்தான் மிச்சமாக இருக்கிறது.

தமிழ் தேசிய கூட்டமைப்பானது புலிகளின் அழிவுக்கு பின்னும் பாடம் கற்றுக் கொள்ளாமல் தமிழ் தேசியம் என்ற பெயரில் தமிழ் மக்களை ஏமாற்றும் அரசியல் நாடகத்தை முன்னெடுக்க தொடங்கியது. தமிழ் மிதவாத தலைமைகள் புலிகளின் அழிவுக்கு பின்னரான காலத்தில் தமிழ் மக்களின் காவலர்களாக தங்களை காட்டிக் கொண்டதுடன் பெரும் எண்ணிக்கையில் பாராளுமன்ற ஆசனங்களை பெற்று இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டனர்.

புலிகளுக்கு அடுத்து தமிழ் தேசிய கூட்டமைப்பானது தமிழ் மக்களின் காவலர்களாக தங்களை காட்டிகொள்ள முயற்சித்த போதும், தனித்துவமான அரசியல் பாதை இல்லாததால் தொடர்ந்தும் தமிழ் மக்களின் ஆதரவை கூட்டமைப்பினரால் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை,

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு வரைபுக்குள் சமஸ்டி ஒழிந்துள்ளது, தமிழர்களுக்கு தீபாவளிக்குள் அரசியல் தீர்வு, சர்வதேசம் பார்த்துக்கொண்டிருக்கிறது, சர்வதேச விசாரணை வரும், இதயத்திற்கும் இதயத்திற்குமான ஒப்பந்தம் செய்துள்ளோம் தீர்வு நிச்சயம் என ஒவ்வொரு தேர்தல்களிலும் பூச்சாண்டி காட்டிய தமிழ் தேசிய அரசியல் தலைமைகளின் முகத்தை மக்கள் அடையாளம் கண்டு கொண்டனர்.

பகிர்ந்தும் இசைபடவும் வாழ்ந்த தமிழ் சமூகம், பொருளாதார வளர்ச்சியுடனான அரசியல் செயற்பாட்டை நோக்கி மக்களை நகர்த்த முடியாத தனித்துவ அரசியல் இல்லாத நிலையில் தங்கள் தேவைகளுக்கு கையேந்தும் சமூகமாக, கண்ணியம் இழந்த சமூகமாக மாறிப்போனது.

யுத்தத்தின் பின்னர் தமிழர் அரசியல் தலைமைகள் தங்கள் நலன்களை தமிழ் தேசியத்தின் பெயரால் பாதுகாக்க போராடி வந்தனரே ஒழிய அரசியல் ரீதியாகவும், பொருளாதா ரீதியாகவும் வறுமைக்குள் சென்று கொண்டிருக்கும் தமிழ் மக்களையும், தமிழர் சமூகத்தில் இருக்கும் முரண்பாடுகளையும் களைவதற்கும் எந்தவித நடவடிக்கைகையும் எடுக்கவில்லை. அபிவிருத்திகளை செய்வதற்கான சமாந்திரமான திட்டங்கள் ஏதும் இல்லத தமிழ் அரசியல் பரப்பானது தமிழ் தேசியம் என்ற போர்வையில் சூனியம் மிக்க அரசியல் பரப்பாகவே காணப்பட்டது.

இந்த நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதற்காக அனைத்து இராஜதந்திர முறைமைகளையும் தமிழ்த் தலைமைகள் கையாண்டதுடன் எதற்கெடுத்தாலும் சர்வதேசம் கவனித்துக் கொண்டிருக்கின்றது என்ற வெற்று உணர்ச்சி அரசியலே இவர்களை இயக்கிக் கொண்டிருந்தது.

சர்வதேச தலையீட்டை இலங்கையில் கோருவதும், இலங்கை அரசின் மீது சர்வதேச நீதிமன்றத்தில் போர்க்குற்ற விசாரணை வரும், சர்வதேசம் அரசியல் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கும் என்பதெல்லாம் ஒரு போதும் நிறைவேறப் போவதில்லை என்பதை சர்வதேச நாடுகளினதும், ஐக்கிய நாடுகள் அமையத்தின் செயற்பாடுகளையும் தொடர்ச்சியாக அவதானித்து வந்த மக்கள் புரிந்து கொண்டதுடன் தமிழர் தலைமைகள் தங்களை தொடர்ச்சியாக ஏமாற்றி வருவதையும் உணர்ந்து கொண்டனர்.

தமிழ் மக்களை நோக்கி வாக்கு அரசியல் எவ்வாறு தமிழர் தலைமைகளால் முன்னெடுக்கப் பட்டதோ அதேபோல் முஸ்லிம் சிங்கள மக்கள் மத்தியிலும் இனவாத மதவாத அரசியல் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல் தலைமைகளின் மேலாதிக்கமானது ஒரு கருத்தியலாக வெளிக் கிளம்புகின்றது. சிங்கள மேலாதிக்கம் என்பது சிங்கள மக்களை குறிக்காமல் சிங்கள சமூகத்தில் இருந்து வெளிக்கிளம்புகின்ற ஆதிக்க சக்திகளின் இன மேலாதிக்க கருத்துக்களை குறிக்கின்றதோ அதே போன்றதுதான் தமிழ் முஸ்லிம் மேலாதிக்கமும்.

இந்த மேலாதிக்க சக்திகள் மக்களின் நலன்களை கருத்தில் கொள்ளாது ஆதிக்க சக்திகளாக அகலக் கால் பதித்து நிற்கும் ஒரு குறிப்பிட்ட மேட்டுக் குடியினருக்கான அரசியல் பொருளாதாரத்தை நலனாகக் கொண்டு உருவாக்கப்படும் சிந்தனையுருவாக்கமே அவர்களின் தேசியமாக இருக்கின்றது என்பதனை விளங்கிக் கொள்ளலாம்.

அந்தவகையில் தமிழர் தரப்பில் 1970 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் தேசியம் பேசிய தலைவர்கள் தனவந்தர்களாகவும், பிற்போக்குவாதிகளாகவும், ஆதிக்க சாதியை ஆதரிப்பவர்களாகவும், பிரதேச வாதிகளாகவும், ஏகாதிபத்திய நாடுகளின் முகவர்களாகவும் இருந்தார்கள் என்பது தமிழர்களின் வேதனையான வரலாறு.

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் நீண்டகாலம் சிறையிலிருக்கும் தமிழ் கைதிகள் விடுதலை தொடர்பாகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வு, சிறுபான்மை மக்களின் அரசியல் பிரச்சினைகளில் எந்த முன்னேற்றமும் இல்லாமை போன்றன தமிழ் தேசியம் பேசும் தலைமைகளின் வங்குரோத்து அரசியலை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

இலங்கையில் மேற்குலக நாடுகள் தங்களுக்கு ஏற்றாற்போல் அரசியலை உருவாக்குகின்றன அல்லது அரசியல் தலைமைகளை மாற்றுகின்றன. உதாரணமாக 2015 இல் அப்போதைய ஜனாதிபதி ராஜபக்ஷவை வீழ்த்தி மைத்திரியை ஆட்சிக்கு கொண்டு வந்ததும் பிரபாகரனை அழித்ததும் இந்த மேற்குலக நாடுகள் தான். இலங்கையில் மாத்திரமல்ல மேற்குலக வல்லாதிக்க சக்திகள் எங்கெல்லாம் தமக்கு எதிரான ஆட்சி நடக்கிறதோ அல்லது தமது நலனுக்கு எதிராக செயற்படும் நாட்டுத் தலைவர்களை குற்றவாளி, பயங்கரவாதி என குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அழிக்கத் தவறுவதில்லை இவ்வாறாக அழிக்கப்பட்ட ஒரு தலைவனாக ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசைனைக் குறிப்பிடலாம்.

புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையில் அமைதி நிலவ வேண்டும் என்ற விருப்பம் முற்றாக மேற்கு நாடுகளுக்கு இருந்ததாக கூறிவிட முடியாது. இலங்கை அரசின் மீது மனித உரிமைகள் என்ற அழுத்த கயிற்றை மிகவும் நெகிழ்ச்சியாக பிடித்து வைத்தள்ளது ஐ.நா. அந்த கயிறானது ஒன்றும் தூக்கு கயிறு அல்ல.

மக்கள் நலன்சார்ந்த திட்டங்களையும், தமிழ் மக்களின் சமகால அரசியல் பிரச்சினைகளையும் முன்னெடுக்க முடியாத ஒருவர், இலங்கை நீதிமன்றத்தில் நீதியரசராக இருந்து தமிழ் இளைஞர்களுக்கு எதிராக தீர்ப்புக்களை வழங்கிய நீதிபதி, தமிழ் தலைமைகளின் மேலாதிக்க நலன்களை பேணுபவர் தமிழ் தேசியவாதியாக தன்னை காட்டிக் கொண்டு தமிழரின் தொன்மை பற்றிப் பேசி தமிழ் மக்களுக்கு எதிரான புயலை கிளப்பி விட்டுள்ளார்.

இவரின் இந்த செயற்பாடானது வடக்கு கிழக்கு தமிழர் உட்பட மலையகத் தமிழர்களையும் பாதிக்கும் விடயம் என்பதுடன் இவர் யாருக்கு எதிராக தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வ குடிகள் என பேசி இனவாத பிரச்சினையை கிளப்பினாரோ, அவர் பாராளுமன்றத்தில் குறித்த சிங்கள தலைவர்களுடன் கைகுலுக்கிக் கொள்வார், அப்பாவி சிங்கள, தமிழர்கள் மத்தியில் கலவரங்களும் மோதல்களும் பேரவலங்களும் ஏற்படும் அதை மூலதனமாக்கும் அரசியல் வாதிகள் மீண்டும் பாதிக்கப்பட்ட மக்களின் தலைவர்களாக வலம் வருவார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் சிங்கள தலைவர்களோ, தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்களோ எப்போதுமே பாதிக்கப்படுவதில்லை. அவர்களுக்கான அரச பாதுகாப்புக்கள், விருந்தோம்பல்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.



இவ்வாறானவர்களே துரதிர்ஷ்டவசமாக எமக்கு தேசியத்தை போதிக்கின்றனர்.

இலங்கையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்து 70 வருடங்கள் கடந்துவிட்டது. இரண்டு தலைமுறைகளை தாண்டி ஆயுதப் போராட்டமானது முடிவுக்கு வந்துள்ளது. இந்த நீண்ட நெடிய காலப் பகுதியில் பல்வேறு அரசியல் மாற்றங்கள், அனுபவங்களின் ஊடாக வடக்கு கிழக்கின் இன்றைய தலைமுறை இளைஞர்கள் ஆயதப் போராட்டத்தை நிராகரித்து நிற்கிறார்கள், இன்னொரு அழிவு யுத்தத்திற்கு தமிழ் இளைஞர்கள் தயாராக இல்லை, சர்வதேச அரசியல் சூழ்நிலைகளும் ஆயுத போராட்டத்திற்கு எதிராக மாறியிருக்கும் நிலையில் தமிழ் தேசிய தலைமைகள் உணர்ச்சி அரசியல் செய்வதற்காக மீண்டும் போர் வெடிக்கும் என கொக்கரித்து வருகின்றார்கள்.

பிரிவினைக் கோரிக்கைகள் எமது மக்களை அழித்தொழிக்கும் அது மலையக மக்களையும், முஸ்லிம் மக்களையும் பாதிக்கும் என்பதை கடந்தகால அனுபங்கள் எமக்கு கற்றுத்தந்துள்ளது. எதிர்கால அரசியலை திட்டமிடுவதற்கும் மதிப்பிடுவதற்கும் நிகழ்கால அரசியலை தமிழர்கள் சரிவர புரிந்தவர்களாக இருக்க வேண்டும். இன்று சிறுபான்மை இனங்களின் அரசியல் போக்கு பல கட்சிகளாகவும் அமைப்புக்களாகவும், சாதியாகவும், பிரதேச வாதமாகவும், மதரீதியாகவும் சிதறடிக்கப்பட்டிருக்கும் அதேவேளை தெற்கில் கட்சிகள் ஒன்றிணைந்து பலமடைந்து வந்துள்ளன.

சிறுபான்மை இனங்களை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்த மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்கள், தமிழர் பகுதிகளில் பாராளுமன்ற ஆசனங்களை குறைத்தல், தமிழ் மொழியை இருட்டடிப்பு செய்தல், தமிழர் பகுதிகளில் இரவோடு இரவாக திடீரென முளைக்கும் சிலைகள் என பல்வேறு வழிகளில் ஆக்கிரமிப்புக்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

இவை தமிழர் தரப்புக்களால் பாராளுமன்றத்தில் பேசப்படவேண்டும், சிறுபான்மை இனங்களை பிரதிநிதிப்படுத்தும் அரசியல் தலைமைகள் ஒற்றுமையாக திரட்சி கொள்ள வேண்டும். அப்போதுதான் சிறுபான்மை இனங்கள் தங்களை தற்காத்துக்கொள்ள முடியும்.

இலங்கையில் அரசியல் சாசனத்தினூடாகவே ஆட்சிமுறைமை இருக்கின்றது. சிறுபான்மை மக்களிடம் வாக்குபலம் இருக்கின்றது அது இலங்கை அரசியலை தீர்மானிக்கும் சக்தியாகவே இன்னும் உள்ளது. இதுதான் இப்போதைய அவசிய தேவையாக இருக்கின்றது.

தமிழ் தேசியமென்பது சமூகத்தில் ஒடுக்கப்படுகின்ற சாமானிய மக்களின் பிரச்சனைகளை ஒருபுறம் ஒதுக்கி, ஆதிக்க சக்திகளின் நலன்களை முன்னிலைப்படுத்துவது அல்ல. ஆதிக்க மேட்டுக் குடிகளின் கோரிக்கைகளை ஒட்டுமொத்த இனத்தின் அரசியல் அபிலாசைகளாக மேலிருந்து கீழ் நோக்கி திணிப்பது தேசியமல்ல. மாறாக பெரும்பான்மையாக வாழும் ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்து அவர்களுடைய அரசியல் பொருளாதார பிரச்சினைகளை மையமாகக் கொண்டு கீழிருந்து மேலாக பரந்து விரிய வேண்டியதே தேசியமாகும். தேசியம் என்பது ஒரு சொல்லாடல் அல்லாமல் ஒரு இனத்தின் வளர்ச்சிக்கான கருத்தியலாக இருக்க வேண்டும்.

குறிப்பாக தமிழர்களிடையே கசப்புக்களும், துரோகங்களும் அரசியல் பகைமைகளும், கருத்து வேற்றுமைகளும் இருந்தாலும் அவற்றையெல்லாம் மறந்து தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டு எதிர்காலத்தில் புரிந்துணர்வுடன் ஓரணியில் திரண்டு செயற்பட வேண்டும். இது மட்டுமே தமிழர்களின் அரசியல் உரிமைகளை பெறவும், இருப்பை காப்பாற்றுவதற்குமான ஒரே வழி சிறுபான்மை மக்களின் தலைவர்கள் பகைமையை மறந்து ஒன்று சேர்வதன் ஊடாகவே இந்த அழிவிலிருந்து சிறுபான்மை மக்களை காப்பாற்ற முடியும்

தமிழ் தேசியமானது அனைத்து மக்களின் பிரச்சனைகளை உள்வாங்கி தன்னை முற்போக்கான ஒரு தேசியமாக வளர்த்துக் கொள்ள வேண்டும் அவ்வாறு சாத்தியமாகாத பட்சத்தில் தமிழ் தேசியம் தமிழ் மக்களால் நிராகரிக்கப்படுவதோடு நாமெல்லாம் ஓரினம் எனும் கூட்டுணர்வு எப்போதும் ஏற்படாது.

> “அரசியல் சாசனத்தினூடாகவே இலங்கையில் ஆட்சிமுறைமை இருக்கின்றது. சிறுபான்மை மக்களிடம் வாக்குபலம் இருக்கின்றது அது இலங்கை அரசியலை தீர்மானிக்கும் சக்தியாகவே இன்னும் உள்ளது. இதுதான் இப்போதைய அவசிய தேவையாக இருக்கின்றது.

**எம்.ஜி.ரெட்னகாந்தன்...**

# வடக்கு கிழக்கின் அரசியல் மாற்றத்தை அரசு சாதகமாக பயன்படுத்த வேண்டும்

புதிய அரசியலமைப்பு குறித்தும் 20 ஆவது திருத்தம் 13 ஆவது திருத்தம் பற்றியும் அரசியல் அரங்கில் பரவலாக பேசப்படுகிறது. மறுபக்கம் அரசியலமைப்பு திருத்தத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்படுகிறது. இவற்றை பேச முற்றிலும் பொருத்தமான மூத்த அரசியல்வாதியும் கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் தலைவரும் முன்னாள் அரசியலமைப்பு விவகார அமைச்சருமான டி.யூ. குணசேகரவுடன் தினகரன் வாரமஞ்சரிக்காக மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்

ஷம்ஸ் பாஹிம்...



**கே: கம்யூனிஸ்ட் கட்சி தலைமைத்துவத்தில் இருந்து ஒதுங்க என்ன காரணம்?**

**பதில்:** இதற்கு ஊடகங்களில் ஒரு காரணம் கூறப்பட்டாலும் அதில் உண்மை கிடையாது. பூகோள, தேசிய ரீதியான சவால்கள் மற்றும் மாற்றங்களுக்கும் ஏற்ப அரசியல் ரீதியான மாற்றங்கள் நிகழ வேண்டும். நாட்டில் புதிய ஜனாதிபதி ஆட்சி உருவாகியுள்ளது. கட்சியில் நான்காது பரம்பரை ஏற்பட இது உகந்த காலம். மாத்தறையில் எமது கட்சி சார்பில் ஒருவர் பாராளுமன்றம் தெரிவாகியுள்ளார். இந்த நிலையில் டொக்டர் வீரசிங்கவை தலைமைத்துவத்திற்கு கொண்டுவந்துள்ளோம். நாம் அரசியலில் இருந்து ஒதுங்கவில்லை. அரசியல் சபை, மத்திய குழு என்பவற்றில் தொடர்ந்திருக்கிறேன்.

**கே: இம்முறை தேர்தல் முடிவு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள். வடக்கு, கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பின்னடைவு பற்றி உங்கள் கருத்தென்ன?**

**பதில்:** யுத்தம் முடிவடைந்த பின்னர் நான் தான் முன்னாள் புலிகளுக்கு புனர்வாழ்வு அளித்தேன்.இதனை வெற்றிகரமாக மேற்கொண்டது தொடர்பில் ஐ.நா கூட எம்மை பாராட்டியிருந்தது.இருந்தாலும் வடக்கு மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு போதுமான பங்களிப்பு வழங்க அரசு தவறியது.இந்த இடைவெளியை நிரப்ப தமிழ் தேசிய கூட்டமைப்பை மக்கள் ஆதரித்தனர். அவர்களும் கடந்த கால குறைகளை பேசினார்களே தவிர மக்களுக்கு காத்திரமாக எதுவும் செய்யவில்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்தி அதிகாரத்தை வழங்கினாலும் எதுவும் செய்யவில்லை. ஒதுக்கிய பணம் திரும்பி வந்தது. ஜனாதிபதி தேர்தலின் போது கோட்டாபய சர்வாதிகாரி என பிரசாரம் செய்ததால் தமிழ் மக்கள் பயந்து அவருக்கு எதிராக வாக்களித்தார்கள். இந்த நிலைமை சில மாதங்களின் பின்னர் நடந்த பொதுத் தேர்தலில் மாற்றமடைந்தது. ஜனாதிபதியின் செயற்பாடுகள் குறித்தும் மக்கள் தெ ளிவடைந்தார்கள். ஜனாதிபதியின் செயற்பாடுகள் குறித்தும் மக்கள் தெளிவடைந்தார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பு அல்லாத 11 எம்.பிகள் வடக்கு கிழக்கில் தெரிவானார்கள். 1977 இன் பின்னர் தான் இவ்வாறான மாற்றம் நிகழ்ந்திருக்கிறது.வடக்கில் ஏற்பட்ட இந்த முன்னேற்றகரமாக நிலைமையை அரசாங்கம் சரிவர பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசாங்கம் முழுமையான பங்களிப்பு வழங்க வேண்டும். 1977 ஆம் ஆண்டின் பின்னர் இவ்வாறான நிலைமை ஏற்பட்டது. ஆரம்ப காலத்தில் கந்தையா, சுப்ரமணியம், நவரத்னம் போன்றோர் எமது கட்சி சார்பில் வடக்கிலிருந்து தெரிவானார்கள்.

வடக்கில் ஈபிடிபி, சுதந்திரக் கட்சி,வரதராஜப் பெருமாளின் கட்சி, சமசமாஜக கட்சி,பொதுஜன பெரமுன என்பவற்றை இணைத்து கூட்டாக போட்டியிட முயற்சி மேற்கொண்டோம். அது வெற்றியளிக்கவில்லை. இந்த கூட்டணி உருவாகியிருந்தால் வடக்கு கிழக்கில் த.தே.கூ எதிராக 11 ற்கும் அதிகமான எம்.பிகள் தெரிவாகியிருப்பர். இதனூடாக தமிழ் மக்கள் மத்தியில் புது உத்வேகம் ஏற்பட்டு புதிய பயணமொன்றை ஆரம்பித்திருக்கலாம்.

**1977ஆம் ஆண்டின் பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பு அல்லாத 11 எம்.பிகள் வடக்கு கிழக்கிலிருந்து தெரிவானது திருப்புமுனையே**

**13 ஆவது திருத்தத்திலுள்ள சாதகமான விடயங்களை உள்வாங்கி தமிழ் மக்களின் பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கும் வகையில் புதிய அரசியலமைப்பு திருத்தம் இடம்பெற வேண்டும்**

**கே: எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் இவ்வாறு கூட்டணியாக போட்டியிடும் எண்ணம் உள்ளதா?**

**பதில்:** ஆம் மாகாண சபைத் தேர்தலில் இவ்வாறு இணைந்து வடக்கில் புதிய மாற்றமொன்றை ஏற்படுத்தும் யோசனை உள்ளது. மாகாண சபைத் தேர்தலில் மட்டுமன்றி உள்ளூராட்சி தேர்தலிலும் இது சாத்தியமாகும். இதனூடாக வடக்கில் மாற்றமொன்றை உருவாக்க முடியும்.



படங்கள்: சமன் ஸ்ரீ வெதகே

முழு உலகிலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்கு இடதுசாரி இயக்கங்களிடம் தான் தீர்வு உள்ளது. எனவே எதிர்காலம் இடதுசாரி கட்சிகளுக்கு வாய்ப்பாக இருக்கும்.

**கே: வரலாற்றில் முதன்முறையாக வடக்கில் இருந்து சுதந்திரக் கட்சி எம்.பி ஒருவர் தெரிவாகியுள்ளார்.இதனை எவ்வாறு பார்க்கிறீர்கள்.?**

**பதில்:** ஆம் இது மிகச் சிறந்த நிலைமை. துரையப்பா யாழ் மேயராக இருந்தார். அங்கஜன் சிறந்த கல்வியலாளர். திறமையானவர். அவர் மீதான ஈர்ப்பும் மைத்திரிபால சிறிசேன தொடர்பில் தமிழருக்கு எதிரான நிலைமை ஏற்படாமை என்பனவும் இவரின் வெற்றிக்குக் காரணமாக அமைந்திருக்கும். புலிகளுக்கு பதிலீடாக வந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு மூன்றாக உடைந்தது. விக்னேஷ்வரன், சிவாஜிலிங்கம், பொன்னம்பலம் தனித்தனியாக சென்றார்கள். அவர்களும் வென்றார்கள். வன்னியில் பொதுஜன பெரமுன அதிக வாக்குகள் பெற்றது.

**கே: புதிய அரசியலமைப்பு தொடர்பில் பரவலாக பேசப்படுகிறது. 13ஆவது திருத்தத்தை ஒழிக்க வேண்டும் எனவும் அரசில் சிலர் கூறிவருகின்றனர். இதுபற்றி?**

**பதில்:** 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதை நாம் ஏற்க முடியாது. அவ்வாறு சிலர் கூறினாலும்.13 ஆவது திருத்தம் இருக்க வேண்டும். யுத்தத்திற்கு பதில் சமாதானத்தை நிலைநாட்டும் காரணியாக 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கம் இதில் மேலோங்கி இருந்தது.

(10ஆம் பக்கம் பார்க்க)

---




## கசப்பும்... இனிப்பும்...

– தமிழ்மணி மானா மக்கீன்

### கசப்பு

ஒரு பல்கலை வித்தகனின் பிறப்பு 1937, பெப். 08. சாதாரணக் கட்டடக் கலைஞர் "ஹமீட் பாஸ்" என்பவரின் மூத்த மகன். அனைவரையும் பிரியும் போது அகவை எண்பது (2017 ஓகஸ்ட் 29).

அந்த மனிதனுக்கு முதன் முதல் கிடைத்த தொழில் வாய்ப்பு சிங்களத் தட்டெழுத்தாளரப் பதவியும் அடுத்து சுருக்கெழுத்தாளர் பதவி நல்ல வானொலிக் கலைஞன், நாடக எழுத்தாளன் மேடை நடிகன், தினகரன் நுகேகொடைப் பகுதி நிருபர். துடுப்பாட்ட வர்ணனையாளன். மும்மொழிப் பேச்சாளன். அரசியல் வாதி, ஆன்மிகவாதி. தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர், இராஜாங்க அமைச்சர், பலஸ்தீனப் பாவப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்த முஸ்லிம் உம்மா"!

அனைத்திலும் அதிவிசேடமாக 1991 மார்ச் 12ல் "வாழ்வோரை வாழ்த்தும்" விழா ஆரம்பித்து அன்றைய பிரதமர் டீ.பீ. விஜேதுங்க, கலாசார அமைச்சர் லொக்குபண்டார ஆகியோரைப் பிரதம அதிதிகளாக சமுகமளிக்க வைத்து 28 முஸ்லிம் ஆளுமைகளுக்கு கௌரவப் பட்டங்களும், பொற்கிழிகளும் வழங்கச் செய்து அடுத்தடுத்த ஆண்டுகளில், 92ல் 29, 93ல் 35, 94ல் 40 என 132 பல்துறையாளர்களையும் அரச மட்டத்தில் பாராட்டி சீராட்டி வரலாறு படைத்த ஒரு சாமான்யர்! மேற்குறிப்பிட்ட தொகையினரில் தினகரன் பிரதம ஆசிரியர் அமரர் சிவகுருநாதனும், ரேடியோ சிலோன் மூத்த ஒலிபரப்பாளர் ஆனந்த சரத் விமலவீரவும் உள்ளடங்குவர்.



இப்படிப்பட்ட சேவையாளன் கல்வி கற்ற கொழும்பு, ஸாஹிராக் கல்லூரியில் அவருடன் முதலாம் வகுப்பிலிருந்து க. பொ. த. வரை ஒன்றிணைந்திருந்த ஒருவன் இந்தப் பத்தி எழுத்தாளன் நானும் கடந்த மாதம் ஓகஸ்ட் 29ல் ஏ.எச்.எம். அஸ்வர் என்ற புகழாடைகள், பொல்லடிகள் இரண்டையும் அவ்வப்போது பெற்று மகிழ்ந்திட்டவரின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல்.


ஏற்கெனவே தெரிவித்தவாறு அவரை நுகேகொடை நிருபராகக் கொண்டிருந்த மூத்த தினகரன் நாளேடு ஓகஸ்ட் 29, சனி, 25 ஆம் பக்கத்தில் துணை ஆசிரியர் மர்லின் மரிக்கார் பங்களிப்பில் ஓர் அற்புதமான நிகழ்ந்தன. நினைத்தல் அஞ்சலி கட்டுரையை வழங்கியிருந்தது.

தொடர்ந்து மறுநாள் (30.08.2020) கொழும்பு நாராஹேன்பிட்டி தொடர் அடுக்ககத்தில் அமைந்துள்ள அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் சம்மேளனத்தில் முன்னணியின் தலைவர் லுக்மான் ஷகாப்தீன் தலைமையில் நடந்தது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக எதிர்கால சவூதி அரேபியத் தூதர் உமர் காமில் கலந்துகொண்டிருந்தார். கௌரவ அதிதிகளாக முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, முன்னாள் பாகிஸ்தான் தூதுவர் என். எம். ஷஹீட், ஒன்றியத்தின் முன்னாள் தலைவர்களான என்.எம். அமீன், ரஷீத் எம். இம்தியாஸ், பி.எம். பாறுக், செயலாளர் அஹமட் முனவ்வர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இதன்போது அஸ்வர் தொடர்பான நினைவுரையை முன்னாள் தூதுவர் ஒமர் காமில் வழங்கினார். அத்துடன், மர்ஹூம் அஸ்வரின் சேவைகளைப் பாராட்டியும் அவரின் மறுவுலக வாழ்வின் ஈடேற்றத்திற்காகவும் விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றதுடன் -

வசதி குறைந்த மாணவர்களுக்கு உபகார நிதிகளும் அளிக்கப்பட்டன. பால்ய பள்ளித் தோழனின் நினைவில் சாமானியனான நான் பாடசாலை உபகரணங்களையும் வழங்கி வைத்தேன்.

உடனடியாக அன்றைய மாலைப் பொழுதிலேயே 'நல்ல சாத்தானும் (சைத்தான்) கெட்ட சாத்தானும் ஒட்டி உறவாடும்' 'முகநூல்' என்கிற பக்கத்தில் ஒருவரது புழுதி வாரிக் கொட்டல்



'இன்று ஒரு நினைவுதின நிகழ்வில் வசமாக மாட்டிக்கொண்டேன். அஸ்வர் செய்த சமூகப் பணிகள் ஏதாவது இருந்தால் சொல்லித் தாங்களேன்! எனக்கு அப்படி எதுவும் தெரியவில்லையே...? தெரிந்த தெல்லாம் நாடாளுமன்றத்தில் ஒரு கவுண்டமணி, செந்தில், வடிவேலுவாக இருந்தார் என்பதே....!"

உடனே அவரது மு.நூ. நண்பர் எம். எச்.எம். நௌபல் என்பவரின் இடுகை "வாழ்வோரை வாழ்த்தினார். அதன் பின்னர் வாழ்த்தியோரையே மீண்டும் வாழ்த்தினார்.

இதற்குப் புழுதிவாரிக் கொட்ட ஆரம்பித்தவரின் மறுபதில்!

ஆமாமா! அதுகள் நெனைவிருக்கு. அதுகளாலே சமூகத்திற்கு என்ன பலன் கிடைத்தது? எல்லாம் ஊத்தைக் குப்பைகள்! அந்நாள் சிலருக்குக் குடுத்திட்டுப் போயிருக்கிற பட்டங்களைப் பார்த்தா சிரிப்புத் தாங்க முடியல்ல....!"

"மஹீஸ்" என்ற மற்றொருவர் "அதைத் தவிர அவர் எதுவும் செய்தாரா? அதனால் சமூகத்திற்கு ஏதும் பயனுண்டா? எனப் பேரிடி கேள்வி பெயரும் ஊரும் உண்மையானதா என்பதில் சந்தேகம்.

இதில் எனது பணிவான கருத்து:

பயன் உண்டா என்பது பொருத்தமான கேள்வியல்ல. "ஏதாவதொரு துறையில் ஒன்றைச் செய்திருப்பதற்குப் பின் தான் இப்படியான புகழாடைகள். பொற்கிழிகள் அளித்துக் கௌரவிப்பது என்பது. இது உலக வழக்கு. ஒருவகை சமூக நன்றிக் கடன். அத்தோடு, அவர்கள் வாழும் பொழுதே வாழ்த்திச் சிறப்பிப்பதுவும்

மேலும் புழுதி வாரிக்கொட்டும் முகநூல் 'முகமூடி மனிதன், **எல்லாருமே ஊத்தைக் குப்பைகள்** எனக்கூசாமல் பதிவிடுகிறானே, அப்படியானால் 132 பேருமா?

வாழ்த்தப் பெற்றவர்களில் தற்சமயம் வாழ்வோரை சற்றே மறந்துவிட்டு, ஓய்வுறக்கத்திலிருப்போரில் முக்கிய சிலரை மட்டும் (முழுப் பட்டியலுக்கும் இடப்பஞ்சம்) இங்கே தருகின்றேன். இவர்கள் ஊத்தைக் குப்பைகளா? இவர்களுக்குக் கௌரவும் அளித்ததற்காக அஸ்வரைத் தூற்ற வேண்டுமா?

புலவர்மணி ஷரீபுத்தீன், திக்குவல்லை எம்.ஏ. முஹம்மது, கல்ஹின்னை சுபைர், மொகிதீன் பேக், மௌலவி சைபுத்தீன் ஸாஹிப், வித்துவான் ரகுமான், இளங்கீரன் சுபைர், தமிழறிஞர் கமால்தீன், அப்துல் கபூர் (வானொலி வித்தகர்), ஆய்வாளர் ஏ.எம். சமீம், தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன்.

முகநூல் முட்டாள்களே,

உங்கள் முகமூடிகள் அவ்வப்போது கழற்றப்பட்டுக் கொண்டேயிருக்கும் என் பத்தியிலே!

### இனிப்பு

ஒரு நீண்ட கட்டுரையை சிறிய பத்தி எழுத்துப் பகுதியில் எப்படி இனிப்பாக சேர்ப்பது என்ற சிந்தனையில் சில நாட்கள் உறக்கம் கலைந்தது.

ஏனென்றால், தென்னிலங்கை, மாத்தறைப் பகுதி கிராமமொன்றில் வாழ்ந்த நிலபுலனற்ற கூலி விவசாயியின் மகனொருவர், சிறுவயதில் போதிய போசாக்கின்றி சோகை, வலிப்புப் போன்ற உபாதைகளுக்குள்ளானவர், ஏழெட்டுத் தரங்களுக்கு மேல் கல்வியைத் தொடர இயலாத் துர்ப்பாக்கியசாலி, ஆனால் நூலார்வமும் வாசிப்பு வெளியும் மிகுந்தவர்!

அந்த இளைஞன் கொழும்புப் பிரதான பகுதிகளிலொன்றான மருதானை – மாளிகாகந்தை பிரதேசத்திற்கு வந்து சேர்கிறான்.

சிறு அச்சகமொன்றில் பல்வகைப் புத்தகங்களையும், பற்று வரவுப் பேரேடுகளையும் நூல் கோர்த்துக் கட்டும் வேலை. "புத்தகம் கட்டும் புத்திசாலி" என அதி விரைவுப் புகழ்!

"சதா சர்வ காலமும் புத்தகங்கள் கட்டிக் கொண்டிருக்காமல் நீங்களே புத்தகம் வெளியிடுங்கள்" என்ற பலரின் உந்துதலில் ஆரம்பித்தது ஒரே அறையில் "கொடகே புத்தக"க்கடை.



70 களில் ஐந்து நூல்களை மட்டும் சுயமாக வெளியிடும் ஆளுமை. 97 களில் 400. 86 முதல் சாகித்ய விருது நூல்களை வெளியிடும் பெரும் நிறுவனமாகத் தோற்றம்!

அந்த ஜேம்ஸ் அப்புஹாமியின் புதல்வன் **சிறிசுமண கொடகே** என்ற மாமனிதனை இன்று தமிழ் இலக்கிய நெஞ்சங்களும், வாசகர்களும் அறிவர்.

தமிழை – அதுவும் இலக்கியத்துறை மேம்பாட்டை – நினைத்தே பார்க்க வேண்டிய தேவையற்ற ஒரு சிங்களச் சமூகத்தவர் நினைத்தார்.

நம் **'மேமன்கவி'** தனதருமைப் பதிவொன்றில் வழங்கியுள்ள ஒரு சிறு பகுதியைப் பகிர்கின்றேன்.

'இன்றையப் பொழுதுகளில் சிங்கள – தமிழ் மொழிபெயர்ப்பு நூல்களை அதிகமான அளவில் வெளியிட்ட நிறுவனமாக கொடகேயின் நிறுவனமே திகழ்கின்றது.

ஈரினத்தார்களின் புரிந்துணர்வுக்கும் நல்லிணக்கத்திற்கும் இலக்கிய வழிப் பணியின் முதல் கட்டத்தை அவர் ஆரம்பித்து வைத்துவிட்டார்"

2000 ஆண்டில் நிறுவப்பட்ட அந்த உறவுப் பாலம், இப்பொழுது இருபது ஆண்டுகளுக்குப் பிறகு மிக உறுதி. மிகமிக உறுதி.

வாழ்நாள் சாதனையாளர் விருது, ஆண்டு தோறும் சிறந்த நூல்கள் தெரிவு, நூலுருவம் பெறாத இலக்கியப் பிரதிகள் தேர்வு, மூத்த எழுத்தாளர் கௌரவிப்பு என சிங்கள மொழி எழுத்தாளர்களின் அளவுக்கு தமிழ் கலை இலக்கியவாதிகளுக்கும் ஒரே மேடையில் புகழாடைகள், பொற்கிழிகள்.

**கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது**

2009 : டொமினிக் ஜீவா,
கவிஞர் ஏ. இக்பால்,
திருமதி கோகிலா மகேந்திரன்.
2010 : பேராசிரியர் கா. சிவத்தம்பி,
2011 : திருமதி அன்னலஷ்மி இராஜதுரை,
2012 : தெளிவத்தை ஜோசப்,
2013 : கே.எஸ். சிவகுமாரன்,
2014 : பேராசிரியர் சி. மௌனகுரு,
2015 : நந்தினி சேவியர்.
2016 : பண்ணாமத்துக் கவிராயர் எஸ்.எம். ஃபாறூக்,
2017 : சாந்தன்,
2018 : காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்,
2019 : திருமதி பத்மா சோமகாந்தன்,
2020 : தமிழ்மாமணி எஸ். முத்து மீரான்.

**கொடகே மூத்த எழுத்தாளர் கௌரவிப்பு**

2014 : திருமதி பத்மா சோமகாந்தன்,
2015 : மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத், திருமதி அன்னலஷ்மி இராஜதுரை,
2016 : அந்தனி ஜீவா, கவிஞர் மேமன் கவி,
2017 : திருமதி சரோஜிதேவி அருணாசலம், தி. ஞானசேகரன், கவிஞர் அல்அசூமத், 2018 : மு. சிவலிங்கம், திருமதி புர்கான் பீ. இப்திகார், தம்பு சிவா, 2019 – 2020 ஆண்டுகளுக்கு விவரம் கிடைக்கப்பெறவில்லை!

நாவல், சிறுகதை, கவிதை, முதல் நூல் பிரிவுகளில் 2009 லிருந்து 2017 வரையில் பரிசில்கள் பெற்ற தமிழ்ப் படைப்பாளிகள் மொத்தம் 40. 2018 – 19 – 20 கால விவரங்கள் பெற முடியவில்லை.

நூல் வடிவம் பெறா கையெழுத்துப் படைப்புகளில் 2015 – 2018 காலப் பகுதியில் மொத்தம் 09. (2019 – 20 களின் விவரங்கள் பெற முடியவில்லை)

இந்த இனிப்புகளைச் சிறப்பாக வழங்க தகவல்கள் தந்துதவிய மூத்த எழுத்தாளர் திக்குவல்லை கமால், கலைஞர் – கவிஞர் எம்.எஸ். அப்துல் லத்தீப் ஆகியோருக்கு நான் நன்றிக்கடன்பட்டவன்)

2020 க்கான "கொடகே சாகித்திய விழா எதிர்வரும் 10 ஆம் நாள் கோலாகலமாகக் கொழும்பில்!)





## ஜீவன் தொண்டமான் கவனத்திற்கு...!

# கிடப்பில் போடப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள்

## நியூ பீகொக் வீடமைப்புத் திட்டம்

கண்டி மாவட்டத்தின் உடப்பலாத்த பிரதேச சபைக்குட்பட்ட புசல்லாவ நயாபனவில் அமைந்துள்ளது நியூ பீகொக் தோட்டம்.

இங்கே மண்சரிவு, இயற்கை அனர்த்தத்துக்கு உள்ளான இரண்டாம் இலக்க குடியிருப்புகளைச் சேர்ந்த தொழிலாளர் குடும்பங்களுக்கென 1988ம் ஆண்டு வீட்டுத்திட்டம் ஒன்று வரையப்பட்டு 2000ம் ஆண்டளவில் வீட்டுத்திட்ட கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இது நடந்து இருபது வருடங்கள் கடந்துவிட்டன. வீட்டுத்திட்டம்தான் இன்றைக்கும் அரைகுறையைத் தாண்டவில்லை. அரைகுறையாக கட்டப்பட்ட இவ் வீடுகளில் மக்கள் தமது சொந்தப் பணத்தை செலவிட்டு திருத்தங்களைச் செய்து குடியேறியுள்ளனர்.

இவ்வாறு குடியேறியுள்ள 15 குடும்பங்களும் யன்னல் கதவுகள் இல்லாத வீடுகளிலேயே வசிக்கின்றனர். ஆடு, மாடு, நகை என்பனவற்றை விற்று வீடுகளை தம்மால் முடிந்தமட்டும் திருத்திக்கொண்டு வசிக்கிறார்கள். 32 வீடுகள் கட்டுப்பட வேண்டிய இத்திட்டத்தில் ஒரு வீடேனும் முற்றாக கட்டி முடிக்கப்படவில்லை. குடிநீர் வசதி, மின்சார வசதி பூரணமாக செய்து கொடுக்கப்படவில்லை.

மக்களின் பணத்தினால் கட்டப்பட்ட இந்த வீட்டுத்திட்டம் மண்ணாகக் கிடக்கிறது. மாதமொன்றுக்கு 640 ரூபா என்ற வீதத்தில் 180 மாதங்கள் அறவிட வேண்டிய நிலையில் தொழிலாளிகளிடம் இருந்து 670 ரூபா அறவிடப்படுகிறது. இதில் மூன்று மடங்கு பணத்தை தொழிலாளர்கள் செலுத்தியுள்ளபோதும் வீட்டுத்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை. இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. டிரஸ்டும், தேசிய சேமிப்பு வங்கியும் தோட்ட நிர்வாகமும் இணைந்தே இவ்வேலைத் திட்டத்தை முன்னெடுத்தன.



காய்கறி பாத்தியாக...



கால்நடை தொழுவமாகிப்போன வீடுகள்

ஏழு பேர்ச் நிலப்பகுதியில் கட்டப்பட்ட முப்பத்தி இரண்டு வீடுகளில் அத்திவரதத்துடன் கைவிடப்பட்ட வீடுகளும் உண்டு. இதன் கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் தரம் குறைந்தனவாக உள்ளன. சிமெந்து கற்கள் கிரவல் மணல் கலந்து செய்யப்பட்டவை என தொழிலாளர்கள் கூறுகின்றனர். கற்களை கைவிரல்களால் நொறுக்கியும் காட்டுகிறார்கள். இது தொடர்பாக தாம் செல்லாத காரியாலயம் இல்லை. சொல்லாத அதிகாரிகள் இல்லை. இதுவரை பயன்தான் இல்லை என்கின்றனர் இங்கு வசிக்கும் அப்பாவிக் குடும்பத்தினர்.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் இவ்வீட்டுத் திட்டம் தொடர்பான ஆவணங்களைப் பார்த்து உண்மை நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.



காடாகி, அரைகுறையாக காணப்படும் வீடுகள்

இவ் வீட்டுத் திட்டத்துக்கு உயிர்கொடுத்து முழுமைபெறச் செய்ய முன்வரவேண்டும்.

ஏனெனில் இவ்வீட்டுக்கான செலவின் ஒரு பகுதியை அவர்கள் தமது வருமானத்தில் இருந்து செலவு செய்திருப்பதால், ஜீவன் தொண்டமான் இவ்விவகாரத்தை, அலட்சியத்தால் தூக்கி வீசப்பட்ட இத்திட்டத்தை அப்பாவி மக்களுக்கான ஒரு குடியிருப்பு திட்டத்தை, கையில் எடுத்துக்கொள்ள வேண்டும். இது இக் குடும்பங்களின் கோரிக்கை, எதிர்பார்ப்பு, பிரார்த்தனை.

நவராஜா ...

படங்கள்: தெல்தொட்ட தினகரன் நிருபர்

---

**‘ சர்வதேச ரீதியாக இம் முள்ளுத் தேங்காய் உற்பத்தியினால் ஏற்படக்கூடிய ஆபத்து உணரப்பட்டு அதனை கைவிட்டு வரும் செய்திகள் வந்தன. பாரம்பரிய ஏற்றுமதி பயிர்களைக் கொல்லும் முள்ளுத் தேங்காய் உற்பத்தி தேயிலை, தென்னை, இறப்பர் உற்பத்தி வீழ்ச்சிக்கு மாற்றீடாக அமையாது ’**



# முள்ளுத் தேங்காய் உற்பத்திக்கு முடிவுகட்டிய ஜனாதிபதி!

## ஏக மகிழ்ச்சியில் பெருந்தோட்ட மக்கள்

பெருந்தோட்ட பொருளாதாரத்தைப் பொறுத்தவரை இரண்டு நம்பிக்கை கீற்றுக்கள் வெளிப்பட்டுள்ளன. ஒன்று அழிந்துப்பட்டு வரும் பெருந்தோட்டத் துறையை இலாபமீட்டக் கூடியதாக மீளவும் கட்டியெழுப்பல். அடுத்தது, முள்ளுத் தேங்காய் உற்பத்திக்கு முழுமையான தடை விதித்தல்.

அண்மையில் புதிய அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களை அறிவிக்கும் சிம்மாசன பிரசங்க உரை நிகழ்த்தப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பிரதாயபூர்வமாக இதனை அறிவித்திருக்கிறார்.

இந்த விடயங்கள் குறித்து துணிச்சலான முடிவுக்கு வந்திருக்கும் ஜனாதிபதி பெருந்தோட்ட மக்களுக்கு திருப்தியை ஏற்படுத்தியிருக்கிறார். முள்ளுத் தேங்காய் உற்பத்திக்கு தடை என்பது சிலருக்கு பிடிக்காத சங்கதியாக இருக்கலாம். ஆனால் முள்ளுத் தேங்காய் உற்பத்தி செய்தால் ஏற்படும் உபத்திரங்கள் ஏராளம்.



தேயிலை, இறப்பர் பயிர்ச் செய்கையில் இருந்து பெருந்தோட்ட கம்பனிகள் விலகிப் போய் முள்ளுத் தேங்காய் உற்பத்தியில் முனைப்பு காட்டியது ஏன்?

பெருந்தோட்டத் துறை பயிர்ச்செய்கை இன்று பாரிய வீழ்ச்சியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. தேயிலை மட்டுமின்றி இறப்பர், தெங்கு பயிர்ச் செய்கையும் பாதிப்படைந்து வருகிறது. பெருந்தோட்டக் கம்பனிகள் இலாபத்தை மட்டுமே இலக்காக கொண்டு இயங்குவதால் மாற்றுப் பயிர்ச்செய்கை பற்றி கவனமெடுக்க ஆரம்பித்தன.

1992இல் அரசு வசமிருந்த பெருந்தோட்டத்துறை முகாமைத்துவம் தனியார் கைகளுக்கு மாறியது. 23 கம்பனிகள் இவற்றை பகிர்ந்து கொண்டன. இந்த கைமாற்றத்துக்கு அடிப்படை இத்துறை நட்டத்தில் இயங்குவதே என்று கூறப்பட்டது. இத்தோட்டங்களில் சில அப்போது இலாபத்தில் இயங்கின. இவற்றை அரசு பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை, எல்கடுவ பிளான்டேஷன் என்பன தன்பொறுப்பிலேயே வைத்துக் கொண்டன. அவை அரசின் நேரடி முகாமைத்துவத்தின் கீழ் வரும் அமைப்புகளாகும்.

எனினும் பிற்காலத்தில் இவை தொடர் நட்டத்துக்கு முகம் கொடுக்கலாயின. இதனால் இங்கு பிரச்சினைகள் தலைத்தூக்கின. தொழிற்சங்கங்களூடான முரண்பாடுகள், இனவாத போக்குகள், அரசியல் தலையீடுகள் அதிகரித்தன. தோட்டங்கள் துண்டாடப்பட்டன. தொழிலாளர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றுக்கு இலட்சக்கணக்கான ரூபாய்கள் இன்னும் செலுத்தப்படாமலே உள்ளன.

இதுபோலவே கம்பனிகளின் நிர்வாகத்திலுள்ள தோட்டங்களின் நிலைமையும் மிக மோசமாகவே காணப்படுகின்றன. இவை பெருநட்டத்தில் இயங்குவதாக கூறப்படுகின்ற அதே நேரம் தொழிலாளர்கள் பெற்றுவந்த பல சலுகைகள் கைவிடப்பட்டுள்ளன. உண்மையில் தேயிலை ஏற்றுமதியில் அண்மைக்காலமாக சில பாதகமான தன்மைகள் நிலவுவதை ஆய்வாளர்கள் ஏற்கெனவே உறுதி செய்துள்ளனர். தொழிற்சங்கங்கள் கூட இதனை ஒப்புக்கொள்கின்றன.

குறிப்பாக, தேயிலை ஏற்றுமதியில் 70 வீதத்துக்கும் அதிகமானவற்றை இறக்குமதி செய்வது மத்திய கிழக்கு நாடுகள், சோவியத் ரஷ்யா, உக்ரைன் போன்றவையே. இந் நாடுகளில் அண்மைக்காலமாக நிலவி வரும் பொருளாதார, அரசியல் நெருக்கடியானது தேயிலை இறக்குமதியில் கணிசமான வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஏற்றுமதியில் சரிவைச் சந்திக்க வேண்டிய நிலையே நீடிக்கின்றது.

அத்துடன் சர்வதேச தேயிலைச் சந்தையில் தர ரீதியில் போட்டிப்போடும் சந்தை நிலமை கூட இலங்கைக்கு சரியானதாக இருக்கவில்லை. இதேவேளை சந்தை வாய்ப்பை தக்கவைத்துக்கொள்ள கூடியதான தேவையான உற்பத்தி இலக்கினை எட்ட முடியாத நிலைமையும் தற்போது காணப்படுகின்றது. இப்பின்னணியில் அண்மைக்காலமாக தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுவரும் பின்னடைவானது இத்துறை மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பது தவிர்க்க முடியாததே. தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைய தோட்ட முகாமைத்துவத்தில் காணப்படும் முறையற்ற நிர்வாகமே காரணமாகுமென்பதே தொழிற்சங்கங்களும், அவதானிகளும் சுட்டிக்காட்டும் விடயமாகும். கம்பனிகளின் நோக்கம் இலாபத்தை மட்டும் குறியாகக் கொண்டிருப்பதால் அதற்கேற்ப தொழிலாளர்களது நலன்புரி செயற்பாடுகளில் நாட்டம் காட்டுவது கிடையாது.

(10 பக்கத் தொடர்)

பன். பாலா ...

---

## மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஆளுமை

# செய்தி நாகலிங்கம்



மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் 1963 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வேளையில் அதன் உபதலைவராகவும் 1967 தொடக்கம் 1971 தலைவராகவும் இருந்தார். ராமலிங்கம் முத்து நாகலிங்கம் தமிழ்நாட்டில் இராமநாதபுரம் பரமக்குடி அருகேயுள்ள பரத்தவயல் கிராமத்தை சேர்ந்தவர். தனது 19ஆவது வயதில் இலங்கைக்கு வந்ததும் முதலில் புசல்லாவையில் புடவைக் கடை ஒன்றில் பணியாற்றினார். ஓய்வு நேரத்தை வீணடிக்காமல் சமூகத்துக்கு பயனுறுதியுடைய முறையில் செலவிட வேண்டும் என எண்ணிய நாகலிங்கம், புஸல்லாவை பகுதி இளைஞர்களை அணிதிரட்டி 'நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் சங்கம்' என்ற பெயரில் அமைப்பொன்றை உருவாக்கி சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

கண்டி குருதெனியவில் ஜெகஜோதி எனும் நிறுவனத்தை ஆரம்பித்து தனது அயராத முயற்சியின் மூலம் அப்பகுதியில் பிரபல வர்த்தகர்களில் ஒருவராக விளங்கினார். காலஞ்சென்ற அதிவணக்கத்துக்குரிய தனிநாயகம் அடிகளார் பேராதனை பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றிய



காலகட்டம் அது. சிறுவயதிலிருந்து வாசிப்பு பழக்கத்தை கொண்டிருந்த அவர் எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் போன்றவர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தினார். தனிநாயகம் அடிகளாரின் தமிழ் பற்றும் தமிழ் புலமையும் இவரைப் பெரிதும் ஈர்த்தது. அதனையடுத்து அடிகளாருடனான நாகலிங்கத்தின் பழக்கமும் நட்பும் நெருக்கமடைந்தது. கண்டியில் நாகலிங்கத்தின் அச்சகமொன்றை தொடங்கி வைத்து ஆசி வழங்கியவர் தனிநாயகம் அடிகளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடிகளார் மலேஷிய பல்கலைக்கழகத்தில் இந்தியாவில் துறையின் தலைவராகப் பணியாற்றிய வேளையில், 1964ஆம் ஆண்டு நாகலிங்கத்தை மலேசியாவுக்கு அழைத்தார். அங்கு பல மலேசிய இலக்கிய ஆர்வலர்களை சந்தித்ததுடன் டத்தோ சாமிவேலு நடத்திய தமிழ்நேசனின் பத்திரிகையாளர்கள் பலருடன் தொடர்புகளை வளர்த்துக் கொண்டார்.

மலேசியாவில் நடைபெற்ற முதலாவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடுகள், அறிக்கைகள் மற்றும் தனிநாயகம் அடிகளார் பதிப்பித்த சஞ்சிகைகள், பிரதிகள் ஆகியவை ரா.மு என்று எல்லோராலும் வாஞ்சையுடன் அழைக்கப்பட்ட இவரது வீட்டு நூலகத்தில் காணப்பட்ட அரிய நூல் பொக்கிஷங்களாகும். தன்னிடமிருந்த அனைத்து தமிழ் நூல்களையும் நாகலிங்கம் பிற்காலத்தில் புஸல்லாவையில் கே.ராஜலிங்கம் நிறுவிய சரஸ்வதி தமிழ் பாடசாலைக்கு நன்கொடையாக வழங்கினார்.



'கலைமகள்' கி.வ.ஜகந்நாதனுடன்...

நாகலிங்கத்துக்கு இயல்பாகவே இருந்த எழுத்தார்வமும் இலக்கிய ஆர்வமும் அச்சுத் தொழிலில் அதிக அக்கறை செலுத்துவதற்கு முக்கிய காரணமாக அமைந்தன. கண்டியிலும் கொழும்பிலும் அச்சகங்களை நிறுவி அவர் தமது செய்திப் பத்திரிகையை சுமார் 10ஆண்டு காலமாக நடத்தி வந்தார். யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியராக பணியாற்றிய கே. மகாதேவா மற்றும் பெரி. சுந்தரலிங்கம் ஆகியோரை ஆசிரியர்களாக கொண்ட அந்த செய்தி பத்திரிகை மலையகத்தின் பிரதான பத்திரிகையாக வெளிவந்தது. 1960களில் வெளிவந்த இப்பத்திரிகை புகழ்பெற்ற பல எழுத்தாளர்களின் ஆக்கங்களை வெளியிட்டதுடன் புகழ்பெற்ற இலக்கிய சிந்தனையாளரான மு. தளையசிங்கம் எழுதிய இலக்கிய குறிப்புகள் 7ஆண்டுகளாக அந்த பத்திரிகையில் வெளிவந்தன.

அகிலம் பத்திரிகையின் ஆசிரியராக தற்போது இருக்கும் பதுளை எம். ராமசாமி, ரா.மு.வின் செய்தி இலக்கிய பாசறையில் தன்னை வளர்த்துக் கொண்டவராவார். பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் ரா.மு.வின் மருமகனான பேராசிரியர் சோ. சந்திரசேகரனின் ஆரம்பகால கல்வியியல் கட்டுரைகள் பலவும் செய்தி பத்திரிகையிலேயே வெளிவந்தன.

இலங்கையின் முன்னணி வர்த்தக பிரமுகராக விளங்கிய ரா.மு தலைவராக இருந்து கலை இலக்கியத் துறையில் காட்டிய அர்ப்பணிப்புடன் கூடிய ஈடுபாடு காரணமாக இலங்கையிலும் தமிழகத்திலும் இருந்த முக்கிய பிரமுகர்கள், அறிஞர்கள் பலருடன் நெருங்கிய தொடர்புகளை பேணக்கூடியதாக இருந்தது. தமிழகத்திலுள்ள பல அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களுடன் நெருக்கமான தொடர்புகளை வளர்த்துக்கொண்ட ரா.மு. அந்த மாநிலத்தின் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழக மேல் சபையின் முன்னாள் உறுப்பினருமான மா.பொ. சிவஞானம் ஒரு தடவை இலங்கை வந்து நாட்டின் பல பகுதிகளிலும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு காரணமாக இருந்தார். மா.பொ.சி.யின் 'செங்கோல்' பத்திரிகை ரா.மு.வுக்கு கிரமமாக வந்துசேரும். வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, வீரக்கண்ணகி என்ற நூல்களை மிகவும் ஆழமாக படித்திருந்த ரா.மு சென்னைக்கு சென்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் சிலம்பு செல்வர் இல்லம் சென்று அவரை தவறாமல் சந்தித்து பேசுவது வழக்கமாகும்.

அக்காலத்தில் கலைஞர்களான டி.கே.சண்முகம், டி.கே.பகவதி ஆகியோருடன் நெருங்கிய தோழமை கொண்டிருந்த ரா.மு, முக்கியமாக பாவை விளக்கு, வேங்கை மனிதன், வாழ்வு எங்கே, சிநேகிதி என என்றென்றும் மறக்க முடியாத நாவல்களை எழுதிய அகிலன் இவரின் நெருங்கிய நண்பராவார்.

கலைமகள் ஆசிரியர் கி.வா. ஜெகநாதனின் தமிழ் புலமை மீதான ஆர்வத்தினால் ரா.மு, கி.வா.வின் மணிவிழாவை 1976ஆம் ஆண்டு கண்டியில் நடத்தினார். இலங்கையின் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த முருகேசு திருச்செல்வம் (யூ.சி) அந்த மணிவிழாவின் முக்கிய விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார். பல அறிஞர்களின் ஆக்கங்களை உள்ளடக்கிய மணிவிழா மலரையும் ரா.மு தயாரித்து வெளியிட்டார்.



தொண்டமானுடன்...

பாண்டிச்சேரியில் வாழ்ந்த புரட்சி கவிஞன் பாரதிதாசனின் பாடல்கள் மீது கொண்ட பெரும் ஈடுபாடு காரணமாக அவரை ரா.மு பலமுறை சந்தித்து இலக்கியம் பற்றி நீண்ட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

மலைநாட்டு எழுத்தாளர் சங்கத் தலைவராக இருந்தபோது ரா.மு சிறுகதை மன்னன், புதுமைப்பித்தன் நாடகத்துறையின் பெரும் கலைஞர் சங்கரதாஸ் சுவாமிகள் ஆகியோருக்கு கண்டியில் விழா எடுத்தார். யாழில் கே.பி. கரண், கே.சி. தங்கராஜா ஆகியோரின் முயற்சியில் ஈழநாடு பத்திரிகை தொடங்கப்பட்டபோது பெரும் பங்களிப்பை செய்த ரா.மு, அப்பத்திரிகை மலையகத்தில் விநியோகிக்கப்படுவதற்கு முன்னின்று செயற்பட்டார்.

இர. சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன் ஆகிய மலையக கல்விமான்களுடன் நெருக்கமான தொடர்பை கொண்டிருந்த ரா.மு அரசியல் காரணங்களினால் 1965ஆம் ஆண்டில் இர.சிவலிங்கம் அதிபர் பதவியை இழந்தவேளையில் அவர் கண்டியில் வந்து தங்கி வாழ்வதற்கு பெரும் உதவிகளை செய்தார். அக்காலத்தில் அவர் ஒழுங்கு செய்த இலக்கிய கூட்டங்களிலும் சிவலிங்கம் தவறாது கலந்துகொண்டு உரையாற்றினார். இர. சிவலிங்கம் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவரை அடிக்கடி சென்று சுகம் விசாரித்து வந்தார். ரா.மு. 1983 ஜூலை இனக்கலவரத்துக்கு பின்னர் கல்விமான்கள் இருவரும் தமிழ் நாட்டுக்கு குடிபெயர்ந்தனர்.

இலங்கை இந்திய காங்கிரஸின் முக்கிய தலைவர்களுடன் கொண்டிருந்த தொடர்பு காரணமாக ரா.மு வேறொரு சந்தர்ப்பத்தில் (1970களின் முற்பகுதியில்) இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் மோகன் குமார மங்களம், இரா. பாலதண்டாயுதம் ஆகியோரை வரவேற்று பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தார் ரா.மு. பேராதனை பல்கலைக்கழக தமிழ் சங்க கூட்டத்தில் பேசிய இரா. பாலதண்டாயுதம் இலக்கியங்கள் மனிதநேயத்தை பிரதிபலிக்க வேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்தினார். இவர்கள் இருவரையும் விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்த ரா.மு பின்னாளில் அந்த இருவருமே விமான விபத்தில் அகால மரணமடைந்த செய்தியைக் கேட்டதும் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார்.

முன்னாள் அரசியல்வாதியான மலையக காந்தி கே.ராஜலிங்கத்துடன் ரா.மு.வுக்கு முக்கிய தொடர்பு ஏற்பட்டது. சங்குவாரி தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட இராஜலிங்கம் அவருடைய சகோதரர் சின்னையா ஆகியோர் நாகலிங்கத்தின் குடும்ப உறுப்பினராக விளங்கினர். அவருடைய காலத்தின் பின்னர் அவருடைய பிள்ளைகளும் தொடர்புகளைப் பேணிவந்தமை குறிப்பிடத்தக்கது.

எச்.எச். விக்கிரமசிங்க...

# ஒருங்கிணைந்த கூட்டு வேலைத்திட்டத்தின் அவசியம்

அரசாங்கம் ஒன்றரை லட்சம் பேருக்கு அரச வேலை வாய்ப்பை வழங்கிக் கொண்டிருக்கிறது. இதில் பட்டதாரிகள் 50 ஆயிரம்பேர். இன்னுமொரு பத்தாயிரம்பேர் மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. ஏனையோர் கல்வித்தரம், வாழ்க்கைத்தரம் போன்றவற்றில் அடிமட்டத்தில் உள்ளோராகும். அதாவது இதுவரையில் அரச உத்தியோகம் எதையும் பெறாத குடும்பங்கள் மற்றும் சமுர்த்தி உதவியைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இந்த ஒரு லட்சம் பேரும். வேலைவாய்ப்பைப் பெறும் அனைவருக்கும் வாழ்த்துகள்.

இளைய தலைமுறையினருடைய வேலையில்லாப் பிரச்சினைக்கு இது ஒரு தீர்வுதான். அதாவது அவர்களுடைய வாழ்க்கைக்கு இது மிகப்பெரியதொரு வரப்பிரசாதம். ஏனென்றால் வேலை என்பதே வாழ்க்கைக்கான அடித்தளம். ஆதாரம். நம்பிக்கை. வலு. இதைப் புதிய அரசாங்கம் வழங்குவது அதனுடைய மதிப்பைச் சற்று உயர்த்தும்.

ஆனால், இதைத்தான் அரசாங்கம் செய்ய வேண்டும் என்றில்லை. அதாவது வேலையற்றிருப்போருக்கான வேலை வாய்ப்பை வழங்குவது அரசாங்கத்துக்கு மட்டுமேயான பொறுப்பல்ல. அதுவும் அரசாங்கத்தின் நிர்வாக அடுக்குகளிலேயே பணியைப் பகிர்வது நல்லதுமல்ல. அது ஒரு சுமையாகவே மாறக்கூடிய அபாயத்தை உண்டாக்கி விடும்.

பதிலாக நாட்டுக்குப் பொருத்தமான பொருளாதாரக் கொள்கையைச் சரியாக வகுத்துக் கொண்டால் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும். அதுவே சரியானது. குறிப்பாக உற்பத்திசார் பொருளாதாரச் சிந்தனை இதற்கு மிகச் சிறப்பாக இருக்கும். இலங்கை ஒரு விவசாய நாடு என்ற அடிப்படையில் விவசாயத்தை நவீனப்படுத்துவது. விவசாயப் பொருட்களை புதிய சந்தைக்கு ஏற்ப மறுவடிவாக்கம் (Post Production) செய்வது. இதற்கமைய விவாசயத் தொழில்நுட்பத்தை நவீனப்படுத்தி இந்தத் துறையை நவீனமாக்கம் செய்வது ஒன்று. அடுத்தது, நாட்டிலுள்ள கடல் வளத்தைச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்வது. வளமான கடலால் சூழப்பட்ட தீவு என்ற வகையில் இலங்கை மிகச் செழிப்பான பொருளாதாரத்தையும் மிகக் கூடுதலான வேலை வாய்ப்புகளையும் பெறக் கூடியதாக இருக்கும். இதற்கமைய கல்விக் கொள்கை, பொருளாதாரக் கொள்கை, அரசியல் நடைமுறைகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

இப்படித்தான் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையிலும். தென்னை, தேயிலை, ரப்பர், மரமுந்திரிகை போன்றவற்றில் விரிவாக்கமும் நவீனத்துவமும் தேவைப்படுகிறது. இவை அனைத்தையும் ஒருங்கிணைந்த முறையில் செயற்படுத்துவம் போது பல லட்சம் பேருக்கான வேலை வாய்ப்பை நாம் உருவாக்கிக் கொள்ள முடியும்.

இன்று பல்லாயிரக்கணக்கானவர்கள் – குறிப்பாக இளைய தலைமுறையினர் வெளிநாடுகளுக்குச்சென்றே வேலை தேடுகிறார்கள். மத்திய கிழக்கு நாடுகள் தொடக்கம் மலேசியா, சிங்கப்பூர் வரையில் பல நாடுகளில் நமது ஆற்றல் மிக்க இளைய தலைமுறையிரின் ஆற்றலும் செலவழிக்கப்படுகிறது. அங்கே அடித்துக் கொடுத்து விட்டு களைப்போடு முதுமையடைந்து வீடு திரும்புகிறார்கள். இதை நாடு திரும்புவதாக எடுத்துக் கொள்ளுங்கள்.

ஆகவே இவர்களையெல்லாம் அவர்களுடைய இளமையில் எங்கள் நாட்டில், எங்கள் சூழலில் வைத்துப் பயன்படுத்திக் கொள்வதே எமது நாட்டுக்குச் சிறப்பும் நல்லதுமாகும். இதைக் குறித்து அரசாங்கம் கடுமையாகச் சிந்திக்க வேண்டும். இதைப் பற்றி வேறு சிலருக்கு வேறு விதமான அபிப்பிராயம் இருக்கலாம். அவர்களைப் பொறுத்தவரையில், வெளிநாட்டில் வேலை செய்வதன் மூலம் நமது நாட்டுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறதே. அதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா என்றே கேட்பார்கள். அந்தப் பிச்சைக் காசை விட சொந்த நாட்டில் உற்பத்தித்துறையை விரிவாக்கம் செய்து உழைப்பதே சிறப்பு. இந்த உழைப்பென்பது இளைய தலைமுறையின் அறிவு, ஆற்றல், ஆளுமை, முயற்சி, திறன் போன்றவற்றை எல்லாம் நமக்கான உற்பத்திகளில் ஈடுபடுத்துவதன் மூலம் தேசப் பொருளாதாரக் கட்டுமானத்தை நிர்மாணிப்பதாகும்..



இதுவே நாட்டைப் பொருளாதார ரீதியிலும் சமூக அடிப்படையிலும் வளர்க்கும். ஆற்றல் வெளிப்பாட்டுக்கும் ஆளுமைப் பரிணமிப்புக்கும் கூடுதல் வாய்ப்பை அளிக்கும். இதையே வளர்ச்சியடைந்த நாடுகள் செயற்படுத்துகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகள் அந்த இடத்தைப் பெற்றது தங்களுடைய பொருளாதாரக் கொள்கையினாலும் ஜனநாயகச் செழுமையினாலும் பன்மைத்துவச் செழிப்பினாலுமே.

இன்று வளர்ச்சியடைந்த நாடுகளின் பெரும் செல்வம் என்பது அவை கொண்டிருக்கும் ஜனநாயகச் சிறப்பும் பன்மைத்துவச் செழிப்புமே. இவை இரண்டுமே புதிய புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கு இடமளிப்பதுடன், அவற்றைப் பிரயோகப்படுத்தி வெற்றியைக் காண்பதற்கான அடித்தளத்தை வழங்குகின்றன. மேலும் ஊக்கிகளாகவும் உள்ளன.

எனவே இதைப்பற்றிச் சிந்திப்பதே இன்றைய தேவையாகும். இந்தப் புதிய அரசாங்கம் பல புதிய மாற்றங்களை, வளர்ச்சிகளை எட்டுவதற்குத் தவித்துக் கொண்டிருக்கிறது. அப்படியென்றால் அடிப்படைப் பிரச்சினைகள் என்ன என்று புரிந்து கொண்டு, அதற்கமையச் செயற்படுவது அவசியமாகும். அரச உத்தியோகத்துக்குள் மட்டும் வேலை வாய்ப்பை வழங்குவதைப் பற்றி அரசாங்கம் தொடர்ந்தும் சிந்திக்குமாக இருந்தால் அது நாட்டுக்கு பெரும் சுமையாகவே அமையும். அதனால் நாட்டில் எந்தப் பெரிய மாற்றங்களையும் உருவாக்க முடியாது. பதிலாக அரச நிர்வாகம் மேலும் சீரழியக் கூடிய நிலையே உருவாகும். பொருளாதார விருத்திக்குப் பதிலாக பொருளாதார நெருக்கடியில் நாடு சிக்கிவிடும். ஊழலும் செயலின்மையும் கூட வளரலாம்.

அரச உத்தியோகம் என்பது மக்களுடைய வரிப்பணத்தில் இயக்கப்படுவதாகும். மக்களுக்கான நிர்வாக ஒழுங்குபடுத்தல்கள், தேவைகள் போன்றவற்றைச் சிறப்பாகச் செய்வதற்கான கட்டமைப்பை நிர்வகிக்கும் ஆளணியாகும். இது ஒரு எல்லை வரையில் இருப்பதே சிறப்பு. மக்களுக்கான சேவைகளும் அப்படித்தான். மருத்துவம் கல்வி போன்றவை இலங்கையில் இலவசச் சேவையின் மூலமாகக் கிடைப்பன என்பதால் இந்தத் துறையில் சற்று அதிகமானவர்கள் வேலை வாய்ப்பைப் பெறலாம். ஏனைய வேலைகளுக்கு அளவுக்கதிகமான ஆளணி இருந்தால் அது ஏற்கனவே இருக்கின்ற செயற்பாட்டுப் பொறிமுறையையே பலவீனப்படுத்தி விடும்.

அளவுக்கு அதிகமான ஆளணிச் சேர்க்கை என்பது நிர்வாகத்தை நீர்த்துப் போகவே வைக்கும்.

**பல திணைக்களங்களில் நியமிக்கப்பட்டவர்களுக்கு எந்த வேலையைப் பகிர்ந்து கொடுப்பது என்று தெரியாத நிலையில் அதிகாரிகள் திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்றனர். தவிர, வேலைக்குறைவினால் பலரும் சோம்பியவாறே பணியிடங்களில் உள்ளனர். பலர் பணி நேரத்தில் பயனற்ற விதமாகவும் நடந்து கொள்கின்றனர். சிலர் பணி நேரங்களிலிருந்து வெளியேறி வேறு வேலைகளில் ஈடுபடுவதும் உண்டு.**

ஏற்கனவே அரச உத்தியோகங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பலருக்குப் பொருத்தமான வேலைகள் இல்லை. பல திணைக்களங்களில் நியமிக்கப்பட்டவர்களுக்கு எந்த வேலையைப் பகிர்ந்து கொடுப்பது என்று தெரியாத நிலையில் அதிகாரிகள் திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்றனர். தவிர, வேலைக்குறைவினால் பலரும் சோம்பியவாறே பணியிடங்களில் உள்ளனர். பலர் பணி நேரத்தில் பயனற்ற விதமாகவும் நடந்து கொள்கின்றனர். சிலர் பணி நேரங்களிலிருந்து வெளியேறி வேறு வேலைகளில் ஈடுபடுவதும் உண்டு. எவ்வளவு நேரம்தான் ஒன்றுமே செய்யாமல் சும்மா வெறுமனே கதிரையில் குந்திக் கொண்டிருக்கிறது என்பதால் ஏற்படுகிறது இந்த நிலை.

இதற்குக் கடுமையான சட்டங்களைப் போட்டுக் கட்டுப்படுத்தலாம் என்ற ஆலோசனை முட்டாள்தனமானது. அப்படிச் செய்தால் அது அவர்களைச் சிறையில் வைத்திருப்பதற்கு நிகரானது. எதையும் செய்வதற்கின்றி ஓரிடத்தில் வைத்திருப்பதென்பது சிறையன்றி வேறென்ன?

பட்டம் பெற்றவர்களுக்கு அரசாங்கமே வேலை வாயப்பை வழங்க வேண்டும் என்ற நிலையினால், அப்படிச் சொல்லி நடத்தப்படும் போராட்டங்களினால் வேலை கிடைப்பதற்கு முன்பு வேலையற்ற பட்டதாரிகளாக இருப்போர், உத்தியோகம் (பதவி) கிடைத்த பின்னர் வேலையில்லாத பட்டதாரிகளாக இருக்கிறார்கள்.

இவர்களில் யாரும் தமக்கு வேலை பகிர்ந்து தரப்படவில்லை. அப்படிப் பகிர்ந்து தருவதற்கான வேலைகளும் பணி ஒழுங்குமுறையும் இல்லை என்று கூடச் சொல்ல மாட்டார்கள். மாகாணசபைக்கு முன்னால் நின்று ஆர்ப்பாட்டம் செய்யமாட்டார்கள்.

ஏதோ சம்பளம் வருகிறது. மாதம் ஓடுகிறது. வேறென்ன வேண்டும் எனற மாதிரியே உள்ளனர். இவர்கள் வேறு யாருமல்ல. இந்த நாட்டின் எதிர்காலத் தலைமுறையினர். வருங்கால சிற்பிகள்.

இந்த இடத்தில் ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்லலாம். காலையில் தொலைபேசியில் அழைத்தபோது ஒரு இளைய உத்தியோகத்தர் சொன்னார், "இப்ப Office க்குப் போறதுக்காக வெளிக்கிட்டுக் கொண்டிருக்கிறன். கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கோ. அங்க Office க்குப் போனதுக்குப் பிறகு சும்மாதான் இருப்பன். அப்ப அழைக்கிறேன்" என்று.

அதாவது, அவர் வீட்டிலிருக்கும்போது ஒரு தொலைபேசி அழைப்பை ஏற்று ஆறுதலாகப் பேசமுடியாதிருக்கிறார். அலுவலகத்தில் எத்தனை தொலைபேசி அழைப்பிலும் சாவகாசமாகப் பேசலாம். இது எதைக் காட்டுகிறது? அரச நிர்வாகம் சீர்கெட்டிருக்கிறது அல்ல பலவீனமாக உள்ளது என்பதைத் தானே!

இந்த நிலையானது படித்த, இளைய தலைமுறையைப் பாழாக்குவதன்றி வேறென்ன?

இதேவேளை கல்வித் தகைமை குறைந்த, பொருளாதார நிலையில் பின்தங்கியோரில் ஒரு லட்சம் பேரை அரச உத்தியோகத்தில் அரசாங்கம் இணைப்பது ஓரளவுக்கு நல்ல திட்டம் என்பதை மறுப்பதற்கில்லை. ஏறக்குறைய இதே போன்ற ஒரு திட்டத்தை முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசவும் அறிமுகப்படுத்தியிருந்தார்.

இதன் மூலம் இந்தத் தரப்பைச் சேர்ந்தோர் வெளி ஊடாட்டத்திற்கும் சமூக ஈடேற்றத்துக்கும் உள்ளாகக் கூடிய வாய்ப்புண்டு. இந்தக் குடும்பங்களிலும் ஒரு அரச உத்தியோகம் கிடைத்தவர் இருக்கிறார் என்ற அடையாளம் ஏற்படும். சரியான சமூகப் பொருளாதாரக் கண்ணோட்டமுள்ளவர்கள் இப்படிச் சொன்னால் சிரிப்பார்கள். ஆனால் இலங்கையின் மரபுசார் சமூக பொருளாதாரச் சூழலில் வைத்தே இதை நான் குறிப்பிடுகிறேன்.

இது ஒரு தவிர்க்க முடியாத நிலை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே இந்த வாய்ப்பின் மூலம் கல்வி, பொருளாதாரம், சமூக நிலை போன்றவற்றில் இந்தக் குடும்பங்கள் அல்லது இந்தத் தரப்பினர் உயரவும் வாய்ப்புண்டு. மீளவும் குறிப்பிடுகிறேன், இது சரியான சமூகப் பொருளாதார முறையியல் என்று சொல்ல வரவில்லை. ஆனாலும் இலங்கைச் சூழலில் இது ஒப்பீட்டளவில் பரவாயில்லை என்றே சொல்ல வேண்டும்.

புதிய ஜனாதிபதி பல விடயங்களில் ஒரு வேறு பட்ட தன்மைகளை உருவாக்கும் முனைப்போடுள்ளார் எனத் தெரிகிறது. அந்த வகையிலேயே இவற்றிலெல்லாம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் விதமாக இயங்குகிறார் போலத் தெரிகிறது. இதற்கமைய ஒழுங்குமுறைகளையும், சட்டங்களையும் அறிமுகப்படுத்துவதுடன், அதற்கான திட்டத்தில் ஒன்றாகவே இந்த வேலை வாய்ப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார் எனக் கருதக்கூடியதாக உள்ளது.

ஜனாதிபதியின் நாட்டிற்கான பொருளாதார ஊக்குவிப்பு அறிக்கைகள் நம்பிக்கை ஊட்டுமளவுக்கு அவை நடைமுறையில் பயன் விளைக்க வேண்டும். எந்தத் திட்டங்களுக்கும் பொறுப்புணர்வுடன் மக்களும் ஓரளவு ஒத்துழைப்பை வழங்கினால் மட்டுமே,


அமைக்கப்படும் திட்டங்கள் பயன்தரக் கூடியதாக அமுல்படுத்தப்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தைக் கட்டாயமாக நாம் குறிப்பிட்டேயாக வேண்டும். போதைப்பொருள் பாவனை என்பது எமது நாட்டில் மிகப் பெரிய சவாலாக உருவாகியுள்ளது. போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவோர் பெரும்பாலும் இளைய தலைமுறையினரே. இவர்களே நாட்டின் எதிர்காலச் சொத்து. இந்தத் தொகை ஏறக்குறைய 20 லட்சத்துக்கு மேல் என்கின்றன அச்சமூட்டும் தகவல்கள். ஆகவே வேலை வாய்ப்பை வழங்குவதை விடவும் முக்கியமானது, போதைப்பொருளைத் தடுப்பதும் அதனோடு இணைந்திருப்போரை அதிலிருந்து விடுவிப்பதுமாகும்.

ஆகவே ஒருங்கிணைந்த கூட்டு வேலைத் திட்டத்தின்மூலமே இந்த விடயங்கள் கையாளப்பட வேண்டும்.

கருணாகரன்...

# 19 லிருந்து 20 வரை அமைதியிழக்கும் ஜே.ஆரின் சாணக்கியம்..!




காரணம் அறிந்து காரியம் செய்யின் கை கூடும். எவ்வளவு காலத்துக்கு இது கை கூடும்? எப்போது இது கை நழுவும்? இந்த வரையறைகள், விதிமுறைகள் மீறப்பட்டுள்ள காலமிது.

ஜே. ஆர் அறிமுகப்படுத்திய அரசியலமைப்பும் இவ்வாறு 19 தடவைகள் திருத்தப்பட்டதே! காரணம் அறிந்துதானா? அல்லது காலத் தேவைக்கு ஏற்பவா? இல்லை யாரினதும் தேவைக்காகவா? இது போதாதென்று இருபதாவது திருத்தமும் வரப்போகிறதே!

19 ஆவது திருத்தம் பற்றிப் பேசப்பட்டளவுக்கு நம் நாட்டில் எதுவும் பேசப்படவில்லை. அந்தளவு அரசியலில் தாக்கம் செலுத்திய திருத்தமிது. 215 எம்.பிக்களின் ஆதரவுடன், 2015 ஆகஸ்டில் முன்வைக்கப்பட்ட இத்திருத்தம், இப்போது பலருக்கும் வேண்டாவெறுப்பாயிற்று. ஒன்றுக்கொன்று புரிதலில்லாது, ஒன்றுடனொன்று தொடர்பில்லாத '19', நிர்வாகத்தை எப்படிக் குழப்புகிறது?

முப்படைகளின் தளபதியாக ஜனாதிபதி இருக்கலாம். ஆனால், எப்படைகளுக்கும் தளபதிகளை நியமிக்க முடியாது, மட்டுமல்ல அத்தளபதிகளை பதவி நீக்கவும் இயலாது. ஏன், இப்படைகளுக்குப் பொறுப்பாகவுள்ள பாதுகாப்பு அமைச்சையும் இவரால் வகிக்க முடியாது. பிரதமரை நியமிக்கலாம். ஆனால், நீக்க முடியாது. இன்னும் அமைச்சர்களை நியமிப்பது, நீக்குவது இவையும் இவரால் இயலாது. மேலும், நீதிமன்றத்தின் விசாரணைக்கும் ஜனாதிபதியை உட்படுத்த முடியும்.

நிர்வாகம், சட்டத்துறைகளில் ஜனாதிபதியின் அதிகாரங்கள், தலையீடுகளை இந்த'19' தவிர்த்துள்ளமை இதில் தெரிகிறது. ஆனாலும், முப்படைகளின் தளபதியான ஜனாதிபதிக்கு ஒரு தளபதியையும் நியமிக்க முடியாமல் முட்டுக்கட்டையும் போடப்பட்டுள்ளதே. இது குழப்பமில்லையா? என்கின்றனர் விமர்சகர்கள்.

அரசியலின் முக்கிய மூன்று துறைகளான நீதி, நிர்வாகம், சட்டத்துறைகளில் ஜனாதிபதியை தூரப்படுத்திய இந்த '19' பாராளுமன்றத்துக்கு எந்த அதிகாரத்தை வழங்கியுள்ளது? அதிலும் குழப்பம்தான்! அரசியலமைப்பு சபையிலுள்ள பத்துப்பேரும் அனைத்தையும் தீர்மானித்தால் தேர்தல் எதற்கு? பாராளுமன்றம் எதற்கு? சட்டத்துறைக்கு (பாராளுமன்றம்) இல்லாத அதிகாரம் இப்பத்துப் பேருக்குமா?. இல்லை, இதிலுள்ள ஏழு பேர் பாராளுமன்றப் பிரதிநிதிகள் என்பதால், மக்கள் ஆணை மதிக்கப்படுவதாகவே கருதப்படுகிறது.

சுஐப் எம்.காசிம் ...

52 நாள் அரசில்தான், 19 இன் சுயரூபங்கள் பல கோணங்களில் விஸ்வரூபமாகின. பாராளுமன்றம் இயற்றும் சட்டம், வழக்காறுகள், மரபுகள்தான் தீர்ப்புக்களுக்கு வழிகோல வேண்டுமென்று கோரப்பட்ட இந்த 52 நாட்களில், இவை எவற்றிலும் தீர்வுகள் இருக்கவில்லை. ஆனால், பெரும்பான்மை உள்ள ஒரு அரசாங்கத்தை பதவி விலக்கி, புதிய பிரதமருக்கு பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க அவசாசம் வழங்கப்பட்டமை போன்ற பல, இந்த 19 இல் பிரச்சினைகளாகவே உள்ளன.

இதற்காகத்தான் இருபது வருகிறது. குறைக்கப்பட்டது போன்று ஜனாதிபதி, பாராளுமன்றத்தின் ஆயுட்காலங்கள் ஐந்துதான். மீண்டும் இதை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்வது சிரமம் என்பதால், அப்படியே இது விடப்பட்டுள்ளது. இன்னும் ஐந்து வருடங்களுக்கு அரசாங்கம் அமைக்க இயலாத ஐக்கிய தேசியக் கட்சி, பாராளுமன்றக் கலைப்புக் குறித்து சிந்திக்கப்போவதில்லை. ஆனால், சிறுபான்மை சமூகங்களுக்கும் கட்சிகளுக்கும் இதில் சிந்திக்கப் பல விடயங்கள் உள்ளன.

'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை' பாதுகாக்கப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் பலம் இல்லாவிடினும் ஜனாதிபதியின் நட்பு, உறவுகளை வைத்தாவது எதையாவது சாதிக்கலாம் என்ற நம்பிக்கை, இந்த முறையில்தானே உள்ளது. பாராளுமன்ற தெரிவுக்கான 12 வீத வெட்டுப்புள்ளியை ஐந்து வீதமாக்கியது, ஜனாதிபதியின் உறவை வைத்துத்தான் என்பதற்கு 1989 தேர்தல் சாட்சி. அவசரமாகத் தேவைப்படும் பாதுகாப்புக்கள், நியமனங்கள், உதவிகளுக்கும் ஜனாதிபதியின் உத்தரவுகள்தான் உதவியிருந்தன. இப்பதவியில் ஜனநாயகத் தன்மை குறைவாக இருந்தாலும் நம்பகத்தன்மை உள்ளதாகக் கருதலாம்.

இப்போது இருபதிலுள்ள பிரச்சினைகள் என்ன? "ஒரே நாடு, ஒரே சட்டம்". சிறுபான்மை சமூகங்கள் இச்சட்டம் பற்றித்தான் அலட்டிக் கொள்கின்றன. திருமணச் சட்டம், சமயச் சடங்குகள், அரசியல் நடைமுறைகளை இது கட்டுப்படுத்தலாம். மதத்தின் பெயரிலான, சமூக அடையாளமுள்ள, மொழி, பிரிவினைவாத கட்சிகள் ஒரு காலத்தில் தடுக்கப்படலாம். மூன்றிலிரண்டு பெரும்பான்மை உள்ள அரசு எதைச் செய்தாலும் எவராலும் எதுவும் பேச முடியாது.

"அதிகாரப்பகிர்வுக்கான அடையாளமாக அறிமுகமாக்கப்பட்ட மாகாண சபை முறைமைகளில் எதுவுமில்லை. பொருளாதார அபிவிருத்திகளூடாக தமிழர் பிரச்சினையைத் தீர்க்கலாமென ஜனாதிபதியே கூறுகையில், எதற்கு இச்சபைகள்? இச்சபைகளை புலிகளே ஏற்கவில்லை. போரும் முடிந்து, புலிகளும் ஒழிந்த பின்னர் யாருக்காக இது?" பெரும்பான்மைவாதிகளின் நிலைப்பாடு இதுதான். இதைச் சமாளித்துத்தான் அரசாங்கம் இதுபற்றிச் சிந்திக்கும்.

முஸ்லிம் திருமணச் சட்டம் பற்றி இப்போது மட்டும் பேசப்படவில்லை. கடந்த ஆட்சியிலும் இது அலசப்பட்டது. ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர், எழுந்த விழிப்புக்களே இதை அவசரப்படுத்துகின்றன. இப்போது மிகப்பலமான அரசாங்கத்தில், இது நடந்தே தீருமென முஸ்லிம்கள் அஞ்சுகின்றனர். நீதியமைச்சர் முஸ்லிமாக இருக்கையில், விடயத்தைப் பக்குவமாக அணுகி, உண்மையில் இதிலுள்ள யதார்த்தங்களை வென்றெடுக்கலாம்.

## வடக்கு கிழக்கின் அரசியல்... (07ஆம் பக்கத் தொடர்)

இந்த பிரேரணை கொண்டுவந்த போது எதிர்க்கட்சியில் இருந்த ஆதரித்த ஒரே எம்.பி நான்தான். காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பில் பிரச்சினை உள்ளது. அந்தப் பிரதேசத்திலுள்ள அரச காணிகள் அப்பிரதேச மக்களுக்கே பகிரப்பட வேண்டும். தெற்கில் இருந்து தமது பகுதிக்கு சிங்கள மக்களை கொண்டு வந்து குவிப்பர் என வடக்கு மக்கள் அஞ்சுகின்றனர். அந்த பயத்தை போக்க வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் 13 ஆவது திருத்தம் கொண்டுவர முற்பட்ட போது அதனை வாபஸ் பெற நான் வாசு, டிலான் போன்றோர் அழுத்தம் கொடுத்தோம்.

தற்போதைய நிலையில் பொருளாதாரத்தை பலப்படுத்தவே முன்னுரிமை வழங்க வேண்டும். பொருளாதாரம் வீழ்ந்தால் 5 வருடம் ஆட்சியில் நீடிக்க முடியாது போகும்.

19 திருத்தத்தினால் குழப்ப நிலை ஏற்பட்டது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை பாராளுமன்ற முறையாக மாற்றும் முதற்கட்டமாகவே இதனை கொண்டுவந்தாலும் அது சிக்கலாக மாறி விட்டது. இதனை மாற்ற வேண்டும். அரசியலமைப்பை துண்டு துண்டாக மாற்றாது ஒரே தடவையாக மாற்றுவதே உகந்தது. அடுத்த பரம்பரைக்கும் உகந்தவாறு இந்த மாற்றம் இடம்பெற வேண்டும். 42 வருடங்களுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட இந்த அரசியலமைப்பு அச்சாறு போன்றது. ஒவ்வொரு நாட்டில் இருந்தும் சிறு சிறு விடயங்களை பெற்று உருவாக்கப்பட்டது. இது சிங்கள மக்களுக்கோ தமிழ் மக்களுக்கோ வேறு மதத்தவருக்கே வாய்ப்பாக இல்லை.

**கேள்வி. புதிய அரசியலமைப்பை உருவாக்குகையில் சகல கட்சிகளினதும் கருத்து பெறப்பட வேண்டும் என்பதை ஏற்கிறீர்களா?**

**பதில்.** நிச்சயமாக. ஜே.ஆரின் யாப்பு எவருக்கும் தெரியாமல் கொண்டுவரப்பட்டது.. 1972 யாப்பில் நல்ல படவிடயங்கள் உள்ளடக்கப்பட்டாலும்.தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு முன்வைக்கப்படவில்லை.TULF ஒத்துழைப்புடன் செயற்படவுமில்லை. தெற்கின் ஒத்துழைப்பை பெற முயலவுமில்லை. எனவே தமிழ் மக்களினது பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையிலும் 13 ஆவது திருத்தத்திலுள்ள நல்ல விடயங்களை உள்வாங்கியும் புதிய யாப்பு அமைய வேண்டும். சலருக்குமான யாப்பு கொண்டுவர இது உகந்த சந்தர்ப்பமாகும். அரசியலமைப்பு தயாரிப்பதில் பொதுஜன பெரமுனவும் சஜித் தரப்பும் தமிழ் தேசிய கூட்டமைப்புமே பிரதானமானவை. அரசியலமைப்பு திருத்த யோசனை முன்வைக்கப்பட்டால் எமது பங்களிப்பையும் வழங்க முடியும். பாராளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றி புதிய யாப்பு கொண்டுவர வேண்டும். பாராளுமன்றத்தில் இல்லாத கட்சிகளுக்கும் வெ ளியில் இருந்து பங்களிக்க வாய்ப்பு வழங்க வேண்டும். ஜே.ஆர் ஐந்தில் நான்கு அதிகாரத்தை வைத்து நினைத்தவாறு அரசியலமைப்பை தயாரித்தார். இன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தாலும். பொது ஜன பெரமுனவிற்கு 118 எம்.பிகளும் ஏனைய கட்சிகளுக்கு 33 எம். பிகளும் உள்ளனர். அரசாங்கத்திற்குள் இடதுசாரி போக்குள்ளவர்களும் உள்ளனர். எனவே நாம் வெளியில் இருந்து தேவையான அழுத்தத்தை கொடுப்போம்.

**கேள்வி. தமிழ் மொழி தான் மேலானது என்ற சீ.வி விக்னேஸ்வரனின் கருத்துக்கு பெரும் எதிர்ப்பு வந்துள்ளது பற்றி...**

**பதில்.** அவர் தேவையில்லாத பிரச்சினையை தூண்டியிருக்கிறார். அவர் மீது எனக்கு மரியாதையுள்ளது. இது பழைய விடயம் வரலாற்று விடயத்தை ஆரய பல்கலைக்கழக கல்வியியலாளர்களிடம் விட்டு விடவேண்டும். இதனால் தமிழ் மக்களின் வயிற்றுப் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்து விடுமா? ஒரு பக்கம் இனவாதம் பேசப்படும் போது மறு பக்கத்திலிருந்து அதற்கு பதிலடி கிடைக்கும். வரலாறு முழுக்க இது தான் நடந்துள்ளது. சிங்கள இனவாதமும் தமிழ் இனவாதமும் ஒன்றால் மற்றொன்று வளர்கிறது. உயிர்த்த ஞாயிறு பிரச்சினையில் சாதாரண முஸ்லிம்கள் மீது விரல் நீட்டுவதில் பயனில்லை.

**கேள்வி. அரசியலமைப்பு விவகார அமைச்சராக செயற்பட்ட நீங்கள் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்தீர்கள்?**

**பதில்.** நான் பாராளுமன்றம் சென்ற நாள் முதல் சிறுபான்மையினருக்காக குரல் கொடுத்து வந்துள்ளேன். எமது கட்சியும் தொடர்ந்து அவர்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கும். 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டாலும் அதிலுள்ளவை செயற்படுத்தப்படவில்லை. தமிழ் மொழியை அரச கரும மொழியாக செயற்படுத்த வர்த்தமானி வெளியிட்டவன் நான். இதனை கட்டாய மொழியாக்க ஒருவருடம் அமைச்சரவைக்கும் போராடினேன். அதில் வெற்றியும் கண்டேன். நல்லாட்சியில் நல்லிணக்க அமைச்சரான மனோ கணேசன் நான் செய்ததில் பாதி கூட செய்தாரா? யாழ் பொலிஸில் 100 வீதம் சிங்களவர்கள் இருந்தார்கள். நான் அமைச்சர் பதவியில் இருந்து செல்லும் போது 100 வீதம் தமிழ் பொலிஸார் அங்கு நியமிக்கப்பட்டனர். இந்த பிரச்சினைக்கு சிறந்த தலைமைத்துவம் வழங்க வேண்டும். அன்று சிங்க ள அமைச்சர் ஒருவரை நியமித்திருக்க வேண்டும்.

# கிழக்கு தொல்லியல் செயலணி; அங்கத்தவராக ஒருவர் தயார்

## டாக்டர் முரளி அமைச்சர் டக்ளஸுக்கு கடிதம்



கிளிநொச்சி குறூப் நிருபர்

கிழக்கு தொல்பொருள் ஜனாதிபதி செயலணிக்கு இலங்கையில் தமிழ் புத்திஜீவிகள் ஆர்வம் காட்டாததன் காரணமாக தமிழர்களை நியமிப்பது சவலாக உள்ளதென அமைச்சர் டக்ளஸ் தேவானந்த கூறியிருந்தார். இந்நிலையில் இந்த செயலணிக்கு தயாராக இருப்பதாக சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரை தொடர்பு கொண்டு வினவிய போது,... கிழக்கு தொல்பொருள் ஜனாதிபதி செயலணி தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆதங்கம் இருப்பதாக ஊடகங்கள் மூலம் தெரிந்துகொண்டேன்.

எனவே நான் இந்த நியமனத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதை வெளிப்படையாக அறிவிக்கிறேன். தொல்பொருளியல் துறையை நான் சாராதவனாக இருந்த போதிலும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவில் தொல்பொருளியல் துறை சாராத மகப்பேற்றியல் மருத்துவ நிபுணர் கபில குணவர்தன உட்பட பலர் உறுப்பினர்களாக இருக்கும் நிலையில் சமுதாய மருத்துவ நிபுணராக கடமையாற்றிவரும் எனக்கு ஒரு துறை சார் நிபுணராக செயலணியில் கடமையாற்ற முழுமையான தகுதி இருக்கிறது என்பதனையும் கூறவிரும்புகின்றேன்.

இதை விட நான் கட்சி அரசியலுக்கு அப்பால் பட்டவன் என்பதையும் 2015 யாழ். மருத்துவச் சங்கத்தின் தலைவராக இருந்த காலத்தில் வட மாகாண சபையினால் மறைக்கப்பட்ட சுன்னாகம் நிலத்தடி நீரில் எண்ணெய் கலந்து மாசடைந்த உண்மைகளை அம்பலப்படுத்தியவன். அப்போது இது தொடர்பாக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்த அமைச்சர் நன்றாக அறிவார். மேலும் நான் கிழக்கை சாராதவனாக இருப்பதானால் நலமுரண்பாடுகளுக்கு அப்பால் இந்த விடயத்தில் நடுநிலையாக சிந்திக்க முடியும். நான் தொடர்ச்சியாக மருத்துவத்துக்கும் அப்பாலும் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதும் கிழக்கில் கூட கடந்த காலத்தில் ஆய்வுகளை மேற்கொண்டு துறைசார் நிபுணராக கல்குடாவில் மதுபானசாலை இயங்குவதற்கு போதுமான நீர்வளம் அங்கு காணப்படவில்லை என்று தெரிவித்து இருந்ததையும் அனைவரும் அறிவர். இந்தப் பின்புலத்தில் அமைச்சரின் சாதகமான முடிவையும் நியமனக் கடிதத்தையும் விரைவில் எதிர்பார்க்கிறேன் என சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்தார்.

## இந்துக்களின்... (19ஆம் பக்கத் தொடர்)

மேற்கண்டவாறு ஓடும் இடத்தில், அதன் கிழக்குக் கரையில், கிழக்கு கோதாவரி மாவட்டத்தில், புகழ் பெற்ற புனித தலமான "பத்ராசலம்' உள்ளது. பத்ராசலத்தைத் தாண்டி கிழக்கு கோதாவரி, மேற்கு கேதார மாவட்டங்களின் எல்லையாக ஓடுகிறது.

கடலுடன் சங்கமமாவதற்கு முன்னர் இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. கோதாவரி, மேற்குப்புறக் கிளைக்கு 'கௌதமி கோதாவரி எனவும், கிழக்குப்புறக் கிளைக்கு 'வசிஷ்ட கோதாவரி' என்றும் பெயர்.

வசிஷ்ட கோதாவாரி காக்கினாடாவுக்கு அருகே, ஏனாம் என்ற இடத்தில் கடலில் சங்கமமாகின்றது. கௌதமி கோதாவரி இரண்டு கிளைகளாகப் பிரிந்து, ஒரு கிளை நாக்பூருக்கு அருகே கடலில் சங்கமமாகின்றது. மற்றொரு கிளை அமலாபுரம் அருகே கடலில் சேருகின்றது. இதனால் கோதவரிக்கு மூன்று கழிமுகப் பகுதிகள் உள்ளன.

கோதாவரி நதியின் நீளம் 940 மைல்களாகும். மஞ்சிரா, பிராணஹிதா, இந்திராவதி, சபரி ஆகியவை இதன்முக்கிய துணை நதிகாளும். மகாராஷ்டிரா மாநிலத்தில் உற்பத்தியாகி, ஆந்திராவில் வாராங்கள் மாவட்டத்தின் வட எல்லையில் கோதாவரியுடன் கலக்கின்றது.

### சபரிநதி

கோதாவரியின் மொத்த வடிகால் நிலப்பரப்பு 1,15,000 சதுர மைல்களாகும். இந்த மிகப்பெரிய நதியின் நீர் முழுவதும் 1840ம் ஆண்டு வரையிலும் கடலில் கலந்து வீணாகியே வந்தது. அந்த ஆண்டில் ஆர்தர் கொட்டன் என்பவர் புவனேஸ்வரத்தில் ஓர் அணையைக் கட்டி சாகன வாய்க்கால்கள் வெட்டத் திட்டமிட்டார். அது நிறைவேற்றப்பட்டது. புவனேஸ்வரம், வல்லி, மடூர், லிங்கேஸ்வரம் என்னும் நான்கு இடங்களிலும் அணைகள் கட்டப்பட்டன.

கிருஷ்ணனை வழிபடும் பக்தர்களும், இராம பக்தர்களும், ஆஞ்சநேய அடியார்களும் கோதாவரியை தெய்வமாகவும், அன்னையாகவும் போற்றி வழிபடுகின்றனர்.


# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

TRC

## வெற்றிடம்

### உள்ளக ஆய்வாளர் (தொழில்நுட்ப) ஐ நியமித்தல்

இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் கட்டுமான மற்றும் தொழில்நுட்ப திட்டங்களின் மற்றும் பொறியியல் அம்சங்களை மையமாகக் கொண்ட ஒரு உள் தொழில்நுட்ப தணிக்கைகளை மேற்கொள்ள இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் ஒரு உள்ளக ஆய்வாளர் (தொழில்நுட்ப) சேவையை நாடுகிறது.

இந்த நியமனமானது 2020 நவம்பர் முதல் ஒரு வருட காலத்திற்கு ஒரு நியமன அடிப்படையில் இருக்கும்.

01. நோக்கம் :-

இந்த இடுகையின் நோக்கம் இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் கட்டுமான மற்றும் தொழில்நுட்ப திட்டங்களுக்கான உள் தொழில்நுட்ப ஆய்வு திட்டத்தை வகுத்து செயல்படுத்துவதுடன், இது அமைப்புகளை மேம்படுத்துவதற்கான பகுதிகளை மதிப்பீடு செய்வதற்கும், அவை விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதைக் கண்டறியும் நடவடிக்கைகளை ஆராய்வதற்கும், சரியான தரங்களை உறுதி செய்வதற்கும் இது உட்படுத்துகிறது. சிறந்த மதிப்பு முன்மொழிவு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்களுக்குள் எதிர்பார்க்கப்படும் தேவைகள் மற்றும் குறிக்கோள்களுக்கு திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக செலவுத் தணிக்கை மற்றும் திட்டங்களின் செலவு கண்காணிப்பை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மனுக்கோரல் ஆவணத்தை உருவாக்கும் பணியில் பங்கேற்பதையும் இந்த நோக்கம் உள்ளடக்கியது. தொழில்நுட்ப நடைமுறைகள் மற்றும் நடைமுறைகளுடன் உள்ளக இணக்கத்தை மதிப்பிடுவதற்கும் தணிக்கைகளை மேற்கொள்வதற்கும் தொழில்நுட்ப தணிக்கையாளர் திட்டங்களின் பராமரிப்பு அம்சங்கள் தொடர்பான தணிக்கைகளையும் நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பந்தங்களில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விவரக்குறிப்புகள் மற்றும் தொழில்நுட்ப விளக்கங்களுடன் அவற்றின் இணக்கத்தை சரிபார்க்க பொருள்களின் மற்றும் உபகரணங்களின் கொள்முதல் குறித்து ஆராயப்படும்.

02. தேவையான கல்வித்தகைமை மற்றும் தொழில்முறை தகுதிகள் :-

விண்ணப்பதாரிகள் தகுதிபெற பல்கலைக்கழக மானிய ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியல் பட்டம் பெற்ற பட்டய பொறியியலாளராக இருக்க வேண்டும் அல்லது அரசுத் துறையில் ஒரு பொறியியலாளராக 15 ஆண்டுகளுக்கும் மேலாக திருப்திகரமான சேவை அனுபவத்துடன் சமமான கல்வி / தொழில்முறை தகுதி பெற்ற ஒரு அரச நிறுவனம் அல்லது ஒரு பொது நிறுவனம் அல்லது அரச திட்டங்களில் முன்அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

மற்றும்

இந்த செயற்திட்டத்தை போன்ற தொழில்நுட்ப அல்லது பொறியியல் தணிக்கைகளில் குறைந்தது இரண்டு பணிகளை மேற்கொள்வதில் விண்ணப்பதாரிக்கு அனுபவம் இருக்க வேண்டும்.

03. சம்பளம் :- மாதாந்தம் ரூபா.200,000 (பேசித்தீர்மானிக்கப்படும்)

04. தேர்வு நடைமுறை :- நேர்முகத் தேர்வின் முடிவின் அடிப்படையில்

05. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித்திகதி :- 25.09.2020

06. விண்ணப்பிக்கும் முறை- விண்ணப்பதாரிகள் சுயவிபரக்கோவை மற்றும் துணை ஆவணங்களின் பிரதிகளுடன், பதிவுத்தபாலில் பணிப்பாளர் நாயகம், இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08 என்ற முகவரிக்கு 25.09.2020 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை அத்தியாவசிய தகவல்களுடன் இணைத்திருத்தல் வேண்டும்.

1. முழுப்பெயர் :
2. பெயர் முதல் எழுத்துக்கழுடன் :
3. பால் :
4. பிறந்த திகதி : தேசிய அடையாள அட்டை இல :
5. தற்போதைய நிலை :
6. தபால் முகவரி :
7. மின்னஞ்சல் முகவரி :
8. தொலைபேசி இலக்கம் : கையடக்க தொலைபேசி இல :
9. கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகள் :
10. முன் அனுபவங்கள் :
11. வேறு தகவல்கள் :

திகதி : விண்ணப்பதாரரின் கையொப்பம் :

விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தை அனுப்பும் தபாலறையின் இடது பக்க மேல் முலைளில் "உள்ளக ஆய்வாளர் (தொழில்நுட்ப) இடுகை" என குறிப்பிடல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு


## முள்ளுத் தேங்காய் உற்பத்திக்கு முடிவுகட்டிய... (08ஆம் பக்கத் தொடர்)

தேயிலைச் செடிகளுக்கு முறையான பராமரிப்பு இல்லை. காலாகாலத்திலான பசளையிடும் முறைமை கையாளப்படுவதில்லை. மருந்து தெளித்தலிலும் உரிய சுழற்சி மேற்கொள்ளப்படுவது கிடையாது. கான் வெட்டுதல், முள்ளுக் குத்துதல், கைவிடப்பட்ட நிலை, மீள் நடுகை இல்லை. இதனால் காடுகளுக்கும் புதர்களுக்கும் இடையில் தேயிலைச் செடிகளைத் தேடி கொழுந்து பறிக்க வேண்டிய கட்டாயம்.

பாம்பு, பூச்சி, அட்டைக்கடி, சிறுத்தை, பன்றி தாக்கு, குளவி தேனீக்கள் கொட்டு, என சுகட்டு மேனிக்கு சங்கடங்களுக்கும் முகம்கொடுத்து உயிரை பணயம் வைத்து தொழில்புரிய வேண்டிய நிர்ப்பந்தத்தில் நிர்க்கதியாகி நிற்கிறார்கள் தொழிலாளர்கள். பல தோட்டங்களில் நல்ல விளைச்சல் தந்த தேயிலை நிலங்கள் இன்று தரிசு நிலங்களாக பவிசு இழந்து காட்சி தருகின்றன.

தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய வீட்டு வசதி, குடிநீர், போக்குவரத்து வசதி, சுகாதாரத் தேவைகள், ஊக்குவிப்புகள், கொடுப்பனவுகள், கூட்டு ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்ட சலுகைகள் எதையுமே முறையாக வழங்காமல் அலட்சிய படுத்தப்படுவதால் மக்கள் இத்துறை மீது வெறுப்படைய வேண்டியேற்படுகின்றது.கம்பனிகளோ தொழிலாளர்கள் உற்பத்தி திறனை முழுமையாக பயன்படுத்தாதனாலேயே வீழ்ச்சி ஏற்படுவதாக குற்றம் சுமத்துகின்றன.

இதனால் இத்துறையின் எதிர்காலம் கேள்விக் குறியாகி வருகின்றது. தேயிலைத் தொழிலின் வீழ்ச்சி இங்கு வாழும் மக்களின் எதிர்கால வாழ்வாதாரத்திலும் விளைவுகளை உண்டாக்கவே செய்யும். இன்று பல தேயிலை தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. இதனை ஈடு செய்வதற்காகவே முள்ளுத் தேங்காய் உற்பத்தி மீது நாட்டம் கொள்கின்றன கம்பனிகள்.

முள்ளுத் தேங்காய் உற்பத்தி நிலத்தடி நீரை உறிஞ்சக் கூடியது. மக்கள் குடியிருப்புகளுக்கு பக்கத்தில் இவற்றைப் பயிரிடும்போது மக்கள் குடி நீரின்றி அவஸ்தைப்பட நேரிடும். தவிர சூற்றாடல் பாதிப்பும் நிகழலாம் என்றெல்லாம் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதே நேரம் முள்ளுத் தேங்காய் உற்பத்தியை விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் பரவலாகவே இடம்பெற்று வந்தன. தெங்கு பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்து செல்வதால் அதற்கு மாற்றீடாக முள்ளுத் தேங்காய் உற்பத்திக்கு முக்கியத்துவம் தர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இது பெருந்தோட்டத் தொழிற்றுறையை முற்று முழுதாக ஆக்கிரமிக்கும் அபாயம் இருக்கவே செய்கிறது. ஏற்கனவே காலி, இரத்தினபுரி, களுத்துறை, கேகாலை பகுதிகளில் முள்ளுத் தேங்காய் உற்பத்தி நடைமுறைக்கு வந்தாகி விட்டது. சில மாதங்களுக்கு முன் முள்ளுத் தேங்காய் எனப்படும் பாம்ஓயில் உற்பத்திக்கான ஏற்பாடுகள் நுவரெலியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டன. லிந்துலை, ஹென்போல்ட் தோட்டத்தில் இதனைப் பயிரிடும் முயற்சி முன்னெடுக்கப்படுவதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்கள்.

20 ஆயிரம் ஹெக்டேயர் பரப்பளவில் முள்ளுத் தேங்காய் பயிர்ச் செய்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. சர்வதேச ரீதியாக இம் முள்ளுத் தேங்காய் உற்பத்தியினால் ஏற்படக்கூடிய ஆபத்து உணரப்பட்டு அதனை கைவிட்டு வரும் செய்திகள் வந்தன. பாரம்பரிய ஏற்றுமதி பயிர்களைக் கொல்லும் முள்ளுத் தேங்காய் உற்பத்தி தேயிலை, தென்னை, இறப்பர் உற்பத்தி வீழ்ச்சிக்கு மாற்றீடாக அமையாது என்பதே ஆய்வாளர்களது பதிவு. பெருந்தோட்டக் கைத்தொழில் முறைமையில் ஏற்படும் மாற்றம் இம்மக்களின் அரசியல், பொருளாதார ரீதியிலான மாற்றங்களுக்கு வழிகோலுமா என்ற கேள்வியை அவதானிகள் அடிக்கடி எழுப்பி வந்தார்கள். தற்போது ஜனாதிபதியின் அறிவித்தல் மூலம் இந்நெருக்கடிக்கு தீர்வு காணப்பட்டுள்ளது

முள்ளுத் தேங்காய் உற்பத்திக்கு அவ்வப்போது எதிர்ப்புக் குரல்கள் எழுந்தாலும் எதுவும் ஆகாமலே போனது. இந்நிலையிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற கையோடு சிங்கள கிராம வாசிகள் இப்பயிர்ச்செய்கையை தடை செய்ய வேண்டுமென கோரிக்கையை முன் வைத்தனர். ஜனாதிபதியும் அதனை ஏற்றுக் கொண்டார். சிம்மாசன உரையின்போது மீண்டும் அதனை உறுதி செய்துள்ளார். இதுபோலவே அழிவை நோக்கி அடியெடுத்து வைத்திருக்கும் தேயிலை, இறப்பர் பயிர்ச்செய்கைகளுக்கு விமோசனம் கிடைக்க ஜனாதிபதி வழங்கியுள்ள வாக்குறுதியும் உடனடியாக நடைமுறைக்கு வரவேண்டும். இதன் மூலம் பெருந்தோட்ட பொருளாதார வளர்ச்சியும் அதனைநம்பி வாழும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தில் உயர்ச்சியும் ஏற்பட வழிபிறக்கும். முள்ளுத் தேங்காய் உற்பத்திக்கு முடிவுகட்டிய ஜனாதிபதி!

## வேவண்டன் பங்களாவை... (13ஆம் பக்கத் தொடர்)

"வேவண்டனில் தொண்டமான் ஒரு கால்நடைப் பண்ணை வைத்திருந்தார். தினமும் கறக்கப்படும் பால் என்றைக்குமே விற்பனை செய்யப்படுவதில்லை. பங்களாவின் தினசரி பாவனைக்கும் மிகுதி தொழிலாளர் குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுவதே வழமை. காய்கறிகளும் அப்படித்தான். தொண்டானின் துணைவியார் கோதை தொண்டமான் உயிருடன் இருக்கும் வரை வேவண்டன் பங்களா வந்தாரை வரவேற்று உபசரிக்கும் வீடாகத்தான் இருந்தது. எப்போது அவர் வீட்டுக்குச் சென்றாலும், டீயும் சிற்றுண்டிகளும் வந்துவிடும். பேசிக்கொண்டிருக்கும்போதே கோதையார் வந்து ஓரமாக நின்று, தம்பி சாப்பிட்டுவிட்டுத் தான் போகணும் என்பார். தொண்டமானும் கோதையாரும் மாத்திரமே இருந்தாலும் தினமும் ஒரு இருபது பேருக்காவது சமைப்பார்கள். அந்த வீட்டுக்கு யார் வந்தாலும் அருந்தாமல், சாப்பிடாமல் போனதாகவே கிடையாது" என்று மேலும் தகவல் சொன்னார் அதிபர் செல்வராஜா.

இலங்கையின் முக்கியமான வடபுலத்து அரசியல்வாதிகள் அலுவலகம் வெள்ளவத்தையில் உள்ளது. அங்கே செய்து சேகரிக்கவும் நேர்காணலுக்கும் அடிக்கடி சென்றுவரும் ஒரு பத்திரிகையாளர், இதுவரை அங்கே நான் பச்சத் தன்னீர்கூட அருந்தியதில்லை என்கிறார். இது ஒரு உதாரணம் மட்டும் தான். பல அரசியல்வாதிகள் இன்று இப்படித்தான் இருக்கிறார்கள். ஏனெனில் இன்று அரசியல் என்பது பொருள் தேடும் செல்வாக்கை வளைக்கும் ஒரு வர்த்தகம். தேனீருக்கும் சாப்பாட்டுக்கும் செலவு செய்வது அனாவசியம். இலாபம் இல்லாமல் செலவு செய்ய அவர்கள் தயாரில்லை என்ற சிந்தனையின் விளைவு தான் இது. வணிகம் செய்வதற்கும் மக்கள் தலைவராக இருப்பதற்கும் இடையே பெருத்த இடைவெளி இருக்கிறது அல்லவா?

செல்வராஜின் இதே கருத்தைத்தான் கோதை நாச்சியார், தொண்டமான் காலத்தில் வேவண்டன் சென்றிருந்த அனைவருமே கொண்டிருக்கிறார்கள். வேவண்டன் பங்களாவுக்கு பின்புறமாக இருப்பது மேரி ஹில் தோட்டம். அந்தத் தோட்டத்து உரிமையாளரின் மகள் ராஜேஸ்வரியை தன் மகன் ராமநாதனுக்கு திருமணம் செய்து வைத்தார் சௌமியமூர்த்தியார். ராஜேஸ்வரிக்கு மேரி என்றொரு பெயரும் உண்டு. அவரை அப்படித்தான் அழைப்பார்கள். ராஜேஸ்வரியின் அப்பாவும் தோட்ட உரிமையாளர்தான். வேவண்டனுக்கு அருகில் இருந்த மேரி ஹில் தோட்டம் அவருடையது. அப்படித்தான் ராஜேஸ்வரிக்கு மேரி என்ற பெயர் வந்தது. தொண்டமான் எப்போதுமே உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதில் கரிசனை கொண்டவர். மாலையானதும் காரில் ஏறி மேரி ஹில் மலை உச்சிக்கு சென்றுவிடுவார் காரை நிறுத்திவிட்டு நடைப் பயிற்சி செய்வார். அல்லத மலையில் இருந்து கீழே வேவண்டன் பங்களா வரை நடந்து வருவார் என்பது வேவண்டன் குடியிருப்பாளர்கள் அறிந்த விஷயம்.

தொண்டமான் பெரும்பாலும் இனிப்புகளை எடுத்துக்கொள்வதில்லை. சீனி கலக்காமலேயே தேனீர் அருந்துவார். பருப்பு வடையை விரும்பிச் சாப்பிடும் அவருக்கு ஆட்டிறைச்சி பொறியல் விருப்பமான ஐட்டம். தொண்டமான் விரதங்கள் பிடிப்பார். அவரும கோதையாரும் தவறாமல் ஆடி அமாவாசை விரமிருப்பார்கள். வீட்டின் உள்ளே குல தெய்வத்துக்கு ஒரு சாமி அறையும் இருந்தது என்று எமக்கு மேலும் தகவல் தந்தார் பாடசாலை அதிபர் இருந்த செல்வராஜா.

"பாடசாலை விஷயமாக அவருடன் பேசச் சென்றிருக்கிறேன். ஆத்தா பசும் பால் டீ போட்டு தந்திருக்கிறார். சாப்பிடும் நேரம் என்றால் சாப்பாடு நிச்சயம். சௌந்தர என்பவரே சமையல் கட்டில் இருந்தார். நாம் சொல்வதை உன்னிப்பாகக் கேட்டு தீர்வுகளைச் சொல்வார். முடிந்தவற்றை அப்போதே முடித்து வைத்துவிடும் பழக்கம் அவரிடம் இருந்தது. ஆனால் நாம் தான் சொல்லவேண்டிய விஷயங்கள அவரிடம் தெளிவாகக் கூறவேண்டும் என்று கூறியவர, பங்களாவைப் பற்றி பேசத் தொடங்கினார். அந்த பங்களாவில் பத்து அறைகள் இருந்தன என நினைக்கிறேன். அங்கே பழைய படங்களையும் தேக்கு மரத்தாலான பழங்கால தளபாடங்களையும் பார்த்திருக்கிறேன். பங்களா தரை சிமிந்து தரையாகத்தான் இருந்தது. எனினும் அந்த பங்களா ஒரு பொக்கிஷம். தொண்டமான் அருங்காட்சியகமாக அதைமாற்றி மேலதிக திருத்த வேலைகள் செய்திருந்தால், நான் நினைக்கிறேன், இந்த விபத்தைத் தவிர்த்திருக்கலாம் என்று" தன் அனுபவத்தை எம்முடன் பகிர்ந்துகொண்டார் அதிபர் செல்வராஜா.

**(அடுத்தவாரமும் வரும்)**

# 'மலையக அபிவிருத்தி என்றால் அது வீடமைப்பல்ல என் நோக்கமும் அதுவல்ல!'

## இராஜாங்க அமைச்சானாலும் அது அதிகாரம் மிக்கது என்கிறார்



## ஆணித்தரமாகப் பேசும் ஜீவன் தொண்டமான்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சருமான ஜீவன் குமாரவேல் தொண்டமான் மஞ்சரிக்கு அளித்த நேர்காணல்...



நேர்காணல்
தலவாக்கலை
பி.கேதீஸ்

**இலங்கையிலேயே மிக இள வயதில் இராஜாங்க அமைச்சரான முதல் அரசியல்வாதி நீங்களாகத்தான் இருக்க வேண்டும். இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

மக்கள் தான் என்னை தெரிவு செய்தார்கள். அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். என்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவேன். இன்று நுவரெலியா மாவட்டத்தை கைப்பற்றியுள்ளோம் இது எமக்கு மிக மகிழ்ச்சியளிக்கின்றது. சிறுபான்மை கட்சிகளில் அரசாங்கத்துடன் இருக்கும் பங்காளி கட்சி நாங்களே.

**அப்பா இருந்திருந்தால் கெபினட் அமைச்சுப் பதவி இ.தொ.கா.வுக்கு வாய்த்திருக்கும் என்று கருதுகிறீர்களா? 3 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை மொட்டு சின்னத்துக்கு பெற்றுக் கொடுத்த இ.தொ.கா.வுக்கு அமைச்சரவையில் இடம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளதா?**

என்னை பொறுத்தவரையில் இதனை மிகப் பெரிய பொறுப்பாகவே பார்க்கின்றேன். இந்த அமைச்சினூடாக நான் நினைத்தபடியே மக்களுக்கு சேவையாற்ற முடியும். இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு கெபினட் அமைச்சர் ஒருவர் இருப்பார். ஆனால் எனது அமைச்சுக்கு அப்படி யாரும் கிடையாது. எனது அமைச்சு நேரடியாக பிரதமரின் கண் காணிப்பிலேயே உள்ளது. எனக்கு முழு அதிகாரமிக்க இராஜாங்க அமைச்சே வழங்கப்பட்டுள்ளது. என்னால் மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ அதனை சிறப்பாகவும் நேர்த்தியாகவும் நிறைவேற்ற முடியும். எங்களுடைய செயற்பாடுகளை பொருத்திருந்து அவதானியுங்கள்.

**கடந்த அரசாங்கத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு அரை குறையாக நிர்மாணிக்கப்பட்டு காணப்படும் பெருந்தோட்ட வீடமைப்பு திட்டம் இந்த அரசாங்கத்தினூடாக நிறைவு பெறுமா?**

என்ன நடந்தாலும் சரி கடந்த அரசாங்கத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு அரை குறையாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் நிர்மாண பணிகளை நிறைவு செய்ய வேண்டும். 2015ம் ஆண்டு 2016ம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட பல வீடுகள் அரைகுறையாக நிறைவு பெறாமல் காணப்படுகின்றன. அப்படி இருக்கும் வீடுகளின் நிர்மாண பணிகளை நிறைவு செய்து மக்களிடம் கையளிப்பது எனது கடமையாகும். எனவே அதனை விரைவில் முன்னெடுப்போம்.

**பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் பெற்று ஆசிரிய பயிற்சிகளை நிறைவு செய்த ஆசிரிய உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுமா? அது எப்போது?**

மத்திய மாகாணத்தில் ஆசிரியர் பயிற்சிகளை நிறைவு செய்த பெருந்தோட்ட ஆசிரிய உதவியாளர் 420 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்குவது தொடர்பில் கடந்த வாரம் மத்திய மாகாண ஆளுனர் சட்டத்தரணி யு.கே.லலித் கமகேவை சந்தித்து உரையாடினேன். இது தொடர்பாக அவர் மிக விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் என்னிடம் உறுதியளித்துள்ளார். அத்துடன் ஊவா மாகாண முன்னாள் அமைச்சர் செந்தில் தொண்டமான், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கனராஜ் ஆகியோர் இது தொடர்பாக பேசுவதற்கு கொழும்பு செல்ல உள்ளனர். எனவே இன்னும் ஒன்றரை மாதத்திற்குள் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

**பெருந்தோட்ட வீடமைப்புக்கு அப்பால் உங்கள் மனதில் இருக்கும் திட்டங்கள் யாவை என்பதைச் சொல்ல முடியுமா?**

நான் தேர்தல் பிரசாரத்தின் போதே கூறியிருந்தேன். வீடமைப்பு மாத்திரம் மலையகத்திற்கு அபிவிருத்தி இல்லை. எனது நோக்கமும் அது கிடையாது. வீடமைப்பு தவிர நிறைய விடயங்கள் காணப்படுகின்றன. பெருந்தோட்ட பாடசாலைகளில் ஒரு ஒழுங்கான விளையாட்டு மைதானம் கூட இல்லை. முதலாவதாக ஒரு விளையாட்டு மைதானம் அமைத்துக்கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை சிறந்த முறையில் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். பெருந்தோட்ட மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கி அவர்களின் எதிர்காலத்தை சிறப்பாக அமைக்க வேண்டும். பெருந்தோட்ட பகுதிகளில் பல இடங்களில் வீதி பிரச்சினையாக உள்ளது. ஒரு வருடத்தில் இத்தனை கிலோமீற்றர் வீதி எங்களால் புனரமைக்க முடியும் என்பதனை மக்களுக்கு வெளிப்படையாக தெளிவு படுத்த வேண்டும் அப்போதுதான் மக்களுக்கும் ஒரு நம்பிக்கை உருவாகும். நாங்களும் பொறுப்புடன் செயற்பட முடியும். மேலும் மக்களிடையே பொருளாதார பிரச்சினை மிக அதிகமாக காணப்படுகின்றது. தற்போது முழு நாட்டுக்கும் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகள் கிடைக்க உள்ளன. அந்தவகையில் அதில் நாம் 1000கும் மேல் வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுத்துள்ளோம். அடுத்த மாதம் முதல் இவர்களுக்கு வேலை கிடைக்கும். தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்திற்கு கடந்த வாரம் சென்றிருந்தேன். அங்கு நிலவும் குறை நிறைகளை கண்டறிந்தேன். அதனை மிகவிரைவில் முன்னெடுப்பேன். தற்போது மலையகத்தில் 400 பட்டதாரிகள் சான்றிதழ் இல்லாமல் இருக்கின்றனர். அதனையும் ஓரிரு வாரங்களில் ஒழுங்கு செய்ய உறுதியளித்துள்ளேன். தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் புதிய கற்கை நெறிகளை ஆரம்பிக்க உள்ளேன். கம்பியூட்டர் கல்வி, அழகுசாதன கற்கை நெறி போன்ற பலவற்றையும் அங்குள்ள விடுதிகளை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்க உள்ளேன். மேலும் எனது அமைச்சினூடாக நடைமுறைப்படுத்தும் வேலைத் திட்டங்களை அங்கு நடைமுறைப்படுத்த இருக்கின்றேன். தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்திலிருக்கும் மனித சக்தியை பயன்படுத்தவும் இருக்கின்றேன்.

- ★ பெருந்தொட்ட ஆசிரிய உதவியாளர் 420 பேருக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும்.
- ★ மலையகத்தில் 400 பட்டதாரிகள் சான்றிதழ் இன்றி உள்ளனர். அவற்றைக் கிடைக்கச் செய்வேன்.
- ★ தீவிபத்திலும் மண்சரிவிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்படும்
- ★ நாங்கள் கொன்கிறீட் கூரை வீடுகள் அமைப்போம். இந்திய வீடமைப்பு வீடுகள் கூரை கொண்டதாக இருக்கும்.
- ★ செந்தில் தொண்டமானா, அவர் தோல்வி அடையவே இல்லையே!



**முற்போக்கு முன்னணி எங்கள் மூவருக்கும் வாக்களியுங்கள் என்று ஒன்றுபட்டு பிரசாரம் செய்ததால் மூவரும் வெற்றி பெற்றனர் என்கின்றனர். வேலுகுமாரும் ரவூப் ஹக்கீமும் இப்படி ஒரு உடன்பாட்டில் இருந்ததாக அறிகிறோம். நீங்கள் ஏன் மூவர் வெற்றிபெறும் வகையில் ஒரு உடன்பாட்டை செய்யவில்லையா? பொதுஜன பெரமுனவில் அதிகமான தமிழ் வேட்பாளர்களை களம் இறக்க ஒத்துக்கொண்டது ஏன்?**

நாங்கள் ஒற்றுமையாகவே தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுத்தோம். அதில் எந்த குளறுபடிகளும் இல்லை. எங்களுக்கு ஒதுக்கபட்ட எல்லைகளுக்குள்ளேயே தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுத்தோம். நாங்கள் அதனை நினைத்து கவலைப்படவில்லை. காரணம் வெற்றியோ தோல்வியோ அதனை ஏற்கும் மனநிலை எங்களிடம் உள்ளது. நாங்கள் 5 பேரும் தேர்தலில் போட்டியிட்டது ஐவரும் வெற்றி பெறும் நோக்கத்தில்தான். எதற்கும் முயற்சி செய்ய வேண்டும். நாங்கள் 2 பேர் மாத்திரம் வெற்றி பெறவும்தான் இந்த கேள்வியை பலர் தொடுக்கின்றார்கள். நாங்கள் நால்வரும் வெற்றி பெற்றிருந்தால் இந்த கேள்வியே வந்திருக்காது. நுவரெலியா மாவட்டத்தில் 4200 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. மொட்டு சின்னத்தில் 37000 ற்கும் அதிகமான வாக்குகள் வீணாகின. நாங்கள் ஐந்து பேரும் போட்டியிட்டதில் எந்தவித தவறும் கிடையாது. தமிழ் வேட்பாளர்கள் அதிகமாக களமிறக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும் அது அந்தந்த கட்சியின் விருப்பமே. ஆனால் யாருக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பது மக்களின் கையிலேயே தங்கியுள்ளது. மக்களே சரியான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வார்கள். ஒரு கட்சியில் அதிக வேட்பாளர்களை நிறுத்தியமையினால் வேட்பாளர்கள் தோல்வியடைவார்கள் என்பது ஏற்றுக்கொள்ள முடியாததொன்று. எத்தனை பேரை நிறுத்தினாலும் மக்கள் யாருக்கு வாக்களிக்கின்றார்கள் என்பதே முக்கியம். நான் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்றேன் என்பதிலிருந்த என்ன தெரிகின்றது என்றால் மக்கள் சரியாகத்தான் வாக்களித்துள்ளார்கள் என்பதே.

**பெருந்தோட்டப் பகுதிகளில் திடீர் தீ விபத்தினாலும் மண்சரிவினாலும் பாதிக்கப்பட்டு குடியிருப்புகளை இழந்து தற்காலிக கூடாரங்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் தங்கியிருக்கும் மக்களுக்கு தனி வீடுகளை அமைத்துக் கொடுக்க ஏதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா?**

ஹொலிரூட், பம்பரகலை, போடைஸ் மற்றும் அதே போல பல இடங்களில் தீ விபத்தினாலும் மண்சரிவினாலும் பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நிச்சயமாக வீடுகளை அமைத்துக்கொடுப்பேன்.

அதேபோல பூண்டுலோயா ஹெரோ தோட்டத்தில் ஒரு வீட்டில் 5இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. மேலும் தற்காலிக கூடாரங்களில் சில குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்களுக்கும் வீடுகள் அமைத்து கொடுக்கப்படும். இந்திய வீடமைப்பு திட்டமும் எனது அமைச்சினூடாக முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டங்களும் தோட்ட தொழிலாளர்களுக்கு மாத்திரமே உள்ளது. முதலில் ஒரு வீட்டில் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன அவர்களுக்கு வீடுகளை அமைத்து கொடுக்க உள்ளோம்.

**பெருந்தோட்ட ஆசிரியர் சமூகத்திற்கும் பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் உத்தியோகத்தர்களுக்கும் வீடுகள் அமைத்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?**

நிச்சயமாக அவர்கள் தோட்டத்தில் பிறந்திருந்தால் அவர்களுக்கும் வீடுகள் உண்டு.

**செந்தில் தொண்டமான் தோல்வி அடைவார் என்று எவருமே கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். அவரது பிரச்சார முறைகளும், உத்திகளும் அபாரமாக இருந்தன. இத்தோல்வி எப்படி நிகழ்ந்திருக்கக்கூடும் என்று நினைக்கிறீர்கள்? அவருக்கு விழுந்த 20 ஆயிரம் வாக்குகள் நிராகரிக்கப்பட வேண்டியதாயிற்று என்று ஒரு தகவல் உள்ளதே! உங்கள் யூகம் என்ன?**

செந்தில் தொண்டமான் தோல்வியடையந்ததாக நான் கருதவில்லை. அவரை விட குறைவாக வாக்குகள் பெற்ற சிலர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். பதுளையில் கிட்டத்தட்ட 40 ஆயிரம் வாக்குகளை செந்தில் தொண்டமான் பெற்றுள்ளார். இப்போதைய தேர்தல் முறைப்படி 40 ஆயிரம் வாக்குகள் பெற்ற செந்தில் தொண்டமான் தோல்வியடைந்துள்ளார். அதே நேரம் வேறு கட்சியில் போட்டியிட்டு அதற்கு குறைவாக வாக்குகள் பெற்ற இருவர் பாராளுமன்றத்திற்கு தெரிவாகி இருக்கின்றனர். பதுளையை பொறுத்தவரையில் தமிழ் மக்களின் ஆதரவு செந்தில் தொண்டமானுக்கே இருக்கின்றது.

**காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவின் பின்னர் அங்கு ஏற்ப்பட்டுள்ள தலைவர் வெற்றிடத்திற்கு யார் நியமிக்கபடக் கூடும்?**

அமரர் ஆறுமுகன் தொண்டமான் என்பவர் ஒரு சாதாரண மனிதர் கிடையாது. ஒரு துணிச்சலும் சாணக்கியமும் மிக்கத் தலைவன். அவர் எடுக்கும் முடிவுகள் அனைத்தும் சாணக்கியம் மிக்கவை. அவ்வாறான ஒரு தலைவனின் இடத்தை நிரப்புவது இலகுவான காரியம் கிடையாது. தேசிய சபை கூடியே அதனை தீர்மானிக்கும்.

**உங்கள் அமைச்சினுளடாக அமைக்கப்படும் வீடுகள் தனிவீடுகளா அல்லது மாடி வீடுகளா? 7 பேர்சஸ் காணியிலா வீடுகள் அமைக்கப்படும்?**

மாடி வீடு என்ற பொலி கதைகளை மக்கள் நம்ப வேண்டாம். தனி வீடுகளையே நாம் அமைப்போம். மலையகத்துக்கான வீட்டுத் திட்டம் தொடர்பில் பிரதமருடன் அண்மையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினோம். எனினும் மாடி வீடு,மாடி வீடு என அது தொடர்பில் தவறான கருத்து பரப்பப்பட்டுவருகின்றது. கூரைக்கு பதிலாக கொங்க்றீட் போட்ட வீடுகளையே நாங்கள் அமைக்கவுள்ளோம். எனவே போலித் தகவல்களை நம்ப வேண்டாம். இந்திய அரசாங்கத்தினால் அமைக்கப்படும் வீடுகளுக்கு மாத்திரமே ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டது போல கூரைகளை கொண்டு நிர்மாணிக்கப்படும். மிக விரைவில் உண்மை என்னவென்பதை உங்களால் நேரில் காண முடியும். எல்லோருக்கும் வீடுகள் வழங்கப்படும் என நான் மக்களிடம் பொய் சொல்ல விரும்பவில்லை. இந்திய அரசாங்கத்தினால் 10 ஆயிரம் வீடுகள் கிடைத்துள்ளன. தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு அமைச்சினூடாக 3000 தொடக்கம் 5000 வீடுகள் ஒரு வருடத்திற்கு நிர்மாணிக்க முடியும். இது வரவு செலவு திட்டத்தை பொறுத்தே தீர்மானிக்கப்படும். இப்போதைக்கு மலையகத்தில் 2 இலட்சம் பேர் இருக்கின்றார்கள். வருடத்திற்கு வருடம் சனத்தொகை குறையப் போவதில்லை. அதிகரித்துக்கொண்டே செல்லும். எனவே இதற்கு நிரந்தர தீர்வு என்றால் காணிகளை பிரித்து மக்களிடம் கொடுக்க வேண்டும். யார் யாருக்கு வீடுகளை நிர்மாணித்து கொடுக்க முடியுமோ அதனை அமைத்து கொடுப்போம்.

மேலும் காணிகளை பிரித்து கொடுத்து யார் யாருக்கு வீட்டு கடன் உதவியினூடாக வீடுகளை அமைத்துக்கொள்ள முடியுமோ அவர்களுக்கு வீட்டு கடன்களை பெற்றுக்கொடுக்க உள்ளோம். நிலப் பிரச்சினைக்கு நிச்சயமாக தீர்வு கிடைக்கும். மேலும் இங்கு தொழிற்சங்க பலத்தையும் பாவித்தால் மாத்திரமே 7 பேர்சஸ் என்ற களவைத் தாண்டி வரமுடியும். கடந்த அரசாங்கத்தில் 7 பேர்சஸ் காணியை வாங்கித் தந்துள்ளார்கள். அது ஒரு நல்ல விடயம். அதனை நான் பாராட்டுகின்றேன். இன்று அரசியல் ரீதியில் வீடமைப்பை கொண்டு வந்துள்ளோம். தொழிற்ச் சங்க ரீதியில் அதன் பலத்தை பயன்படுத்தி கம்பனிகளுடன் பேரம் பேசி 10 பேர்ச்சஸோ,15 பேர்சஸோ, 20 பேர்ச்சஸோ வாங்கித் தருவோம். இது மிகவிரையில் சாத்தியமாகும்.

**உங்களுக்கு வயது இருக்கிறது. நீண்ட பயணத்துக்கான பாதையும் இருக்கிறது. உங்கள் இலட்சியங்களையும் கனவுகளையும் சொல்வீர்களா?**

போக போகத் தெரியும் எனது இலட்சியம் எதுவென்று.

**அரசியல் என்பது ஒரு சூதாட்டக் களம். யாரையும் முழுமையாக நம்பிவிட முடியாது. வயதில் சிறியவர், அனுபவம் குறைந்தவர் என்ற வகையில் நீங்கள் ஏமாற்றப்படக்கூடிய, தவறான பாதைக்கு திசை திருப்பிவிடக்கூடிய வாய்ப்புகள் உள்ளன அல்லவா?**

நிச்சயமாக அப்படி நடப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. நான் எனது தந்தையின் வழியிலேயே பயணிப்பேன். சில வருடங்கள் அவரிடமிருந்து பல அனுபவங்களை பெற்றுள்ளேன். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் அணிச் செயலாளராகவும் பிரதிப் பொதுச் செயலாளராகவும் செயலாற்றிய அனுபவம் என்னிடம் இருக்கின்றது.

பொருளாதார அரசியல்

## விடாக் கண்டனும் கொடாக் கண்டனுமாக கண்ணாமூச்சி காட்டும்

# உணவுப் பொருள் உற்பத்தியும் இறக்குமதியும்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

இறக்குமதிப் பதிலீடு இலங்கைக்குப் புதிய ஒரு விவகாரமல்ல. 1948ல் டி.எஸ் சேனாநாயக்க அரசாங்கம் இறக்குமதிப் பதிலீட்டு உபாயத்தை விவசாய உற்பத்திகள் தொடர்பில் நடைமுறைப்படுத்த ஆரம்பித்தது. அக்காலப்பகுதியில் உலக சந்தையில் அரிசி உள்ளிட்ட உணவுப்பொருட்களின் விலைகள் சடுதியாக அதிகரித்தமையால் இலங்கையின் சென்மதி நிலுவையின் மீது அதிக அழுத்தங்கள் ஏற்பட்டன. இலங்கை உணவுத் தேவைக்கு இறக்குமதிகளிலேயே பெரிதும் தங்கியிருந்தது. சனத்தொகை அதிகரிப்பு காரணமாக உணவுப் பொருட்களுக்கான கேள்வியும் இக்காலப்பகுதியில் அதிகரித்தது.

அத்துடன் காலனித்துவ அரசாங்கம் இரண்டாம் உலக மகாயுத்த காலப்பகுதில் இலங்கை மக்களின் உணவுப் பாதுகாப்பை (food security) உறுதிசெய்ய அறிமுகப்படுத்திய உணவுப் பங்கீட்டுத் திட்டம் (foods rationing scheme) யுத்தம் முடிவுற்ற பின்னரும் தொடர்ந்தது. இலங்கை வாசிகள் ஒவ்வொருவருக்கும் மானிய விலையில் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன. இதனால் உலக உணவுப்பொருள் விலை அதிகரிப்பு இலங்கை அரசாங்கத்தின் உணவு இறக்குமதிச் செலவினங்களை அதிகரித்து கஜானாவில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியது.

எனவேதான் உணவு இறக்குமதிகளை உள்ளூர் உணவுப் பொருட்களை பதிலீடு செய்வதன் மூலம் கட்டுப்படுத்தி அந்நியச் செலாவணி வெளியேற்றத்தைக் குறைத்து உணவில் தன்னிறைவை அடையலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. இந்த எதிர்பார்ப்புடனேயே பல் நோக்கு அபிவிருத்தித் திட்டமான கல்லோயாத்திட்டம் (Gal Oya project) செயற்படுத்தப்பட்டது.

இலங்கையில் அரிசி மற்றும் சீனி உற்பத்தியை அதிகரிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். எனினும் இம்முயற்சிகள் வெற்றியளித்ததாகவோ இலங்கை உணவுப் பொருள் உற்பத்தியில் தன்னிறைவடைந்ததாகவோ எந்தவிதமான சாட்சியங்களும் இதுவரை கிடையாது. அதன் பின்னர் 1956இல் பதவிக்கு வந்த அரசாங்கமும் 1970இல் பதவிக்கு வந்த அரசாங்கமும் கடுமையான இறக்குமதிப் பதிலீட்டை விவசாயத்தில் மட்டுமன்றி கைத்தொழிற்றுறையிலும் நடைமுறைப்படுத்தின.

குறிப்பாக 1956 இன் பின்னர் இலங்கையின் காங்கேசன்துறை, பரந்தன், வாழைச்சேனை, ஒருவல போன்ற இடங்களில் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சீமெந்து இரசாயனம் காகிதம் இரும்புருக்குத் தொழிற்சாலைகள் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களாகவே ஆரம்பிக்கப்பட்டன. இவற்றின் நோக்கம் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதாகும்.

> **பதவிக்கு வருகின்ற அரசாங்கங்கள் உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அவ்வப்போது விதித்த போதிலும் இவற்றால் விளைந்த பயன் ஏதுமில்லை. மாறாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிக்கும் ஒவ்வொரு தடவையும் அப்பொருட்களுக்கு நாட்டில் செயற்கையானதொரு தட்டுப்பாடும் ஏற்படவே செய்தது.**

அதே போன்று 1970இல் பதவிக்கு வந்த அரசாங்கம் ஒட்டுமொத்தமாக இறக்குமதிகளில் பெரும்பாலானவற்றைத் தடைசெய்து உள்நாட்டில் அவற்றை உற்பத்திசெய்ய முனைந்தது. விவசாய உற்பத்தியை ஊக்குவிக்கும் வண்ணம் அரச வங்கிகள் ஊடாக விவசாயக் கடன்களும் வழங்கப்பட்டன. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையை எதிர்கொண்டமை, நாட்டில் நிலவிய நெடுவரட்சி, உள்நாட்டுப் புரட்சி போன்ற காரணங்கள் உள்நாட்டு விவசாயத்துறை குறித்து 1970களில் அதிக கரிசனை எழக் காரணமாகியது. காணிச் சீர்திருத்தங்கள் ஊடாக நிலமற்றோருக்கு நிலத்தைப் பகிர்ந்தளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் இதன் ஓரங்கமாகவே கருதப்பட வேண்டும்.

அதுமட்டுமன்றி விவசாய விரிவாக்க சேவைகள் ஊடாக வளமாக்கிப் பிரயோகம் பீடைக்கட்டுப்பாடு மற்றும் புதிய தொழில்நுட்ப முறைகளினதும் புதிய விதையினங்களின் அறிமுகம் போன்ற நடவடிக்கைகள் மூலம் விவசாயத்துறைக்கு அரசாங்கத்தின் ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டன.

இந் ந ட வ டி க் கை க ளின் விளைவாக உள்நாட்டு நெல் உற்பத்தி உட்பட உப உணவுப் பயிர் உற்பத்திகளும் நாட்டில் அதிகரித்தன. குறிப்பாக வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய், புகையிலை மற்றும் திராட்சை போன்றவற்றை வெற்றிகரமாகப் பயிரிட்ட இலங்கையின் வடபுல விவசாயிகள் இந்த இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையின் மூலம் நன்மைகளைப் பெற்றுக் கொண்டனர். ஆயினும் இவற்றை உற்பத்தி செய்வதற்கான செலவுகள் சார்பளவில் இலங்கையில் அதிகமாகவே இருந்தன. சிறியளவு நிலங்களில் சிற்றளவில் விவசாயம் மேற்கொள்ளபடுவதால் அறுவடை செய்யப்படும் ஒரு அலகுக்கான செலவுகள் உயர்வாக இருந்தன. சிற்றளவு நிலங்களில் இயந்திரப் பிரயோகமும் புதிய தொழில் நுட்பப் பிரயோகமும் செலவு கூடியதாக இருக்கும்.

எனவே அளவுத்திட்டச் சிக்கனங்களை அடையவோ அதன்மூலம் விளைபொருட்களின் விலைகள் குறையவோ சாத்தியமில்லை. மறுபுறம் நாட்டின் சனத்தொகைக்குத் தேவையானளவு விவசாய விளைபொருட்களை உற்பத்தி செய்வதும் சாத்தியமானதாக இருக்கவில்லை. இதனால் உணவுப்பற்றாக்குறை என்பது தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்ட ஒரு பிரச்சினையாக இருந்தது. இவ்வுணவுப் பற்றாக்குறையானது இலங்கை அரசியலில் 1977ல் பெரிதும் பிரதிபலித்தது. இறக்குமதிப் பதிலீட்டை கடமையாகப் பின்பற்றிய அரசாங்கம் படுதோல்வியை எதிர்நோக்க நேர்ந்தது. 1977இல் பதவிக்கு வந்த அரசாங்கம் விவசாய விளைபொருள் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்கியது.



குறிப்பாக, வடபுல விவசாயிகள் உற்பத்திசெய்து வந்த உப உணவுப் பொருட்கள் தாராளமாக இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டன. தென்பகுதி விவசாயிகளின் உற்பத்தி செய்த பொருட்கள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அவ்வாறு உடனடியாகத் தளர்த்தப்படவில்லை. துரித மாவலிகங்கை பல்நோக்கு அபிவிருத்திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் நெல் மற்றும் உப உணவு விவசாய உற்பத்திகளை அதிகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் வளமாக்கி பூச்சிக் கொல்லிகள் விவசாய ஊழியர்களின் கூலி போன்ற விவசாய உள்ளீடுகளின் விலையேற்றம் காரணமாக ஓரலகு வெளியீட்டின் செலவுகள் அதிகரித்தன. அரசாங்கங்கள் விவசாய மானியத்திட்டங்களை குறிப்பாக உரமானியத் திட்டத்தையும் விவசாயக் காப்பறுதித் திட்டத்தையும் அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு அனுசரணை வழங்கி வந்தன. எவ்வாறாயினும் இலங்கை வாழ் மக்களுக்குத் தேவையான உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையும் நோக்கம் இதுவரையில் சாத்தியப்படவில்லை.

பதவிக்கு வருகின்ற அரசாங்கங்கள் உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அவ்வப்போது விதித்த போதிலும் இவற்றால் விளைந்த பயன் ஏதுமில்லை. மாறாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிக்கும் ஒவ்வொரு தடவையும் அப்பொருட்களுக்கு நாட்டில் செயற்கையானதொரு தட்டுப்பாடும் ஏற்படவே செய்தது. அத்தட்டுப்பாட்டின் காரணமாக அப்பொருட்களின் விலைகள் செயற்கையாக மிக உயர்ந்த மட்டத்திற்கு அதிகரிப்பதையும் சாத்தியமான விடத்து கலப்படங்கள் செய்யப்பட்டு சந்தைக்கு வருவதையும் காணமுடிகிறது.

இத்தகைய சந்தர்ப்பங்களில் நுகர்வோன் அநியாயமாக அவற்றை அதிக விலைகொடுத்து வாங்க நிர்ப்பந்திக்கப்படுவதுடன் வாங்கும் பொருளும் தரமாக இருப்பதில்லை. சிறிய எண்ணிக்கையிலான உள்ளூர் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக மிகப்பெரும் எண்ணிக்கையிலான நுகர்வோரை வாட்டி வதைப்பது நியாயமானதன்று.

இலங்கையில் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக அண்மையில் மஞ்சள் இறக்குமதி தடைசெய்யப்பட்டமையும் அதனால் ஏற்பட்டுள்ள சந்தைத் தாக்கங்களையும் உதாரணமாகக் கொள்ளலாம். பெரும்பான்மை இலங்கையர்கள் தமது உணவில் சிறிதளவே மஞ்சளைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் வீடுகளிலும் வர்த்தக நிலையங்களிலும் மஞ்சள் நீர் ஒரு கிருமி நாசினியாகத் தெளிக்கப்படுகிறது. கொரோனா காலப்பகுதியின் ஆரம்பத்தில் மஞ்சள் நீரில் வேப்பிலையை கலந்து தெளித்து தமது வீடுகளைச் சுத்தம் செய்ய முற்பட்ட பலரைக் காணமுடிந்தது. இந்துக்களைப் பொருத்தமட்டில் மஞ்சள் ஒரு மங்களப்பொருள். அது இல்லாமல் பெரும்பாலான பூஜைகள் செய்யப்படுவதில்லை. இந்துப் பெண்கள் தாலியாகவும் மஞ்சள் கிழங்கினை முடிந்து கொள்வது சமய கலாசார ரீதியில் அதன் முக்கியத்துவத்தினைக் காட்டுகிறது.

திடீரென மஞ்சள் இறக்குமதி தடைசெய்யப்பட்டவுடன் அதன் விலை எகிறியது. கலப்படமும் கண்முன்னே நடந்தது. கரையோரப்பகுதிகளில் கடத்தப்பட்ட மஞ்சள் கிலோ கணக்கில் பிடிபட்டது. கஞ்சா போதைப் பொருட்களின் ரேஞ்சுக்கு மஞ்சளின் நிலைமையும் வந்துவிட்டமை அபத்தம். துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவு மஞ்சள் சுங்க அனுமதிக்காகக் காத்திருப்பதாகவும் தெரிகிறது.

இவ்வாறு மஞ்சளில் திடீரென கைவைக்கக் காரணமென்ன? கொரோனாவைக் கையாள தொற்றுநீக்கி இரசாயனங்கள் பெருமளவில் இறக்குமதி செய்ய எவ்விதத் தடையும் இல்லாதபோது பக்கவிளைவுகளற்ற இயற்கைத் தொற்று நீக்கியான மஞ்சள் இறக்குமதி தடைசெய்யப்பட்ட மர்மம் என்ன? உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டுமாயின் மஞ்சள் விவசாயிகளுக்கு உரிய அறிவுறுத்தல்களையும் தொழில்நுட்பத்தையும் நிதி உதவிகளையும் வழங்கி உற்பத்தி இலக்குகளை நிர்ணயித்து அவர்களது உற்பத்திகள் சந்தைக்குவரும் நிலையில் மஞ்சள் இறக்குமதிகளைத் தடைசெய்திருக்கலாமே? குறைந்தபட்சம் எப்போது இறக்குமதி தடைவரப் போகிறது என்றாவது முன்கூட்டியே இறக்குமதியாளருக்கு அறிவித்திருக்கலாமே? மஞ்சளை உள்நாட்டில் உடனடியாக ஒருசில மாதங்களில் உற்பத்தி செய்துவிட முடியாதே. அதுவரை தட்டுப்பாட்டால் ஏற்படும் விலை அதிகரிப்பை தடுக்க அரசாங்கத்தால் முடியுமா? சில ஆயிரக்கணக்கான மஞ்சள் உற்பத்தியாளரைப் பாதுகாக்க இருபத்தியிரண்டு மில்லியன் நுகர்வோர்களும் மஞ்சளுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமா? வர்த்தகம் செய்வதின் இலகுதன்மை பற்றிய குறிகாட்டியில் அரசாங்கக் கொள்கைகளில் நிச்சயமற்றதன்மையும் விட்டேத்தியாக அவ்வப்போது எடுக்கப்படும்தீர்மானங்களும் முக்கிய குறைபாடாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இக்குறைபாடே இந்நாட்டுக்குள் முதலீட்டாளர்களை வரவிடாமல் தடுக்கிறது. இப்போதைய மஞ்சள் விவகாரம் இதற்கு இன்னுமொரு சான்றாக இருக்கப் போகிறது.

# சீன, அமெரிக்க இழுபறிக்குள் சிக்கியுள்ளதா தென் பூகோள நாடுகள்?



கலாநிதி
கே. ரீ.கணேசலிங்கம்

**சீனா அமெரிக்க மோதல் போக்கு தீவிரமடைகிறது. அதனால் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியில் சீனாவின் நட்பு நாடுகள் அதிகம் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்படுகின்றன. அண்மையில் சீனாவின் முக்கிய கட்டுமான நிறுவனத்தின் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகள் ஆசியாவின் கட்டுமானத் துறையை மட்டுமன்றி அமெரிக்க சீன உறவில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும் எனவும் அதனை சீன அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது என்பதையும் தேடுவதாகவே இக்கட்டுரை அமையவுள்ளது.**

முதலாவது China Communications Construction Company (CCCC) மீது அமெரிக்க தடைவிதித்துள்ளது. இந்நிறுவனம் உலளாவிய ரீதியில் 157 நாடுகளில் 929க்கும் மேற்பட்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதில் தென் சீனக்கடலில் உருவாகிவரும் செயற்கைத் தீவுகளுக்கான நிபுணத்துவத்தை கொண்டுள்ள இந்நிறுவனம் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டதுடன் அமெரிக்காவினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான கட்டுமானத்துக்குள்ளேயே இலங்கையின் தலைநகரிலுள்ள கொழும்புத் துறைமுகத்தில் அமைக்கப்பட்டு வரும் நிதி நகரத்திற்கான பணியினை மேற்கொள்ளும் நிறுவனமாகவுள்ளது. அமெரிக்காவின் தடை கொழும்புத் துறைமுகக் கட்டுமானத்தை பாதிக்கும் என்ற வாதம் எழுந்துள்ளது. 24 சீன நிறுவனங்கள் மீது அமெரிக்க விதித்துள்ள தடையின் கீழ் அமெரிக்க நிறுவனங்கள் எவையும் தடைவிதிக்கப்பட்ட சீன நிறுவனங்களுடன் வர்த்தக ரீதியில் தொடர்புகளை வைத்துக் கொள்ளக்கூடாது எனத் தெரிவித்துள்ளது.



இதில் பாதிப்பு எங்கே நிகழுகிறது என்றால் கொழும்புத் துறைமுகக் கட்டுமானத்தைப் போன்று ஆசியாவின் கட்டுமானத்துறையில் உப ஒப்பந்தக்காரர்களாக அல்லது கட்டுமானத்திற்கு தேவையான பொருட்களை விநியோகிப்பவர்களாக அமெரிக்க நிறுவனங்கள் அல்லது அமெரிக்காவுடன் தொடர்புபட்டுள்ள நிறுவனங்கள் செயல்படுவதே.

இது தொடர்பில் சீனாவின் வெளிவிவகாரத் துறை விடுத்துள்ள அறிக்கையில் சீனாவின் 24 நிறுவனங்கள் மீது அமெரிக்கா கொண்டுவந்துள்ள தடை அனைத்துலக விதிமுறைகளை மீறும் செயலாகும் சீனாவின் உள்விவகாரங்களில் தலையிடுவதை அமெரிக்கா நிறுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தகைய கருத்தினை இலங்கைக்கான சீனத் தூதரகமும் வெளிப்படுத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கும் கருத்து கவனத்திற்குரியதாகும். அமெரிக்காவின் தடை சீனாவின் ஆசியா மீதான நடவடிக்கைகளைப் பாதிக்கும் எனவும் குறிப்பாக இலங்கை பிலிப்பைன்ஸ் மியான்மார் பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பாரிய நெருக்கடி ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளது. இதனால் சீனாவின் ஒரே சுற்று ஒரே பாதை எனும் திட்டமிடல் பாதிக்கவைப்பதற்கான உலகளாவிய திட்டமிடலாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அதேநேரம் அமெரிக்காவின் அணுகுமுறையானது சீனா பக்கம் ஆசிய நாடுகள் முழுமையாகச் செல்வதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் அதற்கு வலுவான காரணங்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது.

குறிப்பாக சீனாவின் உலக நாடுகளுடனான கொள்கையானது winwin உபாயத்தினைக் கொண்டதாகும் அத்தகைய உபாயத்தினை மிக நீண்ட காலமாக சீனா கடைப்பிடித்து வருகிறது. இது பொருளாதார ரீதியில் ஆசிய நாடுகளுக்கு இலாபகரமானதாக அமைந்திருப்பதனால் ஆசிய நாடுகள் அதிகம் சீனாவுடன் கைகோர்க்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி சீனாவின் பிறிதொரு அணுகுமுறையாக மனித உரிமையை பொருளாதார தடையை மனிதாபிமானச் சட்டத்தை ஒரு பொறியாக ஆசிய நாடுகள் மீது திணிக்கும் நடைமுறையை கொண்ட நாடாக இல்லாமை கவனத்திற்குரியதாகும். இவை பெருமளவுக்கு ஆசிய நாடுகளது ஆட்சியாளரது இருப்பினையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. ஏறக்குறைய ஒரு இராணுவ பின்புலத்தையும் தனிக் கட்சி ஆதிக்கத்தையும் கொண்ட அரசாங்கத்தை கொண்டிருக்கும் ஆசிய ஆபிரிக்க இலத்தீன் அமெரிக்க நாடுகள் சீனாவின் பிரசன்னத்தை அங்கீகரிப்பதுடன் தனித்துவமான அரசியல் வடிவத்தை ஏற்படுத்தும் முனைப்பில் காணப்படும் போக்கினை கடந்த காலத்தில் அவதானிக்க முடிந்தது. அதனால் மீளவும் அத்தகைய ஆட்சியாளர்களும் அவர்களது அரசியல் வாரிசுகளும் பதவியை நோக்கி காத்திருப்பதுவும் ஆட்சியில் அமர்வதுமான சீனாவின் பக்கம் நோக்கிய போக்கு ஒன்று ஏற்பட வாய்ப்பு அதிகமுண்டு.

சீனா மீதான அணுகுமுறைகள் ஒவ்வொன்றும் அந்நாட்டை இரு துருவ உலக ஒழுங்குக்கு அரசியலுக்குள் இழுத்துவருவதாகவும் அதற்கான அணியினை தோற்றுவிப்பதுமாக அமையும். ஏற்கனவே சீனா தயார் செய்துள்ள அணியின் கட்டுமானம் கொரோனா நிலையால் பலவீனப்பட்டிருந்த நிலை தற்போது மாற்றம் அடைந்து கொண்டு நகர்கிறது. சீனாவின் பொருளாதார வளர்ச்சி ஏறுமுகத்தில் இருப்பதனால் உலக நாடுகள் அதன் பக்கம் சாய வாய்ப்புள்ளது. ஆனால் அமெரிக்காவின் அணியில் இருக்கும் இந்தியாவே தற்போது சீனாவுக்கு பெரும் நெருக்கடி மிக்க சக்தியாகக் காணப்படுகிறது. அதனாலேயே சீனா பக்கம் உள்ள நாடுகள் இந்தியாவுடன் இணைவதனூடாக அமெரிக்க நட்பு வட்டத்துக்குள் இழுக்கப்படுகின்றன. இதில் ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது நேரடியான விளைவுகளையும் நெருக்கடியையும் இலங்கை அதிகம் கொண்டுள்ளது. காரணம் இலங்கை இந்தியாவின் அயல் நாடாகவும் பாதுகாப்பு வேலியில் அமைந்துள்ள நாடாகவும் அமைந்திருப்பதனால் அதிக நெருக்கடியைக் கொண்டுள்ளது. இதனாலேயே சீனத் தூதரகம் அமெரிக்காவுக்கான பதிலை இலங்கையிலிருந்து முதன்மைப்படுத்தியுள்ளது. அதன் அரத்தம் சீனாவின் பக்கம் இலங்கை உள்ளது என்பதை அமெரிக்காவுக்கு உணர்த்துவதன் மூலம் இந்தியாவுக்கு அறிவிப்பினை கொடுப்பதற்கு என்பதை வெளிப்படுத்தவேயாகும்.

எனவே சீனா மீதான அமெரிக்காவின் தடை அமெரிக்காவைப் பலப்படுத்தும் அதே வேளை அதற்கு எதிர்முனையிலுள்ள சக்தியான சீனாவை நோக்கியும் பெரும் எழுச்சியை ஏற்படுத்த முனையலாம். அதனால் இரு துருவ உலக ஒழுங்கு விரைவாக தயாராக வாய்ப்புள்ளது.

# போதைப்பொருள் வியாபாரிகளால் இலக்கு வைக்கப்படும் மாணவர்கள்

**1900** இன் ஆரம்பத்தில் பெண்கள் புகைப்பது மிக மிக அரிதாக இருந்தது. பெண்கள் புகைப்பதே இல்லை என்று கூட சொல்ல முடியும் எனவேபெண்களிடம் புகைப்பழகத்தை ஏற்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனம் ஒன்று அமெரிக்காவில் ஒரு பேராசிரியை சந்தித்து ஆலோசனை கேட்டிருக்கின்றது.

அந்தப் பேராசிரியர் இப்படியொரு ஆலோசனையை வழங்கியிருகின்றார். அதாவது பெண்களுக்கு சமவுரிமை இல்லை என்றும் சமத்துவம் பேணப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி ஒரு ஆர்ப்பாட்த்தை ஏற்பாடு செய்யுமாறும், தெரிவு செய்யப்பட்ட சில பெண்களிடம் சிகரட்டை கொடுத்து அவர்களை புகைக்கச் சொல்லியும் அதனை ஊடகங்களில் வரும் வண்ணம் பார்த்துக்கொள்ளவும் அவர் ஆலோசனை கூறியுள்ளார்.

பெண்களின் ஒடுக்குமுறைக்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டமும் நடந்தது. ஆண்களுக்கு நிகராக பெண்கள் நடத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. அதேவேளை சிகரட் பிடிக்கும் பெண்களின் படமும் வெளிவந்தது.

இதன் பின்னரே படிப்படியாக புகைப்பழக்கம் அமெரிக்காவில் பெண்கள் மத்தியில் நிலைபெற ஆரம்பித்தது. இன்று அதிகளவில் பெண்கள் புகைப்பிடிக்கும் பழகத்திற்கு மேற்படி இந் நிகழ்வே வித்திட்டது என்றுக் கூறப்படுகிறது..

இவ்வாறுதான் இன்று இலங்கையில் போதைப்பொருள் விற்பனை செய்வோர் மாணவர்களை இலக்கு வைக்கின்றனர். இதற்காக இவர்கள் சில உத்திகளையும் கையாள்கின்றனர். இந்த உத்திகள் விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட முடிவுகள் போன்று காணப்படும். இதனால் மாணவர்கள் இலகுவில் போதைபொருள் பாவனைக்குள் சென்றுவிடுகின்றனர். போதைப்பொருள் வியாபாரிகள் வெற்றியும் பெறுகின்றனர். சமீப காலமமாக வடக்கில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு,யாழ்ப்பாண மாவட்டங்களில் போதைப்பொருள் பாவனை தொடர்பில் வெளிவரும் செய்திகள் அதிர்ச்சி தருபவையாகவுள்ளன.

போதைப்பொருள் வியாபாரிகள் நன்கு திட்டமிட்டு, இலக்கு தவறாத வகையில் போதைப்பொருளுக்கு மாணவர்களை அடிமையாக்குகின்றனர். கிளிநொச்சியிலும் அதுவே இடம்பெற்று வருகிறது. கிளிநொச்சி மாவட்டம் வறுமையில் முன்னிலையில் உள்ள, அதிகளவு பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வாழ்கின்ற மாவட்டம். தந்தை அல்லது தாயை இழந்த பிள்ளைகள் கணிசமான அளவில் வாழ்கின்ற மாவட்டம், உள நெருக்கடி மிக்கவர்கள் அதிகமுள்ள மாவட்டம், தொழில் அற்ற இளம் சமூகம் அதிகமுள்ள மாவட்டமும இதுதான், பல குடும்பங்களில் குடும்ப உறவுகள் சீர்குலைந்துள்ளன. எனவே இதுவே போதைப்பொருள் வியாபாரிகளுக்கு தங்களின் வியாபாரத்தை பெருக்குவதற்கான காரணமாக அமைகிறது.

மேற்படி நிலைமைகளில் உள்ள குடும்பங்களை இலக்கு வைத்து போதைப்பொருள் வியாபாரத்திற்கு அவர்களை ஈடுப்படுத்துகின்றனர். இதில் முக்கியமாக தொழில் வாய்ப்பற்ற இளைஞர்களிடம் வருமான ஆசை காட்டி கடின உழைப்பு இன்றி இலட்சங்களில் உழைக்க முடியும் என்றும் குறுகிய காலத்தில் பணக்காரனாக மாறிவிடலாம் என்றும் ஆசை காட்டி அவர்களை போதைப் பொருள் விற்பனையில் வீழ்த்துகின்றனர். முதல்காரியமாக இவர்களை போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக்குகின்றனர். அதிலிருந்து அவர்கள் மீள முடியாத நிலை ஏற்பட்டு போதைப் பொருள் வாங்குவதற்கு பணம் இல்லாத நிலை ஏற்படும் போது பாவனையாளர்களை வியாபாரிகளாக மாற்றுகின்றனர். இதன்போது அவர்களிடம் கூறப்படுவது, விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தில் உனக்குத் தேவையான போதை பொருளையும் வாங்கிக்கொள் என்பதே.




எனவே ஒருவர் அதன் பின்னர் விற்பனையாளராகவும், பாவனையாளராகவும் மாறுவதோடு, அதிக வருமானத்தை உழைக்க புதிய பாவனையாளர்களுக்கு வலை வீசவும் செய்வார்.

இதில் ஆபத்தானது மாணவர்கள் இலக்கு வைக்கப்படும் முறையே. மாணவர்களிடையே நல்ல பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள், விளையாட்டுகளில் சிறப்பாக செயற்படும் மாணவர்கள் ஆகியோரே இலக்கு வைக்கப்படுகின்றனர். இவர்களிடம்,. "குடு( ஹெரோயின்) பாவித்துவிட்டு உயர்தர கணித வகுப்பில் இருந்தால் எந்த கணக்கையும் இலுகுவாக செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். "மூளை எப்பொழுதும் புத்துணர்ச்சியோடு இருப்பதனால் நன்றாக படிக்க முடியும்" என்று வலை வீசுகின்றார்கள். பாடசாலைகளில் இடம்பெறுகின்ற விளையாட்டுகளில் சிறப்பாக செயற்பட முடியும். போன்ற ஆசை வார்த்தைகளை கூறி பாடசாலைகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள், விளையாட்டில் சிறப்பாக செயற்படுகின்ற மாணவர்களை இலக்கு வைக்கின்றனர். இதற்காக மாணவர்களின் குடும்ப பின்னணி கூட ஆராயப்படுகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

### கிளிநொச்சியில் நடந்தது என்ன?

கிளிநொச்சி கடந்த சில நாட்களுக்கு முன் ஒரு சனிக்கிழமை இரண்டு பிரபல பாடசாலைகளை சேர்ந்த கணிதம் மற்றும் உயிரியல் பிரிவில் கற்கும் நான்கு மாணவர்கள் ஒரு தனியார் கல்வி நிலையம் சென்றுள்ளனர். வகுப்பு நிறைவுற்றதும் அதே வீதியில் வைத்து கிளிநொச்சியை சேர்ந்த நபர் ஒருவரிடம் (அவர் கிளிநொச்சி கனகபுரத்தைச் சேர்ந்தவர் என சொல்லப்படுகிறது) 5000 ரூபா பணத்தை கொடுத்து 80 மில்லிக் கிராம் குடுவை (ஹெரோயின்) வாங்கியிருகின்றார்கள். வாங்கியவர்கள் அங்கிருந்து மத்திய ஆரம்ப வித்தியாலய வளாகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டு இன்றுவரை பயன்படுத்தபடாத மலசலக் கூடத்திற்குள் ஒதுங்கியுள்ளனர்.

### விசேட பொலீஸ் பிரிவால் கைது

இந்த நான்கு மாணவர்களும் குறித்த மலசல கூடத்தை அடைந்த சில நிமிடங்களில் கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதிபொலீஸ் மா அதிபரின் விசேட பொலீஸ் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலீஸ் அதிகாரி சத்துரங்க தலைமையில் அவ்விடத்திற்கு பொலீஸார் விரைந்து சென்று 80 மில்லி கிராம் குடுவுடன் மாணவர்களை கைது செய்து கிளிநொச்சி பொலீஸாரிம் ஒப்படைந்தனர். பின்னர் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை அவர்கள் கிளிநொச்சி நீதவான் நீதி மன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

### மாணவர்களின் குடும்ப பின்னணி

கைது செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் 2020 உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள். ஒருவர் 18 வயதும் ஏனையவர்களுக்கு 19 வயதும் ஆகிறது. இவர்களில் ஒரு மாணவனை தவிர ஏனையவர்களின் பெறுபேறுகள் 7ஏ,8ஏ, என காணப்படுகிறது. மற்றவரின் பெறுபேறும் இவ்வாறு இல்லை என்றாலும் நல்ல பெறுபேற்றைக்கொண்ட மாணவர் அவர். அவர் உயிரியல் பிரிவில் கல்வி கற்பவர்.

இந்த மாணவர்களில் ஒருவரின் தந்தை பாடசாலை ஒன்றின் பிரதி அதிபர். தந்தையின் குடும்ப வழி கல்வித்துறையில் மாகாண மட்டத்தில் உயரதிகாரிகள் தொடக்கம் பிரபல ஆசிரியர்கள் வரை கொண்டது. மற்றொரு மாணவனின் தந்தை பிரபல வர்த்தகர், இன்னொரு மாணவனின் தந்தை மலேசியாவில் பணியாற்றுபவர். மற்றமாணவனின் தந்தை கொழும்பில் தொலைக்காட்சி திருத்தும் தொழிநுட்ப பணியில் இருக்கின்றார்.

ஒருவருடைய சகோதரன் யாழ் பல்கலைகழக வவுனியா வளாகத்தில் கல்வி கற்கின்றார். இவ்வாறு நல்ல குடும்ப பின்னணியை கொண்டுள்ளவர்கள்.

இந்த மாணவர்கள் அனைவருமே இயல்பிலேயே கெட்டிக்காரர்கள். வசதி படைத்தவர்கள். அதாவது கையில் காசுப் புழக்கமுள்ள மாணவர்கள் எனவே போதைப்பொருள் வியாபாரிகளின் இலக்கும் இந்த மாணவர்களே.

**மு.தமிழ்ச்செல்வன் ...**

வகுப்பில் இந்த மாணவர்கள் திறமையாக இருப்பதனை காட்டி அது குடு பாவிப்பதன் மூலமே என்ற மாயையை ஏனைய மாணவர்களிடம் ஏற்படுத்தி அவர்களையும் போதைப் பொருள் பானைக்கு அடிமையாக்கிவிடுவதே குடு விற்பனையாளர்களின் உத்தி. இந்த மாயையிலிருந்து மாணவர்கள் வெளிவர முன்னர் அவர்கள் போதைக்கு அடிமையாக்கப்பட்டிருப்பார்கள். அடிமையாக்கப்பட்ட ஒரு மாணவனை பின் அதிலிருந்து மீட்டெடுப்பது மிக மிக கடினமான காரியம். அதன் பின்னர் அவனது கல்வி சீரழிந்து அவனது வாழ்க்கையே பாழாகிவிடும்.

இதன் பின்னர் அவனால் போதை இல்லாம் வாழவே முடியாது என்ற நிலை ஏற்படும். போதைப் பொருளை வாங்குவதற்கு அவனது எந்த எல்லைக்கும் செல்வான். பேற்றோரிடம் தினமும் பணத்திற்காக சண்டையிடுவான். பணம் கிடைக்காத போது களவு. இல்லை எனில் போதைப் பொருள் வியாபாரியாக மாற்றப்படுவான். ஒரு கட்டத்தில் அவன் போதைப் பொருளை நுகர்வதற்கு கொலையும் செய்யுமளவுக்குச் செல்வான். இதுவே இன்று அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. கிளிநொச்சியின் 2015க்கு பின்னரான சூழல் இதற்கு அதிகமதிகம் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

### கிளிநொச்சியில் போதைப் பொருள்

கிளிநொச்சி மாவட்டத்தில் எக்காலத்திலும் இல்லாத அளவுக்கு கஞ்சா,கசிப்பு பாவனை அதிகரித்துள்ளது. கசிப்பு விற்பனையில் ஆண்கள் பெண்கள் தாராளமாக ஈடுபடுகின்றனர். கஞ்சா விற்பனையும் தாரளமாக நடைபெற்று வருகிறது. சிறுவர்கள் பெண்கள் முதல் பெருமளவானவர்கள் இதில் ஈடுப்படுகின்றனர்.

அண்மையில் கிளிநொச்சியில் உள்ள சில பாடசாலைகளில் வைத்தியர்கள் போதைப் பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கை நடாத்திய பின்னர் மாணவர்களிடம் இருந்து பின்னூட்டல்களை எழுத்து மூலம் பெற்றிருந்தனர்.

அதில் பெரும்பாலான மாணவர்கள் தங்கள் தங்கள் பாடசாலைகளின் அருகில் உள்ள பெட்டிக் கடைகளில் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாகவும் சில மாணவர்கள் தங்களின் ஊர்களில் சிலரின் பெயர்களை குறிப்பிட்டு அவர்கள் கஞ்சா விற்பனையில் ஈடுப்படுகின்றனர் என்றும் குறிப்பிட்டிருந்ததோடு சில பெண்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் கஞ்சா விற்பதாகவும் எழுதியிருந்தனர்.

இதனைத் தவிர சில மாணவர்கள் தங்களின் தந்தையின் ஊர்ப் பெயரை குறிப்பிட்டு அங்கு சென்று கஞ்சா வாங்கிப் பயன்படுத்துவதாக எழுதியிருந்தனர். அத்தோடு முக்கியமாக பல மாணவர்கள் தங்களின் சக மாணவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் சிகரட் பிடிப்பதாகவும், ஐஸ் போதை பொருள் பாவிப்பதாகவும், கஞ்சா பாவிப்பதாகவும் எழுதியிருந்தனர். கஞ்சா பாவிப்பதால்தான் தன்னால் நன்றாகப் படிக்க முடிகிறது என தனது நண்பன் கூறியதாக ஒரு மாணவன் எழுதியிருக்கின்றான். இவ்வாறு பல அதிர்ச்சிகரமான தகவல்கைள மாணவர்கள் எழுதிக் கொடுத்திருக்கின்றனர்.

இந்த மாணவர்களின் பின்னூட்டல்களிலிருந்து ஒன்றை மட்டும் தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது. (15ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமான் நினைவுகள் 02



# வேவண்டன் பங்களாவை அருங்காட்சியகமாக மாற்றியிருக்கலாம்

**வே**வண்டன் தோட்டத்தில் வசித்த தொழிலாளர் குடும்பங்கள் அதைத் தமது தோட்டம் போலவே கருதியதோடு தொண்டமான் அவர் சம்பளம் தரும் முதலாளியாக இருந்தாலும் கூட, தமது குடும்பத்தவர் போலக் கருதி அவர் மீது உயிரையே வைத்திருந்தார்கள். தொண்டமான் ஒரு முதலாளி மட்டுமல்ல: ஒரு தொழிற்சங்கத் தலைவரும் கூட. எனவே அவருக்கும் ஒரு முதலாளியாகத் தோட்ட நிர்வாகத்தை இலாப அடிப்படையில் நடத்துவதும் தொழிலாளர் நலன்களுக்காக நிர்வாகங்களுடன் போராடுவதும் இருவேறு துருவங்களாக இருந்ததால் இரண்டுக்கும் இடையே ஒரு சமநிலைபேணுவதில் அவர் சிரமப்பட்டிருக்க வேண்டும்.

முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரான ராஜரட்ணம் இதற்கு ஒரு உதாரணம் சொன்னார். வேவண்டன் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையை தொழிற்சங்க பிரமுகர் என்ற வகையில் நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டிய தருணங்களில் ராஜரட்ணம் தொழிலாளர் பிரதிநிதிகளுடன் அவரை அவரது அலுவலகத்தில் சந்திருக்கிறாராம்.

"தொழிற்சங்கப் பிரதிநிதியாக சௌமிய மூர்த்தியாரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தும்போது அவர் தோட்ட முதலாளி போல் தான் நடந்துகொள்வார். நிர்வாகத்தை விட்டுக்கொடுக்காமல் பேசுவார். தோட்டத்தில் போதிய வருமானம் இல்லை. நஷ்டத்தில் போகிறது. கடுமையாக உழைத்தால்தான் லாபகரமான தோட்டமாக மாற்றலாம். நிலைமை இப்படி இருக்கையி் நீங்கள கேட்பதை எல்லாம் கொடுக்க முடியாது என்று கடுமையான தொனியில் பேசுவார். நாங்களும் திரும்பி வந்துவிடுவோம் ஏமாற்றத்தோடு. ஆனால் பேச்சுவார்த்தையில் அவர் குறித்துக்கொண்ட எமது வேண்டுகோள்களை அவர் படிப்படியாக நிறைவேற்றித் தந்திருப்பதை நாம் அவதானித்திருக்கிறேன். கூரைக்கு புதிய தகரம், தண்ணீர் வசதி, கோவிலுக்கான வசதிகள் என்பனவற்றைக் கேட்டால் திட்டவட்டமாக மறுத்துவிடுவார் ஒரு முதலாளியாக. ஒரு தொழிற்சங்கத் தலைவராக பின்னர் அவற்றை நிறைவேற்றித் தரும் மனிதாபிமானத்தை நான் கண்டிக்கிறேன்" என்கிறார் ராஜரட்ணம்.

எழுபதுகளில் காணி சீர்திருத்தச் சட்டம் வந்ததும் அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவே தனது குடும்பத்துக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை இழந்தனர். பெருந்தோட்டங்கள் அரசினால் சுவீகரிக்கப்பட்டன. பிரிட்டிஷ் கம்பனிகளும், உள்ளூர் பெருந்தோட்ட உரிமையாளர்களும் தமது


அதிபர் செல்வராஜா


ராஜரட்ணம்

தோட்டங்களை இழந்தனர். அவ்வகையில் சௌமியமூர்த்தி தொண்டமானுக்கு சொந்தமடான பெருமளவு காணிகளும் அரசுடைமையாயின. வேவண்டன் பங்களாவையும் அதைச் சுற்றியுள்ள சொற்பமான காணியுமே தற்போது தொண்டமான் குடும்பத்துக்கு சொந்தமாக உள்ளது. தொண்டமானும் தனது பங்குக்கு சுமார் ஐம்பது


தொண்டமான் பிறந்த மூனாபுதூர் பங்களா


ஜெனீவா சென்றிருந்த தொண்டமான் தம்பதியினர்

ஏக்கர் காணியை வேவண்டன் குடும்பங்களிடையே அரை ஏக்கர் என்பதாக பிரித்துக்கொடுத்தார். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவும் கூட தனக்கு சொந்தமான காணியை தன் விசுவாசிகளுக்கு பிரித்துக்கொடுத்தார் எனினும் தொண்டமானுக்கு இதில் ஒரு வருத்தம் இருந்தது. ஏனெனில் பிரித்துக் கொடுக்கப்பட்ட காணித் துண்டுகளை அபிவிருத்தி செய்து சிறுதோட்ட முதலாளியாவதற்கு பதிலாக அவர்களில் சிலர் தமது காணிகளை வெளியாருக்கு விற்று விட்டனராம். தனது தோட்டக் காணக்குள் வெளியார் வந்ததில் தொண்டமானுக்கு அதிருப்தி. இப்படி செய்து விட்டார்களே என வருத்தப்பட்டார். அதன் பின்னர் தோட்டக் காணிகள் தொழிலாளர் வசம் தரப்படுவதாக இருந்தால் அது குத்தகை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்ற முடிவுக்கு அவர் வந்தார் என்கிறார் ராஜரட்ணம். வடக்கிலும் கிழக்கிலும் இருந்து பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு வரும் ஆசிரியர்களிடம் ஒரு அலட்சியவாம் இருக்கிறது என்பதால் அவர்களுக்குப் பதிலாக பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள படித்த இளைஞர்களை ஆசிரியர்களாக நியமித்தால் அவர்கள் இன உணர்வுடன் செயல்பட்டு கல்வித் தரத்தை உயர்த்தத் தோள் கொடுப்பார்கள் என அவர் நினைத்தார். ஆனால் அவர் எதிர்பாரத்த மாதிரி அர்ப்பணிப்புடன் அனைவரும் செயல்படத் தவறியதும் அவரைப் புண்படுத்தி இருந்தது என்று நினைவுபடுத்தி பேசுகிறார் ராஜரட்ணம்.

கூட்டு ஒப்பந்தத்தின் சூத்திரதாரி தொண்டமான் அவர் அதை உருவாக்க முனைந்ததற்குக் காரணம் சம்பளத்தை பேசித் தீர்க்கலாம் என்ற ஒற்றைக் காரணத்துக்காக மட்டுமல்ல: தொழிலாளர்களின் மருத்துவம், சுகாதாரம், வீடமைப்பு, மனித அபிவிருத்தி போன்ற வேறு அம்சங்கள் குறித்தும் பேச முடியும் என்பதற்காகத் தான். தோட்டத்தில் கோவில் அமைக்கப்படுமானால் 25 வீதத்தை தோட்ட நிர்வாகம் தன் பங்காக செலுத்த வேண்டும் என்றும் தரிசு மற்றும் பழைய மலைகளில் வருடத்துக்கு ஐந்து சதவீதமாவது தேயிலைக் கன்றுகளை நாட்டவேண்டும் என்றெல்லாம் தொண்டமான் அந்த ஒப்பந்தத்தில் ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் அவரின் மறைவின் பின்னர் பதவிக்கு வந்த ஆறுமுகன் தொண்டமான் அவற்றை முன்னெடுத்துச் செல்லவுமில்லை. சம்பளத்துக்கு அப்பாற்படட நலன்புரி விடயங்களில் கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கவும் இல்லை. கம்பனிகள் தாம் நினைத்ததையே சாதித்து வந்தன.

"வேவண்டன் தோட்டக் குடும்பங்களிடம ஒரு பழக்கம் இருந்தது" என்று எம்முடன் பேசினார். பாடசாலை அதிபர் செல்வராஜா. ஜனவரியின் புதுவருடம் பிறந்ததும் அக்குடும்பத்தினர் தேதி கலண்டர்களை வாங்கி தேதி கிழிக்காமைலேயே வைத்திருப்பார்கள். பெரும்பாலும் பொங்கல் சமயத்தில் சௌமியமூர்த்தியார் வேவண்டன் வந்து சில நாட்களைக் கழிப்பார். அச்சமயத்தில் அவரிடம் வரும் தோட்டத்து குடும்பஸ்தர்கள் தேதி கிழிக்கப்படாத கலண்டர்களை அவரிடமே தந்து தேதிகளைக் கிழித்துத் தருமாறு கேட்பார்கள். அது ஜனவரி 18ம் திகதியாக இருந்தால் 17 திகதிகளைப் பொறுமையாகக் கிழித்துத் தருவார் தொண்டமான். அந்த அளவுக்கு வேவண்டன் உரிமையாளரும் தொழிலாளர்களும் பாசப்பிணைப்புடன் இருந்தார்கள். அவரின் மறைவின் பின்னணி அந்த உறவில் ஒரு தொய்வு ஏற்பட்டது என்கிறார் வேவண்டன் பாடசாலையின் முன்னாள் அதிபரான செல்வராஜா. (10ஆம் பக்கம் பார்க்க)

**அருள் சத்தியநாதன்...**




# உயிரிலும் சிறந்தது!

**கல்லொளுவை பாரிஸ்**

உயிர் உயிர் உயிர் அதன்
தேவையை நாம்
உண்மையாக எல்லோருமே
உணருவோம்
உயிர் மட்டும் இல்லாவிடில்
அனைத்துமே இங்கு
ஊர் அறிந்த சவங்கள்
ஆக மாறுமே?
ஆதலினால் உயிரை நாம்
மதிக்கிறோம் மிக
அக்கறையாய் உயிரைக்
காக்க முனைகிறோம்
உயிரை விடச் சிறந்ததென்று
வள்ளுவர் வேறு
ஒன்றை அன்றே மிக
அழுத்திச் சொல்லினார்
உண்மையான நல்லொழுக்கம்
ஒன்றுதான் இந்த
உயிரைவிட மிக மிகவும்
உயிர்ந்ததாம்
உண்மையான அந்த நல்ல
ஒழுக்கம், நமக்கு
உலகம் போற்றும் மேன்மை
பெற்றுக் கொடுக்குமாம்!



# விருப்புறும் துன்பம்

**நீ.பி. அருளானந்தம்**



திருமணம் ஆகிய பின்பு
அவள் இந்த வீட்டுக்குள்
முற்றாகவே இப்போது
அடிமை போல ஆகிட்டாள்
வெளியே எங்குமே போய்
புல் வெளிகளை அவள் பார்த்ததில்லை
முற்றத்திலே வளைவான கிளைதனில்
சிவக்கவும் ரோஜா மலர்ந்திருக்கிறது
தினப்படி வாழ்க்கையில்
அந்த ரோஜா மலர்களையும்
பார்த்துப் பார்த்து அவளுக்கும்
மனம் அலுத்து விட்டது
அந்த மலர் தவிர்த்து
முட்களிலே மட்டும் தன்
கையை வைக்கும் பரிச்சயத்திலே
இப்போது அவளுக்கென்று எழுந்தது
அதிகமாகிவிட்ட விருப்பு!
விரல் நுனிதனிலே
அவள் பெறும் முள் முத்தங்கள்
இன்றைய தன் திருமண வாழ்வதன்
துன்பங்களை அவளுக்கு
ஞாபக வேதனைகளாக்குகின்றன
மறுபடி மறுபடி அந்த
முட்களைப் பற்றி பிடிக்க பிடிக்க
அவள் முயன்று கொண்டே நின்றாள்
இந்த வீட்டுக்குள்ளே உருக்கும்
வேதனைகள் எல்லாவற்றையுமே
மனம் சகிக்க பழகிக்கொள்ள



# காலத்தின் கோலம்

**கம்பளையூர் மஞ்சுளா கிருஷ்ணசாமி**

கோடுகள் எல்லாம்
ஓவியங்களாவதில்லை
புள்ளிகள் எல்லாம்
கோலங்களாவதுமில்லை
வெள்ளைத் தாளில்
பல கோடுகள்
கோடுகள் போட்டவன்
அமைதியாய் போட்டானா
ஆலங்கோலமாக்கி விட்டானா
ஏனோ இடையில்
ஓய்ந்தது பேனை
பேனையின் வேகமோ
வெற்றுத்தாளின்
வேதனையோ
நிறைவு காணா
கோடுகள்
மற்றவற்றைப் போல்
ஓவியங்கள்
தனக்கில்லையென
ஏங்கிடவே
பச்சை குத்தினேன்
பல வர்ணங்கள்
சேர்த்தேன்
எச்சமிடாத பல
பறவைகள் வரைந்தேன்
வண்டு மொய்க்காத
காகிதப் பூவையும்
பழங்களையும் வரைந்து
அழகுக்கு அழகு சேர்க்க
அருவியையும் வரைந்து
கரும்புள்ளி வைத்து
திருஷ்டியும் கழித்தேன்
கற்றவையெல்லாம்
கலையாமல் வரைந்ததால்
வெற்றுத்தாள் முற்றுப் பெற்றது
முற்றுப் பெறாத
மனம் மட்டும்....

# எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்...

**கிண்ணியா, ஜெனீரா ஹைருல் அமான்**

பச்சிலைத் தோரணங்களின்
சொந்தக்காரியிவள்...!
ஈரைந்து வருடங்களுக்கும் மேலாக
எமது முன்றலில்
பூவுமின்றி, காயுமின்றி
மலட்டு மரமாய்
கம்பீரமாய் காட்சி தருமிவள்...
ஒவ்வோர் ஆண்டுகளும்
மழை வெள்ளத்துள் மூழ்கி
இலை யுதிர்த்து
மொட்டை மரமாய் நிற்கையில்...
“அற்ப ஆயுசு” என்ற
முணு முணுப்புகளோடு
மரத்தை முற்றாக வெட்டுவோமா...?
விடுவோமா...? எரிச்சலுடன்
மீண்டுமொரு சந்தர்ப்பமளிக்கையில்...
இலை துளிர்த்து – இரு
கன்னிக் காய்களைப் பிரசவித்தது...!
நாளும் பொழுதும்
கண்காணித்து மகிழ்கையில்...
ப(பல)யனில்லா பலாக்காய்
வெம்பி... வெதும்பி..
கீழே வீழ்ந்தது...!

# இல்லாமற் செய்து விடு

**எம்.எச்.ஏ. அப்துல் ஹலீம், ஏறாவூர்**



கொல்லாமற் கொல்லும்
புலமைப் பரிசிலெனும்
பொல்லாத பரீட்சை
இறைவா! இதனை நீ
இல்லாமற் செய்து விடு
ஓய்வொழிச்சலில்லை
உறக்கம், விளையாட்டில்லை
நாய்படாப் பாடுபட்டு
நாளும் வருந்துகிறோம்
பாடசாலை விட்டு
வீடுவந்து சேர்கின்றோம்
பகலுணவு அருந்திய பின்
மாலை நேர வகுப்புகளில்
மாரடித்து மாளுகிறோம்
இரவிலே பெற்றோரும்
இரக்கமின்றி யெம்மை
நடு நிசி வரைக்கும்
நாருரித்துத் தள்ளுகிறார்
உயர் வகுப்பு மாணவரும்
உய்த்தறியா விடயங்களை
குருவி தலையிற் பனங்காய் போற்
குருமாரும் ஏற்றுகிறார்
கல்வியமைச்சுக்குக்
கடிதம் பல எழுதினோம்
பத்திரிகை விமர்சனம்
பத்திகளாய்க் கவிதைகளாய்
எத்தனை முயற்சி செய்தும்
ஏனென்று கேட்பாரில்லை
உத்தமனே! இறைவா! நீ
உன் தீர்ப்பை வழங்கி விடு



# பிரபஞ்சப் பெருந்தகையே!

**கலாபூஷணம் அப்துல் மஜீத் எம். பாறூக் – மருதமுனை**

வையகப் பெரும்பரப்பில் கொரோனா வைரஸ்
வியாதியின் ஆதிக்கம் உச்சநிலை கொண்டதனால்
நோயாளர் எண்ணிக்கையும் உச்சநிலை கொண்டதுவே!
நெஞ்சினிலே நிம்மதியும் இல்லாது போனதுவே!
சீனா தேசத்தில் இவ்வியாதி உருவாகி
சொல்லவொண்ணாத் துயரங்களைக் கடை பரப்பி வருவதனால்
பேனா முனையில் நான் சொல்லுகின்றேன்! தோழர்களே!
புத்தூக்கம் பெறுவதற்கே இப்பாவைப் புனைந்தேனே!
இலங்கை மண்ணிலும்தான் இவ்வியாதி ஓங்கியதால்
இந்து, பௌத்த, இஸ்லாம் கிறிஸ்தவமும்
கலங்கரை விளக்கமான இறை இல்லம் அனைத்துமேதான்
களிப்போடு செயல்பட முடியாது போனதுவே!
பல்கலைக்கழகங்கள் கல்லூரி எல்லாமே
பாடங்கள் பரீட்சைகளை முடமாக்கி விட்டதனால்
கல்வியிலும் தலைநிமிர முடியாத நிலைமைதான்!
கவலைகளே மென்மேலும் பதிவாகிப் போகின்றதே!
முகமூடி, கைகழுவல், இடைவெளியும் பேணுவதால்
முழுமையான பயன்பாடு நிச்சயமாகக் கிடைத்திடுமே!
செகமெல்லாம் அனுபவிக்கும் கொரோனா துன்பமெல்லாம்
சிதைந்து மாண்டுவிட்டால் நிம்மதியே ஓங்கிடுமே!
பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழகங்களில்
பாடங்கள், படிப்புகளில், ஈடுபடும் மாணவரின்
தேடலும், திறமையும் வீண் போகா நிலை வேண்டும்
தேசுநிலை நல்வாழ்வே அனைவருக்கும் தேவையாகும்
வணக்க வழிபாடு இறை இல்லம் யாவுமேதான்
வையகம் எங்கிலும் சீராக இயங்கிடவே
பிணக்குகள் இல்லாது வேரூன்றி மிளிர்ந்திடவே
பிரபஞ்சப் பெருந்தகையே! வல்லவனே வழிகாட்டு!

# மனிதா நீ இருக்கும் வரை

**மு. தருமன் – வட்டக்கொடை**

மழை மகள் கண்திறந்தால்
ஊரெல்லாம் மகிழ்ச்சி பொங்கும்
சூரியன் ஒளி தந்தால் பூமாதா குலுங்கிடுவாள்
நிலவுப் பெண் நிலவு தந்தால் பூ வெல்லாம்
வாசம் தரும்! பயிரெல்லாம் பொலிவு தரும்
உயிர் வாழி உச்சம் பெரும்
மனிதா... உடலில் ஆவி இருக்கும் வரை
நீ! நீரிலும் நடக்கலாம் நீரிலும் மிதக்கலாம்
அந்தோ உடல் மரணப்பட்டபோது
நீ செல்லும் பாதை ஆறடி மண்தான்
சொந்தம் செல்வம் ஏதும் வாரா மயானம்
நீ இருக்கும் வரை உனது நோக்கம்
அறிவு, இலக்கு தூய்மையாய் வாழ நினை
முதல் இருபத்தைந்து வரை மாணவ பருவம்
நன்கு கற்று உலகத்தைத் தெரிந்து கொள்
ஐம்பது வரை மனைவி மக்கள் குடும்பம்
ஏகாந்த வாழ்க்கை எல்லாம் அனுபவி
எழுபத்து ஐந்து வரை ஓய்வு நிலை!!
தூய உணவு உண்டு மகிழ்ச்சியாய் இரு
நூறு வரை தானம் தருமம், ஞானம்
துறவு என ஏகாந்த வாழ்க்கை
இது தான் படைத்தவன் பொறிமுறை

# நாவும் பேனாவும்!

**காத்தான்குடி கலைமதி றபாய்தீன்**

நல்லோரின் நா!
நாளெல்லாம்
நாநயம் பேணும்!
வாழ்வினில்
நம்பிக்கை நாணயம் காணும்!
சொல்வாக்கால்
செல்வாக்குத் தேடும்!
நல்வாக்கால்
நன்மையை நாடும்!
உள்ளுணர்வை
உரத்து அது சொல்லும்!
உள்ளங்களை
உரைகளால் வெல்லும்!
வித்தகனாய்
நாமென்றும் வாழ
தத்துவப் போதனை செய்யும்!
தரணியில் சாதனை செய்யும்!
நாக்கினின்
வாக்குகளை நோக்கு!
உன்னில்
ஆற்றலை அறிவினை ஆக்கு!
மாசுள்ள தன்மைகள் நீக்கு!
மண்மணக்கும் வாழ்வாக
உன் வாழ்வை
என்றும் நீ ஆக்கு!
பேரறிஞர்
கையிலிருக்கும் 'பேனா'!
சிந்தனையை சிறப்புகளை
செதுக்குகின்ற பேனா!
எந்த நிலையிலும் வாழ்வின்
எதார்த்தத்தை
எழுதுகின்ற பேனா!
உள்ளதை உள்ளபடி
எதுவும் உயர்வான
எழுதுகோலே அந்தப் பேனா!
அந்த
எண்ணமும் எழுத்தும்
உன் வாழ்வில்
ஏற்றத்தை மாற்றத்தை காட்டும்!
தலைக்கனமில்லா (த)
இலக்கணமாக வாழ நீ
வழிகளை உனக்கு ஊட்டும்!
"நா'வையும் 'பேனா'வையும்
நீ என்றும் பாரு! – அவை
பேராயுதம் இரண்டும் – கேளு!
'நாவையும் பேனாவையும் பேணு!
நன்மைகளை அவைகளில் காணு!

# யார் தருவார்?

**மாத்தளை ஆர். பாலகிருஷ்ணன்**

கிழக்கு வெளுக்கவில்லை
கீழ்வானம் சிவக்கவில்லை!
வடக்கு வாழவில்லை
வளமும் சேரவில்லை!
தெற்கு தேயவில்லை
தேய்பிறையும் தோன்றவில்லை!
மேற்கு மிளிர வில்லை
ஒளிக்கீற்றும் படரவில்லை!
மலையகம் மலைக்கவில்லை
உழைப்பு கண்டு சளைக்கவில்லை!
உழைப்புக்கேற்ற ஊதியம்
வழங்கத்தான் எவருமில்லை!
ஜீவனுள்ள தலைவர்களாவது
இவர்களது ஜீவனோபாயத்திற்கு
வழி சமைப்பார்களா?
இல்லையேல்..
வாழ்நாள் முழுதும்
வலி சுமந்து
வாழ்வதைத்தவிர
வேறு வழியே கிடையாதா?



# நம்பிக்கை

**அலிறிஸாப், அக்குறணை**

மோசட்சத்தைத்தேடி
பயணிக்கும் ஆத்மா
இறைதியானத்தை
தனதாக்கிக் கொள்ளும் போது
பரிசுத்தம் அடைகிறது
நேசத்தைப் பெற்று
செயல்களில்
காணப்படும் பாவங்கள்
இறைவனிடம் கண்ணீரோடு
பாவ மீட்சிக்காக
சாட்டப்படும் போது
உள்ளமும் உணர்வுகளும்
பரீசிலிக்கப்படுகின்றன
அவன் சன்னிதியில்
மன்னிப்பும் மகா கருணையும்
இறைவன் பால் மட்டுமே
ஊற்றெடுத்துப் பாயும்
ஜீவநதியாக என்றும்
பரிணாமம் பெறுகிறது
அந்த நம்பிக்கையே
மனித உள்ளத்தைப்
பண்படுத்துகிறது
வாழ்க்கையை வாழ
வேண்டுமென
அர்த்தப்படுத்துகிறது!

# மனிதம் நிலைக்க வேண்டும்...

**என். கே. வேணி பலாங்கொடை**

பறவைகள் போல்
விண்ணில் பறக்கவும்
மீன்களைப் போல்
நீரில் நீந்தவும்
கற்றுக்கொண்ட
விஞ்ஞான உலகில்
இன்று விந்தையான
புரட்சி மனிதனாக
வாழும் கலியுக
மனிதன்
சாதி சமயம்
சாஸ்திரம்
மேல் வர்க்கம்
கீழ் வர்க்கம்
என்று ஏற்றத்
தாழ்வு என்று
பேதமை கொண்டு
மனித மகத்துவம்
மறந்து வாழ்வதால்
மனித குலம்
இன்று நவீன
யதார்த்த வாழ்விலும்
இகழ்ச்சியும்
வீழ்ச்சியும்
காண்கிறது
சமூக முன்னேற்றம்
இல்லாமல்

# விதி செய்யுமே சதி



**ஊவா ஹைலன்ட்ஸ் இலங்கேஷ்**

விவேகமுள்ள மனிதா நீ!
விதியை வெல்ல முடியுமானால்
வெற்றி கொள்ள இப் புவியில்
வேறு என்னதான் உண்டோ
நாம் ஒன்று நினைக்கின்றோம்
நடப்பதுவோ வேறொன்று
வேறொன்று நடப்பதுதான்
விதி செய்த சதியாகும்
விதிமட்டும் இல்லையென்றால்
இவ் விஞ்ஞான யுகத்தினிலே
மதி கெட்ட மானிடர்கள்
மற்றவரை வாழ விடார்
ஆணவம் அதிகாரம்
அக்கிரமம் அதிகரிக்கும்
அதனாலே அத்தனையும்
அழிந்து போக நேர்ந்துவிடும்

# நற்றமிழ்க் காதலியே

**கந்தளாய் முஸ்தபா சகாப்தீன்**

கண்ணிறைந்த கற்பனையில்
காற்றுக்கு ஒரு அழைப்பு – என்
எண்ணக் கணைகளை
எடுத்துச் செல்ல உதவுவாயோ?
பூவோடு வாசனையும் சேர்த்து
புது ரசனை குழைத் தெடுத்து
அழகு தமிழ்க் காதலிக்கு
அன்பான ஒரு கடிதம்
ஏடாகவும் எழுத்தாகவும்
அழுத்தமாகவும் அர்த்தமாகவும்
இலக்கியமாகவும் இசையாகவும்
கலக்கமற்ற எண்ணங்களை
கருணையாகத்தந்த –என்
அன்புத் தமிழ்க் காதலியே
நட்போடு நாவினிக்க – என்
நப்பாசைகளைச் சீராக்கி
பொற்றமிழாய் மனம் நிறைத்து
புது நிறைவைக் காட்டித்தந்த
அருமைத் தமிழ்க் காதலிலே
அருமை நிறைந்தவளே!
பிறப்பிலே தொட்டு என்னைப்
பெரயவனாக்கிய வரையில்
கண்ணியமாய்க் காத்தவளே
மொழி மரபால் மூழ்கவைத்து
மூர்க்கம் தவிர்த்தவளே
முத்தமிழாய் முத்தமிட்டு
முகமலர்ச்சி தந்தவளே – உனக்கு
முழு வாழ்க்கைத் தருவதற்கே
காற்றை வரவழைத்தேன்
கடமை ஏற்பாயோ மகிழ்வாயோ?

## அம்பை/விஷ்ணு மத்தூர்...

29ஆம் பக்கத் தொடர்

முதுகலை மாணி, கலாநிதிப்பட்டங்கள் பெற்றிருந்த அம்பை, சுராஜ் புரோஹிம் நெறிப்படுத்திய 'பின்தான்' என்ற படத்திற்கு மற்றைய ஒருவருடன் சேர்ந்து திரைக்கதை வசன மெழுதியுள்ளார். 'பார்க்கும் கண்ணாடி ஊடே' என்ற கதைசாரா விவரணப் படத்திற்கு திரைக்கதையையும், பேச்சுரையையும் அவர் எழுதியுள்ளார். "பறக்கும் பறவை" என்ற கதைசாரா விவரணப் படத்துக்கான பிரதியைத தானே எழுதி அப்படத்தைத் தயாரித்துமிருக்கிறார்.

தமிழ்ப் பெண் ஒருவரின் பலவித கோணங்களை கொண்டுள்ள அம்பை, ஆய்வறிவுள்ள, படித்த, பெண்ணியச் சிந்தனை கொண்ட ஒருவராகவே தென்பட்டார்.

எந்தவித பந்தாவோ, ஆடம்பரமோ இல்லாத, பழகுவதற்கு இனிமையான ஓர் எழுத்தாளர் அவர். விஷ்ணு – லக்ஷ்மி தெய்வங்களின் பெயர் போல, நல்லதோர் தம்பதிகள்.

அவர் தமிழ்நாட்டில் பிறந்து, அண்டை மாநில பெங்களூரில் வளர்ந்து, மும்பாயில் குடியேறியவர். தமிழ்நாட்டுப் பெண்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டவர். முகக் கவசத்தின் பின்னால் உள்ள முகங்கள் என்ற இவரது நூலையும் நான் ஆங்கிலத்தில் திறனாய்வு செய்துள்ளேன். 'தமிழ்நாட்டுப் பெண்கள் பற்றிய சித்திரங்கள் அடங்கிய சமூகவரலாறு' என்ற நூலை எழுதுவதில் அவர் 1987இல் ஈடுபட்டிருந்தார். அப்பொழுது அவருடைய சிறுகதைத் தொகுப்புகள் இரண்டு வெளியாகியிருந்தன. 'சிறகுகள் முறியும்' . 'வீட்டின் மூலையில் ஒரு சமையல் அறை' என்ற இருதொகுதிகளும், அவை எழுதும் முறையினாலும் இலக்கியத் திறனாய்வாளர்களின் கவனத்தைப் பெற்றமை அவர் காட்டும் வெளிப்பாடுகள் மூலம் இந்திய, குறிப்பாகத் தமிழகப் பெண்கள் பற்றிய உண்மைத் தோற்றங்களை நாம் இனம் கண்டு கொள்ள முடிந்தது. அம்பை, தமிழில் எத்தகைய எழுத்தாளராக ஜொலித்தாரோ, அதேயளவு ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் சரளமாகப் பேசக் கூடியவர். அந்தணர் குடும்பத்தில் பிறந்த இவருக்கு கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளும் தெரியும்.

இந்திய திரைப்பட/ தொலைக்காட்சி நிறுவனம், தேசிய புராதனப் படங்களின் களஞ்சிய சாலை ஆகியன வழங்கிய சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். *"Wanted thamgerg'* என்ற படத்திற்கு கதை வசனங்களை எழுதியதுடன், "ஏழாவது மனிதன்' (ஹரிகரன் நெறிப்படுத்தியது) படத்தின் நெறியாள்கைக்கும் உதவியுள்ளார்.

நான் பூனே திரைப்படக் கல்லூரியில் திரைப்பட ரசனைப் பெறுவதற்காக அனுப்பிய விண்ணப்பத்தை அவர் மூலமாகவே இங்கேயிருந்து சமர்ப்பித்திருந்தேன். அவர்களுடைய வீட்டில் இட்லி, உப்புமா போன்றவற்றைச் சாப்பிட்டதும், அவருடன் கடுகதி ரயில் வண்டியில், மும்பாயிலிருந்து பெங்களூரு சென்றதும் ஞாபகமாய் இருக்கிறது.

அவர் கொழும்புக்கு வந்திருந்த சமயம், நான் இலங்கையில் இல்லாததனால், அவரைச் சந்திக்க முடியவில்லை.

இப்பொழுது "காலச்சுவடு" போன்ற ஏடுகளில் எழுதிவரும் கதைகளையும், கட்டுரைகளையும் சிலவேளை படிக்கச் கூடியதாய்இருக்கிறது.

*"Sparrows"* என்றதோர் நிறுவனத்தையும் அவர் நடத்தி வருகிறார்.

## போதைப்பொருள் வியாபாரிகளால்...

**(13ஆம் பக்கத் தொடர்)**

தற்போது மாணவர்களிடம் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது என்பதே அந்த அதிர்ச்சியான செய்தி. எனவே கிளிநொச்சி மாவட்ட நலனில் அக்கறையுள்ளவர்கள் பல்துறை சார்ந்து ஒன்றிணைந்து ஒரு விரைவான செயற்திட்டத்தை இதற்கு எதிராக நடைமுறைப்படுத்த வேண்டும். தவறினால் கடைநிலையில் இருக்கப்போவது மாவட்ட கல்வி மட்டுமல்ல, கிளிநொச்சி மக்களும்தான்.


கிளிநொச்சியில் போதைப்பொருளை கட்டுப்படுத்த வேண்டியவர்களே காட்டும் அக்கறையின்மையும், போதைப்பொருள் வியாபாரிகளுடன் அவர்களுக்கு இருக்கும் உறவுமே இன்று அதிகரித்த போதைப்பொருள் பாவனைக்கான காரணமாக அமைந்துள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு அரசியல்வாதிகள் முதல் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றவர்கள் வரை இருக்கின்ற செல்வாக்கும் ஒரு பிரதான காரணமாக அமைந்திருகிறது.

பில்ப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதி ரொட்ரிகோ துதெர்த்தே பதவியேற்ற பின்னர் நாட்டை போதைப்பொருள் அற்ற நாடாக மாற்றுவதற்கு சுமார் 27 ஆயிரம் பேரை தெருத் தெருவாக சுட்டுத் தள்ளினார். அவ்வாறான கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் மாத்திரமே இலங்கையை போதையற்ற நாடாக மாற்ற முடியும் என்று கூறுவது தவறான கண்ணோட்டமாக இருக்கலாம். ஆனால் அதைத் தவிர வேறு வழியே கிடையாது என்று மக்கள் கருதும் அளவுக்கு அதிகாரிகள் இவ்விடயத்தில் மெத்தனமாக இருந்துவிடக்கூடாது.

பேன்க்ஷோல் வீதி, இல.128 இலுள்ள **வியாபாரஸ்தலம் விற்பனைக்காக உள்ளது.** ஆர்வங்காட்டும் தரப்பினர் **0112348950** உடன் தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள்: **0112348950.**

வாழ்வை மீண்டும் வளமாக்குங்கள்
www.neptunehealth.lk

# உள்நோயாளர் மருத்துவ சேவைகள்



மனநல ஆரோக்கிய சிகிச்சைகள் உட்பட மன அழுத்தம், போதைபொருள் பாவனைக்கு அடிமையாதல், Bipolar Disorder, உக்கிரமான நடத்தையுடைய நோயாளிகள்

30ற்கும் மேற்பட்ட **முன்னணி மருத்துவர்களால்** மும்மொழியிலும் சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.

NO. 186, PARK ROAD, Narahenpita.
Tel: 0720 239 747 / 0720 222 555 / 0112 590200
NEPTUNE HEALTH BE KIND TO YOURSELF

**இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு**

## ஆர்வ வெளிப்பாடுகளுக்கான கோரிக்கை

### ஒழுங்குறுத்துகை தாக்கம் குறித்த பகுப்பாய்விற்கான வழிகாட்டுதல்களை வகுத்தல்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இந்த அறிவித்தல் மூலம் தகுதி வாய்ந்த துறைசார் ஆர்வலர்களிடமிருந்து ஒழுங்குறுத்துகை தாக்கம் குறித்த பகுப்பாய்விற்கான வழிகாட்டுதல்களை வகுத்தல்.

அத்தகைய இடையீட்டுக்கு முன்னர் ஒழுங்கு முறை இடை தாக்கத்தை பகுப்பாய்வு செய்வதோடு, நடைமுறையை செயற்படுத்த ஆணைக்குழுவுக்கு உதவவும், ஆர்வ வெளிப்பாட்டு கோரிக்கைகளை கோருகின்றது.

குறித்த ஆர்வ வெளிப்பாடுகளுக்கான கோரிக்கையை சமர்ப்பிக்க தேவையான வழிகாட்டுதல்களை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் www.pucsl.gov.lk எனும் இணையதளத்தில் காணலாம்.

ஆர்வ வெளிப்பாட்டு கோரிக்கைகளை 2020.09.21ஆம் திகதி மாலை 3.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகை நிபுணர் குழு,**
**இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு**
**6-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,**
**28, புனித மைக்கல்ஸ் வீதி,**
**கொழும்பு 03.**

**தொலைபேசி: (011) 2392608/7 பெக்ஸ்: (011)2392641**
**மின்னஞ்சல்: regulate@pucsl.gov.lk**
**இந்த மின்னஞ்சலுக்கும் பிரதியை அனுப்பவும்:**
**pucsl.regulate@gmail.com**
**திகதி: 2020.09.06**

# கேள்வி அறிவித்தல்

# வாகனம் சர்விஸ் செய்தல் – 2021ம் வருடம்

# இலங்கைத் தரைப்படை

தரைப்படைக்குச் சொந்தமான வாகனங்களை 2021ஆம் வருடத்தினுள் கடன் அடிப்படையில் சர்விஸ் செய்வதற்கான விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

**நிபந்தனைகள் :**

1. தரைப்படை வாகனங்களை 2021 ஜனவரி மாதம் 01ஆம் திகதியிலிருந்து 2021 டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சர்விஸ் செய்வதற்காகவாகும். இதற்காக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2021 முழு வருடத்திற்கும் செல்லுபடியாதல் வேண்டும். சமர்ப்பிக்கப்படுகின்ற இக்கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மாற்ற முடியாது.
2. **2002 14ஆம் இலக்க வெட் வரிச் சட்டம் மற்றும் 2002.09.30ஆம் திகதி 364(3) இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு ஏற்ப வற் வரியின் கீழ் பதிவாகியிருப்பின் பதிவு இலக்கமும் மற்றும் உங்கள் நிறுவனம் தற்பொழுது செயற்பாட்டு நிலையிலுள்ள வரி செலுத்துபவர் என்பதை உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடம் பெற்றுக்கொண்ட கடிதத்தையும், வற் வரிக்காக பதிவாகியில்லாதிருப்பின் அதற்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் சான்றிதழொன்றைப் பெற்று கேள்விப் பத்திரத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.**
3. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது குறித்த அதிகார பிரதேசத்திலுள்ள சேவை நிலையங்கள் பொருட்டு கீழ்க்கண்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

**விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடங்கள்:**

(அ) தவிசாளர், திணைக்கள பெறுகைக்குழு, தரைப்படை முகாம், இல. 167/30, அவிசாவளை வீதி, ஒருகொடவத்த. - பாரிய கொழும்பு அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

(ஆ) தவிசாளர், பிராந்திய பெறுகைக்குழு, பாதுகாப்புப் படை தலைமையகம், (யாழ்ப்பாணம்), தரைப்படை முகாம், பலாலி - யாழ்ப்பாண மாவட்ட அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

(இ) தவிசாளர், பிராந்திய பெறுகைக்குழு, பாதுகாப்புப் படை தலைமையகம், (வன்னி), தரைப்படை முகாம், வவுனியா. - அனுராதபுரம், வவுனியா, மன்னார் மற்றும் புத்தளம் மாவட்ட அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

(ஈ) தவிசாளர், பிராந்திய பெறுகைக்குழு, பாதுகாப்புப் படை தலைமையகம், (கிழக்கு) தரைப்படை முகாம், வெலிகந்த. - பொலன்னறுவை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்ட அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

(உ) தவிசாளர், பிராந்திய பெறுகைக்குழு, பாதுகாப்புப் படை தலைமையகம், (கிளிநொச்சி), தரைப்படை முகாம், கிளிநொச்சி - கிளிநொச்சி மாவட்ட அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

ஊ) தவிசாளர், பிராந்திய பெறுகைக்குழு, பாதுகாப்புப் படை தலைமையகம், (முல்லைத்தீவு), தரைப்படை முகாம், நந்திக்கடல், முல்லைத்தீவு - முல்லைத்தீவு மாவட்ட அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

(எ) தவிசாளர், பிராந்திய பெறுகைக்குழு, பாதுகாப்புப் படை தலைமையகம், (மேற்கு) தரைப்படை குடியேற்றம், பனாகொட, ஹோமாகம. - கொழும்பு (பாரிய கொழும்பு பொருளாதார அதிகாரப் பிரதேசம் தவிர) கேகாலை, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, புத்தளம் மற்றும் குருநாகலை மாவட்ட அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

(ஏ) தவிசாளர், பிராந்திய பெறுகைக்குழு, பாதுகாப்புப் படை தலைமையகம், (மத்திய) தரைப்படை முகாம், தியத்தலாவ. - கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, நுவரெலியா மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்ட அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

4. வாகன மாதிரிகளுக்கு அமைவாக ஒவ்வொரு வகையான சேவைக்கும் செலவாகின்ற கட்டணம் வற் இன்றி மற்றும் வற் கட்டணத்தை வெவ்வேறாக கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தனியாகக் குறிப்பிடல் வேண்டும்.

உ+ம் :

| வாகன மாதிரி | சர்விஸ் செய்தல் | | ஒயில் பில்டர் மாற்றுதல் | | எஞ்சின் ஒயில் மாற்றுதல் (முழுமையாக) | |
|---|---|---|---|---|---|---|
| | வற் இன்றி கட்டணம் | 8% வற் கட்டணம் | வற் இன்றி கட்டணம் | 8% வற் கட்டணம் | வற் இன்றி கட்டணம் | 8% வற் கட்டணம் |
| டொயோட்டா ஹைலக்ஸ் 4x2 டபள் கெப் | 1500.00 | 120.00 | 2500.00 | 200.00 | 4500.00 | 360.00 |

5. கேள்விப் பத்திரத்தைச் சுரண்டி அல்லது அழிக்கும் திரவம் கொண்டு செய்து திருத்தம் செய்யப்பட்ட விலைமனுக்கள் கேள்விச் சபையினால் நிராகரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களில் கேள்விதாரரின் கையொப்பம் மற்றும் உத்தியோக முத்திரை கட்டாயமாக இடல் வேண்டும்.
7. மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்விஸ் சரியான முறையில் நிறைவேற்றப்படுவதற்குத் தேவையான வசதிகளை உங்கள் நிறுவனம் கொண்டிருத்தல் வேண்டும்.
8. **சர்விஸின் இறுதியில் இராணுவப் பிரதிநிதியொருவரால் பரீட்சிக்கப்படும். மேலும் சர்விஸ் சரியான முறையில் பூர்த்தி செய்யப்படாதது உறுதிப்படுத்தப்படின் குறித்த சர்விஸ் மீண்டும் இலவசமாக செய்து கொடுக்கப்படல் வேண்டும்.**
9. தொடர்ந்தும் உமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் சர்விஸ்கள் திருப்தியற்றதாயின் உமது நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட கேள்வி இரத்துச் செய்யப்படும்.
10. கேள்விதாரரினால் வாரத்தின் எந்தவொரு நாளிலும் இராணுவ வாகனங்களை சர்விஸ் செய்வதற்கு இணங்குதல் வேண்டும்.
11. கேள்விதாரர் விலைப் பற்றுச்சீட்டை (Bill) வழங்கிய நாள் முதல் 03 மாத காலத்திற்கு தரைப்படைக்கு கடன் அடிப்படையில் சேவைகளை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
12. உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளின் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின் எங்களால் வழங்கப்படும் வேலை ஆணையில் குறிப்பிட்ட சேவை செய்துதரப்படல் வேண்டும். இதற்கு மேலதிகமாக உங்களால் சமர்ப்பிக்கப்படும் மேலதிக மதிப்பீட்டுக்காக எவ்விதக் கட்டணமும் செலுத்தப்படமாட்டாது என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
13. விலைமனுப் பத்திரம் சமர்ப்பிக்கும் போது தேவையான விலைமனுப் பத்திரம் மற்றும் கேள்விதாரரின் விபரம் தரைப்படை இணையத்தளத்தில் அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை மின்னியல் மற்றும் இயந்திரப் பொறியியலாளர் படையணியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(அ) தரைப்படை இணையத்தளம் **www.army.lk/tenders.php**

(ஆ) படைத் தளபதி, இலங்கை மின்னியல் மற்றும் இயந்திரப் பொறியியலாளர், அடிப்படை வேலைத்தளம், பர்ஸன் வீதி, கொழும்பு-02.
தொலைபேசி இலக்கம் : 0112-436477
பெக்ஸ் 0112-436477
} பாரிய கொழும்பு அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

(இ) கட்டளை அதிகாரி, படையணி 1, இலங்கை மின்னியல் மற்றும் இயந்திரப் பொறியியலாளர், தரைப்படை முகாம், பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி இலக்கம் : 0112-855463, பெக்ஸ் 0112-855463
} கொழும்பு (பாரிய கொழும்பு பொருளாதார அதிகாரப் பிரதேசம் தவிர) கேகாலை, கம்பஹா, குருநாகலை, இரத்தினபுரி, காலி, மாத்தறை, புத்தளம் மாவட்ட அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

(ஈ) கட்டளை அதிகாரி, படையணி 3, இலங்கை மின்னியல் மற்றும் இயந்திரப் பொறியியலாளர், தரைப்படை முகாம், மகசென்புர, மின்னேரிய.
தொலைபேசி இலக்கம் : 027-2247322, பெக்ஸ் 027-2247322
} மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை, திருகோணமலை மாவட்ட அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

(உ) கட்டளை அதிகாரி, படையணி 4, இலங்கை மின்னியல் மற்றும் இயந்திரப் பொறியியலாளர், தரைப்படை முகாம், காங்கேசன்துறை.
தொலைபேசி இலக்கம் : 021-3213036, 021-3212937 பெக்ஸ் 021-3215177
} யாழ்ப்பாண மாவட்ட அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

(ஊ) கட்டளை அதிகாரி, படையணி 5, இலங்கை மின்னியல் மற்றும் இயந்திரப் பொறியியலாளர், தரைப்படை முகாம், சாலியபுர, அநுராதபுரம்.
தொலைபேசி இலக்கம் : 025-2220935, பெக்ஸ் 025-2222898
} அநுராதபுரம், வவுனியா, மன்னார், புத்தளம் மாவட்ட அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

(எ) கட்டளை அதிகாரி, படையணி 6, இலங்கை மின்னியல் மற்றும் இயந்திரப் பொறியியலாளர், தரைப்படை முகாம், முல்லைத்தீவு
தொலைபேசி இலக்கம் : 024-3244673
} முல்லைத்தீவு மாவட்ட அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

(ஏ) கட்டளை அதிகாரி, படையணி 7, இலங்கை மின்னியல் மற்றும் இயந்திரப் பொறியியலாளர், தரைப்படை முகாம், கிளிநொச்சி
தொலைபேசி இலக்கம் : 025-3242790
} கிளிநொச்சி மாவட்ட அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

(ஐ) கட்டளை அதிகாரி, 2 (V) படையணி, இலங்கை மின்னியல் மற்றும் இயந்திரப் பொறியியலாளர், தரைப்படை முகாம், உடவெவ, கஹகொல்ல, தியத்தலாவ. தொலைபேசி: 057-2224633
} கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, நுவரெலியா அம்பாந்தோட்டை மாவட்ட அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சர்விஸ் நிலையங்கள்.

14. மேலதிக விபரங்களுக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர, தரைப்படைத் தலைமையகம், மின்னியல் மற்றும் இயந்திரவியல் பொறியியல் பணிப்பாளர் சபை, பதவிநிலை அதிகாரி 1 அவர்களைத் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. 011 3133154.
15. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதிகள் சகிதம் 03 பிரதிகளில் முத்திரைக்குறி பொறித்து சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், 2020 ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்பு 03ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட இடங்களில் உள்ள கேள்விப் பெட்டிகளில் உள்ளிடல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **''தரைப்படை வாகனங்களை சர்விஸ் செய்தல் - வருடம் 2021''** எனக் குறிப்பிட்டு சர்விஸ் நிலையத்தின் உத்தியோகபூர்வ முத்திரையைப் பதித்தல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும். மேலும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

**தரைப்படைத் தளபதி - இலங்கைத் தரைப்படை**

**கேள்விதாரரின் விபரங்கள்**

(சேர்விஸ் நிலையத்தின் பெயர் மற்றும் முகவரி)
.....................................................
.....................................................
.....................................................
தொலைபேசி இல.
2020 / / ம் திகதி

தலைவர் - கேள்விச் சபை,
.............................................
.............................................
.............................................

**வாகனங்கள் சேர்விஸ் செய்வதற்கான விலைமனுக்களை முன்வைத்தல் ...................... பிரதேசம் 2021ம் வருடம்**

1. கேள்விதாரரின் பெயர்: ................................................................
2. தேசிய அடையாள அட்டை இலக்கம்:........................................
3. முகவரி: ........................................................................
4. சேர்விஸ் நிலையத்தின் வர்த்தகப் பெயர்: ...................................
5. எனது சேர்விஸ் நிலையம் அமைந்துள்ள இடம்: ..........................
(மாநகரசபை / நகரசபை / பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில்)
6. தொலைபேசி இலக்கம்:............... 7. தொலைநகல் இல...........
8. வியாபாரமொன்றாகப் பதிவு செய்யப்பட்டிருப்பின் பதிவு இலக்கம்:.
9. வெட் பதிவு இலக்கம்:...........................................................
(வெட் வரியின் பொருட்டு பதிவு செய்யப்பட்டிருக்காவிட்டால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ்)
10. எனது சேர்விஸ் நிறுவனத்திலிருந்து அதிகாரபூர்வ முகாம் அமைந்துள்ள இடத்திற்கான தூரம்: ..................................................
11. நீங்கள் வழங்குநராக அரச பாதுகாப்பு அமைச்சில் பதிவு பெறப்பட்டுள்ளீரா?
ஆம் / இல்லை: ...............................................................
பதிவு செய்யப்பட்டிருப்பின் பதிவு இலக்கம்:..................................
12. நிறுவனத்தில் உள்ள வாகனத் தூக்கியின் அளவு மற்றும் கொள்ளளவு:
13. ஒரு நாளைக்கு சேர்விஸ் செய்ய இயலுமான மொத்த வாகனங்களின் எண்ணிக்கை:
கனரக வாகனம்............................ இலகுரக வாகனம்............................
14. ஒரு நாளைக்கு சேர்விஸ் செய்ய இயலுமான தரைப்படை வாகனங்களின் எண்ணிக்கை: ..................................................
கனரக வாகனம்............................ இலகுரக வாகனம்:............................
15. உமது நிறுவனத்தில் சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை:.................
16. இந்த விண்ணப்பத்துடன் தரப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்துப் பார்த்துள்ளதுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குவதற்கு இத்தால் ஒப்புக்கொள்வதாகவும் மேலும் ............................................. அதிகாரப் பிரதேசத்தின் தரைப்படை முகாம்களுக்கு உரிய பின்வரும் மாதிரியிலான தரைப்படை வாகனங்களை 2021-01-01 முதல் 2021-12-31ம் திகதி வரை சேர்விஸ் செய்யும் பொருட்டு சமர்ப்பிக்கப்படும் விலைகள் கீழே தரப்பட்டுள்ளதுடன் இவ்விலைகள் எக்காரணம் கொண்டும் குறித்த வருடத்தில் திருத்தம் செய்யப்படமாட்டாது என்பதுடன் கடன் அடிப்படையில் வாகனங்களை சேர்விஸ் செய்வதற்கான விருப்பத்தை இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

**2020/ / ம் திகதி**

**கையொப்பம்: ......................................................**
**கேள்விதாரரின் பெயர்: ............................................**
**உத்தியோகபூர்வ முத்திரை:.......................................**

# வாரமஞ்சரி சிறு விளம்பரம்

## வர்த்தகம்

### 208 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு/குத்தகைக்கு

கொழும்பு05, சித்ரா லேனில் அமைந்துள்ள கட்டிடத்தின் 1ஆம் மற்றும் 2ஆம் மாடிகளிலுள்ள 550 சதுர அடி மற்றும் 270 சதுர அடி அலுவலக வளவுகள் வாடகைக்கு/ குத்தகைக்கு. தொடர்பு 0717000668/ 0777900668. 052013

**Repeat Your ad For Better Offers**

## வேலைவாய்ப்பு

### 303 உயர்தொழில்துறையாளரின் ஆலோசனை பொதுவான சேவைகள்

ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் வீட்டு நிர்வாக சேவையில் ஈடுபட்ட ஊழியர்கள் உங்களது வீட்டிற்கு அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து சுத்திகரிப்புச் செய்து தருவார்கள். ரெயின்போ கிளீனிங் சேர்விஸ். 0776929367. 052262

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

கொழும்பு புறநகர் பகுதியிலுள்ள ஒரு முன்னணி நிறுவனம் சந்தைப்படுத்தும் அலுவலர்களைச் சேர்த்துக்கொள்கின்றது. அடிப்படைச் சம்பளம், கமிஷன், வாகனம், மருத்துவ வசதி உண்டு. அ ழையுங்கள் 07739 2 8246, 0716226578, 07776 9 7622, 0718144320, 07148 9 5429, 0114201539 046122

மசாலா பொருட்களை விநியோகிக்க விநியோகஸ்தர்கள் தே வை . கொழும்பு (வடக்கு, தெ ற்கு , கிழக்கு, மேற்கு) கம்பஹா , களுத்துறை தேவைகள் வங்கி உத்தரவாதம், கிடங்கு வசதி, வாகனம். விநி யோகத்திற்கு தொடர்பு கொள்ள வு ம். கெக்ட் இம்பெக்ஸ் 0759293113/ 0759131653 051651

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

வீடொன்றில் தங்கி வேலை செய்வதற்கு, உணவு தயாரிப்பத ற்கு வீட்டை சுத்திகரிப்பதற்கு பெண் தேவை. 0717268835. 050913

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

மாலபே நகரில் உணவகம் ஒன்றிற்கு அனுபவமுள்ள கொத்து, அப்பம், சோடீஸ் பாஸ்மா ர் உடனடியாகத் தேவை. 077396 2982. 052157

### 325 தொழில்துறை பொது

தனியார் பாதுகாப்பு சேவையில் சேவையாற்ற கொழும்பு மற்றும் அதன் புற நகர் பகுதிகளில் பல வெற்றிடங்கள். தேசிய அடையாள அட்டையுடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள் (நாட்டின் எந்தப் பிரதேசத்தவர்களுக்கும் வாய்ப்பு) சம்பளம் ரூ.48000.00 முதல் 54000.00 வரை. தொடர்புகள் 0774005582, 0760240216, 0702222726 . 051203

பிலியந்தலை ஹாட்வெயார் ஒன்றிற்கு வெளி வேலைக்கு உதவியா ளர் தேவை. தங்குமிடம் உண்டு. அழையுங்கள் 0778304860. 051865

பு திதாக ஆரம்பிக்கப்படும் foot SPA ஒன்றிற்கு மாத்திரம் விரும்பும் 2040 வயதிற்கிடைப்பட்ட பெண் பிள்ளைகள் அழையுங்கள். 0779473276. 051729

புத்தகக் கடையொன்றிற்கு விற்பனை உதவியாளர்கள் (ஆண்/ பெண்) தேவை. தங்குமிட வசதியும் உண்டு. அழையுங்கள் 0717000668/ 0777900668. 052018

ஷொப்பிங் பேக் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு பேக் கட்டிங் ஒப்பரேட்டர் தேவை. சேர்பெக் இன்டஸ் ரீஸ், இல. 9, 3ஆம் லேன், மாளிகாவ வீதி , ரத்மலானை. 07730 30 558, 0112625634. 052091

## பொது

### 427 டியூஷன்

தனிப்பட்ட வகுப்புக்கள் கிருலப்பனையில் LOCAL சிலபஸ் கணிதம் விஞ்ஞானம் லண்டன் சிலபஸ் கணிதம் இரசாயனம், உயிரியல் O/L வரை வசதிக்கேற்ப நேரங்கள். 0772945268. 048414

A/ L SFT (தொழி ல்நுட்பம்), பௌதிகவியல், இரசாயனவியல், O/L கணிதம், விஞ்ஞானம், Theory/ Revision பருவப் ப ரீட்சைகளில் குறைவான புள்ளிகளைப் பெறுவோருக்கு விசேடமானது. 500 Organic, Conversions மிக இலகுவான 15charts மூலம் தீர்க்கப்படும். கொழும்பு, கண்டி, மாத்தறை, க ம்பஹா, நீ ர்கொழும்பு, ஹொரணை, காலி. ரொஷான் 0771827376. 051867

### 431 நானாவிதப் பொருட்கள் விற்பனைக்கு

அனுமதி விற்பனை! பின்வரும் பொருட்கள் உடனடி விற்பனைக்கு உள்ளன. கேன்வாஸ் கூடார ங்கள், லக்கேப்ஸ், 555 மிலி உணவு ஜாடிகள் , கிரவுன் கார்க்ஸ் (வெள் ளை ) ரப்பர் பெல்ட்கள் (தேயிலை இயந்திர ங்களுக்கு) தொடர்புக்கு Kect Impex 0759293113/ 0759131653. 051649

## சொந்த விடயம்

### 528 தங்குமிட வசதிகள்

தெஹிவ ளை நகரிற்கு அருகில் பெயார்லைன் வீதியில் இணைந்த குளியலறையுடன் மேல் மாடியில் அறை வாடகைக்கு. 12, 000/ =. உட்பிரவேசம் வெளிப் பு றமாக. 0777348764. 052042

## காணி/தோட்டம்

### 601 சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் விற்பனைக்கு

பொல்கொடை/ பாணந்துறை ஆற்றங் கரை யோரமாக 36 பேர்ச் விஸ்தீரண காணியிலுள்ள 2 படுக்கையறைகள் கொண்ட ஆடம்பர வீடு உடன் விற்பனைக்கு. 55 மில்லியன். முதன்மையாளர்கள் மாத்திரம். 0760807798. 050450

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கடுவலை நகரிற்கு 500M தூரத்தில் 177 பஸ் பாதைக்கு 300மீ தூரத்தில் 25 பேர்ச் காணி விற்பனைக்கு. இரு பக்கமும் பாதைகள் உண்டு. 0771197492. 052112

கல்கிஸ்ஸ (PizzaHUT) சமீபமாக 8.5 பர்ச்சுக் காணி விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம். சஞ்ஜீவ 0765792187, 0703316529. 050469

கொட்டாவ, சித்தமுல்ல 19.5 பேர்ச் சி றந்த காணி மற்றும் வீடு உடன் விற்பனைக்கு. 0710432187. 052145

பன் னி ப்பிட்டியில் பொரளை வீதிக்கு 300M 24 பேர்ச் சிக்கலற்ற வெற்றுக் காணி விற்பனைக்கு. அல்லது வாகனத்துடன் மாற்றிக் கொள்வதற்கு. 0715666868, 0755300335. 052260

பொரலஸ்கமுவ 25 வருடங்கள் பழைமையான வீட்டுடன் 9.25 பேர்ச்சு முக்கோண வடிவிலான காணி. 11 அடி பாதை (ஒரே சமயத்தில் ஒரு வாகனம்) அமைதியான பிரதேசம். சிக்கலற்ற உறுதி. உரிமையாளர் இடம்பெயறுகிறார். சந்திக்கு 600 மீற்றர்கள். தெஹிவளை 119 பஸ் வீதிக்கு 200 மீற்றர்கள். 3 படுக்கையறைகள் + 1 குளியலறை, அமரும் அறை, சமையலறை, பணியாளர் அறை + குளியலறை, தோட்டம் மற்றும் ஒரு வாகனத்திற்கான பார்கிங். a) உடைத்துக் கட்ட முடியும், b) திருத்தம் செய்யலாம். கண்டிப்பாக தரகர் வேண்டாம். 1 பேர்ச் 1.55 மில்லியன் மற்றும் வீட்டிற்கு ரூ. 2.2 மில்லியன் மொத்தம் 16.5 மில்லியன் அழையுங்கள் 0112517110/ 0752082567. 051594

ரத்மலானை இரண்டு மாடி வீடமைப்புத்திட்டத்தில் கராஜ் உடன் மூன்று அறை கொண்ட வீடு விற்பனைக்கு. விலை பேசித்தீர்க்கலாம். 0773270698. 052142

ராஜகிரியவில் (கீல்ஸ் இற்கு அருகில்) 4.5 பேர்ச் வீடு விற்பனைக்கு 0755478265. 052073

Colombo-4, Sea side புதிய ஆடம்பர தொடர் மாடி மனையில் பல நவீன வச திகளுடன் 2 Bedrooms, 2 Bathrooms, Living and Dining area, Car Parking,Gym, Pool, CCTV, 24 hours SQ 920 உடன் விற்பனைக்கு உ ண்டு. Dee d availa b le. +947 57619114. 046024

10 பர்ச்சு காணியுடனான வீடு விற்பனைக்கு. 15/53, பிரதான வீதி, வீரமல் மாவத்தை, கொட்டிகாவத்தை. தொடர்பு இல. 07 1 617532 4, 0779646181 047497

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

வ த்தளை Nicholas Mawatha 13.2 பேர்ச் வெற்றுக் காணி பாதைக்கு முகப்பாக. ஒரு பேர்ச் 1.75M ஜயந்தி மஹல் சந்திக்கு அருகில் 5 பேர்ச் இல் வீடு 30 இலட்சம். தொ.பே. 0757662993. 052136

வத்தளை பிரீத்திபுர பெகஸஸ் ஹோட்டலுக்கு முன்னால் பிரீதிபுர 06 பேர்ச் காணித்துண்டு விற்பனைக்கு. பேர்ச் 4/ லட்சம் முழுத்தொகையில் ஒரு பகுதியை செலுத்தி விட்டு மிகுதி தவணை முறையில் , அழையுங்கள் 0761730582. 051892

வெலிவேரிய கோட்டை (514) பஸ் பாதையில் அரலிய கஹ சந்திக்கு 300M ஜய மாவத்தையில் 28 பேர்ச் சமதரையான காணி இருபக்கமும் பாதைகள் உண்டு. 0777474874. 052110

### 620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

கொழும்பு சிலாபம் பிரதான வீதிக்கு 10 மீட்டர் தூரத்தில் வைக்கால ரெயில் கேட்டுக்கு அருகில் ஒரு ஏக்கர் காணி விற்பனைக்கு. 0773111119, 0774325755. 052266

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

0777282147, 2020 புத்தாண்டிற்கு தலதா மாளிகை சார்ந்த புனித பூமியில், மிகப் பெறுமதியான சொ த்துக்கள், வீடுகள் 10 மில்லியன் முதல் அதற்கு மேல். பல்வேறு வியாபாரஸ்தலங்கள் 20 மில்லியன் முதல் அதற்கு மேல், கடைகள், தோட்டங்கள் 1 ஏக்கர் முதல் அதற்கு மேல், வீடமைப்புத் திட்டமொன்று, சகல அனுமதிப் பத்திர ங்களும் விற்பனைக்கு. 0777438169 047024

போவல கண்டி நகர சபை எல்லைக்குள் 3 மாடி வீடு 12 ப டுக்கையறை குளியலறைகள், தோட்டம் 14 வாகனங்களுக்கான நிறுத்துமிட வசதி 22 பேர்ச் இல் விற்பனைக்கு. 0770232738, 071-3319875. 051383

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

இரு படுக்கையறைகள், குளியலறை, சமையலறை, நீர், மின்சா ரம் அடங்க லாக 35 , 000/ மாதாந்த வா டகை. 28, பொரளை குறுக்கு வீதி, பொர ளை பொது வைத்தியசாலை க்கு அண்மையில். 0777268835. 050907

வெள்ளவத்தை தர்மாராம வீதி சென்.பீட்டர்ஸ் College ற்கு. அருகில் சகல வசதிகளுடன் அறை வாடகைக்குண்டு. பெண்களுக்கு உகந்தது. Mrs. பெரேரா 0772567770. 051317

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**திறன்கள் அபிவிருத்தி, தொழில்சார்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு**

**இலங்கை நிறுவனமாகிய நெனோடெக்னொலொஜி (பிவீடி) எல்டீடி**

**நெனோ தொழில்நுட்பவியல் மற்றும் விஞ்ஞான பூங்காவிலுள்ள தலைசிறந்த நெனோ தொழில்நுட்பவியல் நிலையத்தின் படிநிலை 1B தொடர்பாக, கட்டிட முகாமைத்துவ முறைமையை வழங்கி, நிறுவி, பரீட்சித்து, இயங்கச்செய்து குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பான பெறுகை**

**ஒப்பந்த இல. MSTR/TRD/SLINTEC/15-02**

i. பெசேவ நீங்கலாக ரூ.36,000,000.00 என மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் 119 நாட்காட்டி நாட்கள் நிர்மாணிப்புக் காலத்தைக் கொண்ட மேலேயுள்ளவற்றிற்கு, தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் செயற்பாடு கீழாக, தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திறன்கள் அபிவிருத்தி, தொழில்சார் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு சார்பாக, அமைச்சு பெறுகைக்குழுத் தலைவர் தற்போது அழைக்கின்றார்

ii. ஒப்பந்தம் கையளிக்கப்படத் தகுதி பெறுவதற்கு வெற்றியாளரான விலைமனுதாரர்,

i. அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதிருக்க வேண்டியதுடன்,

ii கீழே iii உருப்படியிலுள்ள தகைமைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யவும் வேண்டும்.

| தேவைப்பாடு | வரையறை |
|---|---|
| முன்னைய அனுபவம் | கிட்டிய ஐந்து வருட காலப்பகுதிக்குள் 30.00 மில்லியன் ரூபா (அல்லது 30.00 மில்லியன் ரூபா மொத்தப் பெறுமதியையுடைய உயர்ந்தபட்சம் மூன்று செயற்றிட்டங்கள்) அல்லது அதற்கு மேற்பட்ட தொகையொன்றுடன் நிகரான தன்மை மற்றும் சிக்கல் மிகு, கட்டிட முகாமைத்துவ முறைமையின் வழங்கல் மற்றும் நிறுவல் சகிதம் ஆகக்குறைந்த ஒரு செயற்றிட்டத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| சராசரி வருடாந்த பெறுமதி | கடந்த மூன்று வருட காலப்பகுதியில் ஆகக்குறைந்தது ரூபா.50.00 மில்லியன் |
| பெசேவ | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பெறுமதி சேர் வரியைச் (VAT) செலுத்துவதற்காக பதிவுசெய்து கொண்டிருத்தல் வேண்டும் |
| 1987 இலக்கம் 3 பொது ஒப்பந்தச் சட்டம் | இந்த விலைமனுவிற்காக பதிவுசெய்து கொண்டிருத்தல் வேண்டும். |

iv. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்க்கு மேலதிக தகவல்களை, ஹோமாகம, பிட்டிபான, இலங்கை நெனோ தொழில்நுட்பவியல் நிலையம், தொழில்நுட்பச் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு முகாமைத்துவ தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடிவதுடன், (தொலைபேசி 011-4650504, பெக்ஸ் 011-4650532, மின்னஞ்சல் sunandag@slintec.lk 2020 செப்டம்பர், 7ஆம் திகதி முதல் 2020 செப்டம்பர் 21ஆம் திகதி வரை, மு.ப.9.00 முதல் பி.ப.3.30 வரை, கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

v. ஒரு மீளளிக்கப்படாத கட்டணமான பத்தாயிரம் ரூபாவைச் (ரூ.10,000.00) செலுத்துவதன் மூலம், 2020 செப்டம்பர் 7ஆம் திகதி முதல் 2020 செப்டம்பர் 21ஆம் திகதி வரை, மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.30 மணி வரை பத்தரமுல்ல, செத்சிரிபாய கட்டம் 1, 3ஆம் மாடி, திறன்கள் அபிவிருத்தி தொழில்சார் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு, பிரதான கணக்காளரிற்கு ஒரு எழுத்துருவிலான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலான முழுமைப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

கொடுப்பனவு முறை ரொக்கப்பணத்தில் மாத்திரம் அமைதல் வேண்டும்.

vi. விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் போது அனைத்து வரைபடங்களிலும் டிஜிட்டல் தரவுகள் இந்த செயற்றிட்டத்திற்கு மாத்திரம் என்பதை விலைமனுதாரர்கள் எழுத்து மூலம் உறுதிப்படுத்துமாறு வேண்டப்படுகின்றனர்

vii விலைமனுக்கள், 2020 ஒக்டோபர் 5ஆம் திகதி மு.ப.11.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக, பத்தரமுல்ல, செத்சிரிபாய படிநிலை 1, 3ஆம் மாடி, திறன்கள் அபிவிருத்தி தொழில்சார் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின், பிரதான கணக்காளரிற்கு பிரதிகளாக (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகள் தெளிவாகக் குறிப்பிட்டு மற்றும் முத்திரை பொறிக்கப்படல் வேண்டும்) அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுத்திறப்பில் கலந்துகொள்ள முன்வரும் விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டதன் பின்னர் அவை உடனடியாக திறக்கப்படும்.

viii விலைமனுக்கள் 2021 பெப்ரவரி 1ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ix அனைத்து விலைமனுக்களும், ஐந்து இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா (ரூ.540,000.00) விலைமனுப்பிணையொன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2021 மார்ச் 1ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

x. ஒரு முன்னோடி விலைமனுக்கூட்டம் 2020 செப்டம்பர் 15ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு ஹோமாகம, பிட்டிபான, இலங்கை நெனோ தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக்குழு,**
**திறன்கள் அபிவிருத்தி, தொழில்சார் கல்வி,**
**ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு,**
**3ஆம் மாடி, செத்சிறிபாய, படிநிலை 1,**
**பத்தரமுல்லை.**


**The largest Job Market in Sri Lanka**

**www.observerjobs.lk**




**Widest reach for your employment advertisement**

**Email : info@observerjobs.lk Hotline: 1949**

**For more information**

**0777270012 / 0777270000 / 0112429314**

# 2020 பொதுத் தேர்தல்
## பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீழ்ச்சி
## ஒரு நோக்கு...

மீண்டெழு
சுகந்தி மணிமாறன்

**“பவதாரணி ராஜசிங்கம் கடந்த பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் லங்கா சுதந்திர கட்சியில் போட்டியிட்டவர். இவர் யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களின் ஒருங்கிணைப்பாளரும் சமூக சேவையாளருமாவார். இவரின் கொழும்பு அலுவலகத்தில் தேர்தல் களத்தில் அவரின் அனுபவ பகிர்வும் எமது கேள்விகளுக்கு அவர் அளித்த பதிலுடனான கலந்துரையாடல்.”**

# ஆளுமையுள்ள பெண்கள் அரசியல் செய்ய வேண்டும்

## பவதாரணி ராஜசிங்கம்



***2020 பொதுத் தேர்தலில் கடந்த தேர்தலை விட பெண்களின் வெற்றி வீதம் குறைவடைந்துள்ளதற்கான காரணம்?***

சிறந்த ஆளுமை, திறமை, கல்வியறிவு நிறைந்த பெண்கள் தான் இம்முறை தேர்தலில் போட்டியிட்டனர். பெண்களுக்கு வாக்களிப்பதன் முக்கியத்துவதையும் அவசியத்தையும் எந்தக்கட்சியும் அழுத்தமாக வலியுறுத்தவில்லை. பெண்கள் கட்சி வெற்றிபெறுவதற்கான காரணிகளாக இருக்கிறார்களேயல்லாமல் பெண்களுக்கான குரலாக அல்ல. சில கட்சிகள் பெயரளவில் தான் பெண்களை சேர்த்துக் கொண்டு இந்த தேர்தலுக்கு முகம் கொடுத்தனர். ஆனால் பலம் பெரும் கட்சிகள் சிறந்த ஆளுமை, திறமை, கல்வியறிவு நிறைந்த பெண்களை தனது தேர்தல் வெற்றிக்காகவும் வாக்கு வங்கியை அதிகரித்து கொள்ளவும் பட்டியல் படுத்தியுள்ளனர்.

***ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் பெண்களை அரசியலில் ஈடுபடுத்துவதற்கான செயற்பாடுகள் தொடர்பில் உங்கள் நோக்கு?***

எனது கட்சியில் மட்டுமல்ல எந்த கட்சியிலும் அவ்வாறான திட்டங்கள் இல்லை. இதை நான் ஒரு முறைப்பாடாக சொல்லாமல் இதைக்குறித்து ஒரு பெண்ணாக நான் என்ன செய்யலாம் என்று சிந்தித்திருக்கிறேன்.

***தமிழ்ப் பெண்களுக்கு அரசியலில் ஈடுபடுவதற்கான முட்டுக்கட்டைகளாக எதை நினைக்கிறீர்கள்?***

எமது சமூகம் பொதுவாகவே வீட்டிலிருந்து குடும்ப அங்கத்தவர்களுக்கு சேவை செய்யும் பெண்களை புனிதமாகவும் அரசியலில் இறங்கி சேவை செய்ய விரும்பும் பெண்களை வேறு பெயர் கொண்டழைக்கும் துர்ப்பாக்கியமான நிலைமையிலுள்ளது.

சமூகத்திலும் சரி, அரசியல் வட்டத்துக்குள்ளும் சரி பெண்கள் கண்ணியத்துடன் நடத்தப்படுவதில்லை. அரசியல் என்றாலே எதற்கும் தயார்நிலையில் இருப்பவர்கள் என்ற எண்ணம் இவர்களிடையே உண்டு. ஆசிரியர் போலவே அரசியல்வாதிக்கும் ஆண், பெண் போன்ற வரைவிலக்கணங்கள் தேவையில்லை.

பெண்களை எப்போதுமே நலிந்தவர்களாகவே காட்டி அரசியலில் பிரவேசிக்கச் செய்கிறார்கள். கணவனை இழந்து, பிள்ளையை இழந்து, சகோதரரை இழந்து ஏதோ ஒரு அனுதாபத்துக்குரிய பெண்ணையே அரசியலில் நிறுத்த எண்ணுகிறார்கள். இந்நிலை மாற வேண்டும். ஆளுமையுள்ள பெண்கள் அரசியல் செய்ய வேண்டும்.

***தேர்தலில் பெண்களின் வாக்களிப்பு வீதம் வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள்...?***

ஒரு வீட்டில் பெண்களின் வாக்கையும் தீர்மானிப்பவர்கள் ஆண்களாகவே இருக்கின்றனர். நாட்டுத் தேவையை ஆண் தீர்மானிக்கவும் வீட்டுத்தேவையை பெண் தீர்மானிக்கவும் நிர்பந்திக்கப்படுகிறார்கள். அத்தோடு வாக்களிப்பின் முக்கியத்துவம் பெண்களுக்கு தெளிவுபடுத்தப்படுவது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. வெளித் தொடர்புகளும் அநேக பெண்களுக்கு இல்லை என்ற காரண காரியமும் இவற்றுக்கான காரணங்களாக குறிப்பிடலாம்.

***நீங்கள் போட்டியிட்ட தேர்தல் களத்தில் பெண் என்ற ரீதியில் சந்தித்த சவால்கள்,.***

"பெண்ணாக" இருப்பதே சவால்தான். தேர்தல் களங்களில் பெண்கள் பேசவேண்டிய கருத்துக்கள் மற்றவர்களால் தீர்மானிக்கப்படுகின்றன.

மென்மையான, சர்ச்சைகளை ஏற்படுத்தாத, மேம்போக்கான கருத்துக்களை மட்டுமே பேச வேண்டும். ஒரு பெண்ணின் நடை, உடை, பாவனை என்பவற்றை எவரும் விமர்சிக்கலாம் என்ற நிலை உள்ளது.

அரசியலுக்கு வரும் பெண்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பை துறந்தவர்களாக அல்ல அவற்றோடு சேர்த்து இந்த சமூகத்தை கட்டியெழுப்பும் பாரிய பொறுப்போடு உள்ளவர்கள். அவர்களை போற்றி பேசவேண்டியதில்லை. இருப்பினும் தக்க மரியாதையோடு நடத்துவது வரவேற்கத்தக்கது.

***இந்த பொதுத் தேர்தல் முடிவுகளை பெண்கள் சார்பாக பார்க்கும் போது உங்களின் கருத்து...?***

ஒருவரது சகல தெரிவுகளும், தீர்மானங்களும் அவரது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். சரியானதை செய்வதற்கும் பேசுவதற்கும் தைரியம் இருக்க வேண்டும். மக்களுக்கானதை சரிவர செய்வதற்கு எந்தத்தடை வந்தாலும் தகர்த்தெறியும் நெஞ்சுறுதி இருக்க வேண்டும். இவற்றை இத் தேர்தல் கற்றுக் கொடுத்துள்ளது.பெண்களுக்கு இத் தேர்தல் நிறைய வாய்ப்புகளை கொடுத்துள்ளது.

***வெற்றி பெற்றிருந்தால் பெண்களின் நிலைமையை மாற்றுவதில் எவ்வாறான திட்டங்களை முன்னெடுத்திருப்பீர்கள்?***

நலிந்தவர்களுக்கு வலிமை சேர்த்திருப்பேன். எனது குரல் தேவைப்பட்ட இடங்களில் எவ்வித பாரபட்சமுமின்றி சேவை செய்திருப்பேன். 70% அதிகமான பிரச்சினைகள் பெண்கள் சார்ந்தவை. அவற்றை தீர்ப்பதற்கான செயற்றிட்டங்கள் என்னிடம் இருக்கின்றன.

இப்போதும் நான் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படவில்லை என்றாலும் பல அரசியல் தலைவர்கள், அபிவிருத்திக் குழு தலைவர்கள், மற்றும் சமூக ஆர்வலர்களோடு இணைந்து மக்களுக்கான சேவையை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறேன். மேலும் செய்வேன்.

***பெண்கள் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபட வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?.***

பெண்கள் சாரதியாக, வைத்தியராக, ஆசிரியராக, சட்டத்தரணியாக, கட்டட வேலையாட்களாக, கூலி வேலை செய்பவர்களாக ஏன் விண்வெளி வீரர்களாகவும் இருக்கிறார்கள். ஏன் அரசியல் செய்யக்கூடாது?

# இலங்கை நாடாளுமன்றத்தின்
# முதல் பெண் பிரதிநிதி
## அடெலின் மொலமூரே (1890 – 1977)
### சென்ற வாரத் தொடர்ச்சி

டொக்டர் மேரி றட்ணம், ஃபுளொறின்டா விஜயக்கோன், மர்ஜோறி டி மெல், கரோலின் டி சில்வா ஆகிய பிரபலமான பெண்கள், அடெலின் மொலமூரே தேர்தலில் தெரிவானதையிட்டு பெரும் மகிழ்ச்சியை வெளிக்காட்டினர். வெற்றி பெற்ற தொகுதியில் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. பல வரவேற்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றில் ஒன்றாகப் பிஷப் கல்லூரி மாணவிகளினதும் நிகழ்ச்சி இருந்தது. இந்நிகழ்ச்சியில், 'நான் எல்லோருக்குமாக கதவைத் திறந்து விட்டுள்ளேன். இங்கிருக்கும் மாணவர்கள் என் வழியைப் பின்பற்றுவர் என நான் எதிர் பார்க்கிறேன்" என்று அடெலின் சொன்னார். (Wijesekera 1995:28)

நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தும் "பெண்களின் பிரஜா உரிமை" என்ற தனது கட்டுரையில் லீலாவதி அசெரப்பா, பெண்களின் பிரதிநிதிகள் பெண்கள் பிரச்சினைகளை முன்னெடுப்பதற்கு உதவுவர் என்று எதிர்பார்ப்பு குரல் கொடுத்தார். (Young Ceylon, May, 1932)

*கடந்த சில மாதங்களில் பல பெரு மாற்றங்கள் இத்தீவில் நடந்தேறியுள்ளன. வரலாற்றில் முதல் முதலாக பெண்கள் தம் வாக்களிக்கும் உரிமையைப் பாவித்துள்ளனர். இன்னும் அண்மையில் தான் அவர்கள் தம்மைப் பிரதிநிதித்துவம் செய்ய ஒரு பெண்ணைச் சட்டசபைக்கு அனுப்பியுள்ளனர். இவ்வளவு வேகமாக முன்னேறியுள்ள நாம் எதிர்காலத்தில் பெண்களையும் பிள்ளைகளையும் பாதிக்கும் சகல விஷயங்களையும் புறந்தள்ளி முன்னேற்றமடைவதை எதிர்பார்க்கலாம். நாங்கள் விரும்பும் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை நாங்கள் எதிர்பார்க்கலாம். காரணம், எங்களுக்காக வேலை செய்யச் சட்டசபையில் எங்கள் பெண் பாலாரே உள்ளனர். நாங்கள் மட்டும் ஒன்றிணைந்து ஒரு கனதியான நடைமுறை ரீதியான வேலையில் ஈடுபடத் தீர்மானிப்போமானால் எமக்காக மாபெரும் எதிர்காலம் காத்திருக்கிறது.*

அசெரப்பா, பெண்கள் வாக்குரிமை சம்பந்தமாக வெளிக்காட்டிய பல்வகை நிலைகளைப் பகுப்பாய்வு செய்து, அரசியலில் பங்கு பற்றுவதன் மூலம் தமக்குத் தரப்படும் புதிய பொறுப்புப் பற்றி விழிப்பாய் இருக்குமாறு பெண்களைக் கேட்டுக் கொண்டார்.

*பரவலான நோக்கில் பார்க்கையில் இன்று வரை பெண்கள் இரு வர்க்கமாகப் பிரிந்துள்ளனர். அதாவது வாக்குரிமை வேண்டும் என்போரும், வாக்குரிமை வேண்டாமென்போருமான இரு வர்க்கம். மூன்றாவது பிரிவினர் வாக்குரிமையை விரும்பிய போதும் அதைப் பெறுவதற்கு முயலாதவர். ஆனால், இந்த எல்லாப் பிரிவினரும் ஒன்றிணைவதற்கான காலம் இப்போது வந்துள்ளது. "ஓ, நான் இதைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை. நான் வாக்களிக்க மாட்டேன்" என்று சொல்வது எங்களுக்கு நாடு தந்துள்ள பொறுப்பை வேண்டுமென்றே உதாசீனம் செய்வதாகும். இப்புதிய பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு இது பற்றித் தேவையான விபரங்களோடு தம்மை பரிச்சயப்படுத்திக் கொள்வது ஒவ்வொரு பெண்ணினதும் கடமையாகும்.*

வறுமை போன்ற சமூக விஷயங்களில் பிரக்ஞைபூர்வமாக விழிப்பு உடையவராக இருந்த, திருமதி அசெரப்பா, பெண்கள் பிரதிநிதித்துவத்தின் நடைமுறை விளைவு என்ன என்னும் பொருத்தமான கேள்வியையும் கேட்டார்.

*யாராவது ஒருவர் இயல்பாகவே கேட்கக் கூடும் இவையெல்லாவற்றினதும் நடைமுறைப் பெறுபேறு என்னவென்று. நாங்கள் சட்டவாக்கத்தால் வறுமையை ஒழித்து விட முடியுமா? இல்லை அப்படி முடியாது, இதற்கான காரணம் பல்வகையானது. ஆனால் இதற்கான பொறுப்பு அரசின் செயற்பாட்டின் மூலம் ஏற்படுத்தப்பட வேண்டும். பெண் வாக்காளர்கள் இந்த அரசின் செயற்பாட்டைத் தாண்டுவதற்கான செல்வாக்கைச் செலுத்த வேண்டும். சமூக சீர்திருத்தம் சம்பந்தப்படுகின்ற விஷயத்தில் வதிவிடப் பிரச்சினை முதலில் வர வேண்டும். சேரிகள் அகற்றப்பட வேண்டும். சேரிகள் சாபக்கேடானவையாக இருப்பதோடு, நல்ல வாழ்க்கைக்கு வழி விடும் கிராமப்புற நிலவரமும் சாத்தியமற்றுப் போயிற்று.*

சபாநாயகராக இருந்த தனது கணவர் முன் சத்தியப்பிரமாணம் எடுத்து, 1931 நவம்பர் 20ஆம் திகதி அடெலின் மொலமூரே தனது சட்டசபை ஆசனத்தைப் பெற்றுக் கொண்டார். பொது மக்களின் பார்வைக்காக ஒதுக்கப்பட்ட இடம் ஆவலோடு இந்நிகழ்ச்சியைப் பார்க்க வந்த ஆண்களாலும், பெண்களாலும் நிரம்பி வழிந்தது. (Wijesekera 1995:29) சட்டசபையில் அவர் விவசாய நிறைவேற்று குழுவில் அதன் அமைச்சரான டி.எஸ்.சேனநாயக்காவோடு இருந்தார். அவர் விவசாயத்தில் குடியேற்றத் திட்டங்கள், குளங்கள் புனரமைத்தல், பிள்ளைப்பேற்று மருத்துவ நிலையங்கள், பெண்கள் சிவில் சேவையில் புகுதல் ஆகியவை உள்ளடங்கிய பல பிரச்சினைகளைக் கவனத்திற்கெடுத்தார். இவ் விஷயத்தில் அவர் ஆற்றிய உரை மிக உணர்வு பூர்வமாக, ஆண்களின் மெலியார்க்கு உதவும் உணர்வை கவர்கின்ற மாதிரி அது அமைந்திருந்தது. (ஹன்சார்ட் 14 பெப், 1934:140)

*பெண்களின் சார்பாக நான் எனது எதிர்ப்பை முன் வைக்க வேண்டும். ஆண்களால் தங்கள் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட பழைய சம்பிரதாயங்களாலும் விதிகளாலும் பெண்கள் ஒதுக்கி வைக்கப்படுவார்களானால் அத்தகைய பழைய விதிகளை மாற்றியமைக்க பெருந்தன்மை கொண்டு இச்சட்ட சபை முன்வர வேண்டும்.*



வெளிநாட்டுக்கு பெண்கள் பிரதிநிதியாக

*பெண்கள் தாங்கள் ஆண்களோடு சமமாக வைத்துப் பார்க்கப்பட வல்லவர்கள் என்பதை நிரூபித்த இக்கால கட்டத்தில் பெண்கள் வெறும் சலுகைகளை கேட்கவில்லை. எங்களுக்கு தேவையானவை நீதியும் ஆண்களோடான சம உரிமையுமே!*

இலங்கையின் வரலாற்றில் அரசாங்க சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட முதல்பெண்மணி எனும் ஸ்தானத்தை அடெலின் பெற்றுக் கொண்டார். மேற்சபைக்குத் தெரிவான முதற் பெண்ணும் இவர்தான். ருவன்வெல்ல தொகுதியில் நடந்த இடைத்தேர்தலின் மூலம் அடெலின் தனது தகப்பனின் அரசியல்செல்வாக்கு, தனது உயர்குடிச் செல்வாக்கு, பெண்களின் பிரச்சாரம் காரணமாகவே அரசியலில் நுழைய முடிந்தது.

இது பெண் பிரதிநிதித்துவத்தின் தொடக்கம் மட்டுமல்ல, ஆணுறவு முறைச் செல்வாக்குக்கு ஊடாக பெண்கள் நாடாளுமன்றத்துக்கு செல்லும் கலாசாரத்தின் தொடக்கமாகவும் இது முத்தாய்ப்பாக இருந்தது என்பதையும் இங்கு பதிவு செய்தாக வேண்டும். அடெலின் மொலமூரே தெரிவு செய்யப்பட்டு ஒருவருடத்துக்குள் தெரிவான நேசம் சரவணமுத்துவும் இதுபோல தகப்பனின் அரசியல் செல்வாக்குக்கு ஊடாக அரசியலில் பிரவேசித்தவர் தான்.

## பரம்பரைப் பின்னணி

அடெலின் மீதெனிய அதிகாரி மொலமூரே 1890ஆம் ஆண்டு செப்டம்பர் முதலாம் திகதி ருவன்வெல்ல மீதெனிய பரம்பரையில் பிறந்தவர். அதிகாரி மீதெனிய பழைய நிலமான்ய முறையில் வந்த நிலச்சுவாந்தராக இருந்ததோடு, சட்டசபையில் நியமன அங்கத்தவராக இருந்து வந்தார்.

மீதெனியாவினதும் (பௌத்தர்) எமிலி சேனநாயக்காவினதும் (மிகப்பற்றுடைய அங்கிலிக்கன் கிறிஸ்தவர்) மூத்த பிள்ளையாகிய அடெலின் பிஷப் கல்லூரியில் படித்ததோடு அவரும் அங்கிலிக்கன் கிறிஸ்தவராக இருந்தார். அடெலின் இளைய சகோதரி அலிஸ் (Alice) லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தின் ஆரம்பகர்த்தாவும், பத்திரிகை உலக ஜாம்பவானாகவும் கருதப்படுகிற டி.ஆர்.விஜேயவர்தனவை விவாகம் செய்து கொண்டார். இதன் மூலம் நிலவுடைமை முதலாளித்துவ நலன்களும் பௌத்த கிறிஸ்தவ குடும்பங்களுக்கிடையேயான தொடர்புகளும் நெருக்கமுற்றன என்கிறார் குமாரி ஜெயவர்தன.

அலிஸ், விஜேவர்தன ஆகியோருக்கு பிறந்த நளினி விஜேவர்தன தான் பிற்காலத்தில் இலங்கையின் பிரதமராக ஆன ரணில் விக்கிரமசிங்கவின் தாயார்.

1912இல் பிரபல வழக்கறிஞர் பிரான்சிஸ் மொலமூரே என்பவரை விவாகம் புரிந்தார். கண்டி ராஜ்ஜிய காலத்தில் ஒரு அரச பிரதிநிதியாக இருந்த மீதேனிய மொலமூரே பரம்பரையைச் சேர்ந்தவர் பிரான்சிஸ் மொலமூரே. பிரிட்டிஷ் அரசால் சேர் பட்டம் பெற்றவர். இவ்விவாகம் அன்றைய தேசாதிபதியாகவிருந்த சேர்ஹென்றி எட்வர்ட்மெகலம் ஆகியோர் உட்பட பல உயர் மேட்டுக்குடி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் லந்துகொண்ட பெரும் ஆடம்பரத் திருமணமாக நடாத்தப்பட்டது.

பிரான்சிஸ் மொலமூரே ஒரு சட்டத்தரணியாக இருந்ததோடு, நிலமான்ய பூர்வீகமுடைய நிலச்சுவாந்தராக இருந்தார். மடுவன்வெல பரம்பரைச்சொத்து இறுதியில் பிரான்சிஸ் மொலமூரேவுக்குத் தான் சொந்தமானது. இவர்களுக்கு சொந்தமான மடுவன்வெல “வலவ்வ” வுக்கு சொந்தமான காணிகள் 84,000 ஏக்கர்களைக் கொண்டது. அவர்களின் குடும்ப வைத்தியராக இங்கிலாந்திலிருந்து வைத்தியர் ஒருவரை வரவழைத்து சேவைக்கு வைத்திருந்தார்கள். அந்த வைத்தியரின் பெயர் ஸ்பிரிடல். அவர் ஒரு எழுத்தாளரும் கூட. அவர் இங்கிலாந்தின் பத்திரிகையொன்றுக்கு மடுவன்வெல பரம்பரையினர் பற்றி எழுதிய கட்டுரையைப் பார்த்துவிட்டு இங்கிலாந்து அரசு இலங்கையில் கருப்பு இளவரசர் என்றுமடுவன்வெல “திசாவ”வவை அழைத்தார்கள்.

இவர் 1924இல் இருந்து 1931வரை கேகாலை மாவட்டத்தின் சட்டசபை அங்கத்தவராக இருந்ததோடு 1931இல் தெடிகம ஆசனத்திற்குப் போட்டியின்றித் தெரிவானவர். இலங்கை சட்டசபையின் முதல் சபாநாயகர் அவர் தான். இதன் பிரகாரம் சட்டசபையில் ஒரே நேரத்தில் இத்தம்பதியினர் அங்கம் வகித்தனர். பிரான்சிஸ் மொலமூரே அரசாங்க சபை அமர்வு நடந்துகொண்டிருக்கும் போதே 1951, ஜனவரி 24 அன்று சிம்மாசனத்தில் வைத்தே பக்கவாதம் வந்து சரிந்து விழுந்தார். அடுத்த நாள் ஆஸ்பத்திரியில் மரணமானார். அவர் அன்றைய காலத்தில் பனாமுற என்கிற பகுதியில் ஒரு யானையை சுட்டுக்கொன்றதன் சாபத்தால் தான் அவர் மரணமானார் என்று பிரபலமாக பேசப்பட்டது.

அடெலின் மொலமூரே இரண்டாவது அரசாங்க சபை தேர்தலில் போட்டியிட்டபோதும் லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட கலாநிதி என்.எம்.பெரேராவுடன் போட்டியிட்டுத் தோல்வியுற்றார். அத்தேர்தலில் கலாநிதி என்.எம்.பெரேரா 15,275 வாக்குகளையும், திருமதி அடெலின் மொலமூரே 12,300 வாக்குகளையும்பெற்று தோல்வியடைந்தார். இதன்பின்பு இவர் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடவில்லை.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்கப்பட்டதும் அதில் அங்கத்துவம் பெற்று சோல்பரி யாப்பு திட்டத்தின் கீழ் 1947இல் உருவாக்கப்பட்ட செனற் சபைக்கு நியமன உறுப்பினரானார். செனற் சபைக்கு தெரிவான முதற்பெண்ணும் அடெலின் மொலமூரே ஆவார். 1955இல் செனற் சபையின் உப தலைவராகவும் தெரிவானார். வரலாற்றில் அப்பதவி வகித்த ஒரே பெண்ணும் இவரேயாவார்.

1948 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் மகளிர் அணி உருவாக்கப்பட்ட போது அதன் முதல் தலைவியாக அடெலின் தெரிவானார். 1950 இல் சர்வதேச பெண்கள் அமைப்பின் இலங்கைக் கிளையின் தலைவியாகத் தெரிவாகி ஆறு வருடங்கள் அந்தப் பதவியில் வகித்தார்.

அரசியலில் இருந்து அவர் ஓய்வு பெற்றதன் பின்னர் எஞ்சிய வாழ்காலத்தில் சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தினார். அவர் கிறிஸ்தவ பெண்கள் சங்கம், லங்கா மஹிலாசமித்தி, ஐக்கியதேசியக் கட்சியில் பெண்கள் பிரிவு போன்ற அமைப்புகளில் இருந்து செயற்பட்டிருந்தார்.

## மகளும் அரசியலில்

அடெலின் மொலமூரேவின் ஒரே மகள் சீதாமொலமூரே செனவிரத்னவும் (1914 – 1998) பிற்காலத்தில் அரசியலில் இறங்கினார். தனது பாட்டனார், தந்தை, தாய் அனைவருமே அரசாங்க சபையில் அங்கத்துவம் வகித்து ஆட்சியில் பங்கு கொண்டவர்கள். எனவே 1965 தேர்தலில் சீதா போட்டியிட்ட போதும் தோல்வியைத் தழுவினார். 1967ஆம் ஆண்டு பெல்மடுவ தொகுதியின் இடைத்தேர்தலிலும் போட்டியிட்டு தோல்வியுற்றார். ஆனால், அதே 1967 ஆம் ஆண்டு அவரை செனற் சபைக்கு நியமன உறுப்பினராக நியமித்தது அப்போதைய டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க அரசாங்கம். சிறுவர்கள், இளைஞர்கள் துறைக்கான தேசிய சபையின் தலைவராக அவரை நியமித்தது அரசாங்கம். ஆனால், 1970 இல் செனற் சபை அங்கத்துவத்திலிருந்து இராஜினாமா செய்துவிட்டு அதே ஆண்டு நடத்தப்பட்ட பொதுத்தேர்தலில் பலாங்கொட தொகுதியில் ஐ.தே.க கட்சியின் சார்பில் போட்டியிட்டு மீண்டும் தோல்வியடைந்தார். அவரோடு போட்டியிட்டு வெற்றி பெற்றவரும் ஒரு பெண். திருமதி மல்லிகா ரத்வத்த அத்தேர்தலில் வெற்றியடைந்தார். இலங்கையின் அரச அதிகாரத்தில் தாயும் மகளும் பங்காற்றிய முதலாவதாக பதிவுபெறுபவர்கள் அடெலினும் சீதாவும் தான். 1989ஆம் ஆண்டு இலங்கை அரசின் உயரிய விருதுகளில் ஒன்றான தேசபந்து விருது சீதாவுக்கு வழங்கப்பட்டது. அவர் 1998 ஆம் ஆண்டு இறந்தார். அவரின் மகளின் கணவர் தான் இலங்கை தேயிலைச் சபையின் தலைவராகவும், மெக்வூட் எஸ்டேட்டின் நிர்வாக இயக்குனருமான சேபால இலங்ககூன்.

இத்தகைய பின்புலத்தைக் கொண்ட அடெலின் மொலமூரே 1977 ஆம் ஆண்டு ஜுலை 27ஆம் திகதி தனது 87ஆவது வயதில் மரணமடைந்தார்.

பரம்பரை – வர்க்கம் – சாதி போன்ற செல்வாக்குடன் தந்தை, கணவர் ஆகியோரின் அரசியல் செல்வாக்கும் தான் அடெலினின் அன்றைய அரசியல் நுழைவை சாத்தியப்படுத்தியிருந்தது. 1931 இல் நடத்தப்பட்ட முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் எந்தவொரு பெண்ணும் தெரிவு செய்யப்படாத நிலையில் ஒரு மரணமும் அதன் வழியாக விளைந்த இடைதேர்தலும் தான் அந்த நுழைவை சாத்தியப்படுத்தியிருந்தது. ஆனாலும் அந்த ஆரம்ப சூழலில் பெண்கள் ஆரசியல் அதிகாரத்துக்கு வருவதற்கு பெரும் இடையூறுகள் இருந்த போதும் அடெலினின் வருகை பலருக்கும் வியப்பை மட்டும் தரவில்லை. பல பெண்களுக்கு ஒரு முன்னுதாரண வழிகாட்டியாக ஆனார் அடெலின். இலங்கைப் பெண்களின் அரசியல் வரலாற்றில் அடெலின் தொடக்கி வைத்த புள்ளி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

| இது வரை தெரிவான பெண்களின் எண்ணிக்கை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| காலம் | வேட்பாளர் தொகை மொத்த பெண்கள் | % | மொத்த உறுப்பினர் | தெரிவான பெண்கள்% | | % |
| 1947 | 361 | 3 | 0.8 | 101 | 3 | 3.0 |
| 1952 | 303 | 9 | 3.0 | 101 | 2 | 2.0 |
| 1956 | 249 | 5 | 2.0 | 101 | 4 | 4.0 |
| 1960 (மார்ச்) | 899 | 16 | 1.8 | 157 | 3 | 1.9 |
| 1960 (ஜுலை) | 393 | 5 | 1.3 | 157 | 3 | 1.9 |
| 1965 | 492 | 14 | 2.8 | 157 | 6 | 3.8 |
| 1970 | 440 | 14 | 3.2 | 157 | 6 | 3.8 |
| 1977 | 756 | 14 | 1.8 | 168 | 11 | 6.5 |
| 1989 | 1688 | 52 | 3.1 | 225 | 13 | 5.8 |
| 1994 | 1492 | 52 | 3.5 | 225 | 12 | 5.3 |
| 2000 | 5048 | 117 | 2.3 | 225 | 9 | 4.0 |
| 2001★★ | 4610 | 52 | 1.1 | 225 | 10 | 4.4 |
| 2004 | 6060 | 375 | 6.2 | 225 | 13 | 5.8 |
| 2010 | | | | | | |
| 2015 | 6151 | 556 | 9,2 | 225 | 13 | 5.8 |
| 2020 | 7452 | 819 | 8.19 | 225 | 12 | 5.3 |

***★அரசியலில் பெண்களின் நுழைவுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்த இலங்கை உலகிலேயே பெண்களின் பிரதிநிதித்துவத்தில் மோசமான முதல் பத்து நாடுகளில் ஒன்றாக ஆகியிருக்கிறது. இந்த அட்டவணையில் அதைப் பார்க்கலாம்.***

**என்.சரவணன்**

# கிராமிய கலை ஒன்றியத்தின் கௌரவிப்பு விழா






படங்கள்: இர்ஷாத் ஏ. காதர், ஜாவிட், உதயகுமார்












கிராமிய கலை ஒன்றியத்தின் 2வது வருட பூர்த்தி விழா கடந்த சனிக்கிழமை கொழும்பு - 13. அமைந்துள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் மண்டப அரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் பலர் கௌரவிக்கப்பட்டனர். இதில் பிரதம அதிதியாக கலாநிதி வி. ஜனகனும் கௌரவ அதிதிகளாக உலக அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீட்டும் பிரதமரின் மத விவகார இணைப்புச் செயலாளர் கலாநிதி வண. எஸ்.சந்திரகுமாரும் தினகரன் பிரதமஆசிரியர் செந்தில் வேலவரும் கலைஞர் கே. சந்திரசேகரனும் கொழும்பு பிரதேசச் செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் றோஸ் மேரியும் கலந்து கொண்டனர்.

ஓய்வு பெற்ற முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளரும் கவிதாயினியுமான **நஸீரா எஸ்.ஆப்தீனுடனான** நேர்காணல்

# மூன்று வரிகளில் எழுதுவதே மணிக்கூ கவிதைகள்

நேர்கண்டவர் : **யூ.எல்.ஹரீஸ்**



▶ ***உங்களைப் பற்றிய ஓர் அறிமுகத்தைக் கூறுங்கள்.***

கிழக்கு மாகாணத்தில் மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பில் ஏறாவூர் நகரில் 1962 ஆம் ஆண்டில் பிறந்தேன். தந்தை பெயர் ஆர்யு.செயினுலாப்தீன் தாய் பெயர் அலியார் ஆயிஷா உம்மா. எனது தந்தை ஏறாவூரின் பிரபல பாடசாலைகள் அனைத்திலும் அதிபராகக் கடமை புரிந்து 1990 அம் ஆண்டு தனது 60 வயதில் ஓய்வு பெற்றவர். நான் ஏறாவூர்அலிகார் மத்திய கல்லூரியில் கற்றவள்.

▶ ***நீங்கள் கல்வித்துறையில் நீண்ட காலம் கடமையாற்றியுள்ளீர்கள். அது பற்றிக் கூற முடியுமா?***

ஆம். 1982ஆம் ஆண்டில் ஆசிரியர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டேன். சுமார் 17 வருட காலம் ஆசிரியர் பணி புரிந்துள்ளேன். அக்கால வேளையில் 1995 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட இலங்கைக் கல்வி நிருவாக சேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு 1999 ஆம் ஆண்டில் SLEAS உத்தியோகத்தராக நியமனம் பெற்றேன். அப்பதவியில் சுமார் 20 ஆண்டுகள் கடமை புரிந்து எனது 56 ஆவது வயதில் ஓய்வு பெற்றேன்.



▶ ***சுமார் 20 வருட காலம் இலங்கைக் கல்வி நிருவாக சேவையில் நீங்கள் ஆற்றிய பணிகள் பற்றிக் கூற முடியுமா?***

நான் கல்குடா கல்வி வலயம், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம், மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகிய இடங்களில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்துள்ளேன். 1999 தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதி கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் மிகவும் பற்றாக்குறையாக இருந்த காலம். அதனால் நான் பல்வேறு உத்தியோகத்தர்களின் கடமைப் பொறுப்புகளை ஏக காலத்தில் கவனிக்க வேண்டிய அவசியமிருந்தது. முறைசாராக் கல்வி, முன்பள்ளி அபிவிருத்தி போன்ற துறைகளுடன் கல்வி அபிவிருத்தி, கல்வி திட்டமிடல், கல்வி முகாமைத்துவம், கல்வி நிரவாகம் போன்ற அனைத்து துறைகளிலும் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்துள்ளேன்.

▶ ***இலக்கியத் துறையில் உங்களுக்கு எப்போது ஈடுபாடு ஏற்பட்டது?***

எனது தந்தை நானறிந்த காலம் முதல் பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றியவர். நான் 1967 ஆம் ஆண்டில் அலிகார் கனிஷ்ட வித்தியாலயத்தில் (தற்போதைய அலிகார் மத்திய கல்லுளரி) முதலாம் வகுப்பிற்கு அனுமதி பெறும்போது எனது தந்தை அங்கு தலைமை ஆசிரியராக இருந்தார். எனது வீட்டில் அக்காலத்திலேயே கதைப் பத்தகங்கள், கவிதை நூல்கள் மற்றும் சிறுவர்களுக்கான நீதிக்கதைகள் என ஒரு குட்டி நூலகம் இருந்தது. முதலாம் வகுப்பில் கற்றபோதே பல்வேறு புத்தகங்களுடன் இணைந்து வளர்ந்தவள். பாடசாலைக் காலங்களில் ஏராளமான கவிதை நூல்களையும் நாவல்களையும் வாசித்திருக்கின்றேன்.

அக்காலத்திலும் எனக்கு இலக்கியத் துறையில் ஆர்வம் இருந்தது. சிறுசிறு கவிதைகளை எழுதிக் கடதாசித் துண்டுகளில் மடித்து வைத்திருப்பேன். மாணவர் மன்றங்களில் ஆசிரியர்களால் எழுதித் தரப்பட்ட கவிதைகளைப் படித்திருக்கின்றேன். சினிமாப் பாடல் வரிகளின் அர்த்தங்களுக்குள் மூழ்கியிருக்கின்றேன். ஆனால் எனது கவிதைகள் பத்திரிகைகளிலோ சஞ்சிகைகளிலோ வெளிவருமளவுக்கு எனக்குள் ஒரு உந்துதல் இருந்திருக்கவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை எந்தவொரு ஆசிரியரும் என்னை அடையாளம் கண்டதாகவோ ஊக்குவித்ததாகவோ நான் உணரவில்லை.

அதன் பின்னர் 17 வருட காலம் ஆசிரியராகவும் சுமார் 20 வருடங்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமை புரிந்துள்ளேன். அக்காலங்களில் நிறையக் கவிதைகளையும் உருவகக் கதைகளையும் எழுதியுள்ளேன். ஆனால் அவையனைத்தும் எனது கோவைகளுக்குள் முடங்கிக் கிடந்து காலப் போக்கில் சிதைந்து போயுள்ளன.

இசையின் மீது அதிக ஈடுபாடு உண்டு. சிறந்த குரல் வளம் இல்லையென்றாலும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பல மேடைகளிலும் இன்னும் பல சிறிய நிகழ்வுகளிலும் சினிமாப் பாடல்கள் மூலம் நிறைந்த கரகோசங்களைப் பெற்றுள்ளேன்.

▶ ***உங்களது கவிதைகள் வெளியீடாக வந்தது எப்போது என்று கூற முடியுமா?***

2018 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி நான் அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். அதன் பின்னர்தான் என்னுடைய கவிதைகள் வெளியீடாக வரத் தொடங்கின. அதற்கு பல வருடங்களுக்கு முன்பாகவே நான் கவிதை நூல், சிறுகதை, தத்துவ முத்துக்கள், சமூக விழிப்புணர்வு சிந்தனைகள் போன்ற பல நூல்கள் வெளியிடுவதற்கான ஆக்கங்களை சேகரித்து வைத்துக் கொண்டேயிருந்தேன். 2018 ஆம் ஆண்டிற்குப் பின்னர்தான் நான் முகநூலில் இலக்கியக் குழுமங்களில் நடத்தப்பட்ட போட்டிகளில் கிராமியக் கவிதை, புதுக்கவிதை,




ஹைக்கூ கவிதைகளைப் பதிவு செய்யத் தொடங்கினேன். அவற்றில் தொடர்ச்சியாக எனக்குக் கிடைத்து வந்த சான்றிதழ்கள் எனக்கு மென் மேலும் அத்துறையில் ஊக்கத்தை அளித்து வந்தது.

▶ ***நீங்கள் உங்கள் இலக்கியப் பாதையில் யாரையேனும் முன்மாதிரியாக நினைத்ததுண்டா? அல்லது யாரேனும் உங்களுக்கு ஊக்குவிப்பாக அமைந்ததுண்டா?***

ஆம். நிச்சயமாக அதில் முதலிடம் புரட்சிக் கவி பாரதிக்கேதான். 1973 ஆம் ஆண்டு நான் ஏழாம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தபோது ஏறாவூர் றகுமானியா வித்தியாலயம் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது அதிபராக எனது தந்தை பாடசாலையைப் பொறுப்பேற்றார். அடுத்த ஆண்டு அங்கு ஒரு கலை கைப்பணிக் கண்காட்சி நடத்தப்பட்டது. அக்காலத்தில் அப்பாடசாலை வளர்ச்சியில் எனது தந்தையுடன் எங்கள் தாய் சகோதரர்கள் உட்பட முழுக்குடும்பமும் முழு மூச்சாய்ப் பாடுபட்டோம். எங்கள் வீடும் அப்பாடசாலையின் ஒரு பகுதியாகவே செயற்பட்டது. அவ்வேளையில் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வாக அரங்கேற்றுவதற்கு ஒரு குழு நடனம் பயிற்றுவிக்கப்பட்டது. அது பாரதியின் கும்மியடி பாடலுக்கான ஒரு நடனம்.

நான் அப்போது தற்போதைய அலிகார் மத்திய கல்லூரி (அப்போதைய பெயர் அலிகார் மகா வித்தியாலயம்) மாணவியாக இருந்த போதிலும் பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்கள் றகுமானியா வித்தியாலயத்துடனேயே கழிந்தது. மாணவிகளுக்கு கும்மி நடனம் பழக்கப்பட்ட பொழுதுகளில் மாலை நேரத்தில் நானும் அதில் இணைந்து கொண்டேன். அப்போதெல்லாம் பாரதியின் வரிகளில் முழுமையாக இலயித்தேன். அன்று என் மனதில் பதிந்த வரிகள் இன்று வரை என்னை வழிநடத்துகின்றது என்றே கூறுவேன்.

(20ஆம் பக்கம் பார்க்க)



# இந்துக்களின் தெய்வீக நதிகள்

சி.கே. முருகேசு...

மலை மற்றும் குன்றுகளின் மேல் கோவில்களை எழுப்பி வழிபடும் இந்துக்கள் அம்மலைகளையும், குன்றுகளையும் புனிதம் மிக்கதாக நம்பி வழிபடுவது போன்று, தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழியாதே என்ற பழமொழிக் கொப்ப நீர் வழங்கும் நதிகளையும் தெய்வமாகவே போற்றி வருகின்றனர். இவ்வாறு சில நதிகளை புனித நதிகளாக இந்துக்களினால் பேணப்படுவதை இந்தியாவிலும், இலங்கையிலும் காணலாம்.

## கல்யாணி நதி

புனித நதிகளுக்கு தாய் அந்தஸ்தை வழங்கிய இந்துக்கள் அவற்றிற்கு பெண் தெய்வங்களின் பெயர்களையே சூடினார். சிவ பக்தனாகிய இராவணன் காலம் முதல் தெய்வீகத் தன்மை வாய்ந்ததாக கருதப்பட்டு வந்த நதிதான் கல்யாணி நதி. இன்று பெயர் திரிபுபடுத்தப்பட்டு 'களனி நதி' என வழங்கப்படுகின்றது. இந்நதி சிவனடிபாதமலையில் உற்பத்தியாகி கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீவிஷ்ணு ஆலயம் அமைந்துள்ள பிரதேசத்தை அண்மித்ததாக இந்துமா கடலில் சங்கமமாகின்றது.

இராவணனின் புஷ்பக விமானம் தரையிறங்கியபோது எழுந்த பிரகாசமான வெளிச்சம் காரணமாக 'லக்ஷபான' எனப் பெயர் பெற்ற இடத்தில் பாய்ந்துவரும் இந்நதி பல கிளையாறுகளைத் தன்னகத்தே உள்வாங்கி இலங்கையின் மிகப் பெரிய நதிகளில் ஒன்றாக இத்தேசத்திற்கு வளம் சேர்க்கின்றது. சீதாபிராட்டியார் நீராடியமையினால் 'சீதா ஓயா' என பெயர்கொண்டு சிவனொளிபாத மலையை அண்மித்ததாக உற்பத்தியாகி மாளிபொட தெரனியகலை வழியாக பாய்ந்து களனி கங்கையுடன் கலக்கும் சிற்றாறு களனி நதியின் கிளை நதியேயாகும்.

பதினான்காம் நூற்றாண்டில் கஜபாகு மன்னனால் கட்டியெழுப்பப்பட்ட நவகமுக கண்ணகியம்மன் கோவில் (பத்தினி தேவாலயமும், சீதாவக்கை இராஜசிங்கனால் எழுப்பப்பட்ட கடுவெல கண்ணகி கோவிலும், சீதாவக்கை (பெரண்டி) கோவிலும், கபுலுமுல்ல கண்ணகியம்மன் கோவிலும் களனி நதிக்கரையில் எழுப்பப்பட்ட பண்டைய கோவில்களாகும். இவற்றில் அழிவுற்ற பெரண்டி கோவில் தவிர்ந்த ஏனைய தேவாலயங்களின் வருடாந்த உற்சவம் நிறைவுற்று தீர்த்தோற்சவம் வெகு சிறப்பாக களனி நதியிலேயே இன்று நிகழ்ந்து வருகின்றது.

பௌத்தர்களினால் இவ்வாறு இந்து சமய தீர்த்தோற்சவம் 'நீர்வெட்டு' என்னும் பெயரில் களனி கங்கையில் நிகழும் அதேவேளை, களனி நதிப் பள்ளத்தாக்கில் தமிழ் மக்கள் அதிகமாக வாழ்ந்துகொண்டிருக்கும் எட்டியாந்தோட்டை நகரில் எழுந்தருளியிருக்கும் மிகவும் பழைமையான, ஸ்ரீவிநாயகர் ஆலயம், ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயம் ஆகிய கோவில்களின் தீர்த்தோற்சவங்கள் விநாயகர் சதுர்த்தியிலும், மாசி மகத்திலும் அந்தணர்களினால் சைவாகம முறைப்படி களனி நதியில் மேற்கொள்ளப்படுகின்றன. சீதாவக்கையை ஆட்சிபுரிந்த முதலாம் இராஜசிங்கசன் பௌத்த சமயத்தைத துறந்து இந்து சமயத்தைச் சார்ந்தபோது களனியின் கிளை நதியான சீதா ஓயாவின் கரையிலேயே பெரண்டி கோவில் என்னும் இந்து கோவிலை எழுப்பினான்.

இந்துக்கள் களனி கங்கையை தமது புனித நதியாக போற்றி வந்தபோதும் பல்லின பல மதங்களைச் சார்ந்தோரைக் கொண்ட இந்நதிப் பள்ளத்தாக்கில் இந்நதியின் புனிதத்தைப் பேண முடியாதுள்ளது. இக்கங்கையின் கரையிலும் நீரிலும் அசுத்தங்களைச் சேர்ப்பது நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது.

தலைநகர் கொழும்பின் தாகம் தீர்க்கும் லபுகம நீர்த்தேக்கத்தின் தண்ணீர் களனி கங்கைக்குச் சொந்தமானதே. ஸ்ரீஇராமர் இராவணனை வதம் செய்துவிட்டு பாரதம் திரும்புகையில் களனிப் பிரதேசத்தில் விபிசனனிடம் இலங்கையை ஒப்படைத்துவிட்டு பயணமானதாகவும் அங்கு எழுப்பப்பட்ட விபீசணன் கோவிலே இன்றைய களனி தேவாலயம் எனவும் கூறப்படுகின்றது. இப்புனித பிரதேசமும் கல்யாணி நதியின் கரையிலேயே அமைந்துள்ளது.

## மாணிக்க கங்கை

கதிர்காம புனித பூமியின் நடுவே ஓடிக்கொண்டிருக்கும்தெய்வீகநதியேமாணிக்க கங்கையென அழைக்கப்படுகின்றது. இந்நதியில் நீராடிய பின்னரே இந்துக்களும், பௌத்தர்களும் கதிர்காம திருத்தலத்திற்குச் சென்று வழிபாடு மேற்கொள்வது நெடுங்கால வழக்கம்.

வள்ளியை முருகன் கவர்ந்த இடமாக கூறப்படும் செல்வக் கதிர்காமத்தில் ஸ்ரீ விநாயகர் ஆலயம் இந்நதியின் நடுவில் அமைந்துள்ளது. இங்கு முருகன் ஸ்ரீவிநாயகர் பெருமானின் உதவியை வேண்டி பிரார்த்தித்ததாகவும் அங்கு எழுந்தருளிய விநாயகர் பெருமான் வள்ளியை முருகன் மணம்புரிய ஒத்துழைத்ததாகவும் கூறப்படுகின்றது. தென்னிலங்கையில் ஓடும் புனித நதியாகிய மாணிக்க கங்கையின் புனிதத்தைப் பாதுகாக்கும் சக்தியற்றவர்களாக இந்துக்கள் உள்ளனர். இன்று அசுத்த நீராகவும், முதலைகள் வாழும் ஆபத்து மிக்க நதியாகவும் மாறியுள்ள மாணிக்க கங்கை கதிர்காம புனித பூமியை பசுமைப்படுத்தியும், பக்தர்களுக்கு பயன்படுவதாகவும் தனது கடமையை மௌனமாக நிறைவேற்றிய வண்ணம் ஓடிக்கொண்டிருக்கின்றது.

இலங்கையில் புனித நதிகளை பேணுவதில் சிரமங்கள் இருந்து வந்தபோதும், இந்தியாவில் இந்துக்கள் புனித நதிகளை புராண இதிகாச காலந்தொட்டு தமது தாயாக வழிபட்டு வருகின்றனர்.

கங்கை, யமுனை, கோதாவரி முதலிய பல புனித நதிகள் பாரத நாட்டுக்கு வளமும், அருளும் சேர்த்து வருகின்றன.

## கங்கை நதி

பாரத மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள ஒரு மகத்தான நதி கங்கை. வேறெந்த நதிக்கும் இல்லாத பெருமை கங்கைக்கு உண்டு. தெய்வீகத் தன்மையும், புனிதமானதுமான உலகின் ஒரே நதி கங்கை நதியேயாகும். பாரத தேசத்தின் இதயமாக விளங்கும் இந்நதி, இந்தியாவின் கல்வி, கலாசாரம், நாகரீகம் இவற்றுக்கெல்லாம் இருப்பிடமாகத் திகழ்கின்றது.

இதன்கரையில் தலை நிமிர்ந்து நின்ற சாம்ராஜ்யங்கள் பல அழிந்து பாழாயின அறிவாளிகளையும், ஞானிகளையும், மாவீரர்களையும் உருவாக்கிய பெருமை கங்கை நதிக்கு உண்டு.

'வானுலகத்து கங்கையை பூவுலகுக்குக் கொண்டு வந்தது பகீரதன். கங்கையைத் தன் ஜடாமுடியில் தாங்கி அதன் வேகத்தைக் கட்டுப்படுத்தியவர் சிவபெருமான். இந்த புராணக் கதைகள் நாமறிந்தவை.

இமயமலையின் உச்சியில் உருவாகும்



கங்கை, கீழே இறங்கி வந்து சமவெளியில் 2, 523 கிலோ மீற்றர்கள் ஓடி வங்காளத்தின் சுந்தரவனத்தில், கங்கை சமுத்திரம் என்னுமிடத்தில் வங்கக் கடலில் கலக்கிறது.

இமயமலையில் பனிபடர்ந்த கோமுகி என்னும் குகையில் 6613 மீற்றர் உயரத்தில் கங்கை தோன்றுகின்றது. உத்தர பிரதேசம், பீஹார், வங்காளம் ஆகிய மாநிலங்களின் வழியே ஓடி வங்கக் கடலில் சங்கமமாகிறது. இதன் வழியில் ஏராளமான புனித தலங்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பெரிய நகரங்கள் ஆயிரக்கணக்கான கிராமங்கள், பாலங்கள், அணைகள் என பனவற்றைக் கடந்தும் வளப்படுத்தியும் செல்கிறது கங்கை.

கங்கா தேவிக்கு கங்கோத்ரி என்னுமிடத்தில் ஒரு கோவில் உள்ளது. நதிகளைப் பெண்ணாக உருவகப்படுத்தி வழிபடும் இந்துக்கள் இங்கு கங்கைத் தாயை முதலை மீது நிற்கச் செய்து சிலை வடித்திருக்கின்றார்கள்.

கங்கோத்ரியில், கேதார்நாத் மலை முகட்டியிலிருந்து உற்பத்தியாகும் கேதார் நதி கங்கையுடன் இங்கே சேருகின்றது. இரண்டும் இணைந்து இறங்கும்போது ஜானவி என்ற நதிப்பெண்ணும் துணை சேருகின்றாள். மூவரும் இணைந்து ஒன்றாகி, கார்வால் மலையடிவாரத்தில் வழியே ஓடுகிறாள் கங்கை. தான்போகும் வழியெல்லாம் செழிப்பாக்குகின்றாள். தேவப் பிரயாகை என்னுமிடத்தில் 'அலக் நந்தா' என்னும் நதிப்பெண் வந்து சேர்ந்து கொள்கிறாள். இதன்பிறகு தான் இந்நதி கங்கையாகிறுது. இதுவரை இதன் பெயர் பகீரதி.

கங்கையின் நீர் அமிர்தம், நோய்களைப் போக்குவல்லது என்பது இந்திய மக்களின் நம்பிக்கை. முகலாய பேரரசர் அக்பர் கங்கைக் கரை நெடுகிலும் ஆட்களை நியமித்து அவ்வப்போது பல்வேறு இடங்களிலிருந்து கங்கை நீரைச் சேகரித்து அரண்மனைச் சமையல் கூடத்துக்கு அனுப்பி வைக்கும்படி உத்தரவிட்டிருந்தாரம். தனக்கான சமையலில் கங்கை நீர் சேர்க்கப்பட வேண்டும் என்பது அவர் விருப்பமாக இருந்திருக்கிறது.

ரிஷிகேசத்தில் கங்கன நீர் மிகவும் புனிதமானதாக போற்றப்படுகின்றது. பல மூலிகைத் தடங்களின் வழியே ஓடி வருவதால் அது நோய் தீர்க்கும் குணங்களைக் கொண்டது. ரிஷிகேசத்திலிருந்து ஹரித்வாரத்துக்கு வருகிறாள் கங்கைத் தாய். கங்கை நதி போகுமிடமெல்லாம் புண்ணிய தலங்களே!

ஹரித்வாரத்திலிருந்து கங்கைச் சமவெளியில் பயணம் செய்கிறாள். இப்பயணத்தில் கங்கையுடன் பல சகோதரிகள் (நதிகள்) இணைகிறார்கள். இதில் முக்கியமானது யமுனை, யமுனா கங்கையோடு கலக்குமிடத்தில் இன்னொரு நதியான சரஸ்வதியும் இணைவதாகக் கூறுவார்கள். ஆனால் இந்த நதி நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. மூன்று நதிகள் இணையும் இடம் திரிவேணி சங்கமம் என அழைக்கப்படுகிறது. ஹிந்தியில் பிரயாக் (பிரயாகை) என அழைப்பார்கள். வாரணாசியான காசி சேத்திரம் கங்கைக் கரையிலேயே அமைந்துள்ளது.

கங்கை நதி படகுப் போக்குவரத்துக்கு உகந்த நதி. இதன் கரையில் நகரங்களை, இராச்சியங்களை, அரசுகளை, அறிஞர்களை, ஞானிகளையெல்லாம் உருவாக்கிய நதி இது.

## யமுனை நதி

உலகில் மனிதர்கள் தோன்றுவற்கு முன்னாள் தோன்றியவள் யமுனை. இமயத்தின சிகரத்திலிருந்து பத்து கிலோ மீற்றர் மேற்கே 'பந்தர் பஞ்ச்' என்னுமிடத்தில் உற்பத்தியாகிறாள் யமுனை. அனுமானின் வாலுக்கு இராவணன் தீயிட்டு அத்தீயினால் இலங்கையைக் கொளுத்தினான் அனுமான். வாலில் எரிந்துகொண்டிருக்கும் தீயை இங்கு வந்துதான் அணைத்தானாம் அனுமான். ஆகவே இந்த இடத்துக்கு 'பந்தர் பஞ்ச்' என பெயர் வந்ததாக கதையும் உண்டு.

யமுனோத்திரி பனிமனைக்கு காளிந்தி பிரபாத்' என்றும் பெயர் உண்டு. யமுனோத்திரி இந்துக்களுக்கு புண்ணியதலமாகும். மாரி காலத்தில் இப்பிரதேசம் முழுதும் பனியால் மூடியிருக்கும். யாத்திரிகர்கள் யமுனோத்திரிக்கு வருவது சிறப்பாக மே, ஜூன் மாதங்களிலேயாகும்.

இந்துக்கள் நதிகளைப் பெண் தெய்வங்களாக வழிபடுவது வழக்கம். அதன் படியே ஆமை மீது நிற்கும் பெண்ணாக யமுனையை உருவகப்படுத்தி வழிபடுகின்றார்கள். அதற்கேற்றாற்போல யமுனை நதியின் கரைகளில் சிறியதும் பெரியதுமான ஆமைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன.

யமுனையின் ஊற்றுக்கண்ணாகிய யமுனோத்திரியில் நீரின் குளிர்ச்சி, யாத்திரிகளால் தாங்கிக்கொள்ள முடியாதவாறிருக்கும். ஆகவே இயற்கை அன்னை தனது மக்களிடம் கருணையோடு இப்பகுதியில் ஏராளமான வெந்நீர் ஊற்றுக்களை உருவாக்கிக்கொடுத்திருக்கின்றாள். குளிர்நீர் ஓடைகளுக்கு அருகிலேயே 'குண்டங்கள்' எனப்படும் இக்கொதிநீர் ஊற்றுக்கள் காணப்படுவது விந்தையாகும். அரிசி சாதகமாகவும், உருளைக்கிழங்கு வெந்து பக்குவமாகவும் சமைக்கப் படக் கூடிய அளவுக்கு இக்கொதிநீர் ஊற்றுக்களின் நீர் சூடாக இருக்கும்.

புராணங்களில் யமுனையைப் பற்றிய கதைகள் நிறைய உண்டு. யமுனையை ஆரியன் மகள் யமனின் சகோதரி என கூறுகிறார்கள். புகழ்பெற்ற கிரேக்க அறிஞர் டொலமியினால் 'த மோனா' என்றும், ரோமானியா பிளினியினால் 'ஜோமன்ஸ்' எனவும் அழைக்கப்பட்டிருக்கிறாள் யமுனை.

காளிந்தி முடிவிலிருந்து பிறந்ததால் 'காளிந்தி மகள்' – காளிந்தி என்ற பெயர்களும் உண்டு. உற்பத்தியாகும் போது சின்னஞ்சிறு ஓடையாக காணப்படும் யமுனை, பின்னர் பயங்கரமான வேகமும், அகலமும் கொண்ட பெருநதியாகின்றது.

யமனை வெற்றிகொண்ட மார்கண்டேயன் தவமியற்றியது இதன் கரையில் தான் யமுனா நதிக் கரையில் நீலநிற பைன் என்னும் விசேட பைன் மரங்களும் 'பிர்ச்' என்னும் விசேட பைன் மரங்களும், 'ஏராளமாக காணப்படுகின்றன. காகிதம் தோன்றுவதற்கு முன்னர் வடமொழி நூல்கள் இந்த பிர்ச் மரப்பட்டைகளிலேயே எழுதப்பட்டன. ஸ்ரீ கிருஷ்ணர் தனது பால்ய லீலைகளை நிகழ்த்தியது யமுனை நதிக்கரையோரப் பகுதிகளில் தானே? புகழ்பெற்ற "டேராடூன்' யமுனை நதிக் கரையில் தான் உள்ளது. அதுமட்டுமல்ல, மலை வாசஸ்தலங்களின் இராணியான 'முசௌரி' இருப்பதும் யமுனை நதிக்கரையிலேயே. பாரதத்தின் தலைநகராகிய டில்லியே, மகாபாரத காவியத்தில் இந்திர பிரஸ்த நகரமாக விளங்கியது. இது அமைந்திருந்தது. யமுனா நதிக் கரையிலேயேயாகும்.

பாரத சரித்திர நாயக்கர்களையும், சாம்ராஜ்யங்களையும் கண்டது யமுனை நதி. இரும்புத் தூண்,குதுப்மினார், தாஜ்மகால், அக்பரின் கனவு நகரம் பதேபூர்சிக்ரி, ஜும்ஆ மசூதி என இவையனைத்தும் யமுனாநதியோரத்து நினைவுச் சின்னங்கள்.

மொகலாய சாம்ராஜ்யத்தின் வாழ்வையும், தாழ்வையும் கண்டவள் யமுனை.

திரிவேணி சங்கமமாகிய அலகாபாத்தில், புனித கங்கையோடு சங்கமித்து இணையும் வரை, யமுனை தனக்கென தனியானதோர் சரித்திரம் படைத்துக் கொண்டவள். யமுனை நதி பாயும் பகுதிகளெல்லாம் செழிப்பும், சுபீட்சமும், சௌந்தர்யமும் நிறைந்த பகுதிகளாகும்.

## கோதாவரி நதி

இந்திய பெருநதிகளில் கோதாவரியும் ஒன்று. கோதாவரி மகாராஷ்டிர மாநிலத்தின் புதல்வியாகும். மிகவும் புனிதமான நதியாகப் போற்றப்படும் கோதாவரி நதியைக் கடந்து ஸ்ரீஇராமபிரான் இலங்கைக்குச் சென்றதாக புராணம் கூறுகின்றது. மகாராஷ்டிர மாநிலத்தில் 'நாசிக்' என்றொரு முக்கிய நகரம் உள்ளது. இந்தியாவின் தபால் தலைகள், கரன்சி நோட்டுகள் அச்சிடிக்கப்படும் அச்சகங்கள் இந்நகரத்திலேயே உள்ளன. இதற்குச் சற்று மேற்கே திரியம்பகம் என்னும் ஊர் உள்ளது. இந்த ஊரின் அருகே மேற்குத் தொடர்ச்சி மலையில் கோதாவரி நதி உற்பத்தியாகி, கிழக்கு முகமாக மகாராஷ்டிர மாநிலத்தில் ஓடுகிறது. பிறகு 'நந்தேத்' என்னும் இடத்துக்குக் கிழக்கே ஆந்திர மாநிலத்தில் புகுந்து, அங்கே அடிலாபாத், க்ரிம்நகர் ஆகிய மாவட்டங்களின் எல்லையாக ஓடுகிறது. பிறகு, மத்திய பிரதேசத்துக்கும், ஆந்திராவுக்கும் எல்லையாக ஓடுகிறது.

(10ஆம் பக்கம் பார்க்க)



# 22வது கொடகே தேசிய சாகித்திய விருது விழா 2020

22வது கொடகே தேசியச் சாகித்திய விருது விழா 2020 எதிர்வரும் 2020 செப்டம்பர் 10ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு, கொழும்பு 07, இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.



இவ்விழாவில் பேராசிரியர் சந்திர சிறி பள்ளியகுரு, பேராசிரியர் சுனந்த மஹேந்திர, எழுத்தாளர் எஸ். முத்து மீரன் ஆகியோர் சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழியிலான இலக்கிய வளர்ச்சிக்குச் செய்த பங்களிப்பைக் கௌரவிக்கும் முகமாகக் கொடகே வாழ்நாள் சாதனை விருதுகள் வழங்கப்படும்.

மேலும் 2019 ஆண்டு சிங்களம், தமிழ் ஆங்கிலம் மொழிகளில் வெளிவந்த நூல்களில் சிறந்த நூல்களுக்குக் கொடகே தேசியச் சாகித்திய விருதுகள் வழங்கப்படும்.

22 வதுகொடகே தேசியச் சாகித்திய விருது விழா 2020 எதிர்வரும் 2020 செப்டம்பர் 10ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு, கொழும்பு 07, இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பேராசிரியர் சந்திரசிறி பள்ளியகுரு, பேராசிரியர் சுனந்த மஹேந்திர, எழுத்தாளர் எஸ். முத்துமீரன் ஆகியோர் சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழியிலான இலக்கிய வளர்ச்சிக்குச் செய்த பங்களிப்பைக் கௌரவிக்கும் முகமாகக் கொடகே வாழ்நாள் சாதனை விருதுகள் வழங்கப்படும்.

மேலும் 2019 ஆண்டு சிங்களம், தமிழ் ஆங்கிலம் மொழிகளில் வெளிவந்த நூல்களில் சிறந்த நூல்களுக்குக் கொடகே தேசியச் சாகித்திய விருதுகள் வழங்கப்படும்.





# இந்துக்களின் தெய்வீக நதிகள்

சி.கே. முருகேசு...

மலை மற்றும் குன்றுகளின் மேல் கோவில்களை எழுப்பி வழிபடும் இந்துக்கள் அம்மலைகளையும், குன்றுகளையும் புனிதம் மிக்கதாக நம்பி வழிபடுவது போன்று, தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழியாதே என்ற பழமொழிக்கொப்ப நீர் வழங்கும் நதிகளையும் தெய்வமாகவே போற்றி வருகின்றனர். இவ்வாறு சில நதிகளை புனித நதிகளாக இந்துக்களினால் பேணப்படுவதை இந்தியாவிலும், இலங்கையிலும் காணலாம்.

## கல்யாணி நதி

புனித நதிகளுக்கு தாய் அந்தஸ்தை வழங்கிய இந்துக்கள் அவற்றிற்கு பெண் தெய்வங்களின் பெயர்களையே சூடினார். சிவபக்தனாகிய இராவணன் காலம் முதல் தெய்வீகத் தன்மை வாய்ந்ததாக கருதப்பட்டு வந்த நதிதான் கல்யாணி நதி. இன்று பெயர் திரிபுபடுத்தப்பட்டு 'களனி நதி' என வழங்கப்படுகின்றது. இந்நதி சிவனடிபாதமலையில் உற்பத்தியாகி கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீவிஷ்ணு ஆலயம் அமைந்துள்ள பிரதேசத்தை அண்மித்ததாக இந்துமா கடலில் சங்கமமாகின்றது.

இராவணனின் புஷ்பக விமானம் தரையிறங்கியபோது எழுந்த பிரகாசமான வெளிச்சம் காரணமாக 'லக்ஷபான' எனப் பெயர் பெற்ற இடத்தில் பாய்ந்துவரும் இந்நதி பல கிளையாறுகளைத் தன்னகத்தே உள்வாங்கி இலங்கையின் மிகப் பெரிய நதிகளில் ஒன்றாக இத்தேசத்திற்கு வளம் சேர்க்கின்றது. சீதாபிராட்டியார் நீராடியமையினால் 'சீதா ஓயா' என பெயர்கொண்டு சிவனொளிபாத மலையை அண்மித்ததாக உற்பத்தியாகி மாளிபொட தெரனியகலை வழியாக பாய்ந்து களனி கங்கையுடன் கலக்கும் சிற்றாறு களனி நதியின் கிளை நதியேயாகும்.

பதினான்காம் நூற்றாண்டில் கஜபாகு மன்னனால் கட்டியெழுப்பப்பட்ட நவகமுக கண்ணகியம்மன் கோவில் (பத்தினி தேவாலயமும், சீதாவக்கை இராஜசிங்கனால் எழுப்பப்பட்ட கடுவெல கண்ணகி கோவிலும், சீதாவக்கை (பெரண்டி) கோவிலும், கபுலுமுல்ல கண்ணகியம்மன் கோவிலும் களனி நதிக்கரையில் எழுப்பப்பட்ட பண்டைய கோவில்களாகும். இவற்றில் அழிவுற்ற பெரண்டி கோவில் தவிர்ந்த ஏனைய தேவாலயங்களின் வருடாந்த உற்சவம் நிறைவுற்று தீர்த்தோற்சவம் வெகு சிறப்பாக களனி நதியிலேயே இன்று நிகழ்ந்து வருகின்றது.

பௌத்தர்களினால் இவ்வாறு இந்து சமய தீர்த்தோற்சவம் 'நீர்வெட்டு' என்னும் பெயரில் களனி கங்கையில் நிகழும் அதேவேளை, களனி நதிப் பள்ளத்தாக்கில் தமிழ் மக்கள் அதிகமாக வாழ்ந்துகொண்டிருக்கும் எட்டியாந்தோட்டை நகரில் எழுந்தருளியிருக்கும் மிகவும் பழைமையான, ஸ்ரீவிநாயகர் ஆலயம், ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயம் ஆகிய கோவில்களின் தீர்த்தோற்சவங்கள் விநாயகர் சதுர்த்தியிலும், மாசி மகத்திலும் அந்தணர்களினால் சைவாகம முறைப்படி களனி நதியில் மேற்கொள்ளப்படுகின்றன. சீதாவக்கையை ஆட்சிபுரிந்த முதலாம் இராஜசிங்கசன் பௌத்த சமயத்தைத துறந்து இந்து சமயத்தைச் சார்ந்தபோது களனியின் கிளை நதியான சீதா ஓயாவின் கரையிலேயே பெரண்டி கோவில் என்னும் இந்து கோவிலை எழுப்பினான்.

இந்துக்கள் களனி கங்கையை தமது புனித நதியாக போற்றி வந்தபோதும் பல்லின பல மதங்களைச் சார்ந்தோரைக் கொண்ட இந்நதிப் பள்ளத்தாக்கில் இந்நதியின் புனிதத்தைப் பேண முடியாதுள்ளது. இக்கங்கையின் கரையிலும் நீரிலும் அசுத்தங்களைச் சேர்ப்பது நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது.

தலைநகர் கொழும்பின் தாகம் தீர்க்கும் லபுகம நீர்த்தேக்கத்தின் தண்ணீர் களனி கங்கைக்குச் சொந்தமானதே. ஸ்ரீஇராமர் இராவணனை வதம் செய்துவிட்டு பாரதம் திரும்புகையில் களனிப் பிரதேசத்தில் விபிசனனிடம் இலங்கையை ஒப்படைத்துவிட்டு பயணமானதாகவும் அங்கு எழுப்பப்பட்ட விபீசணன் கோவிலே இன்றைய களனி தேவாலயம் எனவும் கூறப்படுகின்றது. இப்புனித பிரதேசமும் கல்யாணி நதியின் கரையிலேயே அமைந்துள்ளது.

## மாணிக்க கங்கை

கதிர்காம புனித பூமியின் நடுவே ஓடிக்கொண்டிருக்கும்தெய்வீகநதியேமாணிக்க கங்கையென அழைக்கப்படுகின்றது. இந்நதியில் நீராடிய பின்னரே இந்துக்களும்,பௌத்தர்களும் கதிர்காம திருத்தலத்திற்குச் சென்று வழிபாடு மேற்கொள்வது நெடுங்கால வழக்கம்.

வள்ளியை முருகன் கவர்ந்த இடமாக கூறப்படும் செல்வக் கதிர்காமத்தில் ஸ்ரீ விநாயகர் ஆலயம் இந்நதியின் நடுவில் அமைந்துள்ளது. இங்கு முருகன் ஸ்ரீவிநாயகர் பெருமானின் உதவியை வேண்டி பிரார்த்தித்ததாகவும் அங்கு எழுந்தருளிய விநாயகர் பெருமான் வள்ளியை முருகன் மணம்புரிய ஒத்துழைத்ததாகவும் கூறப்படுகின்றது. தென்னிலங்கையில் ஓடும் புனித நதியாகிய மாணிக்க கங்கையின் புனிதத்தைப் பாதுகாக்கும் சக்தியற்றவர்களாக இந்துக்கள் உள்ளனர். இன்று அசுத்த நீராகவும், முதலைகள் வாழும் ஆபத்து மிக்க நதியாகவும் மாறியுள்ள மாணிக்க கங்கை கதிர்காம புனித பூமியை பசுமைப்படுத்தியும், பக்தர்களுக்கு பயன்படுவதாகவும் தனது கடமையை மௌனமாக நிறைவேற்றிய வண்ணம் ஓடிக்கொண்டிருக்கின்றது.

இலங்கையில் புனித நதிகளை பேணுவதில் சிரமங்கள் இருந்து வந்தபோதும், இந்தியாவில் இந்துக்கள் புனித நதிகளை புராண இதிகாச காலந்தொட்டு தமது தாயாக வழிபட்டு வருகின்றனர்.

கங்கை, யமுனை, கோதாவரி முதலிய பல புனித நதிகள் பாரத நாட்டுக்கு வளமும், அருளும் சேர்த்து வருகின்றன.



## கங்கை நதி

பாரத மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள ஒரு மகத்தான நதி கங்கை. வேறெந்த நதிக்கும் இல்லாத பெருமை கங்கைக்கு உண்டு. தெய்வீகத் தன்மையும், புனிதமானதுமான உலகின் ஒரே நதி கங்கை நதியேயாகும். பாரத தேசத்தின் இதயமாக விளங்கும் இந்நதி, இந்தியாவின் கல்வி, கலாசாரம், நாகரீகம் இவற்றுக்கெல்லாம் இருப்பிடமாகத் திகழ்கின்றது.

இதன்கரையில் தலை நிமிர்ந்து நின்ற சாம்ராஜ்யங்கள் பல அழிந்து பாழாயின அறிவாளிகளையும், ஞானிகளையும், மாவீரர்களையும் உருவாக்கிய பெருமை கங்கை நதிக்கு உண்டு.

'வானுலகத்து கங்கையை பூவுலகுக்குக் கொண்டு வந்தது பகீரதன். கங்கையைத் தன் ஜடாமுடியில் தாங்கி அதன் வேகத்தைக் கட்டுப்படுத்தியவர் சிவபெருமான். இந்த புராணக் கதைகள் நாமறிந்தவை.

இமயமலையின் உச்சியில் உருவாகும் கங்கை, கீழே இறங்கி வந்து சமவெளியில் 2, 523 கிலோ மீற்றர்கள் ஓடி வங்காளத்தின் சுந்தரவனத்தில், கங்கை சமுத்திரம் என்னுமிடத்தில் வங்கக் கடலில் கலக்கிறது.

இமயமலையில் பனிபடர்ந்த கோமுகி என்னும் குகையில் 6613 மீற்றர் உயரத்தில் கங்கை தோன்றுகின்றது. உத்தர பிரதேசம, பீஹார், வங்காளம் ஆகிய மாநிலங்களின் வழியே ஓடி வங்கக் கடலில் சங்கமமாகிறது. இதன் வழியில் ஏராளமான புனித தலங்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பெரிய நகரங்கள் ஆயிரக்கணக்கான கிராமங்கள், பாலங்கள், அணைகள் என பனவற்றைக் கடந்தும் வளப்படுத்தியும் செல்கிறது கங்கை.

கங்கா தேவிக்கு கங்கோத்ரி என்னுமிடத்தில் ஒரு கோவில் உள்ளது. நதிகளைப் பெண்ணாக உருவகப்படுத்தி வழிபடும் இந்துக்கள் இங்கு கங்கைத் தாயை முதலை மீது நிற்கச் செய்து சிலை வடித்திருக்கின்றார்கள்.

கங்கோத்ரியில், கேதார்நாத் மலை முகட்டியிலிருந்து உற்பத்தியாகும் கேதார் நதி கங்கையுடன் இங்கே சேருகின்றது. இரண்டும் இணைந்து இறங்கும்போது ஜானவி என்ற நதிப்பெண்ணும் துணை சேருகின்றாள். மூவரும் இணைந்து ஒன்றாகி, கார்வால் மலையடிவாரத்தில் வழியே ஓடுகிறாள் கங்கை. தான்போகும் வழியெல்லாம் செழிப்பாக்குகின்றாள். தேவப் பிரயாகை என்னுமிடத்தில் 'அலக் நந்தா' என்னும் நதிப்பெண் வந்து சேர்ந்து கொள்கிறாள். இதன்பிறகு தான் இந்நதி கங்கையாகிறுது. இதுவரை இதன் பெயர் பகீரதி.

கங்கையின் நீர் அமிர்தம், நோய்களைப் போக்குவல்லது என்பது இந்திய மக்களின் நம்பிக்கை. முகலாய பேரரசர் அக்பர் கங்கைக் கரை நெடுகிலும் ஆட்களை நியமித்து அவ்வப்போது பல்வேறு இடங்களிலிருந்து கங்கை நீரைச் சேகரித்து அரண்மனைச் சமையல் கூடத்துக்கு அனுப்பி வைக்கும்படி உத்தரவிட்டிருந்தாரம். தனக்கான சமையலில் கங்கை நீர் சேர்க்கப்பட வேண்டும் என்பது அவர் விருப்பமாக இருந்திருக்கிறது.



ரிஷிகேசத்தில் கங்கன நீர் மிகவும் புனிதமானதாக போற்றப்படுகின்றது. பல மூலிகைத் தடங்களின் வழியே ஓடி வருவதால் அது நோய் தீர்க்கும் குணங்களைக் கொண்டது. ரிஷிகேசத்திலிருந்து ஹரித்வாரத்துக்கு வருகிறாள் கங்கைத் தாய். கங்கை நதி போகுமிடமெல்லாம் புண்ணிய தலங்களே!

ஹரித்வாரத்திலிருந்து கங்கைச் சமவெளியில் பயணம் செய்கிறாள். இப்பயணத்தில் கங்கையுடன் பல சகோதரிகள் (நதிகள்) இணைகிறார்கள். இதில் முக்கியமானது யமுனை, யமுனா கங்கையோடு கலக்குமிடத்தில் இன்னொரு நதியான சரஸ்வதியும் இணைவதாகக் கூறுவார்கள். ஆனால் இந்த நதி நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. மூன்று நதிகள் இணையும் இடம் திரிவேணி சங்கமம் என அழைக்கப்படுகிறது. ஹிந்தியில் பிரயாக் (பிரயாகை) என அழைப்பார்கள். வாரணாசியான காசி சேத்திரம் கங்கைக் கரையிலேயே அமைந்துள்ளது.

கங்கை நதி படகுப் போக்குவரத்துக்கு உகந்த நதி. இதன் கரையில் நகரங்களை, இராச்சியங்களை, அரசுகளை, அறிஞர்களை, ஞானிகளையெல்லாம் உருவாக்கிய நதி இது.

## யமுனை நதி

உலகில் மனிதர்கள் தோன்றுவற்கு முன்னாள் தோன்றியவள் யமுனை. இமயத்தின சிகரத்திலிருந்து பத்து கிலோ மீற்றர் மேற்கே 'பந்தர் பஞ்ச்' என்னுமிடத்தில் உற்பத்தியாகிறாள் யமுனை. அனுமானின் வாலுக்கு இராவணன் தீயிட்டு அத்தீயினால் இலங்கையைக் கொளுத்தினான் அனுமான். வாலில் எரிந்துகொண்டிருக்கும் தீயை இங்கு வந்துதான் அணைத்தானாம் அனுமான். ஆகவே இந்த இடத்துக்கு 'பந்தர் பஞ்ச்' என பெயர் வந்ததாக கதையும் உண்டு.

யமுனோத்திரி பனிமனைக்கு காளிந்தி பிரபாத்' என்றும் பெயர் உண்டு. யமுனோத்திரி இந்துக்களுக்கு புண்ணியதலமாகும். மாரி காலத்தில் இப்பிரதேசம் முழுதும் பனியால் மூடியிருக்கும். யாத்திரிகர்கள் யமுனோத்திரிக்கு வருவது சிறப்பாக மே, ஜூன் மாதங்களிலேயாகும்.

இந்துக்கள் நதிகளைப் பெண் தெய்வங்களாக வழிபடுவது வழக்கம். அதன்படியே ஆமை மீது நிற்கும் பெண்ணாக யமுனையை உருவகப்படுத்தி வழிபடுகின்றார்கள். அதற்கேற்றாற்போல யமுனை நதியின் கரைகளில் சிறியதும் பெரியதுமான ஆமைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன.

யமுனையின் ஊற்றுக்கண்ணாகிய யமுனோத்திரியில் நீரின் குளிர்ச்சி, யாத்திரிகளால் தாங்கிக்கொள்ள முடியாதவாறிருக்கும். ஆகவே இயற்கை அன்னை தனது மக்களிடம் கருணையோடு இப்பகுதியில் ஏராளமான வெந்நீர் ஊற்றுக்களை உருவாக்கிக்கொடுத்திருக்கின்றாள். குளிர்நீர் ஓடைகளுக்கு அருகிலேயே 'குண்டங்கள்' எனப்படும் இக்கொதிநீர் ஊற்றுக்கள் காணப்படுவது விந்தையாகும். அரிசி சாதகமாகவும், உருளைக்கிழங்கு வெந்து பக்குவமாகவும் சமைக்கப் படக் கூடிய அளவுக்கு இக்கொதிநீர் ஊற்றுக்களின் நீர் சூடாக இருக்கும்.

புராணங்களில் யமுனையைப் பற்றிய கதைகள் நிறைய உண்டு. யமுனையை ஆரியன் மகள் யமனின் சகோதரி என கூறுகிறார்கள். புகழ்பெற்ற கிரேக்க அறிஞர் டொலமியினால் 'த மோனா' என்றும், ரோமானியா பிளினியினால் 'ஜோமன்ஸ்' எனவும் அழைக்கப்பட்டிருக்கிறாள் யமுனை.

காளிந்தி முடிவிலிருந்து பிறந்ததால் 'காளிந்தி மகள்' – காளிந்தி என்ற பெயர்களும் உண்டு. உற்பத்தியாகும் போது சின்னஞ்சிறு ஓடையாக காணப்படும் யமுனை, பின்னர் பயங்கரமான வேகமும், அகலமும் கொண்ட பெருநதியாகின்றது.

யமனை வெற்றிகொண்ட மார்கண்டேயன் தவமியற்றியது இதன் கரையில் தான் யமுனா நதிக் கரையில் நீலநிற பைன் என்னும் விசேட பைன் மரங்களும் 'பிர்ச்' என்னும் விசேட பைன் மரங்களும், 'ஏராளமாக காணப்படுகின்றன. காகிதம் தோன்றுவதற்கு முன்னர் வடமொழி நூல்கள் இந்த பிர்ச் மரப்பட்டைகளிலேயே எழுதப்பட்டன. ஸ்ரீ கிருஷ்ணர் தனது பால்ய லீலைகளை நிகழ்த்தியது யமுனை நதிக்கரையோரப் பகுதிகளில் தானே? புகழ்பெற்ற "டேராடூன்' யமுனை நதிக் கரையில் தான் உள்ளது. அதுமட்டுமல்ல, மலை வாசஸ்தலங்களின் இராணியான 'முசௌரி' இருப்பதும் யமுனை நதிக்கரையிலேயே. பாரதத்தின் தலைநகராகிய டில்லியே, மகாபாரத காவியத்தில் இந்திர பிரஸ்த நகரமாக விளங்கியது. இது அமைந்திருந்தது. யமுனா நதிக் கரையிலேயேயாகும்.

பாரத சரித்திர நாயக்கர்களையும், சாம்ராஜ்யங்களையும் கண்டது யமுனை நதி. இரும்புத் தூண்,குதுப்மினார், தாஜ்மகால், அக்பரின் கனவு நகரம் பதேபூர்சிக்ரி, ஜும்ஆ மசூதி என இவையனைத்தும் யமுனாநதியோரத்து நினைவுச் சின்னங்கள்.

மொகலாய சாம்ராஜ்யத்தின் வாழ்வையும், தாழ்வையும் கண்டவள் யமுனை.

திரிவேணி சங்கமமாகிய அலகாபாத்தில், புனித கங்கையோடு சங்கமித்து இணையும் வரை, யமுனை தனக்கென தனியானதோர் சரித்திரம் படைத்துக் கொண்டவள். யமுனை நதி பாயும் பகுதிகளெல்லாம் செழிப்பும், சுபீட்சமும், சௌந்தர்யமும் நிறைந்த பகுதிகளாகும்.

## கோதாவரி நதி

இந்திய பெருநதிகளில் கோதாவரியும் ஒன்று. கோதாவரி மகாராஷ்டிர மாநிலத்தின் புதல்வியாகும். மிகவும் புனிதமான நதியாகப் போற்றப்படும் கோதாவரி நதியைக் கடந்து ஸ்ரீஇராமபிரான் இலங்கைக்குச் சென்றதாக புராணம் கூறுகின்றது. மகாராஷ்டிர மாநிலத்தில் 'நாசிக்' என்றொரு முக்கிய நகரம் உள்ளது. இந்தியாவின் தபால் தலைகள், கரன்சி நோட்டுகள் அச்சிடிக்கப்படும் அச்சகங்கள் இந்நகரத்திலேயே உள்ளன. இதற்குச் சற்று மேற்கே திரியம்பகம் என்னும் ஊர் உள்ளது. இந்த ஊரின் அருகே மேற்குத் தொடர்ச்சி மலையில் கோதாவரி நதி உற்பத்தியாகி, கிழக்கு முகமாக மகாராஷ்டிர மாநிலத்தில் ஓடுகிறது. பிறகு 'நந்தேத்' என்னும் இடத்துக்குக் கிழக்கே ஆந்திர மாநிலத்தில் புகுந்து, அங்கே அடிலாபாத், க்ரிம்நகர் ஆகிய மாவட்டங்களின் எல்லையாக ஓடுகிறது. பிறகு, மத்திய பிரதேசத்துக்கும், ஆந்திராவுக்கும் எல்லையாக ஓடுகிறது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# 22வது கொடகே தேசிய சாகித்திய விருது விழா 2020

22வது கொடகே தேசியச் சாகித்திய விருது விழா 2020 எதிர்வரும் 2020 செப்டம்பர் 10ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு, கொழும்பு 07, இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பேராசிரியர் சந்திர சிறி பள்ளியகுரு, பேராசிரியர் சுனந்த மஹேந்திர, எழுத்தாளர் எஸ். முத்து மீரன் ஆகியோர் சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழியிலான இலக்கிய வளர்ச்சிக்குச் செய்த பங்களிப்பைக் கௌரவிக்கும் முகமாகக் கொடகே வாழ்நாள் சாதனை விருதுகள் வழங்கப்படும்.



மேலும் 2019 ஆண்டு சிங்களம், தமிழ் ஆங்கிலம் மொழிகளில் வெளிவந்த நூல்களில் சிறந்த நூல்களுக்குக் கொடகே தேசியச் சாகித்திய விருதுகள் வழங்கப்படும்.

22 வதுகொடகே தேசியச் சாகித்திய விருது விழா 2020 எதிர்வரும் 2020 செப்டம்பர் 10ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு, கொழும்பு 07, இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பேராசிரியர் சந்திரசிறி பள்ளியகுரு, பேராசிரியர் சுனந்த மஹேந்திர, எழுத்தாளர் எஸ். முத்துமீரன் ஆகியோர் சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழியிலான இலக்கிய வளர்ச்சிக்குச் செய்த பங்களிப்பைக் கௌரவிக்கும் முகமாகக் கொடகே வாழ்நாள் சாதனை விருதுகள் வழங்கப்படும்.

மேலும் 2019 ஆண்டு சிங்களம், தமிழ் ஆங்கிலம் மொழிகளில் வெளிவந்த நூல்களில் சிறந்த நூல்களுக்குக் கொடகே தேசியச் சாகித்திய விருதுகள் வழங்கப்படும்.



# காயான்குடா கிராம மக்களின் மனக்குமுறல்கள் தீர்வது எப்போது?



வ.சக்திவேல்

ஆதி காலத்தில் மக்கள் காடுகளிலும், சேரிப்புறங்களிலும், வாழ்ந்து வந்தார்கள், பின்னர் காலம் செல்லச் செல்ல தேவைகள் அதிகரிக்க, அதிகரிக்க, சற்று ஊர்ந்து சென்று ஒன்று கூடி வாழப்பழகிக் கொண்டார்கள், காலப்போக்கில் அவ்வாறான இடங்கள் "ஊர்" என அழைக்கப்படலாயிற்று. பின்னர் ஊர்களில் கூடி வாழ்ந்த மக்கள், நாகரீக மாற்றங்களும், சேவைகளும், வசதி வாய்ப்புக்களும், அதிகரிக்க அதிகரிக்க, சற்று நகர்ந்து வாழத் தொடங்கினார்கள், காலப்போக்கில் அவ்வாறான இடங்கள் "நகர்" என அழைக்கப்படலாயிற்று. இவ்வாறு மக்கள் மெல்ல மெல்ல தமது பரிணாம வளர்ச்சிப் போக்கை காலத்திற்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள்.

ஆனாலும் இன்னும் இவ்வாறான பல்வேறுபட்ட பகுதிகள், கிராமங்கள், கிராமங்களாகவேதான் எதுவித வளர்ச்சிப்போக்குகளும் இன்றி இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. காலத்திற்கு காலம் வருகின்ற மக்கள் பிரதிநிதிகளும். அவர்களால் இயன்ற சிற்சில உதவிகளை இவ்வாறான கிராமங்களுக்கு மேற்கொண்டு வந்தாலும் அவ்வாறான உதவிகளால் அக்கிராமங்கள் தன்னிறைவு அடைந்துவிட்டது என தீர்மானித்துவிட முடியாது.

இந்நிலையில் கடந்த யுத்த காலத்திலும், பின் தொடர்ந்த சுனாமி, மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கு மத்தியிலும் உள்ளூர் மற்றும் சர்தேச தன்னார்வ தொண்டர் நிறுவனங்களும் இவ்வாறான வறுமைக்குட்பட்ட கிராமங்களை அடையாளம் கண்டு பல அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தன. இடைப்பட்ட காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பல சர்வதேச தன்னார்வ தொண்டர் அமைப்புக்கள் வெளியேறியதை அடுத்து அவர்களினால் முன்னெடுக்கப்பட்டு வந்த சேவைகளும் தடைப்படலாயிற்று. எது எவ்வாறு அமைந்தாலும் அரசாங்கமும், அதிகாரிகளும், இவ்வாறான மக்களின் துன்ப துயரங்களை முடிந்தளவேனும் துடைத்தெறிய வழிசமைக்க வேண்டியதும் கடப்பாடாகும்.

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பற்று (செங்கலடி) பிரதேச செயலாளர்பிரிவுக்கு உட்பட்ட கொடுவாமடு கிரமசேவையாளர் பிரிவில் உள்ளடங்கும் கிராமமே காயங்குடாவாகும். இக்கிராம மக்கள் கடந்த யுத்த காலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டு முற்றாக இடம்பெயர்ந்து மீண்டும் மீளக் குடியமர்ந்த போதும் பல சவால்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாக அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவ்விடையம் குறித்தே இக்கட்டுரையில் ஆராய்கின்றோம்.



திருச்செல்வி



யுனித்ரா



பாக்கியம்

செங்கலடியிலிருந்து சுமார் 04 கிலோ மீற்றர் தொலைவில் பதுளை வீதியை அண்டிய பகுதியில் அமைந்துள்ளதே கொடுவாமடு கிராமசேவையாளர் பிரிவுக்குபட்ட காயான்குடா எனும் கிராமமாகும். அந்த கிராம மக்கள் தமது வாழ்வைக் கொண்டு நடாத்துவதற்கு தற்கால நவீன யுகத்திலும் பல சொல்லொணாத் துயரங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

எங்களுக்கு குடிநீர் இல்லாமலுள்ளது இதனால் நாம் தினமும் பல அவஸ்ததைகளுக்குள் வாழ்ந்து வருகின்றோம். எமக்கு குழாய்க் கிணறு அல்லது கிணறு போன்றவற்றையாவது அமைத்துத்துத் தருமாறு கேட்கின்றோம். இக்கிராமத்திற்கு நங்கள் வந்து சுமார் 50 வருடங்களுக்கு மேலாகின்றது அன்றிலிலுருந்து இன்றுவரையில் இவ்வாறுதான் குடிநீருக்காக அலைந்து திரிகின்றோம். சிலவேளைகளில் நாம் குளிக்காமலும் இருந்துள்ளோம், ஏன்தான் இந்த ஊருக்கு வந்து குடியேறினோம் என நினைக்கத் தோணுகின்றது, என தனது ஆதங்கத்தைத் தழுதழுத்த குரலில் தெரிவித்தார், 76 வயதுடைய சிவசுந்தரம் பாக்கியம்.

இந்நிலையில் காயான்குடா கிராமத்தைச் சேர்ந்த ஜீவாகரன் யுனித்திரா அவரது கிராமத்தைப் பற்றித் தெரிவிக்கையில்' எமது கிராமம் வரட்சியின் பிடியில் வாழ்ந்து வருகின்றது. குடிக்கவோ, குளிக்கவோ, மலசலகூடங்களுக்குப் பயன்படுத்தவோ தண்ணீர் இல்லாமலுள்ளது. எமது கிராமத்திற்கு சற்றுத் தொலைவில் குளம் ஒன்று உள்ளது. அதிலும் நீர் வற்றியுள்ளது. அக்குளத்தில் சிறிதளவு நீர் தற்போது உள்ளது அதில் அட்டைகள் அதிகம் உள்ளன. அந்த தண்ணீரைப் பயன்படுத்த முடியாதுள்ளது. பிரதேச சபையினால் எமக்கு 8 நாட்களுக்கு ஒருதடவை வவுசர் மூலம் தண்ணீர் தருகின்றார்கள், அதுவும் ஒழுங்காக கிடைப்பதில்லை. குழாய் மூலமான குடிநீர் பல இடங்களில் வழங்கப்படுவதாக நாம் அறிகின்றோம் அதனைக்கூட எமக்கு யாரும் பெற்றுத்தருகின்றார்கள் இல்லை. எமது பிள்ளைகள் அதிகாலையில் எழுந்து மிக நீண்ட தூரம் வயல் வெளிகளைக் கடந்துதான் குளிப்பதற்குப் போகவேண்டும். அதன்பின்னர் காலை 8 மணிக்கும் பின்னர்தான் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய சூழல் உள்ளது. எமக்கு குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தந்தால் அவர்களுக்கு பெரும் புண்ணியம் கிடைக்கும். குழாய் மூலமான குடிநீர் எமக்கு தருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள் ஆனால் இன்னும் அது நடைபெறவில்லை என அவர் தனது ஆதங்கத்தைத் தெரிவித்தார்.

எமது கிராமத்தில் 135 குடும்பங்கள் உள்ளன. அதிலே சுமார் 50 பேருக்குத்தான் கல்வீடுகள் உள்ளன, ஏனைய அனைவரும் தகரக் கொட்டகையில்தான் வாழ்ந்து வருகின்றார்கள். தற்போது வாழ்ந்து வரும் தகரக் கொட்டகைகளும் பழுதடைந்துள்ளன. யுத்தத்திற்கு முன்னர் நாம் வாழ்ந்து வந்த மண் வீடுகளும் செல் வீச்சில் உடைந்து விட்டன. தற்போது எமது மக்கள் வாழும் ஒரு அறையைக் கொண்ட தகரக் கொட்டகைக்குள் இருந்து கொண்டுதான் பிள்ளைகளின் படிப்பு, தூக்கம், சமையல், எல்லாம் அதற்குள்ளேதான் இருந்து வருகின்றது. எமது கிராமத்திலல் பாடசாலைக்குச் செல்லும் வீதி மிக நீண்ட காலமாகவிருந்து பழுதடைந்து கிடைக்கின்றது. தேர்தல் காலத்தில் மாத்திரம் வாக்கு கேட்பதற்கு மாத்திரம் வருகின்றார்கள் பின்னர் வருகின்றார்கள் இல்லை. என தெரிவிக்கின்றார் தவராசா திருச்செல்வி.



செங்கலடிப் பகுதியை அண்டிய மக்கள் ஏறாவூர், குடியிருப்பு, உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்து, மக்கள் ஆரம்பகாலத்தில் காயான்குடா பகுதிக்கு வந்து காடு வெட்டி, பயிர்செய்து சிறிய சிறிய குடிசைகள் அமைந்து வாழ்ந்து வந்துள்ளார்கள், பின்னர் காலப்போக்கில் பலரும் பல இடங்களிலுமிருந்து வந்து குடியேறி தற்போது ஊராக மாறியுள்ளது. ஆரம்ப காலத்திலிருந்ததைவிட அக்கிராமம் தற்போது முன்னேறியுள்ளது. ஆனாலும் இன்னும் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருந்து கொண்டேதான் உள்ளன. ஒழுங்கான வீடுவாசல் இல்லை, பலரும் பலமுறை வந்து பல வாக்குறுதிகளைக் வழங்கி விட்டுத்தான் சென்றார்கள் இதனால் இதுவரைக்கும் நாம் எதனையும் பயனாக அனுபவித்தது இல்லை. குறைந்தது எமது வீதியைக்கூடப் புனரமைத்துத் தருகின்றார்கள் இல்லை. மிகவும் வேதனையாக உள்ளது. என அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் எமது கிராமத்தில் அதிகம்பேருக்கு மலசலகூட வசதி கூட இல்லை இதனால் நாங்கள் பல சுகாதார சீர்கேடுகளையும் எதிர்கொண்டு வருகின்றோம். செங்கலடி, மட்டக்களப்பு நகரிலுள்ள மக்களைப்போல வாழ்வதற்கு எமக்கு ஆசைதான் ஆனால் எமக்கு அடிப்படைப் பிரச்சனையாகவுள்ள பல பிரச்சினைகள் இன்னும் தீர்வுகாணப்பட வில்லையே என்ன செய்வது நாம் வேறு இடங்களுக்கு குடியேறிப் போகலாம் ஆனால் இந்த கிராமத்தை விட்டு விட்டு போக முடியாதுள்ளது. தொழில் ரீதியாகவும், நாம் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றோம். எமது கிராமத்திற்கு சற்று தொலைவில் சிறிய குளம் ஒன்று உள்ளது. அதிலும் தற்போது நீர் வற்றியுள்ளது. அக்குளத்தைப் புனரமைத்து பெரியதாக்கினால்கூட எமக்கு அதனை வைத்துக் கொண்டு தோட்டங்கள் செய்து எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தலாம்.

எமது கிராமத்தில் முன்பை விட தற்போது படிப்பிலும் பிள்ளைகள் ஆர்வமாகவுள்ளார்கள், அதிகமாக பிள்ளைகள், கல்விப் பொதுத்தர சாதாரணதரம், உயர்தரம், கற்றவர்கள் அதிகம் பேர் உள்ளார்கள், ஆனால் அவர்கள் அனைவரும் எதுவித தொழில் வாய்ப்புக்கள் இன்றி வீட்டிலிருக்கின்றார்கள். எப்படியாவது மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து பிள்ளைகளின் படிப்பு செலவு, உடை, மருத்துவ செலவு, மற்றும் உணவுக்கும்தான் எம்மால் வருமானத்தை ஓரளவு ஈட்டலாம், வீடு கட்டுவதற்கு எம்மால் இயலாதுள்ளது. எமது வீடு யுத்தகாலத்தில் செல்வீச்சில் முற்றாக சேதமடைந்து. ஒரு அளவான வீடு கட்டுவதாயின் குறைந்தது 10 இலெச்சமாவது தேவை. என கயல்ராஜன் திருமாலா விபரித்தார்.

இது இவ்வாறு இருக்க அக்கிராமத்தில் குழாய் கிணறு ஒன்று 6 வருடகாலமாக பழுதடைந்து தூர்ந்துபோய் கிடைந்தது அக்கிராம மக்களின் கோரிக்கைக்கிணங்க இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையின் தலைவர் தம்பிப்போடி வசந்தராசாவின் அயராத முயறசியின் பலனாக குழாய் கிணறு புனரமக்கப்பட்டு திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த கிராமத்திற்கே குடி நீர் வழங்கும் குழாய் கிணறாக அது தற்போது காணப்பட்டு வருகின்றது. தற்போதைய கடும் உஷ்ணமாக வரட்சிக்காலத்திலும் அந்த குழாய் கிணற்றிலும் நீர் ஊறுவது மிகவும் குறைவாகத்தான் இருந்து வருவதாக அந்த கிராம மக்கள் தெரிவிக்கின்றார்.

இந்திலிருந்து கிடைக்கும் நீர் எமது கிராம மக்களுக்குப் போதாதுள்ளது. அக்கிராமத்திற்கு சற்று தொலைவிலுள்ள குளத்தின் அருகே பாரிய ஒரு கிணறு அமையப்பெறும் பட்சத்தில் அதிலிருந்தாவது அந்த கிராம குடி நீர் பிரச்சினைக்கு ஓரளவேனும் தீர்வு கிடைக்கும் என அந்த மக்கள் எதிர்பார்க்கின்றனர். நகர் புறங்களிலிருந்து வாழ்ந்து வரும் மக்கள் வீட்டுக்குள்ளேயே குழாய் மூலமான சுத்தமான குடிநீர், மலசலகூடம், உள்ளிட்ட அனைத்து வசதி வாய்ப்புக்களையெல்லாம் அனுபவித்து வரும் நிலையில் காயான்குடா கிராம மக்கள் எதிர்பார்ப்பதெல்லாம், குழாய் மூலமான சுத்தமான குடிநீர், குடியிருக்க வீடு, மலசலகூடம், தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் போன்ற அடிப்படை வசதிகளையே மக்கள் பிரதிநிதிகளும், அரச அதிகாரிகளும், காயான்குடா கிராம மக்கள் மீதும் கரிசனை செலுத்த வேண்டும் என்பதையே அக்கிராம மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

---

## மூன்று வரிகளில் எழுதுவதே... (18ஆம் பக்கத் தொடர்)

தொடர்ந்தும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல கவிஞர்களின் வெண்பாக்களில் இலயித்துள்ளேன். ஔவையார், கம்பர், ஒட்டக்கூத்தர், இரட்டைப் புலவர்கள் போன்றோரின் வெண்பாக்களைப் படிப்பதற்கான வாய்ப்புகள் கிடைத்துள்ளன. பாடசாலை நூலகங்களில் இத்தகைய நூல்களைத் தேடிப் படித்துச் சுவைத்திருக்கின்றேன். ஔவையார், பாரதியார் போன்றோரின் பல வசனங்கள் பல்வேறு சந்நர்ப்பங்களில் எனக்கு ஆறுதலளிப்பதாகவும் ஊக்குவிப்பதாகவும் அமைந்தன.

ஒரு சமயம் நான் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் தளர்ந்திருந்த போது எனது நண்பர் ஒருவர் ஒரு மடல் எனக்கு அனுப்பியிருந்தார். அதில், "உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை என்றிருந்தவர் இப்படித் தளர்ந்து போகலாமா?" என எழுதியிருந்தார். "சுடச் சுடத் தங்கம் கறுப்பதில்லை" என்று உணர்த்தினார். உண்மையில் அப்போது நான் என்னை உணர்ந்தேன். உளத் திடம் பெற்றேன். என்னையும் மற்றவர்களையும் பற்றி சிந்தித்து உணரத் தொடங்கினேன்.

அவ்வாறே மனது உடைந்து போன பல சந்தர்ப்பங்களில் ஔவையாரின் வெண்பாக்களில் ஆறுதல் தேடினேன்.

"அட்டாலும் பால் சுவையில் குன்றாது"

"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே"

"சங்கு சுட்டாலும் வெண்மை தரும்"

"பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும்"

என்றவாறெல்லாம் ஔவையார் எனக்கு தைரியமும் ஆறுதலும் கூறியிருக்கின்றார் என்றே உணர்ந்தேன். அவ்வாறே கண்ணதாசனின் "அர்த்தமுள்ள இந்து மதம்" என்ற நூலும் எனக்கு நிறைய வாழ்க்கைத் தத்துங்களைப் போதித்துள்ளது.

"நீ ஏமாற்றப் பட்டாலும் பிறரை ஏமாற்றாதே"

"விதி என்பது இறைவன் விதித்தது மட்டுமல்ல. நீயே விதித்ததுமாகும்.".. இந்த வரி மதி வலியினாலே விதியை மாற்ற முயற்சி செய்ய என்னைத் தூண்டியது.

"சுட்டும் விரலால் எதிரியைக் காட்டிக் குற்றம் கூறுகையில் மற்றும் மூன்று விரல்கள் உந்தன் மார்பினைக் காட்டுதடா" இது "என்னைக் குறை கூறுபவர்கள் யார்? இவர்களுக்கு என்னைக் குற்றம் கூற என்ன தகுதி இருக்கின்றது?" என்று என்னை சிந்திக்கத் தூண்டியது.

என் வாழ்க்கையை முழுமையாக நோக்குகையில் என்னைத் திடமான, தைரியமான பெண்ணாக வாழ உரமூட்டியது நூல்களே என்பேன்.

**▶ நீங்கள் இதுவரை வெளியிட்ட நூல்கள் எவை?**

எனது முதலாவது நூல் "ஹைக்கூவில் கரைவோமா?". இது முதன்முதலாக 01.02.2020 இல் தமிழகத்தில் எழும்பூர்(எக்மோர்) எனுமிடத்தில் பல ஹைக்கூ முன்னோடிகளால் வெளியிடப்பட்டது.

நான் எனது கவிதைத் தொகுதியொன்றை வெளியிடுவதற்காகவே பல முன்னாயத்தங்களை செய்து கொண்டிருந்தேன். எனினும் காலத்தின் தேவை கருதி ஹைக்கூ நூலொன்றை எழுத வேண்டிய அவசியமேற்பட்டது. ஜப்பானிய கவிதை வடிவமான ஹைக்கூ தற்காலத்தில் தமிழ் மொழியில் முக்கிய இடம் பிடித்துள்ளது. ஹைக்கூ கவிதைகளைப் பலரும் பல விதமாகவும் எழுதத் தொடங்கினர். தமிழகத்திலும் இலங்கையிலும் பல நூற்றுக் கணக்கான ஹைக்கூ கவிஞர்கள் உருவாகி பல நூற்றுக்கணக்கான ஹைக்கூ நூல்கள் வெளி வந்து கொண்டிருந்த போதிலும் அவை அனைத்தும் ஹைக்கூ என்று கூற முடியாத அளவுக்கு ஹைக்கூ வரையறைகளை மீறியுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. "இது ஹைக்கூ, இது ஹைக்கூ இல்லை" என்ற வாதப் பிரதிவாதங்களும் முகநூல் பக்கங்களில் முக்கிய இடம் பிடித்து வருகின்றன. ஹைக்கூ பயிற்சிக் களங்களும் நடக்கின்றன. ஹைக்கூ வல்லுனர்கள் எனப் பெயரெடுத்தவர்களே ஹைக்கூ போட்டிகளில் தவற விடுகின்றனர். எப்படி சரியான ஹைக்கூவை எழுதுவது என்ற குழப்பம் காணப்படுகின்றது. எனவேதான் இவை அத்தனைக்கும் தீர்வையும் விடையையும் தரக் கூடியதாக "ஹைக்கூவில் கரைவோமா?" என்ற நூலை எழுதியுள்ளேன். ஹைக்கூவின் வரலாறு. தொடக்கம், வளர்ச்சி, ஹைக்கூ வகைகள், பல்வேறு பெயர்கள் எனப் பல்வேறுபட்ட விடயங்களை உள்ளடக்கிய ஒரு ஆய்வு நூலாகவும் ஹைக்கூ எழுத விளையும் கவிஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாவும் இந் நூலை அமைத்திருக்கின்றேன். இந்நூலில் "விடுகவிக்கூ", "மணிக்கூ" என்ற இரு ஹைக்கூ வடிவங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளேன்.

எனது இரண்டாவது நூல் "வானும் மண்ணும் நம் சமே..". இது ஒரு தன்முனைக் கவிதைகள் நூல். இந்நூல் கடந்த 16.08.2020 இல் ஏறாவூரில் வெளியிடப்பட்டது. தன்முனைக் கவிதைகள் என்பது தெலுங்கில் "நானிலு" என்ற கவிதை வடிவத்தின் தமிழ் வரவுக் கவிதையாகும். இதற்கு தமிழகக் கவிஞரான கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் "தன்முனைக் கவிதைகள்" எனப் பெயர் சூட்டியுள்ளார். 2017 ஆம் ஆண்டில் தமிழுக்குக் கொண்டு வரப்பட்ட இக் கவிதை வடிவத்துக்கு தமிழகக் கவிஞர்கள் வழங்கிய அமோக ஆதரவு காரணமாக இது சர்வதேச அளவில் பிரபலம் பெற்று வருகின்றது.

அதனடிப்படையில் நானும் அக் கவிதை வடிவத்தின்பால் ஈர்க்கப்பட்டதனால் "வானும் மண்ணும் நம் வசமே.." என்ற தன்முனைக் கவிதைகள் நூலை எழுதி வெளியிட்டுள்ளேன். இந்நூல் இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது தன்முனைக் கவிதைகள் நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**▶ ஹைக்கூ கவிதைகள், தன்முனைக் கவிதைகள் என இப் புதிய வடிவங்களில் நீங்கள் கூடுதல் அக்கறை காட்டுவதற்கான காரணம் யாது?**

காலத்தின் தேவையே. தற்காலத்தில் வாசிப்புப் பழக்கம் மிக அருகி வருகின்றது. கல்வி கற்கும் மாணவர்கள், வாசகர்கள் அக்காலத்தைப்போல் பிற நூல்கள் எதனையும் வாசிப்பது மிகமிக அரிதாகக் காணப்படுகின்றது. தற்காலத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் கல்விமுறையில் காணப்படுகின்ற கெடுபிடிகள் மாணவர்களுக்கு பிற நூல்களை வாசிப்பதற்கான அவகாசத்தைத் தருவதாக இல்லை. எனவேதான் இக்கால இளைய தலைமுறையினரை வாசிப்பின்பால் ஈர்ப்பதற்கு சுருக்கக் கவிதைகளே மிக மிக அவசியமாகின்றன. மேலும் வசனங்களால் நிறைக்கப்பட்ட பக்கங்களைத் தற்காலத்தில் எவரும் வாசிக்க விரும்புவதில்லை. அதனாலேயே இத்தகைய சுருக்கக் கவிதைகளை நூலாக்கித் தர முயற்சிக்கிறேன். மேலும் எனது தன்முனைக் கவிதைகள் நூலின் எந்தவொரு பக்கத்தையும் புரட்டும் வாசகர்கள் அதனை வாசிக்காமல் அப்பால் நகர முடியாதவாறு அதன் பக்கங்களை வடிவமைத்துள்ளேன். இது காலத்தின் தேவையாகும்.

அவ்வாறே "கூம்புக் கவிதைகள்", "புத்தொளிக் கவிதைகள்" எனும் புதிய வடிவக் கவிதைப் போட்டிகளை முகநூலில் நடத்தி வருகின்றேன். இவையும் 4 அல்லது 5 வரிகளைக் கொண்ட வாசகர்களின் கவனத்தை ஈர்க்கக் கூடிய கவிதை வடிவங்களாகும்.

**▶ இப்போட்டிகளை நீங்கள் எவ்வாறு நடத்தி வருகின்றீர்கள்.?**

"புத்தொளி" எனும் பெயரில் முகநூலில் ஒரு இலக்கியக் குழுமம் நடத்தி வருகின்றேன். 2020 ஜனவரி தொடக்கம் இக்குழுமம் காத்திரமாக இயங்கி வருகின்றது. புதிய வடிவிலான கவிதைகளை அறிமுகப் படுத்தி கவிஞர்களை ஊக்கப்படுத்துவதுதான் "புத்தொளி" குழுமத்தின் முக்கிய இலக்கு. இக் குழுமத்தில்தான் புத்தொளிக் கவிதைகள், கூம்புக் கவிதைகள் போன்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போது விடுகவிக்கூ, மணிக்கூ போன்ற கவிதைப் போட்டிகளையும் நடத்தவுள்ளேன்.

முகநூலில் தற்போது நூற்றுக்கணக்கான இலக்கியக் குழுமங்கள் பயணிக்கின்றன. நிறைய புதுக்கவிதைப் போட்டி, கிராமியக் கவிதைப் போட்டி, படக்கவிதைப் போட்டி, மரபுக் கவிதைப் போட்டி என்றவாறு நிறையப் போடடிகள் நடத்தப்படுகின்றன.

இவற்றையெல்லாம் விடுத்து புதிய வகையான கவிதை வடிவங்களை அறிமுகப்படுத்தி போட்டிகளை நடத்த வேண்டுமென்பதே எனது அவா.

**▶ நீங்கள் "மணிக்கூ கவிதை" என்று குறிப்பிடுகின்றீர்கள். "மணிக்கூ கவி நஸீரா" என்று உங்கள் பெயரின் முன்னால் குறிப்பிடப் பட்டுள்ளதே....? அதனை விளக்க முடியுமா?**

ஹைக்கூ கவிதைகளை எழுதுவதில் தயக்கம் கொள்ளும் கவிஞர்கள் அல்லது அதனை எழுதிவிட்டு இது சரியா? தவறா? என்று சந்தேகப்படும் கவிஞர்கள் தயக்கமின்றி, தைரியமாக மூன்று வரிக் கவிதைகளை எழுதத் தூண்டுவதே மணிக்கூ கவிதைகள். இக்கவிதைகளை எவ்வாறு எழுத வேண்டுமென்பதை எனது "ஹைக்கூவில் கரைவோமா?" நூலில் விளக்கியுள்ளேன்.

"மரபை அறிந்து மரபை மீறுதல்" என்ற பாரதியின் வழிகாட்டலுக்கேற்ப ஹைக்கூவின் வரையறைகளை நன்கு தெளிந்து அதனை மீறிப் புதிய பெயரில் (மணிக்கூ) மூன்று வரிக் கவிதைகளை அமைக்குமாறு கவிஞர்கள் மற்றும் வாசகர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளேன்.

இந்த "மணிக்கூ" கவிதை வடிவத்தினை நான் அறிமுகப்படுத்திய போது அதனை "உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்" அங்கீகரித்து அதற்காக எனக்கு எனது நூல் வெளியீட்டின்போது "மணிக்கூ கவி" விருதினை வழங்கி வைத்தார்கள்.




இந்த சேவை தற்போது நாடு பூராகவும் செயற்படுத்தப்படுகிறது.
லேக்ஹவுஸ் சமூக சேவை


# பதவி வெற்றிடங்கள்

## இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் - குளியாப்பிட்டி

கல்விசார் மற்றும் நிர்வாக பதவி நிலை பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பாக, இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தினால், தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து 2020.09.28 அன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை அழைக்கின்றது.

மேலதிக விபரங்களுக்கு 2020.09.06 திகதிய சண்டே ஒப்சவர் பத்திரிகையை தயவுசெய்து பாருங்கள்

**பதிவாளர்**
**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்.**
**2020.09.03**

# இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

## சுற்றுலாத்துறை அமைச்சு

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகமானது சுற்றுலா மற்றும் ஏற்பாட்டியல் துறைகளுக்கான மனித வளத்தினை மேம்படுத்தும் வகையில் கல்வியும் பயிற்சியும் வழங்கும் நாட்டின் முதன்மை அரச நிறுவகம்

# வெற்றிடம்

## துணைப் பணிப்பாளர் பராமரிப்பு
## ASSISTANT DIRECTOR MAINTENANCE
## (MM 1-2 பிரிவு)

**கல்வித்தகைமைகள்**
பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்தான பொறியியல் (குடிசார், மின்னியல்) பட்டம்.

மற்றும்

பொது, கூட்டாண்மை நிறுவனம் அல்லது நியதிச் சபையில், அல்லது பிரபலமான தனியார் நிறுவனமொன்றில் "முகாமைத்துவ மட்டத்தில்" பட்டத்தின் பின்னர் 1 வருடம் பணியாற்றிய அனுபவம்.

**சம்பள அளவுத் திட்டம்:**
MM 1-2 பிரிவு ரூ 54, 550/-10x 1,375 – 15x 1,910/- 96,950/-

ஆரம்ப சம்பளப் படிநிலை: ரூ 54,550/- + முகாமைத்துவ சேவைகள் திணைக்கள 02/2016 சுற்றுநிருபத்துக்கமைய, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வாழ்க்கைச் செலவுப் படியும் வழங்கப்படும். அத்துடன் தொழில்சார் நிபுணத்துவக் கொடுப்பனவாக மாதாந்தம் ரூ. 3,000/- வழங்கப்படும். மாதாந்தம் போக்குவரத்துக் கொடுப்பனவாக ரூ. 4,000/- வழங்கப்படும்.

**வயதெல்லை**
22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

## முகாமைத்துவ உதவியாளர்-தொழில்நுட்பம்
## MANAGEMENT ASSISTANT - TECHNICAL
## (MA 2-2 பிரிவு)

**கல்வித் தகைமை**
தகவல் தொழில்நுட்ப துறைகளில் மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவகத்தின் தேசிய தொழில் தகைமை மட்டம் 5 க்கும் குறையாத தேர்ச்சி தகைமையினைக் கொண்டிருத்தல்.

**சம்பளம்:**
சம்பள அளவுத் திட்டம்: MA 2-2 ரூ (30,310/- - 10 x 300/- - 7 x 350/- - 4 x 600/- - 20 x 710/- 52,360/-)

ஆரம்ப சம்பளப் படிநிலை: 30,310/- + முகாமைத்துவ சேவைகள் திணைக்கள 02/2016 சுற்றுநிருபத்துக்கமைய, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வாழ்க்கைச் செலவுப் படியும் வழங்கப்படும். மாதாந்தம் போக்குவரத்துக் கொடுப்பனவாக ரூ 4,000/- வழங்கப்படும்.

**வயதெல்லை**
18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

### பொதுத் தகவல்கள்:


**ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றுக்கான பங்களிப்பு**

- ஊசேநி - அடிப்படைச் சம்பளத்தில் ஊழியர் 10% பங்களிப்பினையும் தொழில்தருநர் 15 % பங்களிப்பினையும் வழங்குவார்.
- ஊநநி - அடிப்படைச் சம்பளத்தில் தொழில்தருநர் 3% பங்களிப்பினை வழங்குவார்.
- ஊழியருக்கும் அவர் / அவளது குடும்பத்தவர்களுக்கும் கவர்ச்சிகரமான சுகாதர மருத்துவ காப்புறுதி காப்பீடு

கல்விசார் தகைமைகள், வேலை அனுபவம் போன்றவை தொடர்பான அனைத்து சான்றிதழ் பிரதிகள் மற்றும் உறவினரல்லாத சிபாரிசு செய்யும் நடுவர்கள் இருவரினது பெயர்களுடன் முழு விபரங்களைக் கொண்ட சுய விபரக் கோவையை, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியைக் குறிப்பிட்டு, பதிவுத் தபால் மூலம் கீழேயுள்ள முகவரிக்கு 2020 செப்டெம்பர் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்**
**இல 78, காலி வீதி, கொழும்பு 03.**

**விசாரணை:- 0112 208 360**


OBSERVER JOBS
"We change your world"
SRI LANKA'S LARGEST ONLINE DATABASE
www.observerjobs.lk
To connect with us
0777 270012 / 0112 429314
email - careers@observerjobs.lk
LAKE HOUSE
Sunday Observer
OBSERVER JOBS "We change your world"



Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams


எஹலியகொட நகரின் பழைய மீன் விற்பனை நிலையத்திற்கு

**பயிற்சி பெற்ற/ பயிற்சி பெறாத மீன் வெட்டுபவர்கள்/ கையுதவியாட்கள் தேவை.**

அழையுங்கள்: 0777-265265
(வார நாட்களில் மு.ப. 9.00 - பி.ப. 4.00)

## தேசிய பண்ணை விலங்கு, பண்ணை ஊக்குவித்தல் மற்றும் பாற்பண்ணை மற்றும் முட்டை தொடர்பான கைத்தொழில்கள் அமைச்சு

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

NLDB

# பதவி வெற்றிடங்கள்

**இலங்கையின் தகுதியுள்ள பிரஜைகளிடமிருந்து பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**பதவி:**

**1. பிரதி பொது முகாமையாளர் (கூட்டுரு செயற்பாடுகள்) ஏச்எம் 1-3-2016**

**தகைமை** - கமத்தொழில்/ பெருந்தோட்ட முகாமைத்துவம்/ கால்நடை விஞ்ஞானம்/ விலங்குற்பத்தி/ முகாமைத்துவம்/ பொது நிருவாகம் /வியாபார நிருவாகம் /வர்த்தகம் ஆகியவற்றில் பெறப்பட்ட பட்டதாரிப் பட்டம் அத்துடன் பட்டப்பின் பட்ட தகைமை (முதுமாணி) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவகமொன்றின் அங்கத்துவம் அல்லது கூட்டுரிமை/ ICASL/CIMA/ACCA ஆகியவற்றின் இணைஅங்கத்தினர் அத்துடன் நிருவாக மட்டத்தில் ஆகக் குறைந்தது 18 வருட அனுபவத்தில் மூன்று (03) வருடங்கள் பட்டப்பின் தகைமைப் பட்டத்துடன் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

**2. பிரதி பொது முகாமையாளர்**
**(பண்ணை விலங்கு மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவம்) ஏச்எம் 1-3-2016**

**தகைமை** - விஞ்ஞானம்/ கமத்தொழில்/ பெருந்தோட்ட முகாமைத்துவம்/ கால்நடை விஞ்ஞானம்/ விலங்குற்பத்தி ஆகியவற்றில் பெற்ற பட்டதாரிப் பட்டம் அத்துடன் மேலேயுள்ள துறைகளில் பட்டப்பின் தகைமைப் பட்டம் (முதுமாணி) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவகமொன்றில் நிருவாக மட்டத்தில் ஆகக் குறைந்தது 18 வருட அனுபவத்தில் மூன்று (03) வருடங்கள் பட்டப்பின் தகைமைப் பட்டத்துடன் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** - ஏச்எம் 1-3-2016: 86,815 - 15 x 2,270 - 120,915 ரூபா.

**3. உதவி பொது முகாமையாளர் (பிராந்தியம்)- ஏச்எம் 1-1-2016**

**தகைமை** - கமத்தொழில்/ பெருந்தோட்ட முகாமைத்துவம்/ கால்நடை விஞ்ஞானம்/விஞ்ஞானம் ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட பட்டதாரிப் பட்டமொன்று அத்துடன் பட்டப்பின் தகைமைப்பட்டம் (முதுமாணி) அல்லது தொடர்புள்ள துறையொன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் அங்கத்தவர் அத்துடன் 1 ஆவது பட்டத்தைப் பெற்ற பின்னர் நிருவாக மட்டத்தில் பண்ணை/ பெருந்தோட்டம் மற்றும் விலங்குற்பத்தி தொடர்பாக புகழ்வாய்ந்த தனியார் / பொது அமைப்பொன்றில் நிருவாக மட்டத்தில் 15 வருட அனுபவம்.

**சம்பளம்** - ஏச்எம் 1-1-2016 : 80295 - : 15 x 2,270 - 114,345 ரூபா.

**வயது :** 35 வயதிற்கு குறையாமலும் 50 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

**மேலேயுள்ள சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்தினால் அனுமதியளிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.**
**விண்ணப்பிக்கும் வேளையில் நிகரான பதவியில் இருந்த/ இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**மேலதிக அனுகூலங்கள்:**

i. உள்ளக மற்றும் வெளியக மருத்துவ அனுகூலங்கள்.
ii 960 தனியான பயணங்களுக்காக ஒதுக்கப்பட்ட வாகனம்.

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தன்மைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

i. இலங்கை பிரஜையொருவராக இருத்தல்.
ii. பதவிக்கான கடமைகளை சிறந்த முறையில் ஆற்றுவதற்கும் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கான உடல் மற்றும் உளரீதி இருத்தல் வேண்டும்.
iii. மிகச்சிறந்த குணவியல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2020 செப்டம்பர் 24 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனைத்து சுயதரவு மற்றும் உறவினரல்லாத இருவரின் பெயர்கள், அவர்தம் முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியவற்றை அடக்கிய சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் ஆகியன பதிவுத் தபாலில் தலைவர், தேசிய கால்நடை அபிவிருத்தி சபை, இல. 40, நாவல பாதை, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடவும்.

அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள்அவர்களின் விண்ணப்பங்களை அவ்வாறான நிறுவனங்களின் தலைமையூடாகவே அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய கால்நடை அபிவிருத்தி சபை, இல. 40, நாவல பாதை, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05.**

## பெருந்தோட்ட அமைச்சு
## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்
## தேயிலை ஆராய்ச்சி சபை

# அத்தியட்சகர் பதவி (ஒப்பந்த அடிப்படையில்)

## புனித கூம்ஸ் பெருந்தோட்டம், தலவாக்கலை

மேலேயுள்ள பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தலவாக்கலையிலமைந்துள்ள புனித கூம்ஸ் பெருந்தோட்டம் மற்றும் தொழிற்சாலைக்கு பொறுப்பாகவிருந்து மிகச்சிறந்த புலமையுள்ள விஞ்ஞானிகளின் அணியுடன் சவால்கள் நிறைந்த சுற்றாடலில் பணியாற்றக்கூடிய சுறுசுறுப்புள்ள அத்தியட்சகரொருவரை இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையமானது தேடுகின்றது. தேயிலை ஆராய்ச்சி விஞ்ஞானிகளுடன் தோளோடு தோளாக பணியாற்றுவதன் மூலம் தேயிலை தொழில்துறையில் ஒரு அடையாளத்தைப் பெறுவதுடன் அவரது வாழ்தொழில் தன்மையை மேலும் மேலும் அதிகரிப்பதற்காக பொருத்தமான தகைமையுள்ள நபரொருவருக்கு வழங்கப்படும் அரிய சந்தர்ப்பமாகும்.

**பணி விளக்கம்**
தேயிலை தொழிற்சாலையொன்றை, தேயிலை பெருந்தோட்டமொன்றை மற்றும் அலுவலகமொன்று தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் முகாமைப்படுத்துவதற்காக திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வையிடல் அத்துடன் முகாமைத்துவத்திற்கு திரட்டக்கூடிய தகவலை வழங்கல்.

**கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:**
க.பொ.த. (சா-த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் மொழி (சிங்களம்/ தமிழ்) ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியன அடங்கலான சித்தி.

**அத்துடன்**

க.பொ.த. (உ-த) பரீட்சையில் பொது வினாத்தாள் நீங்கலாக மூன்று (03) பாடங்களில் சித்தி.

**அல்லது**

பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் டிப்ளோமாவிற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 5ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரானவர் உயர்மட்ட தேயிலை பெருந்தோட்ட கன்று நடுதல் அத்தியட்சகராக ஆகக் குறைந்தது மூன்று (03) வருட அனுபவத்துடன் மற்றும் தொழிற்சாலை மற்றும் தேயிலைக் கொழுந்தை வரவழைத்து அரைக்கும் தொழிற்சாலை செயற்பாடு ஆகியவற்றிலும் அனுபவம் இருத்தல் வேண்டும்.

மிகச்சிறந்த சமுகரீதியிலான தொடர்புகள், அணி உத்வேகம் மற்றும் வலையமைப்பு திறன்கள் சேர்க்கப்பட்ட தகைமைகளாக கருதப்படும்.

சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றில் பணியாற்றும் திறமை அத்துடன் தமிழில் பேசக்கூடிய ஆற்றல் முக்கியமாகும்.

இந்த நியமனமானது ஆரம்பத்தில் 3 வருடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலும் வருடாந்தம் புதுப்பிக்கப்படும் நிலையிலும் அமைந்திருக்கும்.

**வேதனம்:**
அனைத்துமடங்கிய மாதாந்த பொதி அண்ணளவாக 125,000 ரூபாவாகும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகரானவருக்கு தேயிலை ஆராய்ச்சி நிலையத்தினால் நிருணயிக்கப்பட்ட இந்த பதவிக்காக பிரயோகிக்கப்படும் மேலதிக வசதிகளும் வழங்கப்படும்.

பிறப்புச் சான்றிதழின் பிரதி, உரித்தான கல்விசார் மற்றும் ஏனைய கல்விசார் தகைமைகள், சேவைக்கால சான்றிதழ் மற்றும் நிகரான துறையில் விண்ணப்பதாரியின் திறன்கள் மற்றும் அறிவு தொடர்பாக பரிந்துரை செய்யக்கூடிய இருவரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஆகியன அடங்கலான முழுமையான சுயதரவிலான விண்ணப்பமானது பதிவுத் தபாலில் 2020 செப்டம்பர் 21ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள நபரை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும்.

அரச சேவை/ கூட்டுத்தாபனம்/நியதிச்சட்டசபை ஆகியவற்றின் அலுவலகர்களின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவனத்தின் தலைமையூடாகவே அனுப்பப்படல் வேண்டும். இந்த தேவைப்படுத்தலுக்கு ஒத்திசையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரையும் குறிப்பிடவும்.

**பணிப்பாளர்,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்,**
**புனித கூம்ஸ், தலவாக்கலை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## லேக் ஹவுஸ் உணவுக்கூடம்

**LPA/06/2020**

ஏறத்தாழ 1500 ஊழியர்களுக்கு உணவு வழங்கும் லேக் ஹவுஸ் உணவுக்கூடத்தை நடாத்திச் செல்வதற்காக அனுபவமுள்ள உணவு வழங்குபவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இந்த உணவுக்கூடமானது பகலும் இரவும் (24 மணித்தியாலங்கள்) திறந்திருப்பதுடன் வெற்றிகரமான உணவு வழங்குபவர் தரமான பல வகையான உணவுகள் மற்றும் குடிபானங்கள் ஆகியவற்றை திட்டவட்டமாக குறிக்கப்பட்டுள்ள விலைகளில் வழங்குதல் வேண்டும்.

**சமையலறை சாதனங்கள், உணவுக்கூட தளபாடம், மின்சாரம், நீர் மற்றும் ஒவ்வொரு மாதத்திற்கும் 20 (37.5 கி.கி.) நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படுவதுடன் எந்தவொரு வாடகையும் அறவிடப்படமாட்டாது.**

விண்ணப்பம், கேள்வியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியனவற்றை அடக்கியுள்ள கேள்வி ஆவணங்களை **2020 செப்டம்பர் 7ஆம் திகதியிலிருந்து 2020 செப்டம்பர் 18ஆம் திகதி வரையும் வார நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையான 5,000 ரூபாவையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 ரூபாவையும் செலுத்திய பின்னர், த அஸோசியேட்டட் நியுஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டட் இன் பெறுகைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.**

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் தபாலுறையில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு, அதனது இடது பக்க மேல் மூலையில் **"Bids for Canteen"** என குறிப்பிடப்பட்டு **2020 செப்டம்பர் 21ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில்** பதிவுத் தபாலில் **பெறுகைக்கான தலைமை,** த அஸோசியேட்டட் நியுஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டட் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது பெறுகை திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

**2020 செப்டம்பர் 21ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு** கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும்.

**எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை த அஸோசியேட்டட் நியுஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டட் கொண்டுள்ளது.**

LAKE HOUSE

**பெறுகைப் பிரிவின் தலைமை,**
**த அஸோசியேட்டட் நியுஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டட்,**
**''லேக் ஹவுஸ்''**
**இல.: 35, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு-10.**
**விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி எண்களினூடாக தொடர்பு கொள்ளவும்: 2429422/2429451.**

---

UNIVERSITY HOSPITAL
General Sir John Kotelawala Defence University

பல்கலைக்ககழக வைத்தியசாலை
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைககழகம்

## பதவி வெற்றிடங்கள்

## தாதிய சகோதரிகள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள்

## (மணித்தியால கொடுப்பனவு அடிப்படைகள்)

<u>நியமனத்திற்கான அடிப்படை தகைமைகள்</u>

<u>தாதிய சகோதரிகள் (தரம் I தாதிய உத்தியோகத்தர்)</u>

i. தாதிய உத்தியோகத்தர் தரம் I இல் இருத்தல் வேண்டும்.

அத்துடன்

ii. விடுதி முகாமைத்துவமும் மேற்பார்வையும்/ கற்பித்தலும் மேற்பார்வையும்/ பொது சுகாதார தாதியமும் மருத்துவமாதியலும்/தாதிய கல்விக்கான தேசிய நிறுவகத்தின் உளச்சிகிச்சையியல் / பின் அடிப்படைய தாதிய பாடசாலை நடாத்துகின்ற கற்கை முதலியவற்றை உள்ளடக்கிய 1 ½ வருட டிப்புளோமாவை வெற்றிகரமாக முடித்திருத்தல் வேண்டும்.

<u>தாதிய உக்கயோகத்தர்</u>

i. தாதியத்தில் விஞ்ஞானமாணி பட்டத்தைக் கொண்டிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட் பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது சுகாதார அமைச்சிலிருந்து பெறப்பட்ட தாதியத்தில் டிப்புளோமா பட்டத்தைக் கொண்டிருத்தல்

அத்துடன்

ii. க.பொ.த (உயர் தரத்தில் விஞ்ஞானம் அல்லது கணிதவியல் அல்லது விவசாய பிரில் கற்கைகளில் ஒன்றில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் (பொது அறிவு பாடம் தவிர) சித்தியடைந்திருத்தல் அல்லது மேற்குறிப்பிட்ட பிரிவு களில் பழைய பாடத்திட்டத்தில் ஒரே தடவையில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

iii. க.பொ. த (சா. தர) பரீட்சையில் சிங்கள/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம் முதலிய பாடங்களில் (04) திறமைச் சித்தி உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

iv. ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

<u>பொது நிபந்தனைகள்</u>

1. மணித்தியால கொடுப்பனவானது சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சின் 02 ஆனி 2017 ந் திகதிய சுற்றுநிரூப இலக்கம் TA/G/PSM/13/2016 இன் படி மேற்கொள்ளப்படும்

2. சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்களை பொருத்தமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்து பதிவுத் தபாலில் "நிர்வாகப் பணிப்பாளர், பல்கலைக்கழக வைத்தியசாலை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகம், வேரஹர" எனும் முகவரிக்கு 21.09.2020 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்கவும்.

3. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகம் விண்ணப்பதாரிகளை தெரிவுசெய்து பட்டியல்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

4. பூரணப்படுத்தப்படாத அல்லது பிந்திய மற்றும் KDU வின் வடிவத்திற்குள் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிபக்கப்படும்.

5. விண்ணப்ப படிவங்களையும் ஏனைய தகவல்களையும் KDU வின் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யலாம்.

**www.kdu.ac.lk**

---

# பெறுகை அறிவித்தல்

# இலங்கை கடற்படை

## 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை இலங்கை கடற்படைக்குத் தேவையான களஞ்சியப் பொருட்களை விநியோகித்தல் தொடர்பாக உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக் கோரல்

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2021 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை இலங்கை கடற்படைக்கு தேவையான கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேறு வேறு களஞ்சியப் பொருட்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் விநியோகிக்கக் கூடிய இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இலங்கை கடற்படை திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. சமர்ப்பிக்கும் விலைகளின் செல்லுபடியாகும் காலம் 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2021 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலாகும்.

(அ) தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர்கள் கடற்படையினால் கோரப்படும் குறித்த களஞ்சியப் பொருட்களை ராகம, வெலிசரையிலுள்ள இலங்கை கடற்படை கப்பல் "மகாசென்" களஞ்சியசாலைக்கு விநியோகிக்க வேண்டும்.

(ஆ) இது தொடர்பில் ஆர்வமுள்ள தரப்பினர் பின்வரும் வகுதிகளின் கீழ் காணப்படும் ஒவ்வொரு கோவைகளுக்காகவும் மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டமான ரூ 2000.00 தொகையான பணத்தினை பணிப்பாளர் (நிதி) இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு-01. என்ற முகவரியில் செலுத்தி, விலைமனுக் கோரல் பத்திரங்களை 2020 செப்டம்பர், 10ஆம் திகதி முதல் 2020 அக்டோபர் 01ஆம் திகதி வரை வாராந்த வேலை நாட்களில் முப 10.00 மணி தொடக்கம் பி.ப 14.00 மணி வரை பெற்றுக் கொள்ள முடியும். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்க வேண்டும்.

02. 2021ஆம் ஆண்டுக்குத் தேவையான களஞ்சியப் பொருட்களின் தேவை அளவுகள் மற்றும் விபரங்கள் விலைமனுக் கோரல் பத்திரங்களுடன் வழங்கப்படும்.

**விடய இலக்கங்களும் ஒவ்வொரு தொகுதிகளும்**

| விலைமனுக் கோரல் தொகுதி இலக்கங்கள் | விடயத் தொகுதிகளின் விபரம் | விலைமனுக் கோரலின் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|
| எஸ்எல்என்/எல்ஓஜி/01/ஆர்சி/2021 | அனைத்து வகையான பேட்டரிகள் | 2020 அக்டோபர் 07, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/02/ஆரசி/2021 | சுற்றுக்கம்பிகள் (Widing wires) | 2020 அக்டோபர் 07, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/03/ஆர்சி/2021 | வீட்டினுள் பாவிக்கும் மின் வயர்கள் | 2020 அக்டோபர் 07, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/04/ஆர்சி/2021 | பொறுத்திகள் - Switch(MCB, MCCB, RCCB) | 2020 அக்டோபர் 07, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/05/ஆர்சி/2021 | குளியலறை உபகரணங்கள் | 2020 அக்டோபர் 07, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/07/ஆர்சி/2021 | டயர் மற்றும் டியுப் வகைகள் | 2020 அக்டோபர் 07, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/08/ஆர்சி/2021 | கொண்டியுட் மற்றும் உதிரிப்பாகங்கள் | 2020 அக்டோபர் 07, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/09/ஆர்சி/2021 | உருக்குக் கம்பி (கட்டிட நிர்மாணம்) | 2020 அக்டோபர் 07, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/10/ஆர்சி/2021 | தொழில்துறை நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் வாயு வகைகள் | 2020 அக்டோபர் 07, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/11/ஆர்சி/2021 (கோப்பு எண் 01) | கட்டிட கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் பொருட்கள் இரும்பு மற்றும் கால்வனைஸ் ஏற்றப்பட்ட பொருட்கள் | 2020 அக்டோபர் 07, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/11/ஆர்சி/2021 (கோப்பு எண் 02) | கட்டிட கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் பொருட்கள் - கதவு, ஜன்னல்களில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் பாகங்கள் | 2020 அக்டோபர் 07, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/11/ஆர்சி/2021 (கோப்பு எண் 03) | கட்டிட கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் பொதுவான பொருட்கள் | 2020 அக்டோபர் 07, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி12/ஆர்சி/2021 | துப்புரவு செய்ய பயன்படுத்தப்படும் சுகாதார பொருட்கள் | 2020 அக்டோபர் 08, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/13/ஆர்சி/2021 | தொலைப்பேசி கம்பி வகைகள், ட்ரொப்வயர், தொலைபேசி உதிரிப்பாகங்கள் | 2020 அக்டோபர் 08, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/14ஆர்சி/2021 | காரியாலய காகிதாதிகள் | 2020 அக்டோபர் 08, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/15/ஆர்சி/2021 | அச்சுக்கடதாசி மற்றும் கொப்பிகள் | 2020 அக்டோபர் 08, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/16/ஆர்சி/2021 | உள்நாட்டு பலகை வகைகள் | 2020 அக்டோபர் 08, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/17/ஆர்சி/2021 (கோப்பு எண் 01) | பொது பொறியியல் உடமைகள் | 2020 அக்டோபர் 08, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/17/ஆரசி/2021 (கோப்பு எண் 02) | பொது பொறியியல் உடமைகள் | 2020 அக்டோபர் 08, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/17/ஆர்சி/2021 (கோப்பு எண் 03) | பொது பொறியியல் உடமைகள் | 2020 அக்டோபர் 08, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/18/ஆர்சி 2021 | ஒட்டும் உருளைக் கம்பிகள் (Welding Electrodes) | 2020 அக்டோபர் 08, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/19/ஆர்சி 2021 | பிவிசி குழாய் உதிரிப்பாகங்கள் | 2020 அக்டோபர் 08, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/20/ஆர்சி/2021 | ஒட்டுப்பலகை வகைகள் உள்நாட்டு, வெளிநாட்டு | 2020 அக்டோபர் 08, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/21/ஆர்சி/2021 | பொதுவான பூச்சுவகைகள் | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/22/ஆர்சி/2021 | தார் வகைகள் | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/23/ஆர்சி/2021 | பெயாரிங்ஸ் (Bearings) | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/24/ஆர்சி/2021 | மின் குமிழ்கள் | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/25/ஆர்சி/2021 | சிவிலின் (Roofing Sheets) | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/26/ஆர்சி/2021 | வாகன பூச்சுவகைகள் | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/27/ஆர்சி/2021 | அச்சிடும் பொருட்கள் | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/28/ஆர்சி/2021 | வெளிநாட்டு பலகை வகைகள் | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/29/ஆர்சி/2021 | ஜீ ஆர் பி கண்ணாடி துரும்பு | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/30/ஆர்சி/2021 (கோப்பு எண் 01) | வாகன பாகங்கள் | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/30/ஆர்சி/2021 (கோப்பு எண் 02) | வாகனங்களுக்குள் பயன்படுத்தப்படும் தரைவிரிப்புகள், கவர்கள் மற்றும் துணிகள் | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/33/ஆர்சி/2021 | நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/34/ஆர்சி/2021 | 50 கிலோ சீமெண்ட் | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/36/ஆர்சி/2021 | கருங்கல் மற்றும் மணல் | 2020 அக்டோபர் 09, 10.00 மணி |

03. விண்ணப்பதாரிகள் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். (விலைகளை விமர்சிக்கும் போது இவ்விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.)

i. களஞ்சியப் பொருட்களை சமனான கொள்திறனுடன் அரச, தனியார் நிறுவனங்களுக்கு விநியோகித்தமை தொடர்பில் 02 வருடங்கள் திருப்திகரமான செயலாற்றுகை இருத்தல்.
ii. நிலையான நிதிசார் வசதிகள்.
iii. வரி செலுத்துதல் திருப்திகரமானதாக இருத்தல்.
iv. போதியளவு தொடர்பாடல் வசதிகள் காணப்படல் (தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல்).
v. போதியளவு களஞ்சியசாலை வசதிகள் இருத்தல்.
vi. போதியளவு பணிக்குழுவினரைக் கொண்டிருத்தல் மற்றும் அலுவலக வசதிகள் காணப்படல்.
vii. போதியளவு போக்குவரத்து வசதிகள் காணப்படல்.
Viii. வர்த்தக நிறுவனமாக இலங்கையில் பதிவு செய்திருத்தல் மற்றும் கடந்த 3 வருட காலப்பகுதியில் தொடர்ச்சியான வர்த்தக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல்.

04. விண்ணப்பதாரிகள் விலைமனுக்களை சமர்ப்பிக்கையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) செலுத்துபவராக பதிவு செய்த இலக்கத்தை சமர்ப்பித்தல் கட்டாயமானது. இவ்வாறு பதிவு செய்து கொள்ளாத விண்ணப்பதாரிகள் வரி விலக்களிக்கப்பட்டமையை சான்றுப்படுத்தும் வகையில் இறை வரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் மேற்குறித்த தேவைகளைப் பூர்த்தி செய்யாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

05. விண்ணப்பதாரிகள் விலைமனுக்களை சமர்ப்பிக்கையில் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை கடற்படைக்கு 2021ஆம் ஆண்டுக்கான களஞ்சியப் பொருட்களை விநியோகிப்பதற்கான ஒப்பந்த விலைகளை சமர்ப்பித்தல்" (விடயத் தொகுதி) எஸ்எல்என் /எல்ஓஜி...... /ஆர்சி/2021 கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் திகதி, நேரம் என்பவற்றைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும் அல்லது குறித்த கேள்விப்பத்திரப்பெட்டியில் (டென்டர்) இட வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**இலங்கை கடற்படை இலங்கை**
**கடற்படைத் தலைமையகம்,**
**த.பெ. எண் 593, கொழும்பு 01.**

06. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் குறிப்பிட்ட நேரம் முடிவடைந்தவுடன் விண்ணப்பப்படிவங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரி அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் விலை மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தின் போது சமுகமளிக்க முடியும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பிக் கொடுக்கப்படும்.

07. உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விலைமனுப் பத்திரங்கள் மற்றும் எழுத்து மூலச் சான்றுகள் உரியமுறையில் சமர்ப்பிக்கப்படாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு விலைமனுப்பத்திரத்தையும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் திணைக்களத்தின் பெறுகைக்குழுத் தலைவருக்கு உரித்தானது.

08. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு ஒப்பந்தத்தை கைச்சாத்திடல் தொடர்பாக பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்படும்.

09. கேள்விப் பத்திர விண்ணப்பங்களை எதுவித கொடுப்பனவுகளும் இன்றி பணிப்பாளர் நாயகம் (வழங்கல் மற்றும் சேவைகள்), இலங்கை கடற்படைத் தலைமையகம், சைத்திய வீதி, கொழும்பு 01 எனும் முகவரியில் பரிசீலிக்க முடியும்.

10. மேலதிக விபரங்களை பணிப்பாளர் நாயகம் வழங்கல் மற்றும் சேவைகள், தொலைபேசி **0117192326, 0117192321** மற்றும் இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

11. குறித்த பத்திரிகை விளம்பரத்தை இலங்கை கடற்படையின் இணையத்தளமான **www.navy.lk** ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**இலங்கை கடற்படை**
**கொழும்பு-01.**



# சிறுவர் உலகம்

- சிங்கம் -

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 287

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | |
| 05 | 06 | | 07 | 08 | 09 |
| 10 | 11 | | 12 | 13 | |
| | | 14 | 15 | | 16 |
| 17 | 18 | 19 | 20 | | 21 |
| 22 | | 23 | | 24 | 25 |

பெயர் ........................................

வகுப்பு ........................................

பாடசாலை பெயர் ........................................

பாடசாலை முகவரி ........................................

........................................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் / பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

1. ஆபரணங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்ற விலையுயர்ந்த உலோகம் இது. ஆனால் தங்கம் போன்று அதிகம் விலை உயர்ந்த உலோகமல்ல.
5. பார்வைப் புலனங்கம் இது. (தலைகீழான சொல்)
7. வீட்டுக்கு இது அவசியம். இல்லையேல் வீட்டுக்குப் பாதுகாப்பு இல்லை.
10. குழந்தை தொட்டியில் உறங்குவதை விட தனது அம்மாவிடம் விரும்பி உறங்குகின்ற இடம் இதுதான். (தலைகீழான சொல்)
12. ஆலயங்களில் ஒலி எழுப்புவதி. (தலைகீழான சொல்)
14. எமது உடலின் பிரதான அங்கம். (தலைகீழான சொல்)
17. செவிப்புலனங்கத்தால் உணரப்படுவது.
24. காய் கனிந்திருக்கின்றது. (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

1. நாம் உணவுக்குப் பயன்படுத்துகின்ற காய்கறிகளில் ஒன்று.
2. பெற்றோருக்கு இவள் புதல்வி. (தலைகீழான சொல்)
4. வீதிக்குக் குறுக்காக, நீர் வடிந்தோடுவதற்காக அமைக்கப்படுவது. (தலைகீழான சொல்)
7. உங்களுக்குரிய பாடங்களில் ஒன்று.
14. நன்னீர் நிலைகளில் வசிக்கின்ற உயிரினம். ஆடுமாடுகளுக்கு மட்டுமன்றி மனிதருக்கும் உயிராபத்தை விளைவிக்கும் உயிரினம். (தலைகீழான சொல்)
16. உலகையே தன்வசமாக்கிக் கொண்ட அறிவியல் நவீன சாதனம் (தலைகீழான சொல்)
17. சூரியக் குடும்பத்தில் கவர்ச்சிகரமான கிரகம்.

குறுக்கெழுத்துப் போட்டி
இல. 287 சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834. கொழும்பு

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 286

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. நீதிமன்றம் 06. தாரா 12. வானவில் 16. ஓடம் 19. மலர் 22. வாழை 25. பிள்ளை

**மேலிருந்து கீழ்**

01. நீராவி 02. தாதி 04. ஓவியன் 06. வாரம் 12. மடல் 16. பாலம் 22. வாள் 23. பிழை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 285 பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
சி. பவதாரணி,
தரம் 08C, ஊவா விஞ்ஞான கல்லூரி,
ஹாலிஎல.

**இரண்டாம் பரிசு**
ம. ஜதுர்ஷன்,
தரம் 08 K, பெரியகல்லாறு மத்திய கல்லூரி,
ஊர் வீதி,
பெரிய கல்லாறு.

**மூன்றாம் பரிசு**
ஹனான் இர்பான்,
தரம் 07 (ஆங்கிலம்)
கே/மாவ/ஸாஹிறாக் கல்லூரி,
மாவனல்லை.

## பாராட்டு பெறுவோர்

**1. எம்.ஆர். அம்மார்,**
தரம் 09 B, க/ ரணபிம றோயல் கல்லூரி,
பேராதனை,
கண்டி.

**2. சவிலக்ஷனா,**
தரம் 08 A, பது/தமிழ் மகளிர் மகா வித்தியாலயம்,
பதுளை.

**3. வி. கோணேஸ்வரன்,**
தரம் 05, தி/க/பே/ பரமேஸ்வரா ம.வி.,
சிவன் வீதி,
கந்தளாய்.

**4. எம்.எப். சுமையா,**
தரம் 05B, கு/அல் இர்பான் மத்திய கல்லூரி,
மடலகம்,
பொல்கஹவெல.

**5. கோ. ஜெரிஸ்,**
தரம் 02A,
கமு/கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி,
கல்முனை.



குறளமுதம் :

**அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை**
**இன்மையா வையாது உலகு.**

**தெளிவுரை :** அறிவில்லாமையே இல்லாமை பலவற்றுள்ளும் கொடிய இல்லாமையாகும்; மற்ற இல்லாமைகளை உலகம் அத்தகைய இல்லாமையாகக் கருதாது.

## சிந்தனைத்துளிகள்...!

- ஓடிக்கொண்டே இரு நதி போல. ஓரிடத்தில் 'வெற்றி' காத்திருக்கும் கடலாக.
- எண்ணம் போல் வாழ்க. பிறர் போல வாழாதே!
- உன்னை நோக்கிவரும் தோல்விகளைத் தழுவிக்கொள். அவைதான் உன் வெற்றிக்கான சூட்சுமத்தை உனக்குச் சொல்லிக் கொடுக்கப் போகின்றன.
- மற்றவரின் வாழ்க்கையை வாழ ஆசைப்படாதீர்கள். உங்கள் வாழ்க்கையை வாழ கோடிக்கணக்கான மக்கள் ஏங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.
- என் இடத்தில் இருந்து சிந்திக்கத் தெரியாதவர்கள் என்னைப் பற்றி குறை சொல்ல தகுதியற்றவர்கள்.
- வாழ்க்கையில் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதே. சில விஷயங்கள் கிடைக்காமல் இருப்பதே வாழ்க்கைக்கு நல்லது.

பாத்திமா பவ்மிதா முஹம்மட் பைரூஸ்,
தரம் 10, ப/ மிரஹவத்த முஸ்லிம் வித்தியாலயம்,

## இவ்வார மழலை



மிஷாரிய் அஹமட்

எஸ். றிப்கான் சபினாஸ் பேஹம்
தக்வா நகர், மூதூர் 01.
புதிய துறைமுக வீதி,

## சிலந்தியிடம் பாடம் கற்ற அரசன்



போரில் தோல்வி அடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி ஒளிந்தான். அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனின் படை மிகவும் சிறியதாக இருந்ததால் அவனால் வெல்ல முடியவில்லை. தோல்வியுற்ற அரசனை கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளை பிறப்பித்தான். அதனால் அவன் காட்டிற்கு ஓடிச் சென்று அங்கிருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.

தோல்வியடைந்த அரசன் மிகவும் மன வருத்தம் கொண்டான். மனச்சோர்வினால் துணிவு இழந்தான். ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான்.

அக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. அந்த சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும்போது வலையில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது.

இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் இடைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது.

கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் "இச் சிறு சிலந்தியே பல முறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விடவேண்டும்? நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும்" என்று எண்ணினான் மறுபடியம் தன் எதிரியுடன் போர் புரிய தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தன் நம்பிக்கையான ஆட்களைச் சந்தித்தான்.

தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தன் அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்த சிலந்தியை அவன் என்றும் மறக்கவில்லை.

சுஜானி திருஆலன்,
வவுனியா

## கொரோனா ஆத்திச்சூடி..!



அ அடிக்கடி கை கழுவு
ஆ ஆபத்தை அறிந்து கொள்
இ இல்லத்தில் தனித்திரு
ஈ ஈரடி தள்ளி நில்
உ உற்றாரை ஒதுக்கிவை
ஊ ஊரடங்கை மதித்து நட
எ எங்கேயும் சுற்றாதே
ஏ ஏக்கத்தை அடக்கி வை
ஐ ஐயமின்றி அனைத்தும் உன்
ஒ ஒதுங்கியிருக்கக் கற்றுக்கொள்
ஓ ஓரிடத்தில் ஓய்ந்திரு
ஔ ஔதமில்லை கொரோனாவுக்கு
ஃ இஃது அறிதலே இனிய வாழ்வு ...!

(முகநூலில் இருந்து பெறப்பட்டது)

என்.கே. வேணி,
பலாங்கொடை.

## ஒரு பொருள் பல சொற்கள்

**தந்தை:** அப்பன், ஐயன், பிதா, தகப்பன், தாதை
**ஆசிரியர்:** உபாத்தியாயர், ஆசான், குரு, தேசிகன்
**வீடு:** இல்லம், மனை, அகம், உறையுள்
**கல்வி:** வித்தை, படிப்பு, சுவை
**வயல்:** கமம், மருதநிலம், புலம், பழனம், கழனி
**ஆற்றல்:** வலிமை, சக்தி, உரம், திண்மை
**பறவை:** பட்சி, புள்
**குதிரை:** அசுவம், துரகம், புரவி, மா, பரி, அயம்
**தோழி:** சகி, சிநேகிதி, நண்பி, பாங்கி
**நட்டம்:** சேதம், அழிவு, கேடு

எஸ். கனிஷ்கர்,
தரம் 07,
கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி,
கொழும்பு 04.

மாணவர் கழக அங்கத்துவ
இல : 416



ஜோ. மைக்கல்,
தரம் 10,
கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ,
மாத்தளை.

மாணவர் கழக அங்கத்துவ
இல : 417



என். தனுஸ்காந்த்,
தரம் 10,
கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ,
மாத்தளை.

## மாணவர் கழக அனுமதி

வர்ணப் புகைப்படம்

மாணவர் பெயர் ........................................
பிறந்த திகதி ........................................
வகுப்பு ........................................
பாடசாலை ........................................
........................................


........................................
வகுப்பாசிரியர் கையொப்பம்

மாணவர் கழகம்
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834 கொழும்பு.






ஜி. சுகத்,
தரம் 13, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ, மாத்தளை.



ஏ. நவீன்குமார்,
தரம் 10, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ, மாத்தளை.



ஜெ. சதீஸ்காந்த்,
தரம் 10,
ம.மா/ கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ, மாத்தளை.



வி. தர்ஷன்,
தரம் 10,
கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ, மாத்தளை.



ஹஷ்மதுல் ஷஹ்லா,
தரம் 10,
கொ/முஸ்லிம் மகளிர் கல்லூரி,
கொழும்பு 04.

# விளையாட்டு





# மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ஏமாற்றமளித்த வீரர்கள்

கிரிக்கெட் உலகில் பிரபல்யமான ரி20 லீக் தொடர்களில் ஒன்றான இந்தியன் பிரிமியர் லீக் தொடரானது கடந்த 2008ஆம் ஆண்டிலிருந்து மிக பிரமாண்டமாக நடாத்தப்பட்டு வருகிறது. இதுவரையில் 12 தொடர்கள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த வருடத்திற்கான தொடர் செப்டம்பர் 19ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகவுள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஐ.பி.எல் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் தொடருக்கான ஏலம் நடாத்தப்படுவது வழக்கம். ஏலத்தின் போது தங்களது அணிக்கு தேவையான வீரர்களை ஏலத்தில் எடுக்க அனைத்து அணிகளும் கடுமையாக போட்டி போடும். அவ்வாறு ஒவ்வொரு அணியும் போட்டி போட்டு பல கோடிகளை கொட்டி ஏலத்தில் எடுக்கும் சில வீரர்களை தவிர பெரும்பாலான வீரர்கள் தன்னை நம்பி எடுத்த அணிக்கு ஏமாற்றத்தை மட்டுமே கொடுத்து வருகின்றனர்.



அந்த வகையில், தற்போதைய நடப்பு சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணியால் ஏலத்தில் அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டு அந்த அணிக்கு ஏமாற்றத்தை மட்டுமே கொடுத்த ஐந்து முக்கிய வீரர்கள் தொடர்பில் கவனம் செலுத்தலாம்.

**ரிக்கி பொண்டிங் (அவுஸ்திரேலியா)**

கிரிக்கெட் உலகின் முன்னாள் ஜாம்பவான்களில் ஒருவரான ரிக்கி பொண்டிங்கை மும்பை இந்தியன்ஸ் அணி கடந்த 2013ஆம் ஆண்டு ஏலத்தில் எடுத்தது. அந்த தொடரில் மொத்தம் 4 போட்டிகளில் மட்டுமே விளையாடிய ரிக்கி பொண்டிங் வெறும் 39 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, தன்னை நம்பிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு மிகப்பெரும் ஏமாற்றத்தை மட்டுமே பரிசாக கொடுத்தார். மேலும் ரிக்கி பொண்டிங் விளையாடிய இறுதி ஐ.பி.எல் தொடரும் இதுவே.



**ஷிகர் தவான் (இந்தியா)**

இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக திகழும் ஷிகர் தவானை கடந்த 2009ஆம் ஆண்டு மும்பை இந்தியன்ஸ் அணி ஏலத்தில் எடுத்தது. 2009 மற்றும் 2010 ஆண்டுகளில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக ஷிகர் தவான் ஒரு போட்டியில் கூட சொல்லிக்கொள்ளும் அளவிற்கு விளையாடாமல் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு மிகப்பெரும் ஏமாற்றத்தை கொடுத்தார்.

**யுவராஜ் சிங் (இந்தியா)**

கடந்த 2019ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் தொடரின் ஏலத்தில் யுவராஜ் சிங்கை எந்த அணியும் விலை கொடுத்து ஏலத்தில் வாங்க முன்வரவில்லை. இறுதி நேரத்தில் யுவராஜ் சிங்கை அவரது அடிப்படை விலையான ஒரு கோடி ரூபாய் கொடுத்து மும்பை இந்தியன்ஸ் அணி விலைக்கு வாங்கியது. 2019ஆம் ஆண்டுக்கான தொடரில் மொத்தம் 4 போட்டிகளில் மட்டுமே யுவராஜ் சிங்கிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் யுவராஜ் சிங் பெரிதளவில் பிரகாசிக்கவில்லை.

**க்ளேன் மெக்ஸ்வெல் (அவுஸ்திரேலியா)**

கிரிக்கெட் உலகில் அதிரடி ஆட்டத்திற்கு பெயர் போனவரான அவுஸ்திரேலிய அணியின் க்ளேன் மெக்ஸ்வெல் மீது அதீத நம்பிக்கை வைத்த மும்பை இந்தியன்ஸ் அணி கடந்த 2013ஆம் ஆண்டுக்கான தொடரில் தங்களது அணியில் இணைத்து கொண்டது. அந்த தொடரின் மூன்று போட்டிகளில் விளையாடிய க்ளேன் மெக்ஸ்வெல்; வெறும் 36 ஓட்டங்களை மாத்திரம் பெற்று அணிக்கு ஏமாற்றத்தை கொடுத்தார்.

**டுவைன் பிராவோ (மேற்கிந்திய தீவுகள்)**

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் நம்பிக்கை சகல துறை வீரராக திகழ்ந்துவரும் மேற்கிந்திய தீவுகளின் டுவைன் பிராவோவை ஐ.பி.எல் தொடருக்கு அறிமுகம் செய்தது மும்பை இந்தியன்ஸ் அணிதான்.

2008, 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுக்கான தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடிய பிராவோ, மொத்தம் தான் விளையாடிய 30 போட்டிகளில் 26 விக்கெட்டுகள் மட்டுமே வீழ்த்தினார். அதேபோன்று மூன்று தொடரிலும் சேர்த்து 457 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தார்.



## ஐ.பி.எல். 2020:

# மும்பை அணியில் மாலிங்கவுக்கு பதிலாக அவுஸ்திரேலிய வீரர்

நடப்பு ஐ.பி.எல். ரி20 தொடரிலிருந்து முன்னணி வேகப்பந்து வீச்சாளரான லசித் மாலிங்க விலகியுள்ள நிலையில், அவருக்கு பதில் வீரரை மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுவரை ஐ.பி.எல். தொடரில் விளையாடியில்லாத 30 வயதான வலக்கை வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பேட்டின்சன், நடப்பு தொடரில் லசித் மாலிங்கவுக்கு பதிலாக களமிறங்கவுள்ளார்.

இதுகுறித்து மும்பை இந்தியன்ஸ் அணியின் உரிமையாளர் ஆகாஷ் அம்பானி கூறுகையில், 'லசித் ஒரு ஜாம்பவான் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணியின் வலிமையின் தூண். இந்த பருவத்தில் லசித்தின் கிரிக்கெட் திறமையை நாங்கள் இழப்போம் என்ற உண்மையை மறுப்பதற்கில்லை. இருப்பினும், இந்த நேரத்தில் லசித் தனது குடும்பத்தினருடன் இலங்கையில் இருக்க வேண்டியதன் அவசியத்தை நாங்கள் முழுமையாக புரிந்துகொள்கிறோம். ஜேம்ஸ் எங்களுக்கு சரியான பொருத்தம் மற்றும் இந்த தொடரில் நாங்கள் விளையாடும் நிலைமைகளுக்கு ஏற்ப அவர் செயற்படுவார் என நம்புகின்றேன்' கூறினார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில், அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பெருமைக்குரிய மாலிங்க, இதுவரை 122 போட்டிகளில் விளையாடி 170 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். மும்பை இந்தியன்ஸ் பந்துவீச்சில் மிக முக்கிய வீரரான மாலிங்க, மும்பை அணி கடந்த முறை, நான்காவது சம்பியன் பட்டத்தை வெல்வதற்கு மிக முக்கிய காரணமாக திகழ்ந்தார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கெதிரான இறுதிப் போட்டியில், முதல் மூன்று ஓவர்களில் 42 ஓட்டங்களை விட்டுக்கொடுத்த மாலிங்க, கடைசி பந்தில் இரண்டு ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், ஷர்துல் தாக்கூரை எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்க செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியன் பிரீமியர் லீக்கின் (ஐபிஎல்) 13ஆவது அத்தியாத்தம், செப்டம்பர் 19ஆம் திகதி முதல் நவம்பர் 10ஆம் திகதி வரை ஐக்கிய அரபு இராச்சியத்தில், அபுதாபி, ஷார்ஜா மற்றும் டுபாய் ஆகிய மூன்று இடங்களில் நடைபெறவுள்ளது.

## நியூசிலாந்து அணி

# பயிற்சியாளரின் பதவிக்காலம் மூன்று வருடங்களுக்கு நீடிப்பு

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருக்கும் கேரி ஸ்டீட்டின் பதவிக் காலம் 2023 உலகக் கிண்ணப் போட்டித் தொடர் வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு கிரிக்கெட் சபை (02) அறிவித்துள்ளது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக அந்நாட்டின் முன்னாள் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் கேரி ஸ்டீட் செயற்பட்டு வருகிறார். அவரது பதவிக்காலம் இவ்வருடத்துடன் முடிவடையும் நிலையில், 2023 உலகக் கிண்ணத் தொடர் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

48 வயதான கேரி ஸ்டீட், 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நியூசிலாந்து அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். இவரது தலைமையில் நியூசிலாந்து அணி வெளிநாட்டு மண்ணில் பாகிஸ்தானுக்கு எதிராகவும், இலங்கைக்கு எதிராகவும் டெஸ்ட் தொடரை வென்றுள்ளது. இறுதியாக கடந்த வருடம் நடைபெற்ற ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இங்கிலாந்திடம் பௌண்டரி அடிப்படையில் தோல்வியை சந்தித்தது.

மறுபுறத்தில் சொந்த மண்ணில் பங்காளதேஷ், இங்கிலாந்து, இந்தியா, இலங்கை அணிகளுக்கு எதிராக தொடரை வென்றது.

உலக டெஸ்ட் தரவரிசையில் 2ஆவது இடத்திற்கும், ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் 3ஆவது இடத்திற்கும் அந்த அணி முன்னேறியது. இதன்மூலம் அவரது பதவிக்காலம் 2023 உலகக் கிண்ணத் தொடர் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. தனது பதவிக் காலம் நீடிக்கப்பட்டமை தொடர்பில் கேரி ஸ்டீட் கருத்து தெரிவிக்கையில்,

"நியூசிலாந்து அணியின் பயிற்சியாளராக என்னை மீண்டும் தேர்வு செய்தமையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எதிர்காலத்தில் நாங்கள் முக்கியமான பல போட்டித் தொடர்களில் களமிறங்கவுள்ளோம். அந்தத் தொடர்களில் விளையாடுவதற்கு எமது வீரர்கள் ஆர்வத்துடன் உள்ளார்கள்" என அவர் தெரிவித்தார்.



கொவிட் – 19 வைரஸினால் இதுவரை எந்தவொரு சர்வதேச தொடர்களிலும் விளையாடாத நியூசிலாந்து அணி, எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் மேற்கிந்திய தீவுகள், பாகிஸ்தான், அவுஸ்திரேலியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகளை சொந்த மண்ணில் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நந்தமித்ர ஏக்கநாயக்க சர்வதேச ஹொக்கி விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படுமா?



ஹொக்கி விளையாட்டுத்துறையின் தொட்டில் என வர்ணிக்கப்படும். மாத்தளை மாநகரில் பலதரப்பட்ட எதிர்பார்ப்புக்களுடன் நிர்மாணிக்கப்பட்ட நந்தமித்தர ஏக்கநாயக்க சர்வதேச விளையாட்டு அரங்கின் செயற்கை தரையாவும் பழுதடைந்து முழு ஹொக்கி மைதானமும் ஒரு பாலைவன பூமி போல் காட்சியளிக்கின்றது.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் முன்னை நாள் மத்திய மாகாண முதலமைச்சரும் , ஸ்ரீ ஹொக்கி சம்மேளனத்தின் தலைவருமான நந்தமித்தர ஏக்கநாயக்கவின் விசேட வேண்டுக்கோளுக்கிணங்க சமுர்த்தி இளைஞர் விவகார விளையாட்டுத்துறை மற்றும் கிராம அபிவிருத்தி முன்னாள் அமைச்சரான எஸ்.பி. திஸாநாயகவினால் மேற்படி ஹொக்கி விளையாட்டு அரங்கு 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6ம் திகதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மாத்தளை மாநகர ஹொக்கி விளையாட்டுத்துறையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்ற முழுமையான நோக்கத்துடனும் மாத்தளை மாநகரில் ஹொக்கி விளையாட்டுத்துறையில் பல சாதனைகளை படைத்து முன்னணியாக திகழ்நதுக் கொண்டிருக்கும் மாத்தளை சாஹிரா, சான்த தோமஸ், கிறிஸ்து தேவ மற்றும் சங்கமித்தா மகளிர் வித்தியாலய மாணவர்களின் ஹொக்கி விளையாட்டுத்துறையின் அபிவிருத்திக்கெனவும் மாத்தளை மாநகரில் இயங்கிக் கொண்டிருக்கும் விளையாட்டுக் கழகங்களின் நன்மை கருதியும் ஹொக்கி மைதானம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பித்தக்கதாகும்.

2000ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மேற்படி மைதானத்தின் நாளுக்கு நாள் தேவைப்பட்ட எந்த விதமான அபிவிருத்திப்பணிகளும் திருத்தப் பணிகளும் 2006 ஆம் ஆண்டு வரை இடம் பெறாமை இங்கு கோடிட்டு காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஸ 2005 ஆம் ஆண்டு பதவியேற்று அவருடைய ஆட்சியின் போது விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக பணிப்புரிந்த ஜீவன் குமாரதுங்கவின் விசேட ஏற்பாட்டின் பேரில் தெற்காசியாவின் 10 வது விளையாட்டுத்துறையின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப முன்னாள் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வீதி அபிவிருத்தி நீர் விநியோக நகர அபிவிருத்தி பிரதியமைச்சராக பணிப்புரிந்த ரோஹண திஸாநாயகவின் விசேட வேண்டுக்கோளிற்கு இணங்க விளையாட்டுத்துறை அமைச்சும் மற்றும் மத்திய மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து சுமார் 100 இலட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு செயற்கை தரையினால் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி ஹொக்கி மைதானம் மாத்தளை மாநகர சபையின் முன்னாள் மாநகர முதல்வர் ஹில்மி முகமட் கரீமின் விசேட வேண்டுக்கோளிற்கிணங்க மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகியோரினால் 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21ம் திகதி தெற்காசிய விளையாட்டின் ஹொக்கி போட்டிகளுக்காக வேண்டி திறந்து வைக்கப்பட்டது. ஹொக்கி விளையாட்டுத்துறையின் இலங்கையின் உற்பத்தி மாத்தளை மாநகர் என எல்லோராலும் புகழாரம் செய்த போதும் நந்தமித்திர ஏக்கநாயகவினால் ஹொக்கி விளையாட்டுத்துறையின் நீண்ட கால முன்னேற்றம் கருதி தூர நோக்கு சிந்தனையுடன் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி சர்வதேச ஹொக்கி விளையாட்டு அரங்கு தலைநகர் கொழும்பின் விளையாட்டு அமைச்சுடன் இணைந்து காணப்படும் சர்வதேச ஹொக்கி மைதானத்தின் இரண்டாவது உருவாக்கம் எனவும் நந்தமித்திர ஏக்கநாயக சர்வதேச ஹொக்கி மைதானம் கருதப்பட்டது.

2006 ஆம் ஆண்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்ட மேற்படி ஹொக்கி மைதானம் 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆன போதும் இதுவரை எதுவித புனரமைப்பு பணியும் மேற்கொள்ளப்படாமல் இம்மைதானத்தின் செயற்கை தரையாவும் பழுதடைந்து பாலைவனம் போல் காட்சி அளிப்பது மற்றுமல்லாமல் இவ் ஹொக்கி மைதானத்தின் பார்வையாளர்களுக்கும் விளையாட்டு வீரர்களுக்கெனவும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

பார்வையாளர் மண்டபங்களும் ஓய்வு அறைகளும் எவரின் பராமரிப்புகளுமின்றி சமூக விரோத செயல்கள், இடம்பெறக்கூடிய ஒரு கேந்திர நிலையமாக இம்மைதானமும் கட்டடங்களும் மாறி இருப்பதை அவதானிக்க முடிகிறது.

எனவே மாத்தளை மாநகர் ஹொக்கி விளையாட்டின் முன்னோடி நகரம் மாத்தளை மாநகர ஹொக்கி வீரர்களின் மற்றும் பாடசாலை மாணவர்களின் ஹொக்கி விளையாட்டின் எதிர்கால நலன்கருதி நன்தமித்திர ஏகநாயவினால் ஆரம்பிக்கப்பட்ட ஹொக்கி மைதானத்தை புனரமைப்பு செய்து மாத்தனை ஹொக்கி வீரர்களிடம் இம்மைதானத்தை கையளித்திட இன்றைய அரசின் இளம் தலைவரும் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஸ துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமன மாத்தளை மக்கள் வேண்டிக்கொள்கின்றனர்.

**உக்குவளை விசேட நிருபர்...**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# ஏற்க முடியாததை ஏற்றுக் கொள்ளுங்கள்

## ஒரு மனோவியல் ஆய்வு



பெரும்பாலான மனிதர்கள் ஒரு கற்பனை உலகில் வாழ்கின்றனர். அவர்கள் நம்புவதும் எதிர்பார்ப்பதும் பெரும்பாலும் யதார்த்த வாழ்க்கைக்கு ஒத்துப்போவதாக இருப்பதில்லை. நிஜமாக முடியாத ஒரு நேர்கோடான, சீரான வாழ்க்கைக்காக ஆசைப்படுகின்றார்கள். அப்படியொரு வாழ்க்கை யாருக்குமே என்றுமே இதுவரை அமைந்ததில்லை. இனி அமையப் போவதுமில்லை. அதனால் அவர்களின் எதிர்பார்ப்புகளும் நடைமுறை நிஜங்களும் ஒன்றுக்கொன்று முரணாகவே இருக்க, அவர்கள் வாழ்க்கை முழுவதையும் பிரச்சினைகளாகவே காண்கின்றார்கள். அதன் காரணமாக தினசரி வாழ்வில் சீக்கிரமாகவே அமைதியை இழந்து தவிக்கிறார்கள்.

உலகமானது எப்போதும் தன்னிச்சைப்படியே தான் இயங்குகிறது. அதனால் நிகழ்வுகள் பலவும் நமது கருத்துக்களை அனுசரித்துப் போவதில்லை. நம்மால் முழுமையாக உணர முடியாத ஏதோவொரு விதியின்படியே சகலதும் நடக்கின்றது. அதை ஏற்றுக்கொள்கிறீர்களா, இல்லையா என்று உலகம் உங்களிடம் கேள்வி கேட்டு எதையும் நடத்துவதில்லை. பல சமயங்களில் உங்களுக்கும் தேர்ந்தெடுக்கும் உரிமை தரப்படுவதில்லை. அப்படி இருக்கையில் நம் கட்டுப்பாட்டில் இல்லாத நம்மால் மாற்றியமைக்க முடியாதவற்றை எண்ணி வருந்துவதும், புலம்புவதும், கலங்குவதும் அந்த நிலைமையை எள்ளளவும் மாற்றிவிடப்போவதில்லை.

ஒரு மரணம் நிகழ்கிறது; இறந்தவர் நம்மால் மிகவும் நேசிக்கப்பட்டவர்; அவரது மரணம் நாம் சிறிதும் எதிர்பாராதது என்று வைத்துக் கொள்வோம். அந்த மரணம் கண்டிப்பாகப் பெரும் துயரத்தைத் தரும்தான். அதுவும் இறந்தவர் கணவனாகவோ, மனைவியாகவோ, பிள்ளையாகவோ, தாயாகவோ, தந்தையாகவோ இருந்துவிட்டால் அந்த இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அதுவும் அவரால் ஆகவேண்டிய காரியங்கள் நிறைய இருக்கும் பட்சத்தில் மனரீதியாக மட்டுமல்லாமல் எல்லாவகையிலும் நாம் பாதிக்கப்படுவதால் அதன் தாக்கங்களும் மிக அதிகமாகத்தான் இருக்கும். அதனால் அந்தத் துக்கம் இயற்கையானது. நியாயமானதும் கூட.

ஆனால் மரணம் ஒவ்வொருவரும் சந்தித்தாக வேண்டிய ஒரு நிகழ்வு. மரணகாலத்தை தீர்மானிக்கும் சக்தி நம்மிடம் இல்லை என்கின்ற போது அதை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். உடனே தோன்றுகிற இயல்பான துக்கத்திலிருந்து விரைவாக நாம் மீண்டெழுத்தான வேண்டும். கடக்க வேண்டிய காரியங்களை சரியாகக் கவனித்து செயற்பட்டே தீர வேண்டும். இறந்தவர்களுக்காக இருக்கின்றவர்களை புறக்கணித்து விடக்கூடாது. அது நியாயமும் ஆகாது. விவேகமும் அல்ல. ஆனால் பலர் இந்தத் துக்கத்திலிருந்து மீள்வதில்லை. இந்த மரணம் நியாயமானதா? சரியான காலத்தில்தான் சம்பவித்திருக்கிறதா? சாவுக்காக மூச்சுத்தளர்ந்த எத்தனையோ பேர் காத்திருக்கையில் இவருக்கு ஏன் வரவேண்டும்? என்பது போன்றே கேள்விகளிலேயே தங்கி விடுகிறார்கள். இந்தக் கேள்விகளுக்கு உலகம் பதிலளிப்பதில்லை. வாழ்க்கையானது நம்மில் விதிப்படி நேர்கையில் இதற்கெல்லாம் பதிலில்லை.

மரணம் போன்ற இன்னும் எத்தனையோ பெரிய விடயங்கள் இருக்கின்றன. விபத்துக்கள், நோய்கள், பெரும் கஷ்டங்கள், மோசமான மாற்றங்கள் எல்லாம் நம் சீரான வாழ்க்கையை சீர்குலைக்கக் கூடும். வந்ததை மறுப்பதால் பிரச்சினைகள் கூடுமே ஒழிய குறையாது. உண்மை நிலையை உணர்ந்து ஏற்றுக்கொண்டால் மட்டுமே தெளிவாக சிந்திக்கவும் செயற்படவும் முடியும். அந்த வகையில் மட்டுமே ஓரளவாவது பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள முடியும். யார் காரணம் என்று ஆராய்வதிலும், குற்றப்பத்திரிகை தயார் செய்வதிலும், எனக்குப்போய் இப்படி ஆகிவிட்டதேயென்று சுயபச்சாத்தாபத்தில் மூழ்குவதிலும் எந்த விதத்திலும் நன்மை கிடைக்கப்போவதில்லை.

பெரிய விடயங்களை இதுவரை பார்த்தோம். இனி சின்ன விடயங்களைப் பார்ப்போம். ஒரு முக்கிய வேலையாக வெளியே போகிறோம். வழியில் வாகன நெரிசல் ஆகிவிடுகிறது. வாகனங்கள் ஆமை வேகத்தில் நகர்ந்து செல்கின்றன. இது சந்தோஷப்பட வேண்டிய சூழ்நிலை அல்லத் தான். ஆனால் சிலர் அந்த நேரத்தில் படும் அவசரமும் அவஸ்தையும் கொஞ்சநஞ்சமல்ல. புலம்பித் தீர்ப்பதும், குடியே மூழ்கிவிட்டதைப் பொல் மன அமைதியிழப்பதும் பலரிடம் நாம் பார்க்க முடிந்த தன்மைகள், அந்தப் புலம்பலாலும் அவசரத்தாலும் அந்த நிலைமையை மாற்றி விட முடியுமா? சில நிமிட தாமதங்களால் வாழ்க்கையையே புரட்டிப்போடுகிற நிகழ்வுகள் நிகழ்ந்து விடுமா? சரிசெய்யவே முடியாத பேரிழப்பா அது? சில நிமிடங்நேர சில்லறை அசௌகரியத்திற்கு பலரும் அமைதியிழந்து தவிப்பதும், முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதும் என்னவொரு அறியாமை? மன அமைதியை இது போன்ற விடயங்களுக்கெல்லாம் இழக்க ஆரம்பித்தால், மனம் அந்தளவுக்கு பலவீனமடைந்துள்ளது என்றல்லவா அர்த்தம்? எது வேண்டுமானாலும் எவ்வளவு சீக்கிரமும் அதனைப் பதற்றமடையச் செய்துவிடும் என்றும், சுலபமாக அசைத்துவிடும் என்றல்லவா பொருள்?

அதேபோல் நிறைய சின்னச்சின்ன விடயங்கள் பலரையும் தேவைக்கமதிகமாக மன அமைதியிழக்கச் செய்கின்றது. மழை விடாது பெய்தால் மனச்சங்கடம் வந்துவிடுகிறது. அலுவலகத்திலும் அக்கம் பக்கத்திலும் ஒரு சிலருடைய குணாதிசயங்கள் எரிச்சலைக்கிளப்புவதாக இருந்தால் மன அமைதி பறிபோகிறது. எதிர்பார்த்தபடி அடுத்தவர்கள் நடக்காவிட்டால் மனம் குமுறுகிறது. இதுபோன்ற சின்னச் சின்ன, இயற்கையான நம்மால் மாற்ற முடியாத விடயங்களில் மன அமைதியை இழப்பது அதிகம் நடக்கிறது. தினசரி வாழ்க்கையில் ஒவ்வருவரையும் சீண்டிப்பார்க்கக்' கூடிய இதுபோன்ற சின்னச் சின்ன விடயங்கள் அதிகம் வருவது இயல்பே. இதைப்பற்றி அதிகம் நினைத்து, இதைப்பற்றியே அதிகம் புலம்பி, தானும் வருந்தி சுற்றியுள்ளவர்களுக்கும் அந்த மனநிலையைப்பரப்பி, அமைதியை அந்த வட்டாரத்திலேயே இல்லாமல் செய்கிறவர்கள் நிறைய இருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தில் நீங்களும் இருக்கிறீர்களா என்று பாருங்கள். வாழ்க்கையில் சகிக்க முடியாதவற்றில் மாற்றக்கூடியவை நிறைய உண்டு. அதை மாற்றும் முயற்சியில் மனிதன் ஈடுபட்டதால் மட்டுமே உலகம் இந்த அளவு முன்னேறியிருக்கிறது. மனித சமுதாயம் வளர்ந்துள்ளதற்கும் காரணம் அதுவே. ஆனால் அதேபோல் மாற்ற முடியாத விடயங்களும் நிறைய உண்டு.

உதாணத்துக்கு ஒரு சிலவற்றை நாம் இங்கு பார்த்தோம். இவை நாம் முகம் சுளிப்பதால் தவிர்க்க முடிந்தவை அல்ல. இவைகளுக்காக நாம் அழுது புலம்பினாலும் வராமலிருப்பவையுமல்ல. இவை போன்றவற்றை ஏற்றுக்கொள்கிறோம். அதன் மூலமே நம் சக்தி வீணாவதையும் தடுக்கிறோம். மன அமைதியைம் பெறுகிறோம்.

அப்போது “ஐயோ எனக்குப் போய் இப்படி ஆகிவிட்டதே' என்ற ஒப்பாரிக்குப் பதிலாக ‘இனி என்ன செய்வது?' என்ற ஆக்கபூர்வமான சிந்தனை பிறக்கிறது. இப்படிப்பட்ட சிந்தனையால் எப்போர்ப்பட்ட சூழ்நிலை யிலிருந்தும் விடுபடும் வழியோ, அல்லது அந்தச் சூழ்நிலையை தாக்குப்பிடிக்கும் மனோதிடமோ தோன்றுகிறது. இப்படியாக மாற்ற முடியாததை ஏற்றுக்கொள்ளும் போது உலகுடன் போராடுவதை விட்டுவிட்டு, அதனுடன் ஒத்துப் போய் சமாளித்து வெற்றிபெறுகிறோம்.

**எஸ். ஜோன்ராஜன்** ✍

# மூதாதையர் உணவுப் பழக்கவழக்கங்களின் மீளத்திரும்பல்



பசுமையான உணவுப்பொருட்களுடன் கூடிய நிலைபேறான உணவுப் பழக்க முறைக்கு எம்மைத் திட்டமிடப் பழகிக் கொள்வோம். எம்மை சுமார் 40 முதல் 50 வருடங்கள் வரை பின்நோக்கி கொண்டு செல்லும் என்பதால் இதிலும் விறுவிறுப்பு நிறைந்துள்ளது.

அக்காலத்தில் எம் முன்னோர்கள் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தனர். எனவே, வீட்டில் குடும்பமாக பொழுதை செலவிடவும்,ஆரோக்கியமான உணவுகளை பழமையான முறைகளைப் பின்பற்றி தயாரிப்பதிலும் சிறுவர்களுடன் அவற்றை அமர்ந்து பகிர்ந்து உண்பதற்கும் போதியளவு நேரம் காணப்பட்டது. ஒருநாளில் பல உணவு வகைகள் தயாரிக்கப்பட்டதுடன், அவற்றை தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களும் வீடுகளில் தயாரிக்கப்பட்டதாக இருந்தன. தினசரி மாலை வேளைகளில் குடும்பத்தார் இணைந்து பாடல்களை பாடுவது, பத்திரிகைகள் மிகவும் ஆறுதலாக பொழுதைப் போக்கும் வகையில் வாசிக்கப்பட்டிருந்தன. குடும்பக் கலந்துரையாடல்களின் காரணமாக, குடும்பப் பிரச்சனைகளும் குறைந்திருந்தன. பழங்கள், பூக்கள், மரக்கறிகள் போன்றவற்றை தமது தோட்டங்களில் பயிர் செய்தனர். தாம் அணியும் ஆடைகளைக்கூட வீடுகளிலேயே தைத்துக் கொண்டனர். விலங்குகளை செல்லப் பிராணிகளாக வளர்த்தனர்.

சமைத்த உணவுகளை தட்டுகளில் இட்டு ஆறுதலாக உண்டனர். பேணிகளில் அடைக்கப்பட்ட அல்லது பொதிசெய்யப்பட்ட உணவுகளை அருந்தவில்லை. முக்கியமாக, சொக்லட் மற்றும் பிஸ்கட் வகைகள் தவிர, அக்காலப் பகுதியில் பதப்படுத்தப்பட்ட மற்றும் பொதிசெய்யப்பட்ட உணவுகள் மிகவும் குறைவாகவே தொழிற்சாலைகளிலும் உற்பத்தி செய்யப்பட்டன.

வீடுகளில் உணவுக்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால், உணவில் தவிடு அல்லது இரும்புச் சத்து நிறைந்து காணப்பட்டன. உதாரணமாக, உணவுக்குத் தேவையான அரிசிமா வீட்டிலேயே அக்காலத்தில் உரல்களில் இடித்துத் தயாரிக்கப்பட்டது. இதன்போது உடற்பயிற்சியும் கிடைத்திருந்தது. மிக்சிகளுக்கு பதிலாக அம்மி, ஆட்டுக்கல் போன்றன அன்று பயன்படுத்தப்பட்டிருந்தன. எனவே, உணவுக்குத் தேவையான வாசனைத் திரவியங்கள் உடனுக்குடன் தயாரிக்கப்பட்டிருந்ததால், சத்துடன், நறுமணமும் நிறைந்ததாக அக்கால உணவுகள் காணப்பட்டன.

இலங்கையின் பழங்காலக் கதைகளை மீட்டுப் பார்க்கும் போது, உணவு மையப்படுத்தப்பட்ட ஒரு அங்கமாக அமைந்துள்ளது. கிராமிய மட்டத்தில் நெற்செய்கை என்பது பிரதான தொழிலாக காணப்பட்டது. அரிசிச் சோறு என்பது அவர்களின் உணவில் முக்கிய அங்கம் வகித்தது. சோற்றுடன், இறைச்சி அல்லது மீன், மரக்கறிகள் மற்றும் பழங்கள் என போஷாக்கான அனைத்தையும் சேர்த்தே அக்காலத்தில் உணவாகக் கொண்டிருந்தனர். அரிசிக்கு பதிலாக மரவள்ளி மற்றும் பலாக்காய் போன்றன மாற்றீடாக காணப்பட்டதுடன், தமது மூன்று உணவுவேளைகளில் ரொட்டி, பிட்டு மற்றும் தோசை போன்றவற்றையும் உள்ளெடுத்திருந்தனர். இந்த பழங்கால உணவுத் தயாரிப்பு முறைகள் பல இன்று நவீன மயப்படுத்தப்பட்டுள்ளன.

பதப்படுத்தப்பட்ட உணவுகள் பல அளவுக்கதிகமான சக்தியை வழங்கக்கூடிய வகையில் தயாரிக்கப்படுவதுடன், அளவுக்கதிகமான உப்பு, சீனி, இரசாயன பதப்படுத்திகள், நிறமூட்டிகள் மற்றும் சுவையூட்டிகள் போன்றவற்றையும் கொண்டுள்ளன. நுணுக்கமாகப் பதப்படுத்தப்பட்டிருந்தால், இந்த உணவு தயாரிக்கப்பட்டதும்,அதில் அடங்கியிருக்கும் மூலப்பொருட்களை இனங்காண முடியாததாக இருக்கும். பலபதப்படுத்தப்பட்ட உணவுகள் உடனடியாக உண்ணக்கூடிய வகையில் அமைந்துள்ளன. இவ்வாறான உணவுகளை அளவுக்கதிகமாக உள்ளெடுப்பதால் மோசமான உணவுத்தரம் மற்றும் உடற் பருமன் போன்றன ஏற்படக் காரணமாக அமைந்து விடுவதாக அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளினூடாக கண்டறியப்பட்டுள்ளது.

வீடுகளில் உணவு தயாரிப்பதற்கு குறைந்தளவு நேரம் செலவிடப்படுகின்றது. அதாவது, தாம் உட்கொள்ளும் உணவுகள் பெரும்பாலும் போஷாக்கு குறைந்ததாக அமைந்திருக்கின்றன. குறிப்பாக, நகர்ப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் உடனடியாக உண்ணக்கூடிய, சிற்றுண்டிகள் மற்றும் வீதியோரம் விற்கப்படும் உணவுகளில் தங்கியுள்ளனர். இந்த உணவுகள் உடனடியாக கிடைக்கின்றமையால், சகாயமான விலையிலும் காணப்படுவதால், சிறுபராயம் முதலே அளவுக்கதிகமான உடல் எடை அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளும் அதிகரித்தவண்ணமுள்ளன. ஐக்கிய நாடுகளின் உணவு, விவசாய ஸ்தாபனத்தின் தரவுகளின் பிரகாரம், ஐந்து வயதுக்குக் குறைந்த 40 மில்லியன் சிறுவர்கள் உடற்பருமன் அதிகமானவர்களாக காணப்படுகின்றனர். 120 மில்லியனுக்கு அதிகமான ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் (5 முதல் 19 வயதுவரையான) உடற்பருமன் அதிகமானவர்களாக காணப்படுகின்றனர். இலங்கையிலும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் மத்தியில் அளவுக்கதிகமானஉடல் எடையைக் கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 15-49 வயதுக்குட்பட்ட பெண்களில் 45 சதவீதமானவர்கள் அளவுக்கதிமான எடை கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

பழங்காலத்தில், வீடுகளிலேயே நோய் எதிர்ப்பு அல்லது தடுப்புக்கு இயற்கையான முறைகள் பின்பற்றப்பட்டிருந்தன. குறிப்பாக மரமஞ்சள் தொற்றுநீக்கும் தயாரிப்பாக பெருமளவில் பயன்படுத்தப்பட்டிருந்தது. கொவிட்19 தொற்றுப்பரவ ஆரம்பித்ததுடன், இலங்கையில் மஞ்சளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றதையும் காணமுடிகின்றது. பசுமையான உணவுப்பொருட்களுடன் கூடிய நிலைபேறான உணவுப் பழக்க முறைக்கு எம்மைத் திட்டமிடப் பழகிக் கொள்வோம்.

**ருக்ஷிக்கா** ✍

# வாசல் திறந்து வந்த நிலா



உள்ளக்கதவை உடைத்தே
உட்கார்ந்திட்ட என் பெண்ணிலவே
அள்ளியணைத்திடத் தோணுதடி
அயல் வந்து என் விரகம் தீரடி
துள்ளியெழுந்திட்ட யௌவனத்தை நீ
தொலைவி ருந்தாற்றுதல் எப்படியோ
கள்ளி உன் சிற்றிடை பற்றுதற்கு என்
கைவிரல் கொள் இன்பம் யார் அறிவார் தேனினை
வென்ற குரலொலியாள் மிகு
தேவதைத் தோற்றப் பொலிவுடையாள்
மானினைப் போன்ற மருள் விழியாள் மட
மாது என் தேகத்துப் போர்க் கொடியாள்
வானிடை தோன்றி மறைபவள் போல் வந்து
வார்த்தையில் ஒளிதந்து மறைபவள் காண்
கானில் இடர்ப்பட எனை விட்டு
கை கொட்டிச் சிரிக்கிறாள் என்ன செய்வேன்

முத்தங்கள் ஆயிரம் மூச்சிட வைத்ததில்
மனமே காதலைக் கொட்டிடவே
எத்தனித்தே தினம் ஏங்கித் தவிக்கிறேன்
ஏதென்று கேட்டு என் அருகு நன்னி
சித்தம் நிறைந்து நீ சீர் நடம் ஆடடி
சீதனம் என்ன நீ உன்னைக் கொடு
மெத்தப் பெரிதடி மேனி கொதிக்குது.
மேல் வந்து வீழடி! மெய் சிலிர்ப்போம்!
நெற்றி வளைவும் உன் நேர் வகிடுச்சியும்
நேர் எழுந்தார்த்திடும் வில்லழகும்
பற்றி இழுத்திடும் பங்கயக் கண்களும்
பாலமை மாறிடாப் பல் நிரையும்
வெற்றி பெரும் புகழ் பேசிட முன்வரும்
பேதமை சேர்ந்த உன் பேச்சொலியும்
உற்றுடன் ஏகியே உன்னுடன் வாழ்வதை
ஊறு இன்றிப் பேணடி என்னவளே!

**கம்பநேசன்** ✍

# இலங்கையின் நாமத்தை உலகிற்கு எடுத்துச்செல்லும் டெலி தொன்

கோவிட் 19 ஐ கட்டுப்படுத்த இடைவிடாமல போராடி வரும் முன்னணி சுகாதார ஊழியர்களுக்கு உதவ இலங்கையின் முதல் டெலி தொன் விவரங்கள் சமீபத்தில் கலதாரி ஹோட்டலில் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டன.

கலந்து கொண்ட அதிதிகளை வரவேற்று உரைநிகழ்த்திய இந் நிகழ்வின் வடிவமைப்பாளரான ரிச்சர்ட் டி சொய்சா கருத்துத் தெரிவிக்கையில் அரசாங்கம், முப்படையினர், மருத்துவ மற்றும் சுகாதார அதிகாரிகள் இணைந்து தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் விதத்தை கோடிட்டுக் காட்டினார். இவர்களின் முன்மாதிரியான நடவடிக்கைகள் உலகளாவிய அங்கீகாரத்திற்கு தகுதியானவை என்றும், அரசாங்கங்கள் தீர்க்கமான மற்றும் உறுதியானதாக இருப்பதன் மூலம் இலங்கையில் மட்டுமல்லாமல், உலகின் பிற பகுதிகளும் இந்த இயற்கையின் நெருக்கடியை எவ்வாறு எதிர்கொள்ள முடியும் என்பதை அறிந்து கொள்ளும் ஒரு முன்மாதிரியை வழங்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

டெலிதொன் ஆனது சியாத டிவி எக்ஸ் பெரிமண்ட்ஸ்யுடன் ரியல் மற்றும் கிஸ் எஃப்.எம் இணைந்து எலைட் விளம்பரங்கள் மற்றும் பொழுதுபோக்கு மூலம் வழங்கப்படும் ஒரு நிகழ்வாகும். மேலும் இந் நிழ்வு டேமியன், போனி, ரனில் அமிர்தியா, கிராஸ்ரோட்ஸின் போனி, ருக்சான் மற்றும் மெலந்தா பெரேரா, உமாரா, கோரின் அல் மேடா,சியாம் மற்றும் சமிஸ்டார், ஏப்ரல் ஜொக்மேன், ஜாக்கி மற்றும் இசினி பொன்சேகா, மார்லன், சாஃபி மற்றும் செரிடன், ராஜிதா உள்ளிட்ட கலைஞர்களை மிராஜ் மற்றும் அக்வாரிஸ் ஆதரவுடன் மிஸ்டி, ட்ரெசெல் மற்றும் மரியாசெல்லே ஆகிய அனைவரும் நமது உண்மையான கதாநாயகிகள் மற்றும் கதாநாயகர்களைப் பாராட்டும் வகையில் இலங்கையில் நடைபெறவிருக்கும் மிகச் சிறந்த நிகழ்வாக இது இருக்கும்.

# தனிப்பட்ட விபத்து காப்பீட்டை இலகுவாக்கும் Allianz PAB Plus

அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட் (அலியான்ஸ் லங்கா), கூடுதல் காப்பீடுகள் மற்றும் சலுகைகளுடனும், கட்டுபடியாகும் கட்டணத்துடனும் Allianz PAB Plus என்ற தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. துரதிர்ஷ்டவசமாக விபத்து நேரும் சந்தர்ப்பங்களில் காப்பீட்டாளர்களுக்கும் அவர்களது அன்புக்குரியவர்களுக்கும் அதிகளவு பாதுகாப்பை வழங்க, கட்டுபடியாகும் கட்டணத்துடன் இத்தீர்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

விபத்து காரணமாக காப்பீட்டாளரின் உயிரிழப்புக்கு ரூபா. 400,000/ அல்லது கண் பார்வை, கை, கால்கள் அல்லது வேறு எந்த அவயவங்களின் இழப்புக்கு ரூபா. 400,000/ என்ற அடிப்படைக் காப்பீட்டுடன் இத்திட்டம் கிடைக்கப் பெறுகிறது. மேலதிக சலுகையாக எவ்விதமான போக்குவரத்தின் போதும் ஒரு பிரயாணியாகவோ அல்லது மோட்டார் சைக்கிளில் ஓட்டுபவருக்கு பின்னால் அமர்ந்து செல்கின்றபோதோ விபத்து காரணமாக காப்பீட்டாளரின் உயிர் இழப்பு ஏற்பட்டால் ரூபா. 400000/ இழப்பீட்டுக் கொடுப்பனவு அடங்கியுள்ளது.

விபத்து காரணமாக காப்பீட்டாளரால் பெறப்பட்ட மருத்துவ சிகிச்சைக்கு ரூபா. 40000/ வரை செலுத்துதல் அல்லது விபத்து காரணமாக அரச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் சமயத்தில் ஒருநாளைக்கு ரூபா. 400/ வீதம் அதிகபட்சமாக 40 தினங்கள் வரை செலுத்தப்படும் வகையில் மருத்துவ செலவுகளை காப்பீட்டாளர்கள் ஈடுசெய்ய இது உதவுகிறது. விபத்து காரணமாக காப்பீட்டாளர் இறந்தால், மரணச்சடங்கு செலவாக ரூபா.40000/ வரையான தொகையையும்இத்திட்டம் வழங்கும். Allianz PAB Plus ஆண்டுக்கு ரூபா. 400 என்ற மிகக்குறைந்த கட்டுப்பணத்துடன் இந்த அனைத்து சலுகைகளையும் வழங்கி, தனிநபர் விபத்து காப்பீட்டை அனைத்து இலங்கையர்களுக்கும் மேலும் அணுகக்கூடியதாக மாற்றுகிறது.

## இலங்கையில் மிகவும் நேசிக்கப்படும் வர்த்தக நாமங்களான

# குமாரிகா மற்றும் பேபி செரமி நேபாளத்தில் அறிமுகம்

ஹேமாஸ் கன்சியூமர் ப்ராண்ட்ஸ் (Hemas Consumer Brands) குழு, இலங்கையின் மிகவும் நேசிக்கப்படும் குழந்தை மற்றும் கூந்தல் பராமரிப்பு பொருட்களான பேபி ஷெரமி மற்றும் குமாரிகாவை நேபாளிய சந்தைக்கு சமீபத்தில் அறிமுகம் செய்துள்ளது. நேபாளத்தின் எவரெஸ்ட் ஹோட்டலில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியானது நேபாளின் முன்னாள் பிரதமர் மேன்மைமிகு ஜஹல நாத் கானல், ஹேமாஸ் மேனுபேக்ச்சரிங் (பிரைவேட்) லிமிடெட், ஸ்ரீ லங்கா (Hemas Manufacturing (Pvt) Ltd, Sri Lanka) வின் நிர்வாக பணிப்பாளர், ரோய் ஜோசப், ஹஜுர்ளாய் நமஸ்தே ட்ரேட் லிங்க் (பிரைவேட்) லிமிடெட் (Hajurlai Namaste Trade Link (Pvt.) Ltd.) இன் தலைவரும் ஹேமாஸ் வர்த்தக நாமத்திற்கான நேபாளிய பிரத்தியேக விநியோகருமான தாரா பஹதூர் குன்வர் ஆகியோரால் கௌரவிக்கப்பட்டு வேறு பல பிரமுகர்களின் பங்கேற்புடன் இடம் பெற்றது.



நேபாளிய சந்தையில் நுழைவை முன்னிட்டு கருத்து தெரிவித்த ஹேமாஸ் மேனுபேக்ச்சரிங் (பிரைவேட்) லிமிடெட், ஸ்ரீ லங்கா (Hemas Manufacturing (Pvt) Ltd), நிர்வாக பணிப்பாளர் திரு. ரோய் ஜோசப், எமது வர்த்தக நாமங்களை நேபாளில் தடம் பதித்து, விரிவு படுத்தி, நேபாளிய வாடிக்கையாளரிடையே கொண்டு செல்வதற்கு சரியான விநியோகஸ்தரை தேர்தெடுத்ததில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்த விரிவாக்கமானது நேபாளிய வாடிக்கையாளர்களுக்கு இலங்கை,பங்களாதேஷ், இந்தியா, மாலைத்தீவு மற்றும் பல நாடுகளால் விரும்பப்பட்ட எமது சிறந்த பொருட்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது. எங்கள் நம்பகமான உள்நாட்டு பொருட்களை பிராந்தியத்திற்கு கொண்டு செல்வதற்கும், பாரிய சந்தைகளுள் பங்குகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்குமான எங்கள் மூலோபாயத்திற்கு அமைய இந்த விரிவாக்கம் உள்ளது.

பிரபல்யமான வர்த்தக நாமங்களை கொண்டு புதிய சந்தையை அடைந்ததுடன், இவ்வருட ஆரம்பத்தில் Hemas Manufacturing தமது குமாரிகா கூந்தல் எண்ணெய் உற்பத்தி செயற்பாட்டை இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் நிறுவியது.

அவர்களின் சிறந்த அர்பணிப்பை தொடர்ந்து 2019 ஆண்டில் ஹேமாஸ் மேனுபேக்ச்சரிங்( Hemas Manufacturing) இன் சர்வதேச வர்த்தகப் பிரிவு, National Chamber of Exporters Awards நிகழ்வில் 'பிற தொழில்துறை பொருட்கள் பிரிவில்' இரண்டு தங்க விருதுகளை பெற்றுக்கொன்டதுடன், SLIM Brand Excellence நிகழ்வில் அவ் 'வருடத்தின் ஏற்றுமதி வர்த்தக நாமத்திற்கான (Export Brand of the year) தங்க விருதையும் தன்வசப்படுத்திக்கொண்டது.

# "அக்ரி லீசிங்கை" ஊக்குவிக்க AMW உடன் கைகோர்த்தது கொமர்ஷல் வங்கி



நியூஹொலன்ட் (New Holland) ட்ரக்டர்களைக் கொள்வனவு செய்யும்போது, குறைவான லீசிங் கட்டணங்களையும் ஏனைய சலுகைகளையும் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, "அக்ரி லீசிங்" (Agri Lease) ஊக்குவிப்புத் திட்டமொன்றுக்காக அசோசியேட்டட் மோட்டவேய்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் (Associated Motorways [Private] Limited – AMW) நிறுவனத்துடன் கொமர்ஷல் வங்கி கைகோர்த்துள்ளது.

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ஊக்குவிப்புத் திட்டம், நவம்பர் 30, 2020 வரை செயற்பாட்டில் இருக்குமென வங்கி தெரிவித்தது. குறைந்த கட்டண வீதங்களை வழங்குவதற்கு மேலதிகமாக, இந்தத் திட்டத்தின் கீழ் ட்ரக்டா்களைக் கொள்வனவுசெய்யும் போது, "அக்ரி லீசிங்" வாடிக்கையாளா்களுக்கு விசேட பெறுமதி சோ்ப்புக்களும் ஏனைய சலுகைகளும் வழங்கப்படுமெனவும் வங்கி குறிப்பிட்டது.

மேலதிகமாக, வாடிக்கையாளர்களின் பருவத்துக்கேற்ற வருமான அமைப்புகளுக்கேற்ப, நெகிழ்வான மீள்செலுத்துதல் திட்டங்களை வங்கி ஏற்பாடு செய்துள்ளது. இது தொடர்பில் ஆர்வமுடையோர், எந்தவொரு கொமர்ஷல் வங்கிக் கிளைக்கோ அல்லது ஏ.எம்.டபிள்யூ காட்சியறைக்கோ விஜயம் மேற்கொண்டு, இவ்வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சௌகரியமான நடைமுறையொன்றின் மூலமாக உயர்தரமான விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக நிதி உதவியை விவசாயிகளுக்கு வழங்கி உதவும் நோக்கில், இந்த ஊக்குவிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது என வங்கி தெரிவித்தது. வங்கியின் விவசாய மற்றும் நுண் நிதி அதிகாரிகளாலும் ஏ.எம்.டபிள்யூவின் விற்பனை அணிகளாலும், விவசாயப் பகுதிகளில் இந்த ஊக்குவிப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

## அம்பேவெல புதிய வர்த்தக நாம தூதுவராக

# Mrs. World 2020 கரோலின் ஜூரி

2020 ஆம் ஆண்டின் Mrs. World உலக அழகிப் பட்டத்தை வென்றை கரோலின் ஜூரியை தமது உத்தியோகபூர்வ வர்த்தக நாமத் தூதுவராக நியமித்துள்ளதாக அம்பேவெல அறிவித்துள்ளது. இலங்கையின் நம்பிக்கையை வென்ற உயர்தரம் மற்றும் போஷாக்கு நிறைந்த பாலுற்பத்திகளை விநியோகிக்கும் அம்பேவெல, கரோலின் ஜூரியுடன் ஏற்படுத்தியுள்ள இந்தப் பங்காண்மை இயற்கையாகவே மிகவும் பொருத்தமானதாக அமைந்துள்ளது.

அம்பேவெல தனது பரந்தளவு உயர்தரம் வாய்ந்த பாலுற்பத்திகளில் பசுப் பால், கொழுப்பற்ற பால், சுவையூட்டப்பட்ட பால், யோகட், பட்டர் மற்றும் சீஸ் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. தொடர்ச்சியாக இலங்கையர்களுக்கு போஷாக்கும் சுவையும் நிறைந்த பாலுற்பத்திகளை 16 வருடங்களுக்கு மேலாக வழங்கி வருகின்றது. உள்நாட்டு வர்த்தக நாமம் எனும் வகையில், உயர் தரத்துக்கு அதிகளவு அர்ப்பணிப்பை வழங்கி, அம்பேவெல சந்தையில் உயர்ந்த ஸ்தானத்திலும், சிறப்புக்கான அடையாளமாகவும் திகழ்கின்றது.



உலகளாவிய ரீதியில் இலங்கையின் கீர்த்தி நாமத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றதில் கரோலின் ஜூரிக்கு முக்கிய பங்கு உண்டு. வலுவூட்டப்பட்ட நவீன காலத்துப் பெண்ணுக்கான அடையாளமாக இவர் திகழ்வதுடன், ஒரு தாய், மனைவி மற்றும் தொழில் முயற்சியாளராகவும் திகழ்கின்றார். இவரைப் போன்ற பெண்களுக்கு வலுவூட்ட அம்பேவெல பால் தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற உதவியளிப்பதுடன், குடும்பத்தாருக்கு சிறந்த போஷாக்கை பெற்றுக் கொடுக்க பங்களிப்பு வழங்குகின்றது. அம்பேவெல முன்னெடுக்கும் புதிய பிரச்சாரத் திட்டங்களில் கரோலின் தூதுவராக பங்கேற்று வர்த்தக நாமத்துக்கு மேலும் வலுச்சேர்த்துள்ளார்.

அம்பேவெல வர்த்தக நாமத் தூதுவராக நியமனம் பெற்றமை தொடர்பில் கரோலின் ஜூரி கருத்துத் தெரிவிக்கையில், "அதிகளவு நம்பிக்கையை வென்ற உள்நாட்டு வர்த்தக நாமம் எனும் வகையில் அம்பேவெல எமது குடும்பத்தின் அத்தியாவசிய அங்கமாக ஆரம்பம் முதலே அமைந்துள்ளது.

சிறந்த போஷாக்கு மற்றும் நலச் செழுமை காரணமாக, எனது தாயார் அம்பேவெல தயாரிப்புகளின் மீது அதிகளவு ஈடுபாட்டைக் கொண்டிருந்தார். எனது பிள்ளைகளுக்கும் இதே பாரம்பரியத்தை நான் தொடர்கின்றேன். சிறப்புக்கான அம்பேவெலவின் உறுதி செய்யப்பட்ட அர்ப்பணிப்பின் காரணமாக, எனக்கு இந்த நாமத்துடன் கைகோர்க்கக் கிடைத்தமை சிறந்த கௌரவமாகக் கருதுகின்றேன்." என்றார்.

# செயலி ஊடாக வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்கிறது Litro Gas

நாட்டின் முன்னணி உள்நாட்டு திரவ பெற்றோலிய எரிவாயு விநியோகஸ்தர்களான Litro Gas எபோதும் தனது வாடிக்கையாளர்களுடன் நெருங்கிய உறவினை பேணுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில் இந்த உறவானது அண்மையில் Litro Gas செயலி ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் புதிய மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான பரிமாணத்தை அடைந்துள்ளது.

சந்தையில் Litro Gas ஆனது 75% சந்தைப் பங்குடன் உறுதியான நிலை மற்றும் 4 மில்லியன் வாடிக்கையாளர்களையும் கொண்டுள்ளதுடன் இலங்கை முழுவதும் பரந்த வளர்ச்சியை பெற்றுள்ளமையானது நிறுவனத்துக்கு தனித்தன்மை வாய்ந்த அனுகூலங்களையும் ஈடு இணையற்ற வாடிக்கையாளர் அணுகலையும் அளித்துள்ளது.

Litro Gas வாடிக்கையாளர் விநியோக பொறிமுறையானது நாடளாவிய ரீதியில் 35 விநியோகஸ்தர்கள், 1,500 வீட்டு மையங்கள், மற்றும் 11,000 விற்பனை நிலையங்களுடன் கூடிய வலையமைப்புடன் உறுதியான வாடிக்கையாளர் மையத்துடன் செயற்படும் நிலையில் Litro Gas செயலிஉடன் வளர்ச்சி மற்றும் அணுகலுக்கான புதிய கட்டத்தை அடைந்துள்ளது.



# உலகத்தரம் வாய்ந்த கடல்சார் கல்விக்கான பாதையை வழங்கும் Mercmarine Training

Mercmarine Training என்பது Mercmarine குழுமத்தின் கடல் சார் பயிற்சி நிறுவனம் ஆகும். இலங்கையில் உலகத்தரத்திலான கடல் சார் கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களை வரவேற்க தயார் நிலையிலுள்ளது. ஆர்வமுள்ள மாணவர்கள் பாரிய தெரிவுகளைக் கொண்ட கற்கைநெறிகளுக்கு தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

Mercmarine Training இன் கற்கைநெறிகள் 'Officer Training' இனை உள்ளடக்கியுள்ளது. இது Navigation Officer Cadet மற்றும் Engineering Officer Cadet training இனை வழங்குவதுடன் 'Rating Training" ஆனது Deck Rating, Engine Rating மற்றும் Catering Rating training என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது. Mercmarine Training, இதற்கு மேலதிகமாக பல்வேறு தலைப்புக்களில் குறுகிய கால கற்கைநெறிகளையும் வழங்குகிறது. அத்துடன் STCW (Standards of Training, Certification மற்றும் Watchkeeping for Seafarers) மற்றும் nonSTCW, training, Simulator Training on Engine Simulators மற்றும் Navigation Simulators போன்றவை உள்ளடங்கலாக பல்வேறுபட்ட தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நெறிகளையும் வழங்குகிறது.



Mercmarine Training இன் அதிநவீன பயிற்சி வசதிகள், மாணவா்கள் கடலில் தங்கள் தொழில்சாா் வாழ்க்கையைத் தொடர்வதற்கான சிறந்த சூழலை வழங்குகிறது. deck, engine மற்றும் catering ஆகியவை தொடா்பான கல்வியினை அனைத்து தரங்களிலும் தகைமைகளிலும் வழங்குவதில் இலங்கையில் தலைசிறந்த வசதிகளைக் கொண்டிருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. 1986ஆம் ஆண்டு நிறுவப்பட்ட Mercmarine Training ஆனது தொடர்ந்தும் கடல் சார் தொழிற்துறை நிபுணா்களை உருவாக்கி வருகிறது. மேலும் திறமையான இளைஞா்களை இத்தொழிற்துறைக்கு ஈா்ப்பதில் ஒரு உத்து சக்தியாக இருந்து வருகிறது. அனைத்து கற்கைநெறிகளும் மதிப்புமிக்க கடல்சாா் தொழிற்துறைகளின் தேவைகளுக்கமைய வடிவமைக்கப்பட்டுள்ளன. அதே வேளை இக்கல்வி நிறுவனமானது பல முன்னெடுப்புக்களை மேற்கொள்வதிலும் முன்னணி வகிக்கிறது. பெண் கெடட் இனரில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு பெண் மாணவர்களுக்கு ரூ. 2 மில்லியனுக்கும் அதிகமான தொகை விஷேட புலமைப்பரிசில்களாக வழங்கப்பட்டது. அது இவ்வருடமும் தொடரவிருக்கிறது.

கெப்டன். ரொஹான் கொடிப்பிலி சிரேஷ்ட செயற்பாட்டு அதிகாரி Mercmarine Group கருத்து தெரிவிக்கையில்,

" Mercmarine இல் எமது வணிகமானது கப்பல் போக்குவரத்து ஆகும். கப்பல் உரிமை மற்றும் கப்பல் முகாமைத்துவம் முதல் அதன் குழு முகாமைத்துவம் வரை மற்றும் கடல் சார் பயிற்சி போன்ற அனைத்து துறைகளிலும் நாங்கள் நிபுணத்துவம் பெற்றுள்ளோம் என்பதனை இது நிரூபிக்கிறது. Mercmarine Training ஊடான எங்கள் கடல்சார் தொழில் பயிற்சிகள் எனும் போது எங்கள் நோக்கம் இருமடங்காகிறது. ஒன்று, கடல் சார் தொழிலில் ஈடுபடும் ஒருவருக்கு தேவையான நுட்பங்கள் பற்றிய கல்வி அறிவை வழங்குவது. மற்றையது, தொழில்நிபுணத்துவம் பெற்ற கடல் சாா் தொழிலில் (seamen) நீண்ட கால அனுபவம் கொண்டவா்களால் அவர்களின் திறமைகளைக் கொண்டு நடைமுறைப் பயிற்சி அளிக்கப்படுவது. முன்பு போலல்லாது தற்போதைய கப்பல்கள் மிகவும் நவீனத்துவம் வாய்ந்தவை. கப்பல் சேவை பணியாளர்கள் குழு மிகவும் சிறியது. பயணங்களும் குறுகியவை. இதன் விளைவாக புதிதாக சோ்த்துக் கொள்ளப்படுபவர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்களாக இருத்தல் அவசியம். அத்தோடு ஒழுக்கமானவர்களாகவும் சவால்களை எதிர்கொள்வதற்கு முதலாவது நாள் முதல் தயார் நிலையில் இருப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். அதனால் எமது பயிற்சிகளும் இப் புதிய தேவைகளுக்கு ஏற்றவாறே உள்ளன. Mercmarine கடந்த 34 ஆண்டு காலமாக கடற்தொழில் துறையில் உள்ளோருக்கு வெற்றிகரமாக பயிற்சியளித்து வருகிறது. மேலும் தொடர்ந்தும் பல்லாண்டு காலத்துக்கும் பல இளைஞர்களுக்கு மகிழ்ச்சியூட்டிடும் இக்கப்பல் உலகுக்குள் நுழைவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிட காத்திருக்கிறோம். எனத் தெரிவித்தார்.

# வாரபலன்



06.09.2020 - 12.09.2020

சிவஸ்ரீ இராமச்சந்திர பாபுசர்மா குருக்கள்

## மேஷம்

**(அச்சுவினி, பரணி, கார்த்திகை முற்கால்)**

தனுசு ராசியில் இதுவரை வக்ர இயக்கத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், செப்டம்பர் 14 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாக போகின்றார். இதனால் பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். தொழில் வளர்ச்சியும் குறைவற்ற லாபத்தையும் கொடுப்பார். இம் மாதம் சதுர்த்தி தோறும் விரதமிருந்து விநாயகர் கவசம் பாடி விநாயகரை வழிபடுவது நல்லது.

## ரிஷபம்

**(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)**

செப்டம்பர் 14 ஆம் திகதி சனி பகவான் வக்ர நிவர்த்தியாகின்றார். இதனால் விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டை பழுது பார்க்கும் முயற்சி கைகூடும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முடிவு நன்மை தரும். சிவ, நந்தீஸ்வரர் வழிபாடு நன்மை தரும். சிவ விரதம் இருந்து கொள்வது நல்லதாகும். கஷ்டங்கள் விலகும்.

## மிதுனம்

**(மிருகசீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்)**

செப்டம்பர் 14ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகின்றார். கண்டகச்சனி பலம்பெறும். இந்த நேரத்தில் கொஞ்சம் கவனம் தேவை. சில காரியங்கள் எளிதில் முடிந்துவிடும். இழப்புக்களை தவிர்க்க எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது. உடன் இருப்பவர்களை பகைத்து கொள்ளாமல் இருங்கள். பெருமாள் வழிபாடு நன்மை தரும். ஏகாதசி விரதம் இருப்பது நன்மையாக அமையும்.

## கடகம்

**(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்)**

செப்டம்பர் 14 ஆம் திகதி சனி, தனுசு ராசியில் வக்ர நிவர்த்தியாகின்றார். உங்கள் ராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அஷ்டமாதிபதி 6 ஆம் இடத்தில் பலம் பெறும் இந்த நேரம் விபரீத ராஜ யோகம் செயல்படும் எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும் குடும்ப பிரச்சினை இனி நல்ல முடிவிற்கு வரும். சிவ வழிபாடு நன்மை தரும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் முற்கால்)**

செப்டம்பர் 14 ஆம் திகதி தனுசு ராசியில் வக்ர நிவர்த்தியாகின்றார். உங்கள் ராசிக்கு 6.7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அவர் பலம் பெறும் பொழுது மன உறுதியுடன் செயல்படுவீர்கள். உத்தியோகத்தில் மாற்றங்கள் வரலாம். வாழ்க்கை துணைக்கு வேலை கிடைத்து வருமான உயர்வும் ஏற்படும். வியாழன் தோறும் தட்சணாமூர்த்தி வழிபாடு செய்துகொள்வது நல்லதாகும்.

## கன்னி

**(உத்தரத்து பின்முக்கால், அத்தம் சித்திரையின் முன்னரை)**

செப்டம்பர் 14 ஆம் திகதி தனுசு ராசியில் சஞ்சரிக்கும் சனி வக்ர நிவர்த்தியாகின்றார். அர்த்தாஷ்ட சனி (4ம்) பலம் பெறுகின்றது. எனவே வரவை காட்டிலும் செலவு கூடும். திட்டமிட்ட காரியங்கள் திசைமாறி செல்லும் விலை உயர்ந்த பொருட்களை விற்க நேரிடலாம். அனுபவமிக்கவர்களின் யோசனையை கேட்டு நடப்பது நல்லது மகா விஷ்ணு வழிபாடு செய்துகொள்ளுங்கள் சிரமங்களிலிருந்து விடுபடுவீர்கள்.

## துலாம்

**சித்திரையிற் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)**

செப்டம்பர் 14ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகின்றார். 3 ஆம் ஸ்தானத்தில் சனி பலம் பெறும் நேரமிது எனவே நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடிவரும் உடன் பிறப்புக்கள் உறுதுணையாக விளங்குவர். ஆரோக்கிய தொல்லைகள் அகலும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். ஆஞ்சநேயர் வழிபாடு அடிக்கடி செய்வது நல்லது.

## விருச்சிகம்

**(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)**

செப்டம்பர் 14 ஆம் திகதி தனுசு ராசியில் சனி பகவான் வக்ர நிவர்த்தியாகின்றார். 3 ஆம் இடத்திற்கும், சுக ஸ்தானத்திற்கும் அதிபதியான சனி பலம்பெறும் இந்த நேரத்தில் தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். முருகனுக்குரிய விரத வழிபாடு செய்து கொள்ளுங்கள் எல்லாம் நன்மையாக அமையும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)**

செப்டம்பர் 14 ஆம் திகதி தனுசு ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான் வக்ர நிவர்த்தியாகின்றார். உங்கள் ராசிக்கு 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான் மேலும் வாக்கு, தனம் குடும்பம், உடன்பிறப்புக்கள் வெற்றிகள் போன்றவற்றை குறிக்கும். இடங்களுக்கும் இவரே அதிபதி அவர் வக்ர நிவர்த்தியாகிப் பலம்பெறும் பொழுது குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். ஏழைச்சனி நடுக்கூறு நடப்பதால் ஆஞ்சநேயர் வழிபாடு நன்மை தரும்.

## மகரம்

செப்டம்பர் 14 ஆம் திகதி தனுசு ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான் வக்ர நிவர்த்தியாகின்றார். உங்கள் ராசி நாதனாகவும் தனாதிபதியாகவும் விளங்கும் சனி வக்ர நிவர்த்தியாவதால் ஆரோக்கிய தொல்லை அகலும். கொடுத்த கடன்கள் வசூலாகும். தொழில் முன்னேற்றம் கருதி பிற இனத்தவர்களை கூட்டமாக சேர்க்கலாமா என்று சிந்திப்பீர்கள். மூத்த சகோதரர்களால் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும்.

## கும்பம்

**(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்)**

செப்டம்பர் 14 ஆம் திகதி தனுசு ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான் வக்ர நிவர்த்தியாகின்றார். இதன் விளைவாக உங்கள் ராசிநாதன் பலம்பெறுவதால் துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். விநாயகர் வழிபாடு செய்துகொள்வதன் மூலம் விக்கினங்கள் விலகிவிடும்.

## மீனம்

**(பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி, ரேவதி)**

உங்கள் ராசிக்கு லாபாதிபதியாகவும், விரயாதிபதியாகவும் விளங்குபவர் சனி பகவான். அவர் வக்ர நிவர்த்தியாகும் பொழுது கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். நண்பர்களால் ஒத்துழைப்போடு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள் அரசு மூலம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். பெற்றோர்களின் உடல் நலத்தில் மட்டும் அதிக கவனம் தேவை. வியாழன் தோறும் தட்சணாமூர்த்தியை வழிபட்டு கொள்ளுங்கள் தொழில் ரீதியாக தடைகள் விலகும்.

---

COVID – 19 தொற்றுநோய் எதிர்ப்புப் போராட்டத்திற்கு

# ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் 5,00,000 அமெரிக்க டாலர் பங்களிப்பு

உள்ளூரில் கோவிட் 19 க்கு எதிரான போராட்டத்தை ஆதரிப்பதற்காக 500,000 அமெரிக்க டொலர் (சுமார் ரூ. 92.5 மில்லியன்) நன்கொடையை ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கி அறிவித்துள்ளது. இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் (SLRCS) மூலம் வழங்கப்படும் இந்த நன்கொடையானது 'Here for good' என்ற வர்த்தக வாக்குறுதியைக் கருத்தில் கொண்ட, COVID 19 உலகளாவிய தொற்றுநோய்க்கு எதிராக பதிலளிக்கும் வங்கியின் பரந்த செயல்பாட்டின் ஒரு பகுதியாகும்.

இந்நிதி இரண்டு பகுதிகளால் ஆனது: முதலாவது பகுதி ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் பி.எல்.சியில் இருந்து பெறப்படும் 300,000 அமெரிக்க டாலர்கள் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துதல், தொற்றுநோய்க்கு எதிரான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் COVID19 பற்றிய தவறான தகவல்களை எதிர்த்துப் போராடுவதற்கான பொது விழிப்புணர்வு ஆகியவற்றை குறிவைக்கும் அவசர நிவாரண நடவடிக்கைகளை ஆதரிக்கும். இந்நிதி ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா முழுவதிலும் உள்ள நாடுகளில் அவசர மருத்துவ மற்றும் மனிதாபிமான சேவைகளை ஆதரிப்பதற்காக அதன் 50 மில்லியன் அமெரிக்க டாலர் COVID 19 உலகளாவிய நிதியிலிருந்து செஞ்சிலுவை சங்கத்திற்கு 5 மில்லியன் அமெரிக்க டாலர் நன்கொடையின் ஒரு பகுதியாகும்; மேலும், வைரஸ் உள்ளதாக சந்தேகிக்கப்படும் நோயாளிகளை அடையாளம் காண உதவுவதற்காக சுமார் 13,000 COVID 19 சோதனைக் கருவிகளை வாங்குவதற்கு ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் ஸ்ரீலங்காவிலிருந்து 200,000 அமெரிக்க டாலர் வழங்கப்படுகிறது.


நன்கொடை குறித்து ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் ஸ்ரீலங்காவின் தலைமை நிர்வாக அதிகாரி பிங்குமால் தேவரதந்த்ரி கூறியதாவது: "எங்கள் சமூகங்களில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களைச் சென்றடையும் திட்டங்களுக்கு பங்களிக்கும் முகமாக செஞ்சிலுவைசங்கத்துடன் கூட்டாக இதை மேற்கொள்ள முடிந்ததில் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் ஸ்ரீலங்கா பெருமிதம் கொள்கிறது. ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம், COVID 19 தொற்றுநோயால் உருவாக்கப்பட்ட தற்போதைய மற்றும் எதிர்கால சவால்களில் சிலவற்றை எதிர்கொள்ளும் வகையில் விரைவான மற்றும் பயனுள்ள நிவாரணத்தை வழங்குவதை நாங்கள் ஆதரிக்க முடியும்.

தேவைப்படும் நேரத்தில் எங்கள் சமூகங்களை ஆதரிப்பதோடு மட்டுமல்லாமல், இந்த தொற்று நோயைத் தொடர்ந்து, நாட்டின் பொருளாதாரத்திற்கு ஒரு முழுமையான பாணியில் பங்களிப்பதிலும் நாங்கள் கவனம் கொண்டுள்ளோம்."

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் மகேஷ் குணசேகர கூறியதாவது "ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியின் தாராள மனப்பான்மையின் விளைவாக, நாட்டின் பரிசோதனை திறனை மேம்படுத்த முடியும். இது மக்களை COVID 19 இலிருந்து பாதுகாப்பாக வைத்திருக்க உதவும். பள்ளி குழந்தைகளுக்காக பாதுகாப்பான சூழல்களை உருவாக்குவது மற்றும் தொற்று நோயை எதிர்த்து நாடு முழுவதும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்ட கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க இது உதவும்.

---

# கொவிட்– 19 காலப்பகுதியிலும் நெகிழ்திறனான பெறுபேறுகளைப் பதிவுசெய்துள்ள அமானா வங்கி



கொவிட்19 தொற்றுப் பரவலுடனான சவால்கள் நிறைந்த சூழலினால் உலகளாவிய ரீதியில் பொருளாதாரச் செயற்பாடுகள் தடங்கல்களுக்கு முகங்கொடுத்திருந்த போதிலும், 2020 முதல் அரையாண்டு காலப்பகுதியில், அமானா வங்கி நெகிழ்ச்சியான செயல்திறனை வெளிப்படுத்திய வண்ணம் உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்தது. முதல் அரையாண்டு காலப்பகுதியின் நிறைவில் வரிக்கு முந்திய இலாபம் (PBT) மற்றும் வரிக்கு பிந்திய இலாபம் (PAT) முறையே ரூ 250.5 மில்லியன் மற்றும் ரூ 170.4 மில்லியனாக காணப்பட்டது. அத்தோடு இரண்டாவது காலாண்டுக்கான வரிக்கு முந்திய, பிந்திய இலாபம் முறையே 70.3 மில்லியன் மற்றும் 40.6 மில்லியன் ஆகவும் பதிவாகியிருந்தது.

இலாபகரத்தன்மையை தொடர்ந்தும் வங்கி பதிவு செய்திருந்த நிலையில், 2020 ஜுலை மாதத்தில், தொடர்ச்சியான தனது மூன்றாவது பங்கிலாபம் வழங்கல் தொடர்பான அறிவிப்பையும் அமானா வங்கி வெளியிட்டிருந்தது, முதல் அரையாண்டு காலப்பகுதியில் வங்கி நேர்த்தியான உந்துதலினை வாடிக்கையாளர் வைப்புக்களில் அடைந்து ரூ. 78.9 பில்லியன் வைப்புகளைக் கொண்டிருந்தது. இதனூடாக ஆறு மாத காலப்பகுதியில் வங்கி 10% அதிகரிப்பை பிரதிபலித்திருந்தது. சவாலான சந்தை நிலைமைகளின் பின்னணியில் கடன் இடர் சுட்டளவுகள் உறுதிப்படுத்தப்பட்டதால் முற்பணங்கள் 2 சதவீதத்தால் அதிகரித்து 58.6 பில்லியன் ரூபாயாக பதிவாகியிருந்தது. முதல் அரையாண்டின் இறுதியில், வங்கியின் மொத்த சொத்துக்கள் ரூ. 94.2 பில்லியனாக காணப்பட்டது. 2019ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட போது காணப்பட்ட பெறுமதியை விட இது 9 சதவீதம் அதிகமாகும். இதனால், வங்கியின் தேறிய சொத்துப் பெறுமதி பங்கொன்றுக்கு 4.81 ரூபாயாக அதிகரித்திருந்தது. வங்கி ஆரோக்கியமான சொத்துப்பட்டியலை தொடர்ந்து பேணியிருந்ததுடன், வங்கியின் தொழிற்படா விகிதங்கள் துறையின் சராசரி பெறுமதியை விட குறைவாக பதிவாகியிருந்தது.

---

# "ஏகோர்ன்" என மீள வர்த்தக நாமமிடப்பட்ட ஹேமாசின் பயண மற்றும் விமானக் குழு

**முகாமைத்துவக் குழு பங்குகளைக் கொள்வனவு செய்ய வழிவகுக்கின்றது பெரு நிறுவனமான ஹேமாஸ்**



ஏகோர்ன் குழு பயண மற்றும் விமானத் துறையில் பல வணிகங்களையும் முன்னணி சர்வதேச வர்த்தக நாமங்களையும் உள்ளடக்கியது. வளர்ந்து வரும் பயண மற்றும் சுற்றுலாப் பரப்பை பூர்த்தி செய்ய இணையற்ற சேவை வழங்குவதில் கவனம் செலுத்திய அனுபவமிக்க நிபுணர்களின் குழு இதற்குத் தலைமை தாங்குகிறது.

பயண மற்றும் விமானத் துறையில் புதிய உயரங்களை அடைய விரும்பும் ஏகோர்ன் விமான சேவைகள், இலக்கு மேலாண்மை மற்றும் வெளிச்செல்லும் பயணம் எனும் மூன்று பிரிவுகளின் கீழ் பல வகையான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குகிறது ஏகோர்ன் குழுமத்தை எதிர்காலத்தில் வழிநடத்தும் தொழில் வல்லுநர்கள் குழுவில் மலிங்க அர்சகுலரத்ன, தர்ஷனா பெரேரா, ஹரித் பெரேரா, துஷி ஜெயவீரா, சுரஞ்சித் டி பொன்சேகா மற்றும் உசேன் ஹபீப் ஆகியோர் அடங்குவர்

இந்த அமைப்பின் பிறப்பு குறித்து ஏகோர்ன் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மலிங்க அரசகுலரத்ன கூறுகையில், "சிரேஷ்ட நிர்வாகம் இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் பயண மற்றும் விமானத் துறைகளில் 80% பங்குகளில் முதலீடு செய்தது, அதே நேரத்தில் ஹேமாஸ் குழுமம் தொடர்ந்தும் 20% பங்குகளை வைத்திருக்கும். வலிமை, நீண்ட ஆயுள் மற்றும் நன்மை ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு வலிமையான மரத்துடன் நாங்கள் ஹேமாஸை ஒப்பிடுகிறோம். ஒக் மரத்திலிருந்து பிரிந்து, வேர்களை பரப்பிக் கொள்ளும் ஏகோர்ன் விதைகளை நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம், இது பயண மற்றும் விமான நிபுணத்துவம், வணிக விரிவாக்கம் மற்றும் பல்வகைப்படுத்தல் ஆகியவற்றால் தூண்டப்பட்டு துணிச்சலுடன் புதிய பயணத்தைத் தொடங்குகிறது. எங்கள் வளர்ச்சியை ஊக்குவிக்க கற்றலைத் தொடர்கின்றோம். தைரியமாக சிந்திக்கவும், எங்கள் சூழலுடன் தொடர்புடையதாக இருக்கவும், எங்கள் வாடிக்கையாளர்களுடன் இணைந்து மாற்றத்தை வழிநடத்த விரும்பும் ஒரு நல்ல அடித்தள வேலைக் கலாச்சாரத்தை நம்புகிறோம்." என்று அவர் மேலும் கூறினார்.

---

# டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி அனுசரணையில் உழவர் தோழன் ஆலோசனை சேவை

இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி உழவர் தோழன் என்ற நீண்டகால, புரட்சிகர விவசாய சேவையை முன்னிலைக்குக் கொண்டு வருவதன் மூலம் அதன் தகவமைப்பு மற்றும் வளத்தை நிரூபித்துள்ளது. ஒரு எளிய, விவசாயிகளை மையமாகக் கொண்ட விவசாய ஆலோசனை சேவையான கொவி மிதுரு, தங்கள் வீட்டுத் தோட்டங்களில் தமக்கு தேவையான பயிர்களை தாங்கள் சொந்தமாக உற்பத்தி செய்வதன் மூலம் அதிக தன்னிறைவுடைய விவசாய நடவடிக்கைகளில் முதலீடு செய்யுமாறு பொதுமக்களிடம் அரசாங்கத்தின் வேண்டுகோளை வலுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. டயலொக் ஒரு நாளைக்கு 1 ரூபாய் (மற்றும் வரி) என்ற மிக குறைந்த கட்டணத்திற்கு இந்த சேவையினை வழங்கி வந்தது. மேலும் தற்போது நிழவும் சூழ்நிலையில் மே மாதம் 01ஆம் திகதி வரை அனைத்து வாடிக்கையாளர்களுக்கு 100% இலவசமாக வழங்கியது.

இலங்கையின் முன்னணி மொபைல் விவசாய தகவல் சேவையான, உழவர் தோழன் நாடளாவிய ரீதியில் உள்ள விவசாயிகளுக்கு பயிர் பாதுகாத்து அறுவடையினை அதிகரிக்க உதவுகிறது. 2015 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டது. உழவர் தோழனின் குரல் சேவை என்பது விவசாயிகளுக்கான மொபைல் ஆலோசனை சேவையாகும். இது 'பாதுகாப்பான பயிர் மற்றும் குடும்ப ஆரோக்கியம் என்ற கருப்பொருளின் கீழ், இந்தத் துறையில் தொழில்முறை வழிகாட்டுதலுக்கான அணுகலை நிவர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்டது. இந்த சேவையானது அடிப்படை தொலைபேசியைப் பயன்படுத்தும் யாவரும் எளிதாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த சேவை 25 பயிர் குழுக்களுக்கு ஆலோசனைகளை வழங்குகிறது. வீட்டுத்தோட்டமும் இதில் ஒன்றாகும். மேலதிகமாக. உழவர் தோழன் மொபைல் App சேவையாகும். இது பாவனையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப சரியான நேரத்தில், தரமான தகவல்களை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சரியான நேரத்தில் தகவல் மற்றும் பயிர் பாதுகாப்பு மற்றும் நிபுணர்களின் வீட்டு தோட்த்திற்கான குறிப்புகள் போன்ற தலைப்புகளில் இது அமையும்.



SLIATE

# கல்வி அமைச்சு

### திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

## இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்

# 2020ஆம் கல்வியாண்டிற்காக உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்களுக்கான (ATIs) மாணவர்களின் அனுமதி

2019ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னராக க.பொ.த உயர்தர பரீட்சையை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்களிடமிருந்து இலங்கை உயர்கல்வி தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்படும் உயர் தேசிய டிப்ளோமா (HND) கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிக்கும் முறைமை:**

அபேட்சகர்கள் **apply.sliate.ac.lk** என்பதன் ஊடாக SLIATE இற்கு உயர் தேசிய டிப்ளோமாவிற்கு விண்ணப்பித்தல் வேண்டும். இணையத்தளம் தவிர்ந்த வேறு ஏதாவது முறைகளில் விண்ணப்பித்தால், அவ்வாறான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. உயர் தேசிய டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்திற்கு தெரிவு செய்வதற்காக இரு வகையான தெரிவு செய்தல் இருப்பதுடன் அவை Z-score அல்லது SLIATE இனால் நடாத்தப்படும் தெரிவு செய்தல் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

| | |
|---|---|
| Z-score அடிப்படையிலான SLIATE கற்கைநெறி - பிரிவு - 1 | HNDA, HNDBA, HNDBF, HNDE (Civil), HNDE (Mechanical), HNDE (Electrical & Electronics), HNDQS, HNDBSE, HNDT (Agri) |
| தெரிவு செய்தல் பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் SLIATE கற்கை நெறி - பிரிவு - 2 | HND in English, HNDIT, HNDM, HNDPM, HNDTHM, HNDFT, HNDCSPT |

தகைமை வாய்ந்த அபேட்சகர்கள் **apply.sliate.ac.lk** என்ற இணையத்தளத்தின் ஊடாக மட்டுமே விண்ணப்பிக்க முடியும். உயர் தேசிய டிப்ளோமா அனுமதிக்கான தகைமைகளுக்காக **A** பிரிவையும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம் (ATIs) விபரங்களுக்காக **B** பிரிவையும் தயவு செய்து பார்க்கவும்.

தகுதியுள்ள அபேட்சகர்கள் ஒவ்வொரு பிரிவுக்கும் ஆகக்கூடியதாக ஏதாவது ஐந்து வேறு வகையான கல்விசார் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம். ஒரு பிரிவுக்காக ஒரு விண்ணப்பம் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 500 ரூபாவை செலுத்துதல் வேண்டும்.

இரு பிரிவுகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் 500 ரூபா என்ற அடிப்படையில் வெவ்வேறாக பணத்தை ரூபாவை வங்கியில் செலுத்துதல் வேண்டும். ஒன்-லைன் செலுத்துதல் அனுமதிக்கப்படமாட்டாது. வங்கி பற்றுச்சீட்டின் பணப்பரிமாற்ற இலக்கம் (TRN) இணையத்தள விண்ணப்பத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

பணக்கொடுப்பனவுகள் கொழும்பு-02, ஹயிட் பார்க் மக்கள் வங்கியின் கிளையில் 025-2-001-1-3397613 என்ற SLIATE இன் கணக்கிலக்கத்திற்கு அல்லது இலங்கையிலுள்ள எந்தவொரு மக்கள் வங்கியின் ஊடாகவும் 2020 ஒக்டோபர் 06ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வரவு வைக்கப்படல் வேண்டும்.

ஒன்-லைன் விண்ணப்பத்தை உறுதிப்படுத்திய பின்னர், முறைமையானது அதன் பிரதியொன்றை பிறப்பிக்கும் முறைமையினால் பிறப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அச்சடிக்கப்பட்ட மற்றும் கையொப்பமிட்ட பிரதி மற்றும் பணப்பற்றுச்சீட்டும் பதிவுத் தபால் வழியாக 2020 ஒக்டோபர் 06ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக முதல் முன்னுரிமை வழங்கப்படுவதற்காக உரிய உயர்தர தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஒன்-லைன் முறைமையினால் பிறப்பிக்கப்பட்ட குறிப்பீட்டு இலக்கமானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

செயல்முறையின் போதும் செயல்முறைக்கு பின்னருமான விண்ணப்பத்தின் நிலபரமானது வழங்கப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக, கையடக்கத் தொலைபேசி இலக்கம் அல்லது தபாலில் அறிவிக்கப்படும்.

விண்ணப்பம் ஏற்கும் இறுதித் திகதி - 2020.10.06 - பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் முறைமை பின்வருமாறு:**

- முழுநேர கற்கைநெறிகள்
- பகுதி நேர கற்கைநெறிகள் (வார இறுதிகளில்)

**மொழிமூலம் :** ஆங்கிலம்

உரிய துறைகளில் பணியாற்றுபவர்களுக்காக பகுதி நேர கற்கை நெறிகள் நடாத்தப்படுகின்றன.

**கற்கைநெறிகளுக்கான கட்டணங்கள் பின்வருமாறு:**

முழுநேர கற்கைநெறி - கட்டணம் - இலவசம்

**ஒவ்வொரு அரையாண்டுக்கான முழுநேர கற்கை நெறிகளுக்கான கட்டணங்கள் பின்வருமாறு:**

| | |
|---|---|
| உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா – HNDA | 7,500 ரூபா |
| உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா – HNDA ஆங்கிலத்தில் | 12,000 ரூபா |
| உயர் தேசிய தகவல் தொழில்நுட்பவியலில் டிப்ளோமா – HNDITD | 18.000 ரூபா |

**பதிவு செய்தல்:**

பதிவு செய்தலின் போது தேவைப்படும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நகல்பிரதிகள் ஆகியன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**விடுதி வசதிகள்:**

பின்வரும் தொழில்நுட்ப நிறுவனங்களில் மாத்திரம் வரையறுக்கப்பட்ட முழுநேர மாணவர்களுக்கான விடுதி வசதிகள் வழங்கப்படும்.

ATI தெஹிவளை மற்றும் கம்பஹா பெண் மாணவர்களுக்கு மாத்திரமானது.

ATI அம்பாறை மற்றும் கொழும்பு – ஆண் மற்றும் பெண் மாணவர்களுக்கானது

## பிரிவு ''அ''

### நிகழ்ச்சித்திட்டத்திற்கான உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA)

**தகைமைகள்:**

**01. கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDA)**

01.1 **முழுநேரம் - 4 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) ஒரே அமர்வில் பொருளாதாரம் மற்றும் கணக்கியலில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (உ-த) பரீட்சையில் சித்தி.

**மற்றும்**

ஆங்கில மொழி மற்றும் கணிதத்தில் சாதாரண சித்திகளுடன் க.பொ.த. (சா-த) பரீட்சையில் சித்தி.

01.2 **பகுதி நேரம் - 4 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) ஒரே அமர்வில் பொருளாதாரம் மற்றும் கணக்கியலில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (உ-த) பரீட்சையில் சித்தி.

**மற்றும்**

ஆங்கில மொழி மற்றும் கணிதத்தில் சாதாரண சித்திகளுடன் க.பொ.த. (சா-த) பரீட்சையில் சித்தி.

**அல்லது**

(ii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் (DTET) நடாத்தப்படும் கீழே வழங்கப்பட்டுள்ள ஏதாவதொரு சான்றிதழ் கற்கைநெறிகள்.

அ. கணக்கியல் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழை பூர்த்தி செய்தல்.

ஆ. வியாபார கற்கைநெறிகளில் தேசிய சான்றிதழை பூர்த்தி செய்தல்.

இ. கணக்கியலில் தேசிய சான்றிதழை பூர்த்தி செய்தல்.

**மற்றும்**

க.பொ.த. (சா-த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி அத்துடன் விண்ணப்பதாரி உரித்தான துறையில் அரசாங்க நிறுவனமொன்றில்/பொது தொழில்முயற்சி/அங்கீகரிக்கப்பட்ட கம்பனி அல்லது சுயதொழில் (தொழில் முயற்சியாளர்)

பின்வரும் தகைமைகளையுடைய HNDA பகுதி நேர விண்ணப்பதாரிகள் 1ஆம் வருட கற்கைநெறியிலிருந்து விலக்களிக்கப்பட்டு ஏனைய உட்செல்லல் தேவைப்படுத்தல்கள் மற்றும் ATIs இல் நடாத்தப்பட்டால் 2ஆம் வருடத்திற்கு சேர்க்கப்படுவார்கள்.

i. SLIATE இனால் நடாத்தப்படும் வியாபார நிருவாகத்தில் தேசிய உயர் டிப்ளோமா/ வியாபார நிதி மற்றும் வியாபார கற்கைநெறிகளில் தேசிய டிப்ளோமா ஆகியவற்றை பூர்த்தி செய்திருத்தல்.

ii. DTET இனால் நடாத்தப்படும் வர்த்தகத்தில் தேசிய உயர் டிப்ளோமாவின் இரண்டாவது வருடத்தை பூர்த்தி செய்திருத்தல்.

iii. இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தினால் (CA-Sri Lanka )நடாத்தப்படும் Executive Level or CAB I and CAB II or Foundation & Intermediate level or Licentiate I and II ஐ பூர்த்தி செய்திருத்தல்.

iv. பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தினால் (CIMA-UK) நடாத்தப்படும் I ஆம் பாகம் மற்றும் II ஆம் பாகத்தை பூர்த்தி செய்திருத்தல்.

v. கணக்கியல் தொழில்நுட்பவியலாளர்கள் கற்கைநெறியை (AAT) பூர்த்தி செய்திருத்தல்.

vi. சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தினால் (CMA – Sri Lanka) நடாத்தப்படும் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ இணைந்த கணக்காளர்கள் (ACMA – Sri Lanka) கற்கை நெறியை பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு:-** பொது நிருவாக சுற்றறிக்கை இல. 46/90 இன் பிரகாரம், ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்பட்ட வர்த்தகத்தில் (சாதாரண சித்தி) பொதுவான பட்டதாரிப் பட்டமானது கணக்கியலில் பெற்ற தேசிய உயர் டிப்ளோமாவிற்கான மாற்றுவழியானதொரு தகைமையாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

**02. உயர் தேசிய வியாபார நிருவாக டிப்ளோமா – (HNDBA)**

முழு நேரம் - 2 ½ வருடங்கள்.

**03. உயர் தேசிய வியாபார நிதியியல் டிப்ளோமா – (HNDBF)**

முழு நேரம் - 2 ½ வருடங்கள்

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) வர்த்தகத் துறையில் ஒரே தடவையில் க.பொ.த. (உ-த) பரீட்சையில் சித்தி.

**மற்றும்**

க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழி மற்றும் கணிதத்தில் சாதாரண சித்திகள்.

**04. நுகர்வோர் விஞ்ஞானங்கள் மற்றும் உற்பத்தி தொழில்நுட்பவியலில் உயர் தேசிய டிப்ளோமா – (HNDCSPT)**

முழு நேரம் - 3 வருடங்கள்.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) மனையியல்/ மனைப் பொருளியலை ஒரு பாடமாக கொண்டு எந்தவொரு துறையிலும் ஒரே அமர்வில் க.பொ.த. (உ-த) பரீட்சையில் சித்தி.

**மற்றும்**

க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழி மற்றும் கணிதத்தில் சாதாரண சித்திகள்.

**05. பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDE -** சிவில்): முழு நேரம் - 3 ½ வருடங்கள்.

**06. பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDE -** மின்னியல் மற்றும் இலத்திரனியல்): முழு நேரம் - 3 ½ வருடங்கள்.

**07. பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDE -** பொறிமுறை): முழு நேரம் - 3 ½ வருடங்கள்.

**08. அளவை, அளவையியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDQS) –** முழு நேரம் - 2 ½ வருடங்கள்.

**09. கட்டிட சேவைகள் பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDBSE):** முழு நேரம் - 3 ½ வருடங்கள்.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) பௌதிக விஞ்ஞானத் துறையில் (இரசாயனம், பௌதிகம் மற்றும் இணைந்த கணிதங்கள்) ஒரே அமர்வில் க.பொ.த. (உ-த) பரீட்சையில் சித்தி.

**மற்றும்**

க.பொ.த. (சா-த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி.

**10. ஆங்கிலத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND in English)**

10.1 – முழு நேரம் - 2 ½ வருடங்கள்.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) ஒரே அமர்வில் க.பொ.த. (உ-த) பரீட்சையில் சித்தி.

**மற்றும்**

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் (க.பொ.த உ.த) பரீட்சையில் பொதுவான ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி.

**மற்றும்**

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் (க.பொ.த. உ.த) பரீட்சையில் பொதுவான ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி

**அல்லது**

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் (க.பொ.த. சா.த) பரீட்சையில் Appreciation of English Literary Texts பாடத்தில் பெற்ற சாதாரண சித்தி.

10.2 – பகுதி நேரம் - 2 ½ வருடங்கள்

10.1 தகைமைகளுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரி உரித்தான துறையில் அரசாங்க நிறுவனமொன்றில்/ பொது தொழில்முயற்சி/ அங்கீகரிக்கப்பட்ட கம்பனி அல்லது சுயதொழில் (தொழில் முயற்சியாளர்) ஒன்றில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

**11. உணவு தொழில்நுட்பவியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDFT)**

முழு நேரம் - 2 ½ வருடங்கள்.

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) உயிர் விஞ்ஞானம் அல்லது பௌதிக விஞ்ஞானத் துறையில் க.பொ.த. (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி.

**மற்றும்**

க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழி மற்றும் கணிதம் ஆகியவற்றில் சாதாரண சித்தி.

**12. தகவல் தொழில்நுட்பவியலில் உயர் தேசிய டிப்ளோமா – (HNDIT)**

12.1 முழு நேரம் - 2 ½ வருடங்கள்

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) பௌதிக விஞ்ஞானத் துறை, உயிர்விஞ்ஞானத் துறை ஆகியவற்றில் ஒரே அமர்வில் க.பொ.த. (உ-த) பரீட்சையில் சித்தி – ஏனைய துறைகள் (ICT உடன் ஒரு பாடமாக இருப்பது விரும்பத்தக்கது)

**மற்றும்**

க.பொ.த. (சா-த) பரீட்சையில் ஆங்கில மொழி மற்றும் கணிதத்தில் சாதாரண சித்திகள்.

12.2 பகுதி நேரம் - 2 ½ வருடங்கள்

12.1 தகைமைகளுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரி உரித்தான துறையில் அரசாங்க நிறுவனமொன்றில்/ பொது தொழில்முயற்சி/அங்கீகரிக்கப்பட்ட கம்பனி அல்லது சுயதொழில் (தொழில் முயற்சியாளர்) ஒன்றில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

**13. முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா – (HNDM)**

முழு நேரம் - 3 வருடங்கள்

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) வியாபாரத்துறை, கலைத்துறை அல்லது வேறேதாவது துறைகளில் ஒரே அமர்வில் க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தி.

**அல்லது**

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் அல்லது வியாபார கற்கை நெறிகளில் தேசிய சான்றிதழ் (பொது நிருவாகம்/ சந்தைப்படுத்தல்)

**மற்றும்**

க.பொ.த. (சா-த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்திகள்.

**14. செயற்றிட்ட முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா – (HNDPM)**

முழு நேரம் - 2 ½ வருடங்கள்

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) எந்தவொரு துறையில் ஒரே அமர்வில் க.பொ.த. (உ.த) பரீட்சையில் சித்தி.

**மற்றும்**

க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்திகள்.

**15. தொழில்நுட்பவியல் கமத்தொழில் உயர் தேசிய டிப்ளோமா – (HNDT – Agriculture)**

முழு நேரம் - 3 வருடங்கள்

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) பின்வரும் பாடங்களில் மூன்று அடங்கலாக உயிர்விஞ்ஞானத் துறையில் ஒரே அமர்வில் க.பொ.த. (உ-த) பரீட்சையில் சித்தி. (இரசாயனம், கமத்தொழில் விஞ்ஞானம், உயிரியல் மற்றும் பௌதிகம்)

**மற்றும்**

கபொத (சா-த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்திகள்.

**16. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா – (HNDTHM)**

முழு நேரம் - 3 வருடங்கள்

(i) எந்தவொரு துறையிலும் ஒரே அமர்வில் க.பொ.த. (உ.த) பரீட்சையில் சித்தி.

**மற்றும்**

க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழி மற்றும் கணிதத்தில் சாதாரண சித்திகள்.

## "ஆ" பிரிவு

### உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின் (ATIs) பெயர்கள், முகவரிகள், தொலைபேசி எண்கள் மற்றும் தேசிய உயர் டிப்ளோமா (HND) கற்கைநெறிகள். [Full Time (FT) & Part Time (PT)]

| | உதொநி பெயர்/ உதொநி பிரிவு | முகவரி | தொலைபேசி இலக்கங்கள் | வழங்கப்படும் கற்கைநெறிகள் |
|---|---|---|---|---|
| 01 | ஹார்டி உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் அம்பாறை | பேராசிரியர் ஈவன் ஏ ஹார்டி மாவத்தை, அம்பாறை | 063-2222056<br>063-2223035 | HNDT (Agri)(FT), HNDA(FT), HNDM(FT),HNDIT(FT), HNDTHM(FT), HND in English (FT), HNDA(PT), HND in English (PT) |
| 02 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவக பிரிவு, அனுராதபுரம் | அக்கர 111, அனுலா மாவத்தை, பண்டுலகம, அனுராதபுரம் | 025-2234417 | HNDIT(FT), HNDA(FT), HND in English (FT) HNDTHM(FT), HNDIT(PT), HNDA(PT), HND in English(PT) |
| 03 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், பதுளை | கிறீன்லண்ட் ட்ரைவ், பதுளை | 055-2230218<br>055-2223818 | HNDIT(FT),HNDA(FT), HNDM(FT), HND in English (FT), HNDTHM(FT), HNDIT(PT), HNDA(PT), HND in English(PT) |
| 04 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவக பிரிவு, மட்டக்களப்பு | பிரதான தெரு, கோவில் குளம் கிழக்கு, ஆரையம்பதி, மட்டக்களப்பு | 065-2247519<br>065-2247470 | HNDIT(FT), HNDA(FT), HND in English(FT), HNDTHM(FT). HNDA(PT), HND in English (PT), NDIT (PT) |
| 05 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், கொழும்பு | இல.42, ரொட்ரிகோ பிளேஸ், கொழும்பு-15. | 011-2521152<br>011-2521282 | (All Full Time) HNDE (Civil) (FT), HNDE (Mechanical) (FT),, HNDE (Electrical & Electronics) (FT), HNDQS (FT), HNDBSE (FT) |
| 06 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், தெஹிவளை | இல. 51, வைத்தியா பாதை, தெஹிவளை | 011-2738349 | HNDIT (FT), HNDA (FT) , HNDM (FT), HNDBA (FT), HND in English (FT), HNDBF (FT), HNDTHM (FT) , HNDA (PT), HND in English (PT) |
| 07 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், காலி | சிறிதம்ம மாவத்தை, லபுதுவ, அக்மீமன,காலி | 091-2246179 | HNDE(Civil) (FT), HNDE(Mechanical) (FT), HNDE (Electrical & Electronics (FT), HNDIT (FT), HNDT (Agri) (FT) ,HNDA (FT), HNDM (FT), HNDTHM (FT), HNDBA(FT), HND in English (FT), HNDQS (FT), HNDA (PT), HNDIT (PT), HND in English (PT) |

| | உதொழி பெயர்/ உதொழி பிரிவு | முகவரி | தொலைபேசி இலக்கங்கள் | வழங்கப்படும் கற்கைநெறிகள் |
|---|---|---|---|---|
| 08 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், கம்பஹா | நய்வல, எஸ்ஸல்ல, வெயங்கொட | 033-2287519 033-2292544 | HNDT (Agri) (FT), HNDIT (FT), HNDFT (FT,) HNDCSPT(FT), HNDA (FT), HNDA(PT), HNDIT(PT) |
| 09 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், யாழ்ப்பாணம் | இல. 665/2. பீச் பாதை, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595 021-2229803 | HNDE (civil) (FT), HNDE (Electrical & Electronics) (FT), HNDA (FT), HND in English (FT), HNDTHM (FT), HNDQS (FT), HNDM(FT), HNDIT(FT), HNDIT(PT), HNDA (PT), HND in English (PT) |
| 10 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், கண்டி | இல. 16, கெப்பெட்டிபொல மாவத்தை, கண்டி | 081-2232097 | HNDIT(FT), HNDA(FT), HNDM(FT), HNDBA(FT), HND in English (FT), HNDTHM (FT), HNDA(PT), HND in English(PT), HNDIT(PT), |
| 11 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை | 035-2221297 035-2221713 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT), HNDPM (FT), HNDA (PT), HND in English (PT) |
| 12 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், குருநாகல் | இல. 22/1, வில்கொட பாதை, குருநாகல் | 037-2229583 037-2224911 | HNDIT(FT), HNDA (FT), HNDM (FT), HND in English (FT), HNDTHM (FT) , HNDIT (PT), HNDA (PT), HND in English (PT) |
| 13 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பிரிவு, மன்னார் | இல.20, மாகாண ஆங்கில கற்கைநெறி நிலையம் (PESC), தலைமன்னார் வீதி, மன்னார். | 023-3122555 | HND in English (FT), HNDTHM, HNDIT(FT) |
| 14. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனப் பிரிவு, நாவலப்பிட்டி. | நகரசபை பழைய கட்டிடம், நாவலப்பிட்டி | 054-2050634 | HNDTHM (FT), HNDM (FT), HND in English (FT), HND in English (PT) |
| 15. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனப் பிரிவு, இரத்தினபுரி. | புதிய நகரம், இரத்தினபுரி | 045-2231492 045-2231493 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT), HNDA (PT), HND in English (PT) |
| 16. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனப் பிரிவு, சம்மாந்துறை | ATI அவென்யு, சம்மாந்துறை | 067-2261304 | HNDIT(FT) , HNDA (FT), HND in English (FT), HNDM (FT), HNDIT (PT), HNDA (PT), HND in English(PT) |
| 17. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனப் பிரிவு, தங்காலை. | யாயவத்த, நெற்றோல்பிட்டிய, தங்காலை | 047-2241845 047-2241846 | HNDIT(FT), HNDA (FT), HND in English (FT), HNDA (PT), HND in English (PT) |
| 18. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், திருகோணமலை. | கிண்ணியா வீதி, வரோதயநகர், திருகோணமலை. | 026-2223232 026-2050617 | HNDIT(FT), HNDA (FT), HND in English (FT), HNDTHM (FT), HNDA (PT), HNDIT (PT), HND in English(PT) |
| 19. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனப் பிரிவு, வவுனியா. | ஏ-9 வீதிக்கு அப்பால், வேப்பங்குளம், ஓமந்தை, வவுனியா. | 024-2052733 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT) HNDA (PT), HND in English (PT) |

**குறிப்பு:-**

1. விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித் திகதிக்கு முன்னராக விண்ணப்பதாரியானவர் தேவைப்படும் உட்செல்லல் தகைமைகளை பூர்த்தி செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.
2. HND முழுநேர நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கபொத (உ-த) பொதுவான வினாத்தாள்களுக்கான ஆகக் குறைந்த புள்ளிகள் 25. விண்ணப்பதாரி உயர் கல்விக்கு தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.
3. ஆங்கிலத்தில் HND ஐ நடாத்துவதற்காக தகுதியுள்ள அபேட்சகர்களை ஆட்சேர்ப்பதற்கான

   நிறுவக வாரியாக பொதுவான எழுத்து மூலமான பரீட்சையொன்று நடாத்தப்படும்.
4. 23 வயதிற்கு குறைவாகவுள்ள மாணவர்களுக்கு முழுநேரத்திற்கான முன்னுரிமை வழங்கப்படும்.
5. குறிக்கப்பட்டதொரு ATI இல் திட்டவட்டமாக குறிக்கப்பட்ட கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு அக்கற்கை நெறிக்கு ஆகக் குறைந்தது 50 மாணவர்களாவது பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
6. அனைத்து கற்கை நெறிகளுக்குமான முழுநேர மாணவர்கள் வார நாட்களிலும் வார இறுதியின் குறிப்பிட்ட நாட்களிலும், தேவைப்படின் சமுகமளித்தல் வேண்டும்.
7. வார இறுதிகளில் பகுதி நேர கற்கை நெறிகள் நடாத்தப்படும்.
8. முழுநேர மற்றும் பகுதிநேர கற்கைகளுக்கான கற்பித்தல் நடவடிக்கைகள் தேவைக்கேற்ப வகுப்பறையிலோ அல்லது தொலைக் கல்வி வழியாகவோ நடாத்தப்படலாம்.
9. HNDA இன் (முழு நேரம்) முதலாம் மற்றும் இரண்டாம் வருட நிகழ்ச்சித்திட்டமானது வார நாட்களில் மாத்திரமே நடாத்தப்படும். இந்த கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்தின் மூன்றாம் மற்றும் நான்காவது வருடங்கள் வார இறுதியில் நடாத்தப்படும்.
10. HNDM நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் வருடங்கள் வார நாட்களில் நடாத்தப்படும். இந்த கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்தின் மூன்றாம் வருடம் வார இறுதியில் நடாத்தப்படும்.
11. முழு நேர நிகழ்ச்சித்திட்டத்தின் மாணவர்கள் உரித்தான துறையில் ஆகக் குறைந்தது 6 மாத In-plant பயிற்சியில் பங்குபெறுதல் வேண்டும்.
12. பகுதி நேர மாணவர்கள் உரித்தான துறையில் வேலையில் இருத்தல் வேண்டும்.
13. குறிப்பிட்டதொரு ATI இல் முழுநேர கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர், வேறேதாவது ATI இற்கு எக்காரணத்தையும் முன்னிட்டும் மாற்றப்பட மாட்டார்.
14. உரித்தான நிறுவகத்தினால் வழங்கப்பட்ட பதிவு பெறுதலின் மூடும் திகதியிலிருந்து 60 நாட்களுக்கு முன்னராக அவர்களின் பதிவை இரத்துச் செய்வதற்கு எந்தவொரு HND கற்கை நெறிக்கும் பதிவு பெற்ற மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.
15. 60 நாட்களுக்குப் பின்னர் தமது பதிவை இரத்துச் செய்யும் மாணவர்களுக்கு பதிவு செய்யப்படும் திகதியிலிருந்து மாதத்திற்கு 5,000 ரூபா அறவிடப்படும். (மாணவர்களுக்கான கைநூலை பார்வையிடவும்)
16. வார நாட்கள் மற்றும் வார இறுதிக்கான முழு நேர மற்றும் பகுதி நேர மாணவர்களுக்கு பரீட்சைகள் நடாத்தப்படும்.
17. கல்விசார் ஆலோசனை சபையினால் பரிந்துரைக்கப்பட்டு ஆட்சி செலுத்தும் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதாவது உட்செல்லல் தகைமையானது பரிசீலிக்கப்படும்.
18. க.பொ.த. (உ-த) மற்றும் க.பொ.த. (சா-த) பரீட்சைகள் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.
19. பொய்யான தகவலை வழங்கும் எந்தவொரு விண்ணப்பதாரியும் நிராகரிக்கப்படுவார்.
20. 2020 கல்விசார் ஆண்டிற்காக உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்களுக்கும் மாணவர்களை அனுமதிப்பது SLIATE இன் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
21. மேலதிக தகவலுக்காக www.sliate.ac.lk என்ற இணையத்தளத்தை தயவு செய்து பார்வையிடவும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியானது 2020.10.06ஆம் திகதியாகும். (2020-09-04ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்)

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE)**

# வாழ்வாதாரமா சேதாரமா 145



தமிழ்க் கவி பேசுகின்றார்

## போராட்டத்தை வைத்து பிழைப்போர் தரமறிந்து உதவுவார்களா?

"உதவி வரைத்தன்று உதவி உதவி செய்யப் படுபவர் சால்பின் வரைத்து" என்று வள்ளுவர் கூறியுள்ளார். இன்று எமது மண்ணில் மக்களாயினும் மாண்புமிகு பெரியோராயினும், பெரும் பணக்காரராயினும், ஏன் அரசாங்கமே ஆயினும் இன்னொரு அரசினதோ மக்களதோ உதவி இல்லாமல் எதையும் செய்ய முடியாது என்ற நிலையே இருக்கிறது.

போர் எமது மண்ணை உருக்குலைத்துப் போட்டகாலம் முடிந்துவிட்டது. ஆனால் மக்களது வாழ்க்கை, இயல்பு நிலைக்கு திரும்பி விட்டதா? என்றால் இல்லை. இதன் தாக்கம் வெளிநாடுகளிலிருந்து இன்னமும் எமது மக்களுக்கு உதவி வழங்குவோரையும் சேர்த்து பாதிக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும் உதவி பெறுபவர் அதை எவ்வளவு காலத்திற்கு பயன்படுத்தி வாழ முடியும் என்பதே கேள்விக்குறி.

ஊழல் இல்லாத இடம் எங்கே இருக்கிறது. வெளியிலிருந்து உதவி வழங்குவோர் தமக்குள் ஒரு அமைப்பை நிழல் நிர்வாகமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிழல் நிர்வாகிகள் இங்கே தனிக்காட்டு ராஜாக்களாக வலம் வருகிறார்கள். ஒரு சிலர் குறுநில மன்னர்கள்போல தமக்கு பிடித்த அல்லது தம்மை கவனிக்கக்கூடிய பயனாளிகளையே தெரிவு செய்கின்றனர். உண்மையில் உதவி பெறுவோர் அவர்களுக்கான உதவியை முழுமையாக பெறுகிறார்களா என்பதே கேள்விக்குறிதான்.

ஒருவருக்கான உதவியை தீர்மானித்தபின் அந்தக்குழுவினர் சம்பந்தப்பட்டவர்களை இடத்தை நேரில் பார்க்க புறப்படுகிறார்கள் என்றால், அதற்காக ஒரு வாகனம் படப்பிடிப்பாளர் அவர்களுக்கான சிற்றுண்டிகள் பானவகைகள் என்பவற்றையும் கொண்டு செல்கிறார்கள் இன்னும் இவர்களையும் எதிர்பார்த்து காத்திருக்கும் அந்த கிராமவாசிகளும் இவர்களுக்கான விசேட ஏற்பாடுகளை செய்ய வேண்டியுள்ளது. இவை மதிய உணவு அல்லது சிறு சிற்றுண்டி பானம் என அமைகிறது. சில இடங்களில் மாலை மரியாதைகளும் உண்டு.

ஆனால் இவற்றுக்கான செலவு இதற்கென ஒதுக்கப்பட்ட உதவி நிதியிலேயே எடுக்கப்படுகிறது. ஆக பூசாரிகளுக்கு ஒதுக்கித்தான் பக்தர்களுக்கு வரும். உள்நாட்டிலும் சரி வெளிநாடுகளிலும் சரி இந்த நிதிதிரட்டி சேவை செய்பவர்கள் தமக்கென எந்த தொழிலையாவது வைத்திருக்கிறார்களா என்றால் கிடையாது. ஆனால் ஒரு தொழிலை செய்பவரை விட வசதியாக பல நாடுகாண் பயணங்களையும் செய்யும் வல்லமை படைத்தவர்களாக இவர்களே இருக்கிறார்கள். நாம் எப்போதாவது யாராவது பாதிக்கப்பட்ட உதவி தேவைப்படுவோரைப்பற்றி பேச்சு வாக்கில் சொல்லி விட்டாலும். எங்க எங்க? எடுங்க எடுங்க அவற்ற விபரத்த தாங்க. அவயட படத்தை அனுப்புங்க என்று பரக்கிறார்கள். நாமும் சரியென ஏதோ அக்கறையாக எல்லா விபரங்களையும் திரட்டி அனுப்பினாலும் அவை பட்டியலிடப்படவே என்பது தெரியாமல் போகின்றன. ஒரு பட்டியலை வைத்துக்கொண்டு பணமோ பொருளோ் திரட்டப்படுகின்றன. அவை வருகின்ற வழியெல்லாம் சொரிந்து மீதமுள்ள தொகையே பயனாளிக்கு வருகிறது. அண்மையில் ஒரு நிறுவனம் ஒரு போராளிக் குடும்பத்தின் தியாகம் என்பவற்றையும் அவர்களது நிலையையும் பறைசாற்றியபோது வழங்குநர்கள் லட்சக்கணக்கில் அள்ளி கொட்டினார்கள் என்று என் நண்பரொருவர் கூறினார். நான் அறிந்த மட்டில் அந்தப்பணத்தில் அரைவாசிவரையே அந்தக் குடும்பத்துக்கு போனது. என்னதான் பாதிக்கப்பட்ட குடும்பமானாலும் அவர்கள் பரம்பரை நில உடமையாளர்கள் என்பதும் எனக்கு தெரியும். அதே சமயம் ஒரு இயலாத போராளியின் குடும்பத்துக்கு உதவ நிறுவனத்தின் பட்டியலில் அவனது பெயர் இடம்பெறவில்லை என்ற காரணம் சொன்னார்கள்.

இந்த நிலையில் நான் அரசாங்கத்தைப் பற்றி பேசப் போகிறேன். ஊனமுற்ற போராளிகளுக்கு மட்டுமல்ல மக்களுக்குமாக மாதாமாதம் ஐயாயிரம் ரூபாவை அரசாங்கம் வழங்கிவருகிறது. ஒரு வருடத்துக்கு அது அறுபதாயிரம் ரூபாவாகும். இந்த உதவி அவர்களின் ஆயுள் உள்ளவரை கிடைக்கும். ஐந்து வருடம் அவர் சீவித்திருந்தாலும், அவருக்கு மூன்று லட்சம் ரூபா வழங்கப்பட்டிருக்கும். அதற்கு அரசாங்கம் போராளியா என்ற அளவுகோலை வைத்திருக்கவில்லை. பொதுவாக ஊனமுற்றோர் என்ற அளவு கோலைத்தான் வைத்திருக்கிறது. புனர்வாழ்வு பெற்று வெளியேறிய ஒவ்வொரு போராளிக்கும் வாழ்வாதார உதவி தவிர இரண்டு லட்ச ரூபா வட்டி குறைந்த கடன் வசதி செய்திருந்தது. இந்தக் கடனைப் பெற்றவர்கள் இன்று தம்மை நிரந்தரத் தொழிலில் நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள்

இன்றும்கூட வெளிநாடுகளில் உள்ள உதவி வழங்குவோர் போராளிகளுக்கோ போராளிக் குடும்பகளுக்கோ, அல்லது மாவீரர் குடும்பங்களுக்கோ மட்டுமே உதவி செய்வோம் என்ற கொள்கைகளை ஏன் வைத்திருக்கின்றன. இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டுக்குப்பின்னும், அதற்கு முன்னும் இந்தப் போராட்டத்தில் மாட்டுப்பட்டு தமது உயிரையும் இழந்தவர்கள் ஏராளம் உறுப்புகளை இழந்தவர்களும் ஏராளம். அவர்களையெல்லாம் இயக்கம் கைவிடவில்லை அவர்களுக்கு ஏதாவது வேலைவாய்ப்புகளை கொடுத்து காப்பாற்றியே வந்தது.

கொழும்பு நடவடிக்கைகளுக்காக போராளிகளை அனுப்பும் போது சாதாரணமக்கள் அவர்களுடன் அனுப்பப்படுவதுண்டு. இவர்கள் தகவல்களை பரிமாற, தகவல்களை சேகரிக்க என பலவகைகளில் அப்பாவிகளாக உலாவருவார்கள். இப்படித்தான் ஒரு கரும் புலித்தாக்குதல் நடைபெற்ற போது அந்த போராளியுடன் குடும்பத்தவர்போல உள்ளே சென்றவர், அவர் சிதறியபின் அவனது உடைத் துணுக்குகளையும் குருதிபடிந்த மண்ணில் கொஞ்சத்தையும் பத்திரமாக கொண்டு வந்து சேர்ந்திருந்தார். அவர்களை அப்போதும் இப்போதும் யாரும் அறியாவண்ணம் காத்தது இயக்கம். பெயரறியா மாவீரர்களுடன் அவர்களும் தம்மை தெரியாமல் வாழ்ந்தார்கள். இவர்கள் என்றைக்காவதுகூட தம்மை வெளிப்படுத்த முடியாதவர்கள். மக்களாக வாழும் இந்த மனிதர்கள்தான் உண்மை மனிதர்கள். உதவி வழங்குவோர் கவனத்திற்கு இதை சொல்கிறேன்.


இராணுவக் கட்டுப்பாட்டிலும் போராளிகளை காப்பாற்றி அதன் காரணமாக சந்தேகத்தில் பிடிபட்டு சிறைக்கு சென்றவர்களை அன்று மிக கவனமாக கண்காணித்தார்கள். அவர் உளவாளியாக இங்கே திரும்ப வந்திருக்கலாம் என்ற சந்தேகம் இருந்தாலும் அவர்களை பசிபட்டினியில் விடவில்லை. ஆனால் திரும்ப சேவைக்கு எடுக்கவில்லை. இவர்களது குடும்ப உறுப்பினர்களை போராளிகளாக எடுக்கவேயில்லை. இன்று மிக மோசமான நிலையில் வாழும் இந்தக் குடும்பங்களுக்கு இரப்பதற்கும் தகுதியில்லை.



ஏனைய இயக்கங்கள் தமது ஆதரவாளர்களை இந்த நிலைக்குத்தள்ளவில்லை அவர்களை நல்லபடி பார்த்துக் கொள்கிறது என்பதை என்னால் உறுதியாக கூறமுடியும். அவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டதன் காரணமாக அவ்வகையிலான குடும்பங்களில் ஒருவருக்காவது வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள். அல்லாத குடும்பங்களுக்கும் வீடு பசுமாடு தையல்யந்திரம் என கொடுத்திருக்கிறார்கள். அந்தப்பகுதிகளில் மக்கள் ஓரளவுக்கு சுபீட்சமாகவே வாழ்கிறார்கள்.

இன்னும் கூட போராட்டத்தை வைத்துக்கொண்டு பிழைப்பு நடத்துவோர் தராதரமறிந்து உதவிகளை செய்தால் எமது மண்ணில் மக்கள் சுபிட்சமாக வாழலாம். உதவிகளை ஆடுமாடுகளாக பொருளாக வழங்கினால் அவை கஷ்டகாலத்தில் விற்பனையாகிவிடும். அல்லது திருட்டுப் போய்விடும். ஒரு நிலமுள்ள பயனாளிக்கு கிணறு வெட்டிக் கொடுத்தால் அவனால் காய்கறி பயிரிட்டோ நான்கு வாழைகளை நட்டோ வாழ்வை சிறப்பிக்க முடியும். அந்த கிணறு களவெடுக்க முடியாது. விற்கமுடியாது. காலங்காலமாக பிள்ளைகளுக்கும் பயனளிக்கும். உதவிகளை வழங்குவோர் நான்கைந்து பேராக சேர்ந்து ஒரு பயனாளிக்கு தாகம் தீர்க்க முன்வாருங்கள். கிணறு ஓர் அட்சய பாத்திரம். உங்கள் பெயர் சொல்லி நிலைத்திருக்கும்.

# மனத்திரை



**தேசத்தின் கண்**
**கே.எஸ்.சிவகுமாரன்**

## அம்பை/ விஷ்ணு மத்தூர்

நமது எழுத்தாளர்கள் தமது நூல்கள் பற்றிய திறனாய்வுக் குறிப்புகள் ஆங்கிலத்தில் வெளிவந்திருப்பதை அறியாமலிருக்கலாம். எனவே, இப் பத்தி எழுத்தில் அவை பற்றிய தகவல்களைத் தருகிறேன்.

நெடுங்காலமாக ஈழத்து எழுத்துக்கள் பற்றியே அதிக கவனம் செலுத்தி வந்ததனால், தமிழக எழுத்து தொடர்பாக அதிகம் எழுதும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. இன்று 'அம்பை' (சி.எஸ். லக்ஷ்மி) பற்றி எழுதியதின் சாரத்தை இங்கு தருகிறேன். 'அம்பை' என்பது கலாநிதி லக்ஷ்மி அவர்களின் புனைபெயர். தமிழகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் நெடுங்காலமாக மும்பாயில் வசித்து வருகிறார். இவர் கணவர் ராஜஸ்தானில் பிறந்தவர். அவர் பெயர் விஷ்ணு மத்தூர். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதுபவராகையால் இவருடன் 40 வருடங்களுக்கு முன்னர் தொடர்பு கொண்டிருந்தேன்.

இவரை 1988 இல் முதலில் சந்தித்தேன். இவர் ஒரு சிருஷ்டி எழுத்தாளர் மாத்திரமன்றி, சினமாவிலும் ஆர்வமுள்ளவர். மஹாராஜ்டிர மாநிலத் தலைநகரான மும்பாயில் கணவரும் மனைவியும் கூட்டாக சினமாவில் ஈடுபட்டு வந்தனர். இவர் கணவரின் தாய்மொழி ஹிந்தியாக இருந்த போதும், ஆங்கில மொழியில் சரளமாரப் பேசுகிறார். உடனிகழ்கால உலக சினிமா பற்றிய நிறைந்த அறிவு அவருக்கு உண்டு, 1970 இல் பூனேயிலுள்ள திரைப்பட / தொலைக்காட்சி பயிற்சி நிலையத்தில், பாலு மகேந்திராவின் சக மாணவராக இவர் நெறியாள்கைத் துறையில் பட்டம் பெற்றவராவர்.

மறைந்த வங்க நெறியாளர் மிர்னாள் சென்னின் உதவி நெறியாளராக 'ஏக் அதுரி கஹானி'யில் பணிபுரிந்ததுடன், மணி கௌல்இன் படமாகிய "அஷாம் க ஏக்தின்" என்ற படத்திலும் 1972, 1974 காலப் பகுதியில் நெறியாளராக அனுபவம் பெற்றவர். துர்கா கோட் எனும் தயாரிப்பாளருக்காக சில கதைசாரா விவரணப் படங்களையும் விஷ்ணு மத்தூர் உருவாக்கியுள்ளார்.

1981ஆம் ஆண்டில் தனது முதல் திரைப்படமான "பஹல அத்யாய" என்ற ஹிந்திப் படத்தை நெறியாள்கை செய்தார். ஷேகர் ஜோஷி என்ற ஹிந்தி மொழி சிறுகதை எழுத்தாளரின் கதையைத் தழுவி எழுதப்பட்ட திரைக்கதையை இவர் எழுதினார்.

இந்தியாவில் "பெண்களும் ஊடகங்களும்" என்ற தலைப்பில் 20 நிமிட கதைசாரா விவரணப் படத்தை 1985 இல் இவர் நெறிப்படுத்தினார். சாவித்திரி ராஜம் என்ற கர்நாடக இசை வீணை விற்பன்னர் பற்றிய படம் அது. பெயர் பறக்கும் பறவை. அவரது மனைவியாகிய 'அம்பை' எழுதிய 'மிலேச்சன்' என்ற சிறுகதையின் திரைப்பட வடிவந்தான் பஹல அத்தியாய' இருவருமே கதைவசனங்களை எழுதியிருந்தனர். மும்பாய் பல்கலைக்கழக வளாகத்தில் இந்தப் படம் பிடிக்கப்பட்டது.

**கதை என்ன கூறுகிறது?**

சிறிய பட்டணத்தைச் சேர்ந்த மத்தியதர வகுப்பு இளைஞன் ஒருவன் மாநகரத்திற்கு வருகிறான். வந்தபோதும் அவன் பெருநகரத்தில் ஓர் அந்நியனாகத்தான் காணப்படுகிறான். அவனுக்கு நிறையக் குடும்பப் பிரச்சினைகள் இருந்தபோதும் உயர்கல்வியை அவன் மேற்கொள்வதில் தன்னைச் சுதாரித்துக் கொள்கிறான். அவனுக்குத் தன்குடும்பம், பல்கலைக்கழகம், மாநகரம் ஆகியவை பற்றியே அதிக கவலை, அக்கறை.



அவையே அவன் மனதில் குவியல் கொண்டிருக்கின்றது.

படம் எடுக்கப்பட்ட முறைமை, சம்பிரதாய மற்ற முறையில் அல்லாமல் அதாவது நேரடியாகவோ, விவரணம் சார்ந்தோ அல்லாமல் – பரிசோதனையாக படம்பிடிக்கப்பட்டது என்றும், அதுவே அந்நியமாய் போன ஒரு இளைஞனின் அவலநிலையைப் புரிந்து கொள்ள பார்வையாளருக்கு உதவுகிறது என்றும், ஒரு திறனாய்வாளர் சுட்டிக் காட்டியிருந்தார். மனித மனதின் ஒருவிதமான சஞ்சலப் போக்கை படம் சித்திரிக்கிறது என்று விஷ்ணு மத்தூர் விளங்கினார்.

அந்த இளைஞனின் பெயர் ரவி, அவன் வாழ்க்கையில் தொடர்புபடாத, அந்நியமான சம்பவங்களை இப்படம் காட்டி நிற்கின்றது என்றும் அதுவே அவன் வாழ்க்கையில் ஒரு முழுமையைக் காட்டி நிற்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

விஷ்ணு, மத்தாரைப் பற்றி இவ்வளவும் போதும், ஆனால் அம்பை பற்றி நாம் இன்னும் அறிந்து கொள்ளவேண்டியிருக்கிறது.

15ஆம் பக்கம் பார்க்க...

## மஞ்சரி சிறுகதை



# விடியல்

படுக்கையில் கிடந்த குப்புசாமிக்கு தூக்கம் பிடிக்கவில்லை. புரண்டு புரண்டு படுத்தவருடைய சிந்தனை எல்லாம் நாளை கிழங்கு வாங்குவதற்காக வண்டியுடன் வரவிருக்கும் முதலாளியைப் பற்றியதாகவே இருந்தது. ஏழு மணிக்கெல்லாம் வண்டி வந்துவிடும். இன்னும் காணியில் கிழங்கு தோண்டவில்லை. ஊருக்குள் ஒரு நாலைந்து பேரை அழைத்திருந்தார். “வருகிறேன்” என்று கூறிப்போனவர்கள் ஒருவரும் வரவில்லை. அன்று மதியம்வரை பார்த்துக் கொண்டிருந்தவர் இனி வரமாட்டார்கள் என்பது உறுதியானபோது கிழங்குக் கடை முதலாளியுடன் தொலைபேசியில் விசயத்தைக் கூறினார். ‘எனக்கு அதெல்லாம் தெரியாது நாளைக்கு நான் கொழும்புக்கு கிழங்கு அனுப்புறதா சொல்லிட்டேன். கட்டாயம் அனுப்பித்தான் ஆகணும். நீ என்ன செய்வாயோ தெரியாது வண்டி அனுப்புவேன் எனக்கு நாளைக்குக் கிழங்கு வேணும்’ பதிலுக்குக் காத்திராமல் அழைப்பைத் துண்டித்துக்கொண்டார். ஊரில் மேலும் பலரைக் கேட்டுப் பார்த்தார். ‘அரசாங்கமே ஒருவாரம் விடுமுறை கொடுத்திருக்கு நீ கொடுக்கிற எழுநூற்றி ஐம்பது ரூபாய்க்காக நாங்க நோய்வந்து சாகணுமா ‘முகத்தில் அடித்தாற் போல் இருந்தது பலரது பதில்கள். அடுத்த ஊருக்குப் போய் ஒரு பத்துப்பேரைக் கூட்டிவரலாம் என்றாலும் பாழாய்ப்போன இந்த வைரஸ் நோய் பயத்தால் யாரும் வருவார்களோ என்ற சந்தேகம். இறுதியில் எதுவும் முடியாமல் வெறுமனே கழிந்தது ஒருநாள்.

ஊர் விவசாயிகள் எல்லாம் வெவ்வேறுவகைத் தானியங்களையும் மரக்கறிவகைகளையும் பயிரிட்டுக் கொண்டிருக்கையில் குப்புசாமி மட்டும் இந்த பருவக் காலத்தில் உருளைக்கிழங்கு பயிரிட்டார். எல்லோரும் ஒரே வகையான பயிர் செய்தால் அறுவடை நேரத்தில் சந்தையில் நல்ல விலை கிடைக்காது என்பதாலும் சித்திரைப்புத்தாண்டு காலத்தில் உருளைக்கிழங்கிற்கு அதிக கிராக்கி இருக்கும் என்பதாலும் கிழங்கு பயிரிட்டார். தன்னுடைய கால் ஏக்கர் காணியில் இம்முறை அதிக விளைச்சலைக் கொடுத்திருக்கும் கிழங்கை விற்று இருக்கின்ற கடனையெல்லாம் அடைத்தது போக வைகாசியில் மகளின் கல்யாணத்தையும் முடித்துவிடலாம் என்ற பெருங்கனவில் இருந்தார். அவரின் கனவு பொய்க்கவில்லை. எதிர்பார்த்தது போலவே எல்லாம் கைகூடி வந்தது. இறுதியில் நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் என்பதுபோல இப்படியொரு சூழ்நிலை வந்து அவரை சிக்கலில் மாட்டிவிட்டு விட்டது. கொரோன வைரசை விடவும் வேகமாக துரதிர்ஷ்டம் துரத்திக்கொண்டு வரும் ஒரு மனிதனின் வாழ்க்கையில் உழைப்பு முயற்சி என்பதெலாம் ஒரு சாதாரண செயல். வெற்றி என்பதை படைத்தவன் மட்டுமே தீர்மானிக்கிறான் நல்லதோ கெட்டதோ எல்லாம் நாளை அவன் விட்ட வழி என்றவாறு உறங்கியும் போனார்.

பின்னிரவு ஒரு இரண்டு இரண்டரை மணியிருக்கும் ஒரு பயங்கர கனவு கண்டு வாய் புலம்பினார் குப்புசாமி. குப்புசாமியின் புலம்பல் கேட்டு விழித்துக்கொண்ட அவரின் மனைவி ‘என்னங்க..என்னங்க.. என்னாச்சு ‘என்றவாறு தட்டி எழுப்பி சொம்பில் வைத்திருந்த தண்ணீரைப் பருகக் கொடுத்தார்.. தண்ணீரைக் குடித்துவிட்டு மறுபடியும் தலைசாய்க்க முற்படுகையில் உறங்கிக்கொண்டிருந்த அவருடைய பத்துவயது மகன் எழுந்து “அப்பா ஒண்ணுக்குப் போகணும் கொஞ்சம் வெளியே வாரியா’’ என்றதும் வீட்டிற்குப் பின்புறம் கூட்டிச் சென்றார். ஏனோ தெரியவில்லை அவ்வேளையில் ஒருநாளும் இல்லாதவாறு அவ்வேளையில் ஊருக்குள் நாய்கள் குறைக்கத் தொடங்கியிருந்தன.. எதற்காக இப்படி குறைக்கின்றன என்று மனசுக்குள் நினைத்துக்கொண்டிருக்கையில் சிறுநீர் கழித்துவிட்டு வந்த மகன். ‘அப்பா போனமாசம் நம்ம ராமசாமி மாமா காணியிலே மரக்கறி களவு போனபோது குரைத்த மாதிரியே இன்றைக்கும் இந்த நாயெல்லாம் குரைக்குது. இன்னைக்கு யாருடைய காணியிலே களவு போகப் போகுதோ தெரியல’’ கூறிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான். மகன் இப்படி சொன்னதும் குப்புசாமியின் மூளையில் சட்டென்று ஒரு மின்னல் மின்னியது.. ‘ஒருவேளை நம்ம காணியில் யாரவது... “ நினைத்தவர் எதற்கும் ஒரு எட்டு போய் பார்த்துவிட்டு வருவது நல்லது என்ற முடிவோடு மின் பந்தத்தை கையில் எடுத்துக்கொண்டு மகனையும் கூட்டிக்கொண்டு ஊருக்கு அப்பால் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் காணியை நோக்கி விரைந்தார்.

பௌர்ணமிக்கு இன்னும் ஒரு சில தினங்களே இருக்க வளர்பிறை நிலவு முகில்களற்ற வானத்திலிருந்து பால் போன்ற ஒளியைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது. வழியின் இருமருங்கிலும் இருந்த விளைநிலங்களில் விதவிதமான பூச்சிகள் சத்தம் இயற்கை இன்னிசைக் கச்சேரி நடத்துவது போலிருந்தது. குன்றும் குழியுமாகக் கிடந்த தாரிடப்படாத கிராமத்தின் மண்வீதியில் துவிச்சகர வண்டியை செலுத்துவது மிகவும் கடினமாக இருந்தது. இன்னும் சொற்பதூரம் பயணித்தால் தார்சாலையை அண்மித்த அவரது காணி வந்துவிடும். இதோ அதோ என்றிருந்த வேளை பின்னாலிருந்த மகன் ‘அப்பா அங்க பாருங்க’’ என்றபோதே அக்காட்சி

> “இறுதியில் நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் என்பதுபோல இப்படியொரு சூழ்நிலை வந்து அவரை சிக்கலில் மாட்டிவிட்டு விட்டது. கொரோன வைரசை விடவும் வேகமாக துரதிர்ஷ்டம் துரத்திக் கொண்டு வரும் ஒரு மனிதனின் வாழ்க்கையில் உழைப்பு முயற்சி என்பதெலாம் ஒரு சாதாரண செயல்”

அவர் கண்ணிலும் பட்டுவிட்டது. “அடப்பாவிகளா இதுக்குத்தான் நீங்க எல்லோரும் கிழங்கு தோண்ட வராமல் விட்டீர்களா..!’ ஆச்சரியம் மேலிட அதிர்ந்து வண்டியை நிறுத்தினார். மின்பந்தத்தை அணைத்தபடி மகனிடம் சத்தம் போடக்கூடாதென ரகசியமாய் காதில் கூறிவிட்டு இருவரும் அங்கிருந்தவாறே நடப்பதை அவதானிக் தொடங்கினர்.

தார் சாலை வழி நெடுகிலும் வீதி விளக்குகளுக்காக இணைக்கப்பட்டிருக்கும் மின் கம்பிகளிலிருந்து திருட்டுத்தனமாக மின்சாரத்தை காணி முழுவதற்கும் எடுத்துக்கொண்டு ஒரு கூட்டமே இரவோடிரவாக கிழங்கு தோண்டி மூடை மூடையாக அடுக்கி வைத்துக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்திற்குத் தலைவனாக நின்று செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவனை உற்றுப் பார்த்தார். மின்விளக்கின் ஒளியில் மிகத்தெளிவாக தெரிந்தது அவனுடைய முகம். ஒருவாரத்திற்கு முன்பு குப்புசாமியிடம் கிழங்கு கேட்டு வந்தவன். அவன் கேட்ட விலைக்கு ஒத்துவராது என்று முடிவாகக் கூறத் திரும்பிப் போனவன். நேர்வழியில் அடைய முடியாததை குறுக்கு வழியில் அடையத் துணிந்திருக்கிறான். அவனுக்கு ஒத்துழைக்க ஊருக்குள் அண்ணன் தம்பி போல் ஒன்னுக்கொன்னா பழகியவர்கள்.

என்ன மனிதர்கள். ஒரு நாலு ரூபா கூடுதல் கிடைக்கும் என்பதற்காக களவு செய்வதற்கும் துணிந்து விடுகிறார்களே.. இந்த உலகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது. போகப் போக நன்றி விசுவாசம் நம்பிக்கை என்பதெல்லாம் வெறும் ஏட்டளவில் மாத்திரமே இருந்துவிடும் போலிருக்கிறது. இனி இந்த சமுதாயத்தைத் திருத்த அந்தக் கடவுளாலும் முடியாது. உலகம் அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இப்படியான துரோகிகள் வாழ்வதால்தானோ என்னவோ இப்படி மருந்து கண்டு பிடிக்க முடியாத நோய்களெல்லாம் வந்து மனிதனை வாட்டி வதைக்குதோ என்று எண்ணிக் கொண்டே காணியை முழுவதுமாக நோட்டமிட்டார்.

ஒரு மணி நேரத்திற்குள் கிழங்கு முழுவதும் தோண்டி எடுக்கப்பட்டு விடும் நிலையில் இருந்தது. அருகில் செல்வது ஆபத்து. இம்மாதிரி திருட்டுத்தனமாக இரவில் வேலை செய்பவர்கள் மது போதைப்பொருள் பாவனை இல்லாமல் இந்த வேலையைச் செய்ய மாட்டார்கள். பணம் ஒன்றே குறிக்கோளாக இருக்கும் அவர்கள் அருகில் சென்றால் கொலை செய்யவும் தயங்கமாட்டார்கள். காலம் தரம் தாழ்ந்து கிடக்கும் காலம். இங்கே தவறுகள் நியாயமாகவும், நியாயம் தவறாகவும் இடம்மாறிப் போகும். பணத்தால் எல்லாம் நடக்கும். சரி போனால் போகட்டும். பணத்தை எப்போது வேண்டுமானாலும் சம்பாதித்துக் கொள்ளலாம் உயிர் போனால் முடியுமா.. உடலில் வலுவிருக்கு. கையுயர மகன் இருக்கிறான். இப்போதைக்கு களவைப் பிடிப்பதைவிட உயிரைக் காத்துக் கொள்ளுதல் முக்கியம் என்றவாறு திரும்பிப் போக முடிவெடுத்தார்.


மூன்று மாத உழைப்பு. காடாய்க் கிடந்த நிலத்தைக் கொத்திப் பதமாக்கி, கடனுக்கு விதைகிழங்கு வாங்கிப் பயிரிட்டு நீர்பாய்ச்சி உரமிட்டு கிருமிநாசினி தெளித்து அல்லும் பகலுமாய் காவல்காத்து பிள்ளைபோல வளர்த்தபயிர் கண்முன்னே களவு போவதைப்பார்த்து இறைவா இது உனக்கே அடுக்குமா? அல்லும் பகலும் உன்னையே நம்பியிருந்த உன் பக்தனுக்கு நீ செய்யும் கைம்மாறு இதுதானா.. மனம்நொந்து சத்தம்போடக் கூட முடியாமல் மனதுக்குள் கதறினார்.

ஊருக்குள் சென்று ஊராரைக் கூட்டிவருவதற்குள் கிழங்கெல்லாம் ஊரைவிட்டே போய்விடும். இந்நேரத்தில் நடப்பதையெல்லாம் வேடிக்கைப் பார்ப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும். இப்போது காணி முழுவதிலும் உள்ள கிழங்கு தோண்டப்பட்டு மூடை மூடையாக தார்சாலை ஓரத்தில் அடுக்கப்பட்டும் விட்டது. கூட்டத்தலைவன் வண்டிக்காரனுக்குக் கைப்பேசியில் பேசினான். ‘’இன்னும் கொஞ்ச நேரத்திற்குள் விடிந்துவிடும் சீக்கிரம் வா .இங்கே எல்லாம் தயார்’’ கட்டளையிட்டவன் கிழங்குத் தோண்டியவர்களுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்துவிட்டுக் காத்திருந்தான். அதற்குள் தூரத்தில் வண்டி வரும் ஓசை கேட்டது. எல்லோரும் தயார் நிலையில் நின்றிருக்க கூட்டத்தில் தூரத்தே வரும் வண்டியைக் கண்ணுற்ற ஒருவன் கூறினான். ‘’மச்சான் அது பொலிஸ் வண்டி மாதிரி இருக்குடா’’ ‘பொலிஸ் வண்டியா’’ உற்றுப் பார்த்த அனைவரும் ‘ஆமாம்..பொலிஸ் வண்டிதான். யாரும் நிற்காதீங்க..எல்லோரும் ஓடிப்போங்க’’ யாரோ சத்தம்போட மறுகணம் எல்லோரும் எப்படி ஓடி மறைந்தார்களோ தெரியவில்லை.

அடுத்தநொடி குப்புசாமியும் மகனும் ஓடிச்சென்று கிழங்கு குவித்திருக்கும் இடத்தை அடையவும் பொலிஸ் வண்டி அங்கு வரவும் நேரம் சரியாக இருந்தது. குப்புசாமிக்கு தன் கண்களை நம்ப முடியவில்லை. தான் காண்பது கனவா இல்லை நனவா.. ஆச்சரியம் மேலிட நின்றிருக்க வண்டியிலிருந்த பொலிஸ்காரர், இன்னும் கொஞ்ச நேரத்திலே ஊருக்குள்ளே கொரோனா நோய் யாருக்கும் இருக்குதான்னு பார்க்க மருத்துவர்கள் வர இருக்கிறார்கள். சீக்கிரம் ஊருக்குள் போய்விடுங்கள். நாங்க பரிசோதனை முடியாமல் எவரையும் வெளியே விடமாட்டோம்’ ‘ஐயா இப்போ கிழங்கு கொண்டுபோக வண்டி வந்துவிடும் ஏற்றிவிட்டு வந்திடுறேனுங்க.. “ ‘’ சரி சரி சீக்கிரம் வரப் பாருங்க’’ அவர் கூறிக்கொண்டிருக்க பொலிஸ் வண்டிக்குப் பின்னாலேயே வந்த நின்றிருந்த அம்புலன்ஸ் வண்டியிலிருந்த பரிசோதகர்கள் இறங்கி வந்து அவ்விடத்திலே குப்புசாமியையும் மகனையும் பரிசோதித்துவிட்டு காய்ச்சல் அறிகுறி எதுவுமில்லாதிருக்க ஊருக்குள் செல்லத் தொடங்கினார்கள். அப்படியானால்.. நான் வணங்கிய கடவுள் என்னைக் கைவிடவில்லை. என் வியர்வையை எனக்கே வெற்றியாக்கிவிட்டான் சந்தோசத்தில் மகனை அணைத்துக்கொண்டு இறைவனுக்கு நன்றி சொல்ல, அங்கே அப்போது பொழுதும் விடியத் தொடங்கியது. இந்த விடியல் குப்புசாமி குடும்பத்திற்கு கொரோனா வைரஸ் வடிவத்தில் கடவுள் கைகொடுத்த விடியல்.

**மெய்யன் நடராஜ்** ✍

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல : 08



திரு/திருமதி/செல்வி ..........................................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................................

..........................................................

..........................................................

............................ ............................

திகதி கையொப்பம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 08

### இடமிருந்து வலம்

1. குற்றமற்றவன்
4. உறுதியான காட்டு மரம் (திரும்பியுள்ளது)
6. காற்று குழம்பி வீசுகிறது
8. ஒட்டும் பொருள் (திரும்பியுள்ளது)
10. பெற்றோரின் தாயார்
11. தழும்பு
12. மருத்துவக் குணமுள்ளது
13. இரத்தம்
15. பணம்
16. பயிரிடப்படாத விவசாய நிலம்
17. இதுவும் ஒரு நீர்த்தேக்கம்
19. தன்வசப்படுத்தல் (குழம்பியுள்ளது)
21. கூற்றுவன்
23. கலங்காநிலை கலங்கிவிட்டது.

### மேலிருந்து கீழ்

1. விருப்பமின்மை
2. தொண்டு
3. கனவு
4. சிரம் கவிழ்ந்துவிட்டது
5. இந்தியாவிலுள்ள ஒரு பெரும் பாலம்
7. வீட்டின் மேள்தலம்
9. செய்தித்தாள்
10. அக்கிரமம்
12. ஒளி
13. தோற்றம்
14. காய்ச்சல் (குழம்பியுள்ளது)
15. கருமம்
18. அறிவிலி
20. தண்டாயுதம்
22. அறிவு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 07

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. வனவாசம் 5. விதை 7. சமானம் 8. பயறு 9. பாரதம் 10. உரல் 11. திரம் 12. ஆம் 14. வாவி 16. திவலை 18. தபதி 20. பாவாடை 21. சிவிகை 22. சிதை 23. தபால் 24. தை

**மேலிருந்து கீழ்**

1. வசந்தம் 2. மானம் 3. வானரம் 4, சம்பா 5. விபரம் 6. தையல் 8. உறுதி 11. ரவி 13. ஆதிவாசி 14. வாலை 15. பீதி 17. வடை 18. தவில் 19. பகை 20. பாதை 21. பாசி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 06

### பரிசுபெறுவோர்

முதலாம் பரிசு
**கே. கந்தசாமி,**
268/D, பன்சல வீதி,
வஹுகாபிட்டிய, புஸல்லாவை.

இரண்டாம் பரிசு
**மணிமேகலை வரதராஜன்,**
25/3, மாரியம்மன் கோயில் வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.

மூன்றாம் பரிசு
**ஹலீமா சித்தீக்கா,**
25, சீதாகம II, குடாகம வீதி,
அவிசாவளை.

### பாராட்டு பெறுவோர்

**1.கே.எப். மில்ஹானி,** ஏறாவூர் 6.

**2. எஸ். கிர்சோத்,** பதுளை.

**3. கோபிநாத் ஜெரிஷ்,** பாண்டிருப்பு, கல்முனை.

**4. சபியா மனாசிர்** பேசாலை.

**5. வி. மதிவதனி,** கொட்டகலை.

# டானியல் நினைவலைகள்...!


டானியல் வலதுபுறம் கண்ணாடியுடன்

## இன்றும் நினைத்துக்கொள்ள அவர் என்ன செய்துவிட்டார்..?

டானியல் யார்..? என்ன அவர் சாதனை..? அவரை ஓர் அற்புதமான மனிதர், கலைஞர், மனிதாபிமானி எல்லாவற்றுக்கும் மேலாய் தமிழில் ஓர் அருமையான படைப்பாளி, நாவலாசிரியர், சமூக விடுதலைப் போராளி, தடம்புரளாத அரசியல்வாதி.

ஈழத் தமிழர் மத்தியில் மிகவும் முக்கியமான காலகட்டத்தில் பிறந்து வறுமையோடு தவழ்ந்து சமூகக் கொடுமைகளுக்கு முகங்கொடுத்து கடுமையாகப் போராடி, ஒடுக்கப்பட்ட மக்களின் தளைகளை அறுத்தெறிந்து அவர்களைச் சகமனிதர்களுடன் சமானமாக நிலைநிறுத்துவதற்குத் தன் உடல் பொருள் ஆவி என அத்தனையையும் அர்ப்பணித்துப் பணியாற்றியவர் தான் டானியல்.

என் இளமைக் காலத்தில் என் சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்திச் சரியான சமூகப் பார்வையுடன் பேனா பிடிக்க வழிகாட்டியவர்களில் முக்கியமானவர் கே. டானியல். சுமார் பதினான்கு ஆண்டுகள் அவரோடு இணைந்து பணியாற்றியதும், அவரது இறுதி மூச்சு பிரியும் வேளையிலும் உடனிருந்து உதவியதும் என்னால் மறக்க முடியாதனவாகும்.

தலித் இலக்கியம் தற்போது தமிழ் இலக்கியப் பரப்பில் பரபரப்பாகப் பேசப்படுகிறது. விவாதிக்கப்படுகிறது. புலம்பெயர்ந்த நாடுகளிலும் நம்மவர் மத்தியில் இது குறித்து சர்ச்சைகள் நோக்குகள் கூர்மையடைந்து விவாதத்திற்குரியனவாகின்றன.. தலித் இலக்கியப் பிதாமகர், முன்னோடி எனத் தமிழக விமர்சகர்களாலும் ஈழத்து இலக்கியக்காரர் பலராலும் டானியல் விதந்துரைக்கப்படுகிறார். இதில் ஒரு விடயம் சுலபமாக மறக்கடிக்கப்படுவதாகத் தெரிகிறது.

டானியல் ஒடுக்கப்பட்ட மக்களில் அடிமட்டச் சமூகத்தில் பிறந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவே போராடியவர், எழுதியவர் என்பதாக மட்டுமே உணர்த்தப்படுகிறது. அவரது பொதுவுடமைக் கட்சிப் பணி மறைக்கப்படுவதாக எண்ணத் தோன்றுகிறது. டானியல் இன்று உயிருடன் இருந்தால் நிச்சயமாக இத்தகைய பார்வையை ஏற்றுக் கொள்ளமாட்டார்.

டானியல் பொதுவுடமைக் கட்சியின் தொடர்பு காரணமாகவே சமூகப் பணிகளில் ஈடுபடத் தொடங்கியவர். பொதுவுடமைக் கட்சியினை வடபகுதிக்கு அறிமுகஞ் செய்து மக்கள் மத்தியில் பரவலாக்கி இறுதிவரை அதற்காகவே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர் தோழர் மு. கார்த்திகேசன். அவரது தொடர்பு டானியலைப் பொதுவுடமை அரசியல் ரீதியாகவும் எழுத்துத்துறையிலும் வளப்படுத்தியது எனலாம்.

இளமைக் காலத்தில் வறுமையில் துவண்டபோதிலும், திருமணத்தின் பின்பும் வறுமையும், இடர்பாடுகளும் வாட்டிவதைத்தபோதிலும் அவர் கட்சிப் பணிகளிலிருந்து தன்னை ஒதுக்கிக்கொண்டவரல்ல.. பொதுவுடமைக் கட்சியினது வடபிரதேசக் கிளையின் முழுநேரச் செயற்பாட்டாளராகப் பல வருடங்கள் பணியாற்றிவர் டானியல்.





60களின் நடுப்பகுதியில் சர்வதேச ரீதியாகப் பொதுவுடமை இயக்கத்தில் ஏற்பட்ட பிளவு இலங்கையிலும் எதிரொலித்தது. இதன் காரணமாகச் சோவியத் சார்பு, சீனச்சார்பு எனப் பிளவு இலங்கைப் பொதுவுடமை இயக்கத்திலும் ஏற்பட்டது. பெரும்பாலான உழைக்கும் மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், கலை இலக்கியவாதிகள் தோழர் என். சண்முகதாசன் தலைமையிலான சீனச்சார்பு கட்சியினை ஆதரித்தனர். டானியலும் தோழர் சண் பாதையிலேயே இயங்கியவர்.

1971ம் ஆண்டு ஏப்ரல் மாதம் விஜயவீரா தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியினர் தொடங்கிய கிளர்ச்சியினால் பொதுவுடமைக்கட்சி (சீனச் சார்பு) பல பின்னடைவுகளை, அடக்குமுறைகளை, சீர்குலைவுகளை எதிர்கொண்டது. முன்னணித் தலைவர்கள் பலரும் சிறையிடப்பட்டனர். டானியலும் சுமார் ஒரு வருடம் சிறையிடப்பட்டார். நீரிழிவு நோயாளியான அவர் பல வேதனைகளை சிறையில் அனுபவித்தார். சந்தர்ப்பவாதிகளால் கட்சியில் பிளவுகள் ஏற்பட்டபோதிலும் நேர்மைமிக்க தலைவரான தோழர் சண்முகதாசனின் பாதையிலேயே டானியல் இறுதி வரை செயற்பட்டார்.

1979ம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பிரமாண்டமான முழுநாள் மாநாடு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளால் மண்டபம் நிரம்பி வழிந்தது. இம்மாநாட்டின் வெற்றிக்காக இரவுபகலாக டானியல் இயங்கியதை யான் அறிவேன். தோழர் சண் வாழ்த்துச்செய்தி அனுப்பியிருந்தார். டானியல், எஸ். ரி. என். நாகரத்தினம், கே. கிருஸ்ணபிள்ளை ஆகியோர் சிறப்புரையாற்றினர். பேராசிரியர் நந்தி, பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன், கலைஞர் சிசு நாகேந்திரா, கலைஞர் குத்துவிளக்கு பேரம்பலம் உட்படப் பல கலை இலக்கியவாதிகள் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

"எனக்கு ஓர் அரசியல் பாதை உண்டு. அதற்கு உந்துசக்தியாகவே எனது படைப்புகளைத் தருகிறேன்" என டானியல் சொல்வதுண்டு. டானியல் அரசியல் செயற்பாட்டாளர். சமூக விடுதலைப் போராளி. எழுத்தாளர். பேச்சாளர். ஒடுக்குமுறை எந்த வடிவத்தில் வந்தாலும் அந்த வடிவத்தை அடையாளம் கண்டு எதிர்க்கின்ற பக்குவமும் துணிவும் ஆற்றலும் டானியலுக்கு இருந்தது.




அதனால் யாழ் குடாநாட்டில் எந்தக் குக்கிராமத்தில் வாழும் மனிதனும் தனக்குச் சாதியின் பெயரால் அல்லது ஏதாவது வகையில் ஒடுக்குதல் நெருக்கடி ஏற்பட்டால் அதற்கான பரிகாரம்தேடி ஆலோசனைபெற, ஆதரவுபெற டானியலைத் தேடி வருவதை யான் பல வருடங்களாகப் பார்த்திருக்கிறேன். அந்தவகையில் ஒடுக்கப்பட்ட மக்களின் மனதில் நிறைந்த ஒரு மனிதனாக டானியல் விளங்கினார். அவரது செயற்பாடுகளுக்கு பேருதவியாகக் கட்சித் தோழர்கள் இருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தை அமுல்படுத்தக்கோரி 1966ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ம் திகதி சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட வரலாற்றுப் புகழ்மிக்க அந்த ஊர்வலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுடன் முற்போக்கு எண்ணங்கொண்ட சகல மக்களும் முஸ்லிம் மக்களுட்படக் கலந்துகொண்டனர். பொலிசாரின் தாக்குதலுக்குள்ளாகியும் நிலைகுலையாத ஊர்வலம் யாழ்நகர் நோக்கிச்சென்றது. இந்த ஊர்வலத்திற்குத் தலைமை கொடுத்துச் சென்றவர்களில் டானியலும் ஒருவர்.

இதன் பின்னரே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் உதயமானது. இது ஒரு சாதிச்சங்கம் அல்ல. சாதியத்தையும் தீண்டாமையையும் எதிர்த்துநின்ற சகல முற்போக்கு சக்திகளையும் ஒன்றிணைத்த ஒரு பரந்த வெகுஜன இயக்கமாகவே முன்னெடுக்கப்பட்டது. பல வெற்றிகளைக் கண்டது. கட்சி தென்னிலங்கை முற்போக்கு சக்திகளின் ஆதரவைப் பெற்றுக் கொடுத்தது. அன்று இலங்கைப் பாராளுமன்றம் முதல் சீன வானொலிவரை இந்த இயக்கத்தின் செயற்பாடுகள் பேசப்பட்டன. குடாநாட்டின் இருண்ட பகுதிகளுக்குள் வெளிச்சம் பாய்ச்சப்பட்டதாக விமர்சனங்கள் எழுந்தன. இந்தச் செயற்பாடுகள் அத்தனையிலும் டானியலின் பங்களிப்பு முக்கியமானது.

தலித்துகள் மட்டும் தான் தலித்துகளுக்காகப் போராடவேண்டும் என்ற சிலரது கூற்று சரியானதல்ல. வடபகுதியில் அன்று நடந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டம் அத்தகைய கருத்தைக் கொடுக்கவில்லை. அது தோழர் சண்முகதாசன் தலைமையிலான பொதுவுடமைக் கட்சியின் பூரண ஆதரவுடன் சகல முற்போக்கு சக்திகளையும் ஒன்றிணைத்து நடைபெற்றது. பல்வேறு கலை இலக்கியப் படைப்பாளிகள் இதற்கு உறுதுணையாகச் செயற்பட்டார்கள். பேராசிரியர் கைலாசபதி, பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன், முருகையன், இளங்கீரன், அம்பலத்தாடிகள் குழுவினர் மற்றும் இளந்தலைமுறையைச் சேர்ந்த பல கலை இலக்கியப் படைப்பாளிகள் தலித்துகள் அல்ல. ஆனால் அவர்கள் உறுதுணையாகச் செயற்பட்ட மார்க்ஸிசவாதிகள்.




இலங்கையில் ஈழகேசரி, மறுமலர்ச்சி மற்றும் வீரகேசரி, தினகரன் ஆகியவற்றில் எழுதத்தொடங்கிய டானியல் தமிழ்நாட்டில் வெளிவந்த சிறந்த இலக்கிய இதழான சரஸ்வதியிலும் தம் படைப்புகளை வெளியிட்டார். சரஸ்வதியின் மிக முக்கியமான மூன்று படைப்பாளிகளில் ஒருவராய் ஜெயகாந்தன், சுந்தரராமசாமி ஆகியோருடன் இலங்கை எழுத்தில் முதற் படைப்பாளியாய் சரஸ்வதியில் தொடர்ந்து சிறுகதைகளைப் படைத்தாரெனப் பிரபல எழுத்தாளர் தஞ்சைப் பிரகாசு குறிப்பிட்டுள்ளார். சரஸ்வதி இதழில் டானியலின் உருவம் முகப்புப் புகைப்படமாய் அட்டையில் 1951ல் பிரசுரம் செய்யப்பட்டு பாராட்டப்பட்டார்.

டானியலின் படைப்புகளில் குடாநாட்டின் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேற்பட்ட பகுதியின் வரலாற்று ஓட்டத்தைச் சமூக நகர்வைக் கவனிக்கலாம். குடாநாட்டின் யாரும் காட்டியிராத இருண்ட பகுதிகளை வெளிச்சம் போட்டுக்காட்டியவர் டானியல். இதனால் தானோ சிலருக்கு அவர் வேண்டாதவராக ஒதுக்கப்படவேண்டியவராகத் தென்பட்டார் போலும்... அவரை ஒழித்துக்கட்டவும் பல முயற்சிகள் நடந்ததுண்டு. அவரோடு பல இடங்களுக்கும் சென்றுவந்தபோது இத்தகைய ஒருசில நடவடிக்கைகளை என்னாலும் உணர்ந்துகொள்ள முடிந்தது.

சிறை வாசத்தையும், பல மாதங்கள் தலைமறைவு வாழ்க்கையையும் கண்டவர்.

1981ம் ஆண்டு தமிழகம் சென்றபோது தஞ்சைப் பிரகாசின் அழைப்பின்பேரில் தஞ்சை சென்றதும் அவர் பார்க்க விரும்பியது உயர்ந்த கோவில்களோ, அரண்மனைகளோ, பெரிய மனிதர்களென இருந்தவர்களையோ அல்ல. கீழ்வெண்மணியில் உயிருடன் கொளுத்தப்பட்ட ஏழைமக்களின் நினைவிடத்தைத் தான் பார்க்க விரும்பினார். தஞ்சைப் பிரகாசு, எழுத்தாளர் சி. எம். முத்து ஆகியோருடன் அங்கு சென்று பார்த்தோம். பலமணி நேரம் அங்குள்ள நசுக்கி ஒடுக்கப்பட்ட கிராமத்து மக்களைச் சந்தித்து அவர் பேசியமை இன்றும் எனக்கு ஞாபகம்.

இறுதிக் காலத்தில் கண்பார்வை குன்றிவந்த நிலையில் நீரிழிவு நோய்க்கு வைத்திய சிகிச்சை பெறும்பொருட்டும், கானல், பஞ்சகோணங்கள் நாவல்களை அச்சேற்றும் பொருட்டும், பேராசிரியர் அ. மார்க்ஸ் மற்றும் தோழமை பதிப்பகத் தோழர்களின் அழைப்பின்பேரில் தமிழகம் செல்ல முடிவெடுத்தார். தமிழகம் செல்லும் முன்னர் கொழும்பில் தோழர் சண் வீட்டில் தங்கியிருந்து பல்வேறு விடயங்கள் குறித்து உரையாடினார். பஞ்சகோணங்கள் நாவல் குறித்து தோழர் சண் குறிப்பிட்ட விடயங்களையும் கவனத்திலெடுத்துக்கொண்டார். உடல்நலம் குன்றிய நிலையிலிருந்த அவரை 30.01. 1986ல் தமிழகம் அழைத்துச் சென்றேன். நீரிழிவு நோயின் முதிர்நிலைப் பாதிப்புகள் அவரை வாட்டின. தோழர்களின் ஏற்பாட்டின்படி சிகிச்சைகள் நடந்தன. உடனிருந்து கவனித்து வந்தேன்.

உடல்நிலையைப் பாராது பல்வேறு இடங்களுக்கும் சென்று தோழர்களைச் சந்திக்க ஆவலாயிருந்தார். திருச்சி, தஞ்சை, சென்னை, மதுரை, பாண்டிச்சேரி, கும்பகோணம் ஆகிய இடங்களுக்குச் சென்றோம். கூட்டங்களில் உரையாற்றினார். பலரையும் சந்தித்து உரையாடினார்.

தஞ்சை தங்கசாரதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த டானியலுக்கு 23.03.86 காலை 8.30 மணியளவில் மூச்சுத் திணறல் ஏற்பட்டு அவதிப்பட்டார்.. டாக்டர்களும் தாதிமாரும் உடனின்று சிகிச்சையளித்தனர். எனது கையைப் பற்றிப்பிடித்தவாறு 'தம்பி.... தம்பி....' என ஏதோ சொல்ல விழைந்த... முடியாத நிலையில் அவரது உயிர் பிரிந்தது. இந்நிகழ்வு என்மனதில் என்றுமே மறக்கமுடியாத வேதனைப் பதிவாகிவிட்டது. தமிழகம் செல்லும் போதெல்லாம் தஞ்சை சென்று அவரது கல்லறையைப் பார்த்துவருவது என் வழக்கம். கடந்த டிசம்பர் மாதம் (2019) தஞ்சை சென்று புதர் மூடிக் கிடந்த கல்லறையைத் தோழர் ஒருவரின் உதவியுடன் துப்பரவு செய்துவிட்டு வந்தேன். அவரது நினைவாக சில பணிகளைத் தோழர்களுடன் இணைந்து மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். எதற்கும் கொரோனாத் தாக்கம் முடியட்டும் எனக் காத்திருப்பு. நம்பிக்கை தானே வாழ்க்கை...!

**வி.ரி. இளங்கோவன்**

















# வலம்புரி கவிதா வட்ட 70 ஆவது பௌர்ணமி கவியரங்கு

வலம்புரி கவிதா வட்டம் தனது 70 ஆவது பௌர்ணமி கவியரங்கினை 01/09/2020 செவ்வாய்க்கிழமை காலை 10.30 க்கு கொழும்பு, பழைய நகர சபை மண்டபத்தில் நடாத்தியது. கொரோனா சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடந்த நிகழ்வுகளை வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நெறிப்படுத்தினார். வகவ சிரேஷ்ட ஸ்தாபகர் சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி முன்னிலை வகிக்க இலக்கியப் பேச்சாளரும் ஈஸ்வரன் பிரதர்ஸ் நிறுவன தலைவருமான கணேஷ் ஈஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து நிகழ்வை சிறப்பித்தார்.

செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வரவேற்புரை வழங்க செயற்குழு உறுப்பினர் ஈழகணேஷ் நன்றியுரை கூறினார்.

இந்த இடைக்காலத்தில் பிரிந்த கவிஞர் சுபைர், பத்திரிகையாளர் முருகையன், ஓவியர் ஆ.இராசையா, வகவ கவிஞர் ஜொயெல் ஜோன்ஸ்சனின் தாயார் போன்றோர் நினைவு கூரப்பட்டனர். அன்றைய தினம் பிறந்தநாளாய் அமைந்த காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன், கவிஞர் வாழைத்தோட்டம் வஸீர் ஆகியோருக்கு வகவம் வாழ்த்து தெரிவித்தது.

பிரபல கவிஞர் ஆசுகவி அன்புடீன் அவர்களின் மகளோடு இல்லறத்தில் இணைந்து கொண்ட வகவ கவிஞர் ரிஸ்லி சம்சாட்டையும் வகவம் வாழ்த்தியது.

பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய கணேஷ் ஈஸ்வரன் அவர்கள் ' மிகவும் தரமான கவிதைகள் பாடப்பட்ட இந்த மேடைக்கு என்னை ஓர் அதிதியாக அழைத்து வந்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

நான் மாணவனாக இருந்த போது எனது தந்தையே நான் போட்டிகளிலே பேசுவதற்கு குறிப்பெழுதி தருவார். அவர் மறைந்த பின் அவர் விட்டுச் சென்ற அவரது குறிப்புப் புத்தகத்தை நான் பொக்கிஷமாக பாதுகாத்து வருகிறேன். வலம்புரி கவிதா வட்டம் என்னை அதிதியாக அழைத்தபோது அவரது அந்த குறிப்புப் புத்தகத்தையே கையில் எடுத்து விரித்தேன். மிகவும் ஆச்சரியமாக அதில் ஒரு கவிதையே முன்னால் வந்தது.'

**எப்போதும் வருவதல்ல கவிதை**
**எப்போதும் வருவது கவிதை**
**நினைத்தால் வருவதல்ல கவிதை**
**மனம்**
**கனத்தால் வருவது கவிதை'**

என்றிருந்தது. கவிதையை எழுதியது யார் என பார்த்தேன். வலம்புரி ஜான் என இருந்தது. வலம்புரி கவிதா வட்டத்திற்கு வலம்புரி ஜானின் கவிதை.

உலகப்புகழ் பெற்ற கவிஞரான ஷேக்ஸ்பியர் தனது சொனெட் 18 என்ற கவிதையிலே ஒரு பெண்ணை வர்ணிக்கும் போது இந்தக் கவிதை வாழும் வரை உனது அழகு வாழும் என்றார். அவ்வாறு நீடித்து வாழக்கூடிய கவிதைகளின் சொந்தக்காரர்கள் நீங்கள். உங்கள் கவிதைகளில் நான் மிகவும் லயித்துப் போனேன். நீங்கள் நாடு பூராவும் உங்கள் ஆளுமையை வெளிப்படுத்தி வியாபிக்க வேண்டும் என்றார். 70 ஆவது கவியரங்கம் கவிஞர் கம்மல்துறை இக்பால் தலைமையில் நடைபெற்றது. கவிஞர்கள் ஈழத்து நூன் கலாபூஷணம் எம்.ஏ.எம். நிலாம், கலாபூஷணம் வதிரி சி. ரவீந்திரன், ரவூப் ஹஸீர், எம். பாலகிருஷ்ணன், அஸ்ரப் சிஹாப்தீன், தமிழ்த் தென்றல் அலி அக்பர், சட்டத்தரணி கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ், கலா விஸ்வநாதன், கலாபூஷணம் மஸீதா அன்ஸார், எம்.எஸ். அப்துல் லத்தீப், கிண்ணியா அமீர் அலி, கலாபூஷணம் யாழ் அஸீம், மலாய்கவி டிவாங்கோ, வாழைத் தோட்டம் எம். வஸீர், வெளிமடை ஜஹாங்கீர், எம்.எச்.எம். நவ்சர், ஏ.எம்.எம். அனஸ், பாயிஸா ஹமீட், மட்டக்களப்பு கே. லோகநாதன், உணர்ச்சிப் பூக்கள் ஆதில், இளங்கோ சுதாகர், பாரதி சித்தன்,

ஜொயெல் ஜோன்சன் ஆகியோர் தங்களுக்கே உரிய பாணியில் கவிதை பாடி சபையோரின் கை தட்டல்களைப் பெற்றனர். சில கவிதைகள் கண்ணீரை வரவழைத்தன. சில கவிதைகள் சிரிக்க வைத்தன. சில கவிதைகள் சிலிர்க்க வைத்தன.

கலாபூஷணம் த. மணி, கலாபூஷணம் எம்.எஸ்.எம்.ஜின்னா, கவிநேசன் நவாஸ், எம்.எம். நவாஸ்தீன், எம்.எச். யூ. நஸீர், எம். எப்.ஏ. ஷகீ, ஏ.எம்.எஸ். உதுமான், கே. கிருஷ்ணன், ஏ. ஆர்.எம். முஸம்மில் ஜே.பி. ஸகியா சித்தீக் பரீத், போறு தொட்டை றிஸ்மி, எல். கோகுல் போன்றோரும் சபையை அலங்கரித்தனர்.



**ஆழியான்**



# யாவரும் கேளீர்

## பல்சுவை இலக்கியத் திரட்டு 06

தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்

*("யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்')*

### இலக்கியவழி இனவுறவைக் கட்டியெழுப்பும் சாதனையாளர் தேசபந்து சிரிசுமன கொடகே



இவ்வருடத்துக்கான கொடகே தேசிய சாகித்தியவிழா 10.09.2020 அன்று நடைபெறவிருக்கிறது. இலக்கியவழி இனவுறவைக் கட்டியெழுப்பும் தலையாய நிறுவனமாக விளங்கும் இந் நிறுவனத்தின் பணிகள் பன்முகப்பட்டவை. சிங்கள தமிழ் மொழிபெயர்ப்பு நூல்களை அதிகளவில் வெளியிட்டு சிங்களமொழி இலக்கியத்தைத் தமிழ்ச் சமூகத்திற்கும் தமிழ்மொழி இலக்கியத்தை சிங்களச் சமூகத்திற்கும் அறிமுகப்படுத்துதல், தேசிய சாகித்திய விழாக்களை நடத்தி கலை இலக்கியவாதிகளுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கல், வருடாவருடம் வெளிவரும் நூல்களைத் தெரிவுசெய்து விருதுகள் வழங்குதல், நூலுருவம் பெறாத இலக்கியப் பிரதிகளுக்கான போட்டிகளை நடத்தி அவற்றிற்குப் பரிசுகள் வழங்குவதோடு அப்பிரதிகளை நூல்களாகப் பதிப்பித்தல், மூத்த எழுத்தாளர்களைக் கௌரவித்தல் போன்ற திட்டங்களை சிங்கள தமிழ் இலக்கியவாதிகளுக்கு பாகுபாடின்றி சமமான அளவில் பங்களிப்பை நல்கிவரும் தலையாய நிறுவனமாக கொடகே நிறுவனம் திகழ்கிறது. இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள் இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

இத்தகைய அரும்பெரும் பணியினை ஆற்றிவரும் இந்நிறுவனத்தின் அதிபர் சிரிசுமன கொடகே இன்றைய இளம் சந்ததியினருக்கு ஓர் உதாரண புருஷராகத் திகழும் தகைமையாளர். இவர், மாத்தறையில் உள்ள பாலடுவே என்ற கிராமத்தில் ஜேம்ஸ் அப்புகாமி என்ற ஏழைக் கூலி விவசாயியின் ஒன்பது பிள்ளைகளில் ஏழாவது பிள்ளையாகப் பிறந்தவர். இவரது தாய் பெயர் டியுமுகாமி. 1805_1936 அன்று பிறந்த கொடகே, கிராமத்தில் உள்ள குணரத்தின வித்தியாலயத்தில் ஏழாம் வகுப்புவரை கற்றவர். பள்ளி செல்லும் பருவத்திலேயே மாட்டுவண்டில்களுக்குப் புல்லுக்கட்டி விற்றல், கீரைக்கட்டுக்களைச் சுமந்து வீடுவீடாக விற்றல், இளநீர் விற்கும் தொழிலில் தாய்க்கு உதவுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டவர். ஒரு காலகட்டத்தில் தள்ளுவண்டியில் விறகு விற்றுக் கொண்டிருக்கும் போது தற்செயலாகச் சந்தித்த உறவினர் ஒருவர் இவரை ஓர் அச்சகக் கந்தோரில் புத்தகம் கட்டும் வேலை பழகச் சேர்த்துவிட்டார். அவரது எதிர்கால வளர்ச்சிக்கான அத்திவாரம் அங்கேதான் இடப்பட்டது.


பின்னர் இவர் தெமட்டகொடையில் சொந்தத்தில் புத்தகம் கட்டும் வேலையை ஆரம்பித்தார். அக்காலத்தில் வித்தியோதயப் பல்கலைக்கழக மாணவர்களதும் நூலகப் புத்தக வேலைகளும் அவரைத்தேடி வந்தன. பலரது ஆலோசனையின்பேரில் புத்தகம் வெளியிடுதல் பணியினையும் சிறிதுசிறிதாக ஆரம்பித்தார். பின்னர் வாடகைக்கு கடையெடுத்து புத்தகம் கட்டுதல், நூல் வெளியீடு, விற்பனை யாவற்றையும் ஒரே அறையில் செய்துவந்தார். படிப்படியாக முன்னேறி தற்போது மருதானையில் உள்ள கொடகே புத்தக மாளிகை அமைந்துள்ள இடத்தை விலைக்கு வங்கினார். 1970இல் ஐந்து நூல்கள் மட்டுமே வெளியிட்ட கொடகே நிறுவனம் 1997 இல் ஆண்டொன்றுக்கு நானூறுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டது. 1986முதல் அதிக நூல்களை வெளியிடும் நிறுவனத்திற்கான இலங்கை சாகித்திய விருது தொடர்ச்சியாக கொடகே நிறுவனத்திற்கே கிடைத்து வருகிறது. இவரது சேவைக்காக பல்வேறு நிறுவனங்கள் ஐம்பதுக்கும் மேற்பட்ட விருதுகளை வழங்கியுள்ளன. சார்க் நூல் அபிவிருத்திச்சபை, சார்க் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு வாழ்வில் ஒரேயொரு தடவை பதினொரு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கும் உயர் விருது இலங்கையில் முதல் தடவையாக சிரிசுமன கொடகேக்கு வழங்கப்பட்டது. இலங்கை அரசு இவருக்கு தேசபந்து விருதளித்துக் கௌரவித்தது. அவரது பணி மேன்மேலும் சிறந்தோங்க வாழ்த்துவோம்.

### ஈழத்தின் புகழ்பெற்ற ஓவியரான ஆசை இராசையாவின் மறைவு



பிரபல ஓவியர் ஆசை இராசையா 29.08.2020 அன்று அமரரானார் என்ற செய்தி கலை இலக்கிய உலகைப் பெரிதும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அச்சுவேலி என்ற கிராமத்தில் ஆசை என்பவரது மூத்த மகனாக 16.08.1946 இல் பிறந்தவர் இராசையா. தனது ஆரம்பக் கல்வியை அச்சுவேலி மத்திய கல்லூரியில் பெற்ற இவர், பின்னர் கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் ஓவிய நுட்பங்களைப் பயின்றார்.






ஓவிய ஆசிரியராகக் கடமை புரிந்த ஆசை இராசையா, இலங்கை முத்திரைப் பணியக ஓவியர் குழுவில் ஒருவராகவும் கடமை புரிந்துள்ளார். சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், சேர். ஜோன் கொத்தலாவல, சேர்.டி.பி.மலலசேகரா, ஜோர்ஜ் ஈ.டீ. சில்வா. இலங்கையின் முதற் புகைவண்டி, 'தவலம்' என்ற மலையகப் போக்குவரத்து மார்க்கம், ஆகிய எட்டு முத்திரைகள் இவரால் வடிவமைக்கப்பட்டன. இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் வித்தியானந்தன், பீடாதிபதி மகேஸ்வரன் ஆகியோரின் பிரதிமை ஓவியப் படைப்பாளியுமாவார். இலங்கை கலைக்கழக உறுப்பினராகவும், இராமநாதன் நுண்கலைப் பிரிவில் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். 1980இல் அரச பாடநூல் நிறுவன இந்து சமய நூல்களுக்கான ரேகை ஓவியங்களையும் வரைந்துள்ளார்.

அச்சுவேலிப் பிரதேசத்தின் இயற்கை அழகு, வல்லைப் பிரதேச நீரோடைக் காட்சிகள் என இளமையில் தான் தரிசித்த ஊரின் அழகை நிலக்காட்சி ஓவியங்களாக வரைந்து பெருமைபெற்றவர் இராசையா. அத்தோடு தரமான நூல்களின் வடிவமைப்பாளராகவும் அட்டைப்பட ஓவியராகவும் நிலவுருக்கள் மற்றும் மெய்யுருக்களை வரைவதில் புகழ்பெற்றவராகவும் விழங்கினார். இவர் ஒரு சிறந்த புகைப்படக் கலைஞருமாவார்.

### உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலின் நிர்மாணத்தில் ஸ்ரீலங்காவின் பங்களிப்பு!

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகால் ஒரு



காதற்சின்னம் என்பதை யாவரும் அறிவர். மன்னன் 'சாஜகான் தனது மனைவி மும்தாஜ் இறந்ததும் அவள்மேல் கொண்டிருந்த அளவற்ற காதலால், உலகம் உள்ளவரை காலாதிகாலமாக அவளது நினைவையும் அவள்மேல் தான் கொண்டிருந்த அன்பையும் பறைசாற்றிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கட்டப்பட்டதே தாஜ்மகால் என்ற காதல்மாளிகை.

இதன் கட்டிட வேலைகள் 1631 மார்கழியில் ஆரம்பமாகின. 20,000 தொழிலாளிகள் 22 வருடங்கள் தொடர்ச்சியாக வேலைசெய்து கட்டிட வேலைகளை நிறைவு செய்தனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட யானைகள் வேலைக்கு அமர்த்தப்பட்டதாகவும் அறியமுடிகிறது.

ஈரான், ஈராக், துருக்கி, அரேபியா முதலிய நாடுகளிலிருந்தும் பல்வகைத் திறன்கொண்ட கலைஞர்கள் நிர்மாண வேலைகளில் ஈடுபட்டதாகவும் சான்றுகள் உள்ளன. பல மன்னர்களும் நவாப்களும் தங்கமும் வெள்ளியும் இரத்தினக்கற்களும் கொடுத்து உதவினர். இவற்றைவிட திபேத், சைனா, ஸ்ரீலங்கா, பேர்ஸியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்தும் இரத்தினக்கற்கள் பெறப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட இந்த மாளிகை, காலை வெயிலில் ஒரு தோற்றமும் பகலாகும் போது வேறொரு தோற்றமும் மாலையில் பிறிதொரு தோற்றமும் இரவில் வேறொரு தோற்றமும் பௌர்ணமி நிலவில் வர்ணிக்க முடியாத பேரழகுத் தோற்றமும் தந்து காண்போரைப் பிரமிக்க வைக்கிறது. பளிங்கில் வெவ்வேறு தரத்திலான ஒளித்தெறிப்புகள் ஏற்படும்போது இத்தகைய தோற்ற மாறுதல்கள் ஏற்படுகின்றன.

தாஜ்மகாலின் பிரதான வாயிற்படியின் ஓரங்களில் மாபிள் கற்களில் பூவேலைகள் செய்திருக்கிறார்கள். அத்தோடு திருக்குறான் வசனங்களும் அரபு எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இவையும் பூவேலைகள் போன்று அழகாகத் தெரிகின்றன.

உள்ளே மகாலின் நடுவில் மும்தாஜ் சமாதியும் அதன் பக்கத்தில் 'சாஜகான் சமாதியும் உள்ளன. தாஜ்மகாலின் மேற்புறத்திலிருந்து பார்க்கும்போது பின்புறம் ஒடும் யமுனை நதியைக் காணலாம். தாஜின் நடுவே உள்ள நீளமான நீர்ப்பொய்கையின் இரு மருங்கிலும் அழகிய மரங்கள் நாட்டப்பட்டுள்ளன. தாஜ்மகாலின் முழு அழகையும் காணவேண்டுமானால் பௌர்ணமி தினத்தில் காணவேண்டும்!

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலைப் பார்வையிடும் சந்தர்ப்பம் எமக்கு 2008இல் வட இந்திய பயணச் சுற்றுலாவின்போது கிட்டியது. எம்மை அழைத்துச் சென்ற பயணவழிகாட்டி, தாஜ்மகாலைச் சுற்றுயுள்ள சுவர்களில் பதிக்கப்பட இரத்தினக் கற்களில் பல ஸ்ரீலங்காவில் இருந்து பெறப்பட்டவை என்ற தகவலைக் கூறினார். அவற்றில் சிலகற்கள் அந்நியர் ஆட்சியின்போது தோண்டி எடுக்கப்பட்டு அவர்களது நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்ற தகவலையும் அவர் கூறத் தவறவில்லை.

**(இனி அடுத்த இதழில்)**




## நல்லதை சொல்கிறோம்

### நட்பை வளர்ப்போம், நலமாய் வாழ்வோம்

மனித உறவுகளில் மிக உன்னதமான உறவாக நட்பு இருக்கின்றது. பெற்றோர், பிள்ளை, சகோதர சகோதரிகள், மாமன், மருமகன், மைத்துனர் என்று பலவகைகளில் உறவுகள் இரத்தப் பிணைப்பாக உருவாகி வளர்கின்றன.. ஆயினும் நட்பு என்பது அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக, ஆனால் ஆழமானதாக இருப்பதை காண்கிறோம். எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்த இருவர் ஒருவர்கொருவர் தமக்கிடையே ஏற்படுகின்ற புரிதல், அன்பு, பாசம், நேசம் காரணமாக நட்பால் இணைகின்றனர்.

இவ்வாறு உண்மையான நட்பால் இணைவோர் தமக்கிடையே எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி, மற்றவரின் நலனையே தம் நலனாகக் கருதி, ஒருவர் இன்னோருவர் மீது அக்கறையுள்ளவர்களாக இருக்கின்றனர். நட்புக்காக எதனையும் விட்டுக் கொடுக்கவும், அவர்களுக்காக சுயநலனை மறந்து எத்தகைய தியாகங்களை செய்யவும், எந்தவித தயக்கமும் இன்றி முன்வருவது நட்புக்கே உரிய தனிச் சிறப்பம்சமாகும்.

பாடசாலைகளில், கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில், தொழில் செய்யுமிடங்களில் என உருவாகின்ற நட்பு பல சந்தர்ப்பங்களில் இரத்த உறவைவிட உயர்ந்து நிற்பதைக் காணுகிறோம். இதனால்தான் குடும்ப உறவினர்களிடையே பகிர்ந்து கொள்ள முடியாத இரகசியங்களையும் கூட நெருங்கிய நண்பர்களிடையே பகிர்ந்து கொள்ள இயலுமாகிறது. இதுவே நட்பின் உயரம்சம் என்றால் மிகையல்ல..

நட்பு வளரும் போது பகைமை ஒழிகிறது, பேதைமை அழிகிறது, விரிசல் மறைகிறது, உறவுகள் நெருக்கமாகின்றன, பிரச்சினைகள் தீர்கின்றன, நல்லுறவும் சக வாழ்வும் வளர்கின்றன. எனவே நட்பை வளர்ப்போம், நலமாய் வாழ்வோம்.

## பேசும் கவிதை

கவிஞர் வை. சசிந்திரா கேட்கும் "ஒரு கேள்வி?" எனும் கவிதை இன்று பேசும் கவிதையாக உங்கள் இரசனைக்கு.

தேசியக் கொடி என்றீர்
வணங்கினோம்!

தேசிய கீதம் என்றீர்
பாடினோம்!

தேசிய பறவை என்றீர்
பாதுகாத்தோம்!

தேசிய விலங்கு என்றீர்
விரும்பினோம்!

தேசிய மனிதர் யாரென்று
தெரியப்படுத்தவில்லையே

இருந்தவரில்
இறந்தவரில்
சிறந்தவர்
யாரும் இல்லையா?

## பாடிப் பறந்த பறவை 01



இலங்கையின் இலக்கிய வரலாற்றில் காலத்துக்குக் காலம் பல்வேறு சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. அவற்றில் பல வாசகர்களை வசீகரித்து அவர்களது நெஞ்சங்களில் அரியாசனமிட்டு வீற்றிருந்தன. ஆனால் அவற்றில் பெரும்பாலானவை இடைநடுவில் நின்றுவிட்டதனால் இவற்றைப் பலரும் மறந்துபோயுள்ளனர். காரணங்கள் எவையாயினும் அவற்றின் பயணம் தடைப்பட்டமை இலக்கிய நெஞ்சங்களுக்கு பெரும் வேதனைதான். அத்தகைய நின்றுபோன சஞ்சிகைகளை இன்றைய இளம் சந்ததியினருக்கு அறிமுகப்படுத்தவும், மூத்தவர்களுக்கு அவற்றை நினைவூட்டவும் "பாடிப் பறந்த பறவை" என்ற புதிய பகுதியை தருகிறோம்.

1970களில் வெளிவந்த சிறப்பான ஒரு சஞ்சிகை "மாணிக்கம்". விஞ்ஞான பட்டாதாரி திருமதி சரோஜினி கைலாசபிள்ளையை ஆசிரியையாகக் கொண்டு மதுரா பப்ளிகேசன் நிறுவனத்தினர் இதனை வெளியிட்டனர். அன்றைய காலகட்டத்திலேயே அழகான கவர்ச்சியான பலவர்ண அட்டைப் படங்களோடு, கொழும்பு 13 கதிரேசன்வீதி மாணிக்கம் பிரிண்டர்சில் அச்சாகி வெளிவந்தது. பிரபல எழுத்தாளர்களது படைப்புகளோடு வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களின் ஆக்கங்களும் இடம்பெற்றன.

கதை, தொடர்கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள் என்பவற்றோடு மகளிர் மன்றம், மாணிக்க விருந்து, கவியரங்கு, மக்களும் மாணிக்கமும், நவரசம், மாணிக்க மடல்கள் போன்ற சிறப்பான பகுதிகளும் இடம்பெற்றன. தரமான மாத இதழாக வெளிவந்த மாணிக்கம் இடை நடுவில் நின்றமை துரதிஷ்டவசமானது. 1975 மே – ஜூன் இதழாக வெளிவந்த "மாணிக்கம்" பிரதி உங்கள் பார்வைக்கு.. ஒரு பதமாக.

## அன்றும் இன்றும்





**உலகின் மூன்று வல்லரசுகளின் 'மூன்று பெருந்தலைவர்கள்' 75 ஆண்டுகளுக்கு முன்னரும், இன்றும்.**

## சரித்திரத்தில் ஒரு சம்பவம்

### பாவமும் அகம்பாவமும்

ஜார்ஜ் மூர் என்பவர் பிரபல நாவலாசிரியர். கவிதையிலும் கற்பனை படைப்புகளிலும் திளைத்த மாமேதை. அப்படிப்பட்டவருக்குக் கூட இளம்வயதில் அகம்பாவம் அதிகமாக இருந்தது. ஒரு நாள் டப்ளின் நகர கிறிஸ்தவ மத குருவான டாக்டர் வால்ஸ் என்பவருக்குக் கீழ்க் கண்டவாறு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்.

"அன்புள்ள ஆர்ச் பீசப் அவர்களுக்கு!

உங்களுக்கு சங்கதி தெரியாதோ? நான் கிறிஸ்தவ மதத்தை விட்டுவிட்டேன்.

இப்படிக்கு

ஜார்ஜ் மூர்."

இதற்கு டாக்டர் வால்ஸிடமிருந்து உடன் சுடச் சுட பின்வருமாறு பதில் கிடைத்தது:


"அன்புள்ள ஜார்ஜ் மூர்!

பசுமாட்டின் வால் நுனியில் ஈ உட்கார்ந்ததே! அந்தக் கதை தெரியுமா?'பசுவே, நான் போய் வருகிறேன்.' என்றதாம் ஈ பசுவிடம். அப்போது பசு தன் வால் பக்கம் திரும்பி, "ஓ நீ இத்தனை நேரம் அங்கேதான் இருந்தாயா? எனக்குத் தெரியாதே" என்று பதில் சொல்லியதாம்.

இப்படிக்கு

டாக்டர் வால்ஸ், டப்ளின் நகர ஆர்ச் பீசப்."

## காண வேண்டிய காட்சியொன்று



**பிரேசிலுள்ள உலகின் உயரமான இயேசு நாதர் சிலை**

## நொறுக்குத் தீனி

பைக்கை அவன் ஓட்டிச் சென்ற வேகம் மணிக்கு 120 கிலோமீட்டர்..

விபத்து ஏற்பட்ட போது அவனை ஆம்புலன்ஸ் கொண்டு போன வேகம் மணிக்கு 100 கிலோ மீட்டர். இறந்து விட்டான் என்று அறிந்த போது அவனை வீட்டிற்கு கொண்டு போன வேகம் மணிக்கு 50 கிலோமீட்டர், வீட்டிலிருந்து மயானத்திற்கு அவனை கொண்டு போன வேகம் மணிக்கு வெறும் 20 கிலோ மீட்டர் தான். நாம் உயிரோடு இல்லையென்றால் நேரத்திற்கு கூட நாம் தேவையில்லை, அதனால் வாகனத்தை செலுத்தும் போது கொஞ்சம் பாத்து, வேகத்தை கவனித்து செயல்படுங்க..

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.